அகில இந்திய

இந்துத் திருத்தலங்கள்

புனித யாத்திரை

(சைவ, வைணவத் திருக்கோயில்கள்)



வானமாமலை
ராமாநுஜதாசன்

ஸ்ரீமதே ராமானுஜாய நம

அகில இந்திய இந்துத் திருத்தலங்கள்

புனித யாத்திரை தொகுப்பு நூல்

(சைவ வைணவத் திருக்கோவில்கள்)

ஆசிரியர் :
A. ஐயப்ப ரெட்டியார் என்ற
வானமாமலை ராமானுஜதாசன்
இந்து அறநிலையத்துறை
முன்னாள் கோவில் நிர்வாக அதிகாரி

கிடைக்குமிடம் :
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
154, டி.டி.கே சாலை,
ஆள்வார்பேட்டை, சென்னை - 600 108.

நூல் வரலாறு

1. தலைப்பு : அகில இந்திய இந்துத் திருத்தலங்கள் புனித யாத்திரைத் தொகுப்பு நூல்

2. ஆசிரியர் : A. ஐயப்ப ரெட்டியார் என்ற வானமாமலை இராமநுஜதாசன்

3. மொழி : தமிழ்

4. பதிப்பு : முதலாவது

5. வெளியீடு: டிசம்பர் 1988

6. உரிமை : ஆசிரியர்க்கே

7. தாள் : 11.6

8. நூலின் அளவு : டபுள் கிரவுண்

9. எழுத்து ; 10 பாயிண்ட்

10. பக்கங்கள் : 375 + XXVII = 402

11. படிகள் : 1200

12. அச்சகம் : அப்பர் அச்சகம்

13. கட்டடம் : அப்பர் அச்சகம்

14. விலை : 35

15. பதிப்பாளர் : பிரசன்ன வேங்கட கிருஷ்ணன் பதிப்பகம்,
1. B செயிண்ட் மேரி தெரு,
S. T. காலேஜ் ரோடு,
பெருமாள் புரம்,
திருநெல்வேலி-7.

16. பொருள் : பாடல் பெற்ற திருப்பதிகள் சைவ வைணவ வழிகாட்டி

17. அழைப்பெண் : Q 2 N 88



This book is

Published with the financial

Assistance of

Thirumala Tirupati

Devasthanams

Under their scheme

"Aid to publish religious books'

Author's Preface

The Ominiscient Omnipotent Almighty Lord Narayana has conferred on me this human form and has made me to do "Kain karya" or service to Him and His devotees. This blessings of Him is solelly due to my good Karma done in my previous birth.

I served as His humble servant in various temples of Tamil Nadu in the administrative sphere and as an Executive Officer, I have the privilege of worshipping almost all the deities enshrined in various temples in South India both Saivite and Vaishnavite. As such the Lord Almighty enjoined on me the duty of writing a Book entitled on "A Compendium of the Holy pilgrime centres of All-India", to be of use to all, and it is now coming as a publication of the Tirumalai Tirupathi Devasthanam by the grace of Venkatachalapathy the Lord of the Seven Hills.

I have dedicated my life to do eternal service to Lord Narayana not only in this birth, but also in future births, if any. I am free from the strings of attachment to this mundance world, all due to His benign grace.

In fine, I thank the T. T. Devasthanam authorities for bringing out this publication with financial assistance under their "Aio scheme". My thanks are also due to the Madathipathi Sannithanam, Sutita and others who have encourged me in printing "Akila India Hindu Thiruthala punitha vathira Thokuppu Nool' by giving Sri mugam and help in this holy endeavour, and I am extremely grateful to them.

Let the New Year 1989 bring cheer and prosperity to humanity at large.

Vanamamalai Ramanuja Dasan
Author



Sri Chandramouleeswaraya Namaha
Sri Sankar Bhagavadpadacharya Paramparagatha
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

Jagadguru Sri Sankaracharya Swamigal

Srimatam : Samasthanam
KANCHEEPURAM - 631 502.

Camp : ராம்கட் 16-2-87

ஹரியும் ஹரனும் ஒன்றே என்பதே தத்துவமாகும். இதில் ஊறித் திளைத்தவர்களே ஆழ்வார்களும் நாயன்மார்களும். இவர்களால் பாடிப் பரவப்பெற்ற திருத்தலங்கள் நெருங்கிக் கிடக்கும் புனித பூமியாகும், இப் பாரதநாடு.

இவ்வுண்மையை உணர்த்திடும் வகையில் ஓய்வு பெற்ற கோயில் நிர்வாக அதிகாரியான ஏ. ஐயப்ப ரெட்டியார் அவர்கள் எழுதியுள்ள ''அகில இந்திய இந்துத்திருத்தலங்கள் புனிதயாத்திரை நூல்'' என்ற நூல் அமைந்திருப்பது அறிந்து மகிழ்கிறோம்.

இறையன்பர்கள் நூலின் முழுப் பயனையும் துய்த்துக் களிப்பார்களாக.

நாராயண ஸ்ம்ருதி



திருக்கயிலாய பரப்பரைத் தருமையாதீனம்
26-ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
தருமபுரம் 19-12-1986

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

இந்திய நாடு உலகிற்கு ஆன்மீக நெறியை வழங்கும் திரு நாடு. இமயம் முதல் குமரி வரை இந்நாடு பல திருக்கோயில்களாலும் தீர்த்தங்களாலும், சூழப்பெற்று விளங்குவதைக் காணலாம். இந்நாட்டில் ஞானிகளும் அருளாளர்களும் அவ்வப்போது தோன்றி மக்களுக்குக் கடவுள் நெறியைப் போதித்து வழிகாட்டி வருகின்றனர்.

இமயத்திலுள்ள கைலாயத்தில் சிவபிரானும், மேற்கே திருமகளும், கிழக்கே காளியும், தெற்கே கன்னியாகுமரியும் இந்நாட்டின் எல்லைத் தெய்வங்களாக விளங்கி இந்திய மக்களைக் காத்தருளுகின்றனர்.

மக்கள் இந்நாடு முழுவதிலும் உள்ள இந்து சமயக் கோயில்களைத் தரிசித்தும் தீர்த்தங்களில் நீராடியும் வருவதைப் பெரும்புண்ணியமாகக் கருதி வருகின்றனர்.

இந்திய நாட்டிலுள்ள சைவ, வைணவ ஆலயங்களைத் தரிசித்தற்கு வழிகாட்டியாகவும் அக்கோயில்களின் சிறப்புக்களை அறிந்துகொள்ளும் வகையிலும் அறிஞர்கள் பலர் நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளனர். இதுபோது தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையில் திருக்கோயில் நிர்வாக அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற அன்பர் நெல்லை. அய்யப்பன் என்கிற திரு. வானமாமலை இராமானுஜதாசன் இந்நூலை எழுதியுள்ளார். இந்து சமயக் கோயில்களைப் பற்றிய சுருக்கமான வரலாறும் செல்லும் வழியும் குறிப்பிடப்பட்டு எழுதப் பெற்றுள்ள இந்நூல் தலயாத்திரை செய்வோருக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என நம்புகிறோம்.

சமயத்துறையில் ஈடுபாடும் பக்தி உணர்வுல் கொண்ட அன்பர். நெல்லை. திரு. இராமானுஜதாசன் முயற்சியால் உருவான இந்நூல் பலருக்கும் பயன் விளைவிச்கவும், இறைபணியாக இதனை வெளியிடும் அன்பர் நீடு வாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சித்திக்கின்றோம்.

கோமு. 19/12:



ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள்
திருப்பனந்தாள்—612504 (தஞ்சை மாவட்டம்) 16-12-86

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பது தாயுமானார் திருவாக்காகும். இவ்வகையில் திருமுறை ஆசிரியன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பாடல் பெற்ற திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடாற்றி வருதல் சைவ வைணவப் பெருமக்களின் குறிக்கோளாய் இருந்து வருகின்றது. அப்பெருமக்களுக்குத் துணையாகச் சைவ வைணவத் திருப்பதிகளுக்குச் சென்றுவர வழிகாட்டியாகப் பல நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் அன்பர் திரு அய்யப்பன் என்கிற வானமாமலை இராமனுஜதாசன், ஒய்வு பெற்ற நிர்வாக அதிகாரி அவர்கள் எழுதிய "அகில இந்திய இந்து திருத்தலங்கள் புனித யாத்திரை நூல்" எனும் நூலும் ஒன்றாகும். சைவ வைணவத் திருப்பதிகளுக்குத் தனித்தனியாக வழிகாட்டி நூல்கள் உள்ளன. ஆனால் இவ்வன்பர் ஒரே நூலில் அவ்விரண்டையும் தொகுத்துக் காட்டியுள்ளார். இம்முயற்சி வரவேற்றற்குரியதாம்.

தளர்வுறும் மூப்பினும் அன்பில் தளராது நின்று செய்யும் இம் முயற்சி பாராட்டுதற்குரியது. இவ்வன்பர் இனைய பல் திருத்தொண்டுகளை மேலும் ஆற்றிவரச் செந்திலாண்டவன் அருள்பாலிப்பாராகுக.

சிவசிவ

சுபம் 16-12-86 சுபம்



திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம் திருவாவடுதுறை
நாள்: 31-12-1986

ஆசியுரை


மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகள் அமைந்த தலங்களுக்குப் பயணஞ்சென்று வழிபடுவது என்பது நம் நாட்டவரிடையே மிகப் பழங்காலந்தொட்டே இருந்துவரும் உயரிய ஒழுக்கமாகும். போக்குவரத்துச் சாதன வசதிகள் அதிகம் இல்லாத காலத்திலேயே நம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தலங்கள் தோறும் சென்று வழிபாடாற்றித் திருப்பதிகங்கள் அருளியுள்ளமை தலப் பயணத்தின் சிறப்பினையும் இன்றியமையாமையையும் உணர்த்துகின்றது. தலப் பயணங்களை மேற்கொள்வதால் நாட்டின் பல்வேறிடங்களின் இயல்புகளையும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அறிந்து அன்பு பாராட்டி "யாதும் ஊரே யாவரும் கேளிர்"

எனும் உயரிய வாழ்வியல் முறையினை எய்த வாய்ப்பமை கிறது.

இத்தலப் பயண நூலை இயற்றியவர் திரு ஏ. அய்யப்ப ரெட்டியார் என்ற வானமாமலை ராமானுசதாசன், கோவில் அதிகாரியாக இருந்து பணி ஓய்வு பெற்றவர், சைவ வைணவ தலங்கட்குச் சென்று அவைகளின் இருப்பிடம், செல்வதற் குரிய விபரங்களை நன்கு இந்நூலில் விளக்கியுள்ளார். முறை யாக இயற்றப்பெற்றுள்ள இந்நூலை அன்பர்கள் பெற்றுப் பயன் கொள்ளவும் இந்நல் முயற்சியில் ஈடுபட்டுள்ள நூலா சிரியர் எல்லா நலன்களும் எய்தி மேன்மை பெறவும் வாழ்த்து கின்றோம்.

பெறுநர்

திரு. ஏ. அய்யப்ப ரெட்டியார்.
ஓய்வு பெற்ற கோயில் அதிகாரி,
1. பி. செயிண்டுமேரி தெரு,
சாரா டக்கர் கல்லூரிச் சாலை,
பெருமாள்புரம், திருநெல்வேலி.



Sri (Totadri) Vanamamalai Ramanuja jeer Swami Muth

(Vanamamalai NANGUNERI. Tirunclveli Dt.
S. India.

Nanguneri 2-10-86

ஸ்ரீ. மகாரா - ரா - ஸ்ரீ ஐயப்பரெட்டியார்,
அவர்களுக்கு.

தாங்கள் அச்சிட்ட ''அகில இந்திய இந்து திருத்தலங்கள் யாத்திரை நூல்'' என்றபுஸ்தகத்தைக் கவனித்தோம். இந்தப் புஸ்தகம் ஆஸ்திக மக்களுக்கு அத்யாவஸியம். இந்தியாவிலுள்ள எல்லா ஸ்தலங்கள், புண்யதீர்த்தங்கள், புண்யவிருட்சுங்கள், ஆங்காங்குள்ள தேவதைகள் எல்லாவற்றையும் விளக்கிக் காட்டுகிறது. இதைப் படிப்பதால் தெய்வபக்தி இல்லாதவர்களுக்கும் தெய்வபக்தி ஏற்பட்டு. ஆங்காங்கு ஸ்தலங்களுக்குப் போக வேணுமென்ற ஆசையும் ஏற்படும். தெய்வபக்தியினால்தான் உலக க்ஷேமம் ஏற்படுகிறது. நீங்கள் போர்டு அதிகாரியாகவும் இருந்தபடியினாலே ஆலயங்கள் மகிமையை எழுத வேணுமென்ற ஆசை உண்டாயிற்று. அதற்கு நாம் சந்தோஷிக்கிறோம். உமக்கும் இந்தப் புஸ்தகத்தைப் படிக்கும் அனைவருக்கும் நம்முடைய ஆசியை அருளுகிறோம்.

ஸ்ரீ ஸ்வாமிகள் நியமனப்படி
A. Narayana, Rayasam.



THIRUJEER MUTT,
THIRUGURUNGUDI - 627115
திருஜீயர்மடம், திருக்குறுங்குடி-627115


ஸ்ரீமதே ராமாநுஜாய நமக.

ஸ்ரீ அய்யப்ப ரெட்டியார் என்ற வான மாமலை ராமாநுஜதாசன் அவர்கள் தென்னகத்தில் விஷ்ணு, சிவன் ஸ்தலங்களில் நிர்வாக அதிகாரியாக நல்ல முறையில் பணியாற்றி வந்திருக்கிறார்கள்.

'ரொம்பவும் சிரமம் எடுத்துக்கொண்டும் எல்லோரும் நன்கு அறிந்துகொண்டு திருத்தலங்களுக்குப் போக வேண்டும் என்றும் ''அகில இந்திய திருத்தலங்கள் நூல்'' என்ற பெயருடன் ஒரு நூல் ஒன்று எழுதியிருக்கிறார்கள்.

அந்த நூலை ஒவ்வொரு பக்தர்களும் வாங்கி உபயோக படுத்தி நன்மை பெறவேண்டும் என்றும் ஸ்ரீ வான மாமலை இராமாநுஜதாசன் மேன்மேலும் பல நூல்கள் எழுதி, பக்தர் களுக்குச் சேவைபுரிய வேணும் என்று ஆசி கூறுகிறோம்.

திரு. ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி
நியமனப்படி.
என். சிரீநிவாசய்யங்கார் சிரீகாரியம்




ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமாநுஜாச்சாரியார்
ஸ்ரீ திர்விக்ரம ஸ்வாமி ஸன்னதி ஆதீன
பரம்பரை தர்மகர்த்தா,
ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி
திருக்கோவலூர்-605 757 தென்னாற்காடு மாவட்டம்
தமிழ்நாடு 25-12-1986

ஸ்ரீ மான் ஐயப்பன் என்கிற வானமாமலை ராமாநுஜ தாசர் அறநிலையத்துறை நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிப் பல சைவ வைணவ ஸ்தலங்களுக்குச் சென்று அந்தந்த ஸ்தலங்களின் வரலாறுகளை-பெருமைகளை எழுதி உள்ளார்கள். ரெட்டியார் அவர்கள் ஓய்வு பெற்ற பிறகும் தெய்வப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்கள். இளைஞர் சமுதாயத்திற்கு நல்ல கருத்துகளுடன் கூடிய இந்த அகில இந்திய இந்து திருத்தலங்கள் புனித யாத்திரை நூல் நல்ல முறையில் பல பெரியோர்களின் ஆசிகளுடன் வெளிவருவது ஆஸ்திக மக்களுக்கு அரிய விருந்தாகும்.

பொலிக. பொலிக,

அநேக மங்களா ஸாஸனம்

ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ ராமாநுஜாச்சாரியார்,
ஸ்ரீ திரு விக்ரமஸ்வாமி ஸன்னதி ஆதீன தர்மகர்த்தா,
ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி,
திருக்கோவலூர்-605 757.



Sri Ramakrisnna Math

(Publication Dcpartment)

16, Ramakrishna Math Road,

Madras-600 004.

Telephones: 71959/71231

24-9-86

ஸ்ரீ ராமகிருஷ்ண சரணம்

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான். என்றாலும் சில இடங்களில் மட்டும் அவன் சிறப்பாக வெளிப்பட்டு பக்தர்களுக்கு அருளுகிறான். அப்படி அமைந்தவையே திருத்தலங்களாகும்.

அப்படி அமைந்த திருத்தலங்களுக்கெல்லாம் சென்று வந்தவர் நம் அடியார் திரு. அய்யப்ப ரெட்டியார் அவர்கள். மேலும் அவர் பல தலங்களுக்கு நிர்வாக அதிகாரியாகவும் இருந்து திருப்பணி பல ஆற்றி உள்ளமையால் இந்நூல் எழுத இவரே சிறந்த அதிகாரியுமாவார்.

அவர் தம் அனுபவத்தையும், அந்தந்தத் திருத்தலங்களின் மகிமையையும் விரிவாகவும், தெளிவாகவும் எழுதியுள்ளார். புனித யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு இது வழிகாட்டியாகவும், பிறவிப் பெருங்கடல் நீந்த முயல்வார்க்கு இது ஓடம் போன்றும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

தமிழுலகம் இந்த அரிய நூலைக் கற்றுத் தமது பழம் பெரும் மதத்தின், ஆன்றோரின் சீர்மையினை அறிந்து இன்புற்று உய்வாராக.

கடவுள் தொண்டில்,

ராகவேசானந்தா

(சுவாமி ராகவே சானந்தா) மானேஜர்.

SRI HARI

Sri Krishnapremi Swamigal

Managing Trustee

Bagavatha Dharma Trust. (Regd)

Paranur (P. o) Mogaiyur (s. o)


South Arcot (Dt) (Tamil Nadu)

Pin : 605 755

ஸ்ரீ வானமாமலை ராமாநுஜதாஸர் என்ற ஐயப்ப ரெட்டியார் அவர்கள் எழுதிய அகில இந்திய இந்து திருத்தல புனித யாத்ரை வரலாறு என்ற புத்தகத்தைக் காணப் பெற்றேன். இதில் சிவ விஷ்ணு தலங்களின் எல்லா வித முக்கியமான குறிப்புகளும் அடங்கி இருக்கின்றன. திருத்தல யாத்திரை செல்பவர்களுககு இது மிகவும் உபகாரமாகும். ஸ்ரீமான் ரெட்டியார் அவர்களுக்கு மேன்மேலும் இது மாதிரி நூல்களை எழுதும்படி பகவான் அருள் செய்ய வேண்டுகிறோம்.

இப்படிக்கு

ஸ்ரீ கிருஷ்ணப்பிரமி




சாற்றுக்கவி

நேரிசை வெண்பா,

திருத்தல யாத்திரைச் சீரிய நூலை
விருப்புடன் தந்துபுகழ் மேவும்-
அருக்கனிகர்
ஐயப்பன் என்னுமுயர் அன்பன் சிறந்தோங்கி
வையமதில் வாழ்க, மகிழ்ந்து

அன்பன்
கிருபானந்தவாரி



வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.,
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய
ஆட்சித் துறை,
சென்னை-34.

வாழ்த்துரை

நமது தமிழகம் திருக்கோயில்கள் நிறைந்து விளங்கும் புண்ணிய பூமியாகும். "ஆலயம் தொழுதுவது சாலவும் நன்று. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "திருக்கோயில் இல்லாத ஊர் திருவில் ஊர்" போன்ற ஆன்றோர்களின் அருளுரைகள் காரணமாக நமது தமிழகத்தில் ஊர்கள் தோறும் கிராமங்கள் தோறும் பட்டிதொட்டிகள் தோறும் திருக்கோயில்கள் தோன்றிச் சிறந்து விளங்குகின்றன.

அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளைத் திருக்கோயில்களின் வாயிலாகவே நாமும் தரிசித்துப் பயன் காண இயலும். பகுத்தறிவில்லாத ஓரறிவு ஈரறிவு உயிரினங்களும் கூட எல்லாம் வல்ல பரம்பொருளை வழிபடுவதன் மூலம் உய்வு கண்டுள்ளன என்பதனை

"எறும்புகடை யானைதலை ஈசனைப்பூ சித்துப்
பெறுங்கதி கண்டும் தேறார் பேய்கள்- அறிந்த
உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையாய் வைக்கப் படும்"

என வரும் பாடலும், நம் திருக்கோயில்களின் அரிய தல வரலாறுகள் பலவும் நமக்குத் தெற்றெனஎடுத்துக் காட்டு கின்றன.

தலயாத்திரை செய்து புண்ணியத்தலங்கள் பலவற்றை யும் தரிசிப்பதன் இன்றியமையாமையை மூவாயிரம் ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த திருமூல நாயனாரும் வற்புறுத்தியிருக் கிறார்.

''நாடும் நகரமும் நற்றிருக் கோவிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோவிலாக் கொள்வனே''


என்பது அவர்தம் திருமந்திரம். ஆகவே நாம் நம் நெஞ்சங் களையே கோயிலாக்கி முத்திபெற விழைவோமாயின் தலயாத்திரை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டுவது மிக அவசியமாகும்.

அவ்வாறு தலயாத்திரை மேற்கொள்ள விழைகின்ற பக்தர்களுக்குப் பயன்படும் வகையில் "அகில இந்திய இந்து திருத்தலப் புனித யாத்திரை தொகுப்பு நூலை'' உயர்திரு வானமாமலை இராமநுஜதாசன் அவர்கள் படைத்திருப்பது கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

77 வயது நிறையப் பெற்ற இந்நூலின் ஆசிரியர் 1942 முதல் 1966 முடிய சுமார் 24 வருடங்கள் திருக்கோயில்கள் பலவற்றில் நிர்வாக அதிகாரியாகவும் தெய்வப் பணியை ஆற்றி இருப்பது அறிந்து மகிழ்கிறேன். தமிழகத்திலுள்ள தொன்மையான சைவ, வைணவத் திருத்தலங்கள் அனைத் தையும் பாடல் பெற்ற தலங்கள், அபிமான ஸ்தலங்கள் என்று பாகுபடுத்தி அவற்றைச் சென்று கண்டு தரிசிப்பதற் கான வழிமுறைகள் அனைத்தையும் அமற்றின் புராண வர லாறுகளோடு நூலாசிரியர் இந்நூலில் விவரித்திருக்கிறார்.

''எல்லாம் இறையருள்'' என்று திடமாக நம்பும் இந்நூலாசிரியர் தம் வாழ்க்கையில் நடைபெற்ற இறையருள் அற்புதங்கள் சிலவற்றையும் இந்நூலில் விவரித்திருப்பது நம்மைப் பக்தி வயப்படுத்துகிறது. பழுத்த பக்தி அனுபவத்தைத் துணை கொண்டு ஆசிரியர் படைத்திருக்கும் இப்பயன்மிகு நூலை சைவ, வைணவப் பெருமக்கள் அனைவரும் வாங்கிப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன். நூலாசிரியருக்கும் என் நல் வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வ. ராமதாஸ்.
26-12-88
Commissioner
H. R & C. E. (Dept)



இ. பொன்னப்பபிள்ளை பி. காம், பி. எல்
(நிர்வாக அதிகாரி-அறநிலையத்துறை, திருவேற்காடு)
தலைவர்,
தமிழ்நாடு ஆலய நிர்வர்க அதிகாரிகள் சங்கம்
சென்னை-34

இந்திய பாரம்பரியத்திற்கும் பண்டைய நாகரீகத்திற்கும் எடுத்துக் காட்டாக இருப்பது இன்றைய திருக்கோயில்களும் அதனை ஒட்டி மக்கள் வாழ ஏற்பட்டிருக்கும் நெறிமுறைகளும்தாம். அவற்றைப் பேணிக் காத்து, வருகின்ற சமுதாயத்திற்கு அப்படியே கொடுக்க வேண்டிய பொறுப்பில் இருக்கின்ற தமிழக அரசு அறநிலையத்துறையில் நிர்வாக அதிகாரியாக 24 வருடங்கள் கண்ணியமாக நேர்மையான திறமையான பணிக்காலத்தைக் கழித்தவர் திரு. அய்யப்ப ரெட்டியார் என்ற வானமாமலை ராமாநுஜதாசர் ஆவர். அவர் நிர்வாக அதிகாரியாக இருந்த ஆலயங்களில் அவருடைய செயல்முறைகள் பாராட்டுக்குரியனவாக இருந்தன. வறுமையான கோயில்கள், அடாவடித்தனமான கோயில்கள், முன்னுக்கு வருகின்ற ஆலயங்கள், முன்னேற்றப்பட வேண்டிய ஆலயங்கள் என்ற பலவகை ஆலயங்கள் நிர்வகித்து வந்துள்ளார்கள். ஆலயத்திற்கு உகந்த நடைமுறைகளைத் துறை ஆதரவோடு சிறப்பாக ஆற்றி யுள்ளார்ர்ள்

வறட்சியுற்ற காலங்களில், ஊரில் நேரில் சென்று வசூல் செய்தும், விளைவு காலங்களில் பாக்கி இல்லாமல் சேகரித்தும், தேவையான போது தமது மனைவியாரின் நகைகளை அடகு வைத்துக் கூட பொருளீட்டியும், நல்லவர்களுடன் பெருந்தன்மையுடனும், கசடுபவரிடம் கண்டிப்பாகவும், எதிர்ப்பவரிடம் நேரில் சந்தித்தும் பல இன்னல்களிடையே செயல்பட்டு, தம் பெயரை நிர்வாக அதிகாரிகள் பட்டியலிலே பொறித்தவர்கள். சாட்டியக்குடி, காரைக்குடி, வள்ளியூர், பாளையங்கோட்டை, இருக்கங்குடி, மற்றும் அநேக ஆலயங்களில் பணியாற்றியுள்ளார். அந்த வாய்ப்பின் பயனாக இந்திய தேசத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று சைவ, வைணவ, சாக்த, கணாபத்ய, குமார, சௌர ஆலயங்கள் தரிசனம் செய்து 'அகில இந்திய இந்து திருத்தல புனித யாத்திரை தொகுப்பு நூல்' என்ற நூலை இந்து மக்கள் பயன்படும்படியாகப் படைத்துள்ளார்கள்.

ஊர்மககளோடு ஒரு உறவு ஏற்படுத்திக் செயல்படுவார்கள். இவர்கள் காலத்தில் நெய்வேத்தியத்திற்குச் தேவஸ்தான நிலங்களில் சாகுபடி செய்து அமுதுபடிக்காக அதிக மக சூல் பெறச் செய்தார்கள். ஆலய வருவாயைக் கணிசமாக உயர்த்தியுள்ளார்கள். வனமகோற்சவம் நடத்தி இவர்கள் நட்ட மரங்கள் இப்பொழுது பயன் அளித்துக்கொண்டிருக்கின்றன. யாத்திகர்களுக்கும், பக்தர்களுக்கும், பசியாற்றி அனுப்புவது இவர் வழக்கம்.

பல வருடங்களுக்கு முன்பு Siva shrines in India and Beyond என்னும் நூல் தொகுக்கப்பட்டு வெளி வந்தது. அதில் இறைத் தலங்கள் எல்லாம் எழுத்து வரிசையில் தொகுக்கப்பட்டிருக்கும் இந்நூல் மாகாண வாரியாக குமரியிலேயிருந்து புறப்பட்டுப் பாகுபாடின்றி எல்லாக் கோயில்களும் சென்று தீர்த்தமாடி மேற்குக் கரையோரமாகப் தரிசனம் செய்து வட நாட்டுக்குப் போய் மீண்டு கிழக்குக் கரையோரமாகப் புறப்பட்ட இடத்திற்கு வந்தடைவது போன்று அமைத்திருக்கிறார்கள்.

பாராட்டுக்குரியது. இந்து மதத்தினருக்கும் உல்லாசப் பயணி களுக்கும் இந்நூல் பயன்படும் என்பது உண்மை.

அறநிலையத் துறையில் பணியாற்றும் நிர்வாக அதிகாரி களிடையே மறைந்து கிடக்கும் திறமைக்கும் இவர் வெளிக் கொணர்ந்திருக்கும் இந்நூல் சான்று பகரும். கோவில்களின் ஸ்தல புராணம் தாமே எழுதி அச்சிட்ட நிர்வாக அதிகாரி களின் வரிசையிலே ஒரு தனிச்சிறப்பான இடத்தை இவர்கள் பெறுகிறார்கள்.

இந்த வயதிலும் இளமையான மனதுடனும் செயல் துடிப்புடனும் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களின் அபிலாஷையாக முதியோர் பேரின்ப நிலையம் ஒன்றும் விட்லாபுரம் பண்டரிநாதன் ஆலயத்திருப்பணியும், பிரம்ம தேச திருப்பணியும் செய்ய வேண்டும் என திரு உள்ளம் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். அவர்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல அனுமதித்ததற்கு நன்றியுள்ள வனாவே தூய்மையான உள்ளம் கொண்டு இறைவனையே சதா காலமும் எண்ணிக்கொண்டு தன்னலம் இல்லாத தொண்டு செய்துவரும் 78 வயதான இவ்விளைஞருக்கு இறைவன் எல்லாத் திருவருளும் செயல்பாட்டு வகைகளும் அருளப் பிரார்த்திக்கின்றேன்.

63 நாயன் மார்களைப் போன்று சிவத்தொண்டாற்றி யும் பன்னிரு ஆழ்வார் போன்று இறைவனோடு சரணாகதி அடைந்தும் சான்றோர், பெரியோர், நல்லோர் வாழ்த்த எனக்குமுன்பாக நிர்வாகஅதிகாரியாகப் பணியாற்றியுள்ளார் கள். எல்லாம் வல்ல இறைவன் போதிய வலிமையையும் ஆயுளையும் அருளப் பிரார்த்திக்கிறேன்.

இ. பொன்னப்பன்
30-6-87



கழக நிறுவனர் தாமரைத் திரு. வ. சுப்பையா பிள்ளை

தோற்றம்: 1920 அ.பெ.எண். 85

தொலைபேசி : 22336

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.,

நூல் அச்சிடுவோர், வெளியிடுவோர், விற்பனையாளர்.

(பதிவான அலுவலகம்: 91, கீழைத் தேர்த் தெரு,

திருநெல்வேலி - 672 006.)

கிளைகள் : திருநெல்வேலி 6, மதுரை-1. கோயமுத்தூர்-1.

கும்பகோணம்-1, திருச்சி-2.)

தலைமை நிலையம் :

79, பிரகாசம் சாலை (பிராட்வே)

சென்னை-108.

பாராட்டுரை.

தமிழக அரசு இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத் துறையில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி ஒய்வுபெற்ற உயர்திரு. ஐயப்ப ரெட்டியார் என்னும் வானமாமலை

இராமானுஜதாசர் அவர்கள் ஆற்றியுள்ள சமயப்பணியும் திருக்கோயில் தொண்டும் அளவிடற்கரியது. உள்ளத்தில் நேர்மையும் தோற்றத்தில் எளிமையும் பழகுவதில் அருமையும் கொண்ட இவர்கள் பணியிலிருந்த காலத்தில் ஒருசமயம் தம் துணைவியாரின் நகைகளையே அடகு வைத்துக் கடன் வாங்கித் திருக்கோயிலில் நிலங்களைப் பயிரிடச் செய்துள்ளார். இது மிக அரிய செயலாகும். இவ்வளவு பேருள்ளம் படைத்த இவர்கள் வயதான காலத்தில் சைவ, வைணவ அன்பர்கட்குப் பயன்படும் வகையில் 'அகில இந்திய இந்து திருத்தலங்கள் யாத்திரை நூல்' என்னும் அரிய வழிகாட்டி நூலை உருவாக்கியுள்ளார்கள்.

சைவக் கோயில்கள், வைணவ ஆலயங்கள் என்று இவற்றுக்குத் தனித்தனியாக வழிகாட்டி நூல்கள் வெளிவந்துள்ளன. இரண்டையும் இணைத்து வெளிவரும் முதல் நூல் இதுவேயாகும். முதல் நூல்.

வாழ்க ஆசிரியரின் தொண்டு.

இரா. முத்துக்குமாரசாமி
ஆட்சியாளர்.

பொருளடக்கம்

அரன்நா ரணன்நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோயில் - வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி ஒன்று.

பொய்கையாழ்வார் - 5



நூலாசிரியர்

A. ஐயப்ப ரெட்டியார் என்ற

வானமாமலை ராமாநுஜதாசன்

ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரி

I.B. செயிண்ட் மேரி தெரு,

S.T. கல்லூரித் தெரு,

பெருமாள்புரம், திருநெல்வேலி - 7

அகில இந்திய இந்துத் திருத்தலங்கள்

புனித யாத்திரை தொகுப்பு நூல்

(சைவ, வைணவ திருக்கோயில்கள்)



சங்கர நாராயணன்

சங்கரன் கோயில்

பிழைதிருத்தம் கவனிக்க :

இப் புத்தகத்தில் விடுபட்ட பிழைகளைத் திருத்தம் செய்து பக்கம் 371 முதல் 375 வரை கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றை ஆங்காங்குத் தக்கவாறு திருத்திப் படித்துக்கொள்ளவும்

முன்னுரை

அடியேன் கன்னியாகுமரி மாவட்டத்தில் சைவப் பெருமக்கள் வாழும் திருத்தலமாகிய சுசீந்திரத்தில் தந்தையார் திரு. அண்ணாமலை ரெட்டியார், தாயார் பாப்பாத்தி என்ற இராமம்மாள் ஆகிய தம்பதிகளின் இல்வாழ்க்கைப் பயனாக 12-9-1911-ல் பிறந்தேன். என் தந்தை திரு. A. அண்ணாமலை ரெட்டியார் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அரசு அலுவலகத்தில் பணி செய்துவிட்டு இறுதியில் சுமார் பத்து ஆண்டுகள் கன்னியாகுமரி தேவஸ்தானத்தில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். அதன் தொடர்பாகவும் பூர்வஜென்ம பலனாலும் 1942 முதல் 1966 வரைசுமார் 24 வருடங்களாக, தமிழ்நாட்டில் பல இடங்களில் கோயில் நிர்வாகியாகப் பணியாற்றி வந்துள்ளேன். வாழ்க்கையில் சகிக்க முடியாத இன்னல்கள் வரும்பொழுதெல்லாம் இறைவனை வேண்டிக்கொள்வதோடு ஆலயங்கள் தோறும் சென்று அவனை வழிபட்டும் இன்னல்கள் நீங்கி மனநிம்மதி அடைவேன். ஓய்வு பெற்ற பின்னரும் எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் இறைவனை வணங்கி மனநிம்மதி பெற்று வருகிறேன்.

1008 சிவஸ்தலங்களுள் துலக்கம் பெற்ற 274 தலங்களுள் 268ம், வைணவஸ்தலங்கள் 108ல் 9.ம் நேரில் சென்று தரிசிக்கும் பேறு பெற்றேன். அதன் அநுபவமே இந்நூலை நான் எழுதுவதற்குக் காரணமாகும். இந்நூல் என் யாத்திரையின் பயனாக வெளியிடப்படுகிறது. பிழைகளிருப்பின் தெரிவித்தால் அடுத்த பதிப்பில் திருத்தி அமைக்க முடியும்.

இந்நூல் வெளியாவதற்குத் துணைபுரிந்த வானமாமலை வித்துவான் N. S. கிருஷ்ணய்யங்கார் அவர்களுக்கும், பேராசிரியர் ஆ. செபரத்தினம் அவர்களுக்கும், முத்தமிழ் வள்ளல் இலஞ்சி அ. கி. முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கும், புலவர் I. C. காசிவிசுவநாதன் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

அகில இந்திய இந்து திருத்தலங்களைத் தரிசித்ததனால் ஆசிரியர் பெற்ற பலன்கள் (அனுபவங்கள்)

1954ல் தஞ்சை ஜில்லா சீர்காழித் தாலுகா திருநகரி கல்யாண ரங்க நாதசுவாமி கோவிலில் நான் நிர்வாக அதிகாரியாக இருந்தபோது என் மனைவிக்கு டைபாய்டு ஜுரம் (பித்தவாத ஜுரம்) கண்டது. அது பங்குனி மாதம் அறுவடை சமயம். கோவில் குத்தகை புள்ளிகளிடம் நெல் வசூல் செய்ய வேண்டியதிருந்ததால், என் கடன் பணி செய்து கிடப்பதே என்றபடி நான் என் மனைவிக்கு மருந்து முதலிய சிகிச்சைகள் செய்யவோ, அவளை மருத்துவ மனைக்குக் கூட்டிக் கொண்டு போகவோ இல்லாமல் நெல் வசூலை மட்டுமே சிரத்தையாய்க் கவனித்து வந்தேன். இறையருளால் ஜுரம் 18ஆம் நாள் இறங்கிவிட்டது.

1956-ல் தஞ்சை ஜில்லா நாகை தாலுகா சாட்டியக் குடியிலிருந்து அண்ணாமலை தீப தரிசனத்துக்காகப் புறப்பட்ட சமயம் கடுமையான காய்ச்சலாலும் வயிற்றோட்டத்தாலும் இரண்டு நாள் உணவில்லாமல் பாதிக்கப்பட்ட போதில் தெய்வ சிந்தனை வைராக்கியமாக அங்குச் சென்று மலையையும் வலம் வந்து தீப தரிசனத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும்பினேன்.

1966-ல் செவ்வாய் தோழத்தால் களத்திர பங்கம் ஏற்படும் என்று சோதிடர்கள் சொல்லியபோது திருத்தல யாத்திரை செய்து தாரதோஷத்திலிருந்து நிவர்த்தி பெற்றேன்.

1968-ல் வயலைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும் போது நல்லபாம்பு என்னைக் கடித்துவிட்டது. உடனே சைக்கிளில் வேகமாக வீட்டுக்கு வந்தேன். அச்சமயம் அங்கு வந்த பாம்பாட்டி ஒரு வேர் கொடுத்தான். அது இனித்தது. ஆகையால் குளிக்கக் கூடாது என்றான். நான் குளித்து விட்டுச் சகல 274 சிவஸ்தலங்களின் பேர்களையும் மூர்த்திகள் தேவிகளின் திருநாமங்களையும் உச்சாடனம் செய்து திருநீற்றைக் கடிவாயில் போட்டுக்கொண்டும் அதையே உடல் முழுவதுப பூசிக் கொண்டும் இருந்தேன். மேலு ம 108 வைணவ ஷேத்திரங்களையும் பெருமாள் தாயார் பேர்களை யும் உச்சரித்து, துளசி கொண்டு ஜெபம் செய்து அதைச் சாப்பிட்டு விட்டேன். ஒரு வேளை உயிர் பிரிந்தால் இறைவனிடம் சேர வேண்டும் அல்லது உயிர் வாழ வேண்டும் என்ற கருத்துடன் அப்படிச் செய்தேன். அதனால் எனக்கு எந்தவித அதிர்ச்சியும் மயக்கமும் ஏற்படாமல் பூர்ண சுகமடைந்தேன்.

மேலும் 1968 முதலே எனக்கு ஆஸ்துமா; குளிர் காலங் களில் சிரமம் ஏற்பட்டது. அச்சமயங்களிலும் மாத்திரையைப் போட்டுக் கொண்டு மூர்த்திகளின் ஸ்தோத்திரம், எல்லா தேவர்களுக்கும் காயத்திரி ஜெபம் ராமர் சுப்ரபாதம், புஜாங்கம், தியானம் சிவ விஷ்ணுகளின் நமஸ்காரம் ஒவ் வொரு மூர்த்திகளுக்கும் மூல மந்திரங்கள் சுமார் அரைமணி நேரம் சொல்லுவேன். அதற்குள் தேக உபாதையிராது. ஆரோக்கியமாய் இருப்பேன். இப்படியே தொடர்ந்து இது வரையிலும் செய்து வருகிறேன்.

1984ல் எனக்கு ஆயுள் பீடை (கண்டம்) என்று சோதி டர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லிய காலத்தி லிருந்து முற்கூறிய ஜெபங்களை சொல்வதுடன் காலை, மாலைகளில் 1008 தடவை மிருத்யுமூல மந்திரங்களையும் சொல்லி வந்தேன். அதனால் அச்சமயம் காலராவினால்

பீடிக்கப்பட்டும், கண்டத்திலிருந்து தப்பினேன். அந்தச் சமயம் காலரா பருவம் இல்லை.

நான் டிசம்பர் 1986 ல் இந்த நூலுக்காகத் திருப்பனந்தாள், திருவாவடுதுறை, தர்மபுரம் ஆதீன கர்த்தர்களிடம் ஸ்ரீ முகம் வாங்கிக் கொண்டு திருக்கோவலூர் ஆலய ஜீயரிடமும் ஸ்ரீ முகம் பெற்றுக் கொண்டு அங்கேயே ஞானானந்த சுவாமிகள் மடத்தில் ஆராதனையில் கலந்து விட்டு, திருவண்ணாமலை சென்றேன். அங்கே சுவாமி தரிசனம் செய்து விட்டுச் சென்னை செல்ல நினைத்தவன் மனம் மாறி, திருப்பதியில் ஸ்ரீ நிவாசப் பெருமாளைத் தரிசிக்க ஆவல் கொண்டு, அங்குப் பகல் 11 மணிக்குப் போய்ச் சேர்ந்தேன். அச்சமயம் அடியார்களுக்கு இலவச போஜனம் நடந்து கொண்டிருந்தது. நான் சுவாமி தரிசனம் செய்துவிட்டுப் போஜனத்திற்கு வருவதென்றால் மணி 2 ஆகிவிடும். உன்னைத் தரிசிக்க வந்த இடத்தில் நீ ஆகாரம் கொடுத்தால்தான் சாப்பிடுவேன். சாப்பாட்டுக் கடைக்குப் போக மாட்டேன் என்று மனதில் வைராக்கியத்தோடு ஸ்ரீ நிவாசப் பெருமாளைத் தியானம் செய்து கொண்டு நின்றேன். அச்சமயம் இனம் அறியாத ஒரு பெரியவர் வந்து கியூவைவிட்டுத் தனியேநின்றுகொண்டிருந்த என்னை 'வாருங்கள் உங்களுக்கு டோக்கன் வாங்கித் தருகிறேன்' என்று என்னை கூட்டிச் சென்று டோக்கன் வாங்கிக் கொடுத்தார். அடுத்தபடியாக அவரைக் காணவில்லை. பின் பந்தியில் அமர்ந்து பசி தீர உணவு அருந்தினேன். என்னை அழைத்துச் சென்றவர் ஸ்ரீ நிவாசப் பெருமாளே என்று கருதுகிறேன்.

மக்களும் ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்று தெய்வ நம்பிக்கையுடன் பாடல் பெற்ற ஸ்தலங்களுக்கும் மற்ற ஷேத்திரங்களுக்கும் சென்று இறைவழிபாடு செய்து பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் சிவஸ்தலங்கள், விஷ்ணு ஸ்தலங்கள் அனைத்தின் அருமை பெருமைகளை

எடுத்துக் கூறி யாத்திரை செய்யும் அடியார்களுக்கும் பயன் படும் வகையில் ஒரு வழிகாட்டி நூலாக என் முதுமைக் காலத்தில் (வயது 71) இதனை எழுதி உள்ளேன். இந்த நூல் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டும் என்பது என் அவா. இதில் எனது வயது முதிர்ச்சியாலும், தளர்ச்சியாலும் ஏற்பட்ட பிழைகளைப் பொறுத்து அருளுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

அடியார்கட்கு வேண்டுகோள்

"கன்றெறிந்த தோளான் தன் கனை கழல்கள் காண்பதற்கு நன்கறிந்த நாவலம் சூழ் நாடாதலின், இதைச் சித்திக்கு ஒரு வித்தாகிய தென்னாடு" என ஆன்றோர் போற்றுவர். இத்தகைய தென்னாட்டில் இறைவன் திருக்கோயில்கள் எண்ணிறந்தன. இவையெல்லாம் மனித உயிர்கள் ஈடேற இறைவனின் அருளால் எழுந்தன. இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள், அவனை வணங்க அவன் கொடுத்த உறுப்புக்களைக் கொண்டு இறைவனை வணங்கிப் பயன்பெற வேண்டும். உலகிலுள்ள சகல உயிர்கள் வினை வழிப்படுவன என்பது இந்து சமயக் கோட்பாடு ஆகும். பழவினைப் பற்றறுத்துப் பரம்பொருளின் பதமலரைப் பெறுதல் உயிர்களின் கடமையாகும். வினைகளை வேரறச் செய்ய இறைவழிபாடு இன்றியமையாதது அவ்வழிபாட்டை இயற்றவே நமது நாட்டில் திருத்தலங்கள் தோன்றியுள்ளன.

அவை சைவ வைணவ ஆலயங்களாகக் காட்சியளிக்கின்றன. தலம் என்றால், மூர்த்தியின் பெருமை, தீர்த்தத்தின் பெருமை, தல விருட்சத்தின் பெருமை முதலியன அடங்கும்.

திருமங்கை ஆழ்வார் இமயமுதல் குமரிவரை நடந்தே சென்று இறைவனை வழிபட்டார். அதேபோல் நாயன்மார்களும் நடந்து சென்றே வழிபட்டனர். "சென்று

வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை'' என்றும் ''நடமினோ நமர்கள் உள்ளீர்'' என்றும் ஆழ்வார்கள் பாடினர். ''சென்று தொடுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்'' என்று அப்பர் அடிகள் அருளியுள்ளார்.

ஒரே தாய் வயிற்றில் பிறந்த பகுத்தறிவு வாய்ந்த புதல்வர்கள் வாழ்க்கையும் இவ்வுலகில் ஒரே வகையாக அமைவதில்லை. ஒருவன் அரசு பதவியிலிருக்கிறான். இன்னொருவன் வியாபாரியாக இருக்கிறான். மற்றொருவன் தனியாரிடமிருந்து வேலை பார்க்கிறான். வேறொருவன் கூலிக்காரனாக இருக்கிறான். இன்னொருவன் மூடவனா யிருக்கிறான். இதற்குக் காரணம் அவரவர் முற்பிறவியிலே செய்த வினைப்பயனே. இதனை உணர்ந்து இந்து ஆசாரப் படி இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள்தோறும் சென்று, அங்கேயுள்ள புனிதமான செய்திகளை மனத்தில் அமைத்து நல்வழி நின்று திருந்தி இறைவனை வணங்கிப் பிறவிக் கடலினின்றும் கரையேறுவதற்கு இந்நூல் பெரிதும் துணை புரிகின்றது.

ஆஸ்திகப் பெருமக்கள் இந்நூலில் சொல்லப் பட்டுள்ள திருத்தலங்களை ஒரே சமயத்தில் சென்று தரிசிக்க வாய்ப் பில்லை எனின், பல சந்தர்ப்பங்களிலாவது சென்று தரிசித்து, மனத்தில் ஆன்மீகப் பரி பக்குவம் மேம்பட்டு, தமது பாவங் களுக்கு விமோசனம் தேடி இறையருள் பெற்று வீடுபேறு எய்த வேண்டுமென்பது அடியேனது பேராவல். கஜேந்திரன் குரலுக்குச் செவிசாய்த்து அபயமளித்தான் அல்லவா பகவான், நமது வேண்டுதல்களுக்கும் அவன் நிச்சயம் செவி கொடுத்து நம்மை உய்விப்பான் என்பதில் சிறிதும் ஐய மில்லை.

அகில இந்திய இந்து திருத்தலங்கள் மஞ்சரி
பாடல்பெற்ற சிவஸ்தலங்கள் 274
வைஷ்ணவ ஸ்தலங்கள் 108
புராண ஸ்தலங்கள், அபிமான ஸ்தலங்கள்

I மலைநாட்டுத் திருப்பதிகள்: 13

வைணவ ஸ்தலங்கள்

1. திருவண்பரிசாரம்
2. திருவட்டாறு
3. திருவனந்தபுரம்
4. திருச்செங்குன்றூர்
5. திருப்புலியூர் (குட்டநாடு)
6. திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)
7. திருவல்லவாழ் (திருவல்லா)
8. திருக்கடித்தானம்
9. திருக்காட்கரை
10. திருமூழிக்களம்
11. திருநாவாய்
12. திருவித்துவக்கோடு
13. திருவாறன விளை (ஆரம்முளா)

சிவஸ்தலங்கள் 1.

1. அஞ்சைக்களம்.

புராணஸ்தலங்களும், அபிமான ஸ்தலங்களும்

1. கன்னியாகுமரி
2. சுசீந்தரம்

3. வர்க்கலா
4. காலடி
5. குருவாயூர்

II கொங்கு நாட்டு ஸ்தலங்கள் 7

1. அவிநாசி
2. திருமுருகன் பூண்டி
3. திருநணா (பவானி)
4. திருச்செங்குன்றூர் (திருச்செங்கோடு)
5. வெஞ்சமாக்கடல்
6. திருப்பாண்டி கொடுமுடி (கொடுமுடி)
7. கருவூர்

III துளுவ நாட்டு ஸ்தலங்கள் 1

சிவஸ்தலங்கள்

1. கோகர்ணம்

புராணஸ்தலங்களும், அபிமான ஸ்தலங்களும்

1. உடுப்பி
2. தருமசாலை
3. சுப்பிரமணியபுரம்
4. கொல்லூர்
5. ஸ்ரீ ரங்கப்பட்டினம்
6. திரு நாராயணபுரம்
7. தொண்டனூர்
8. T. நரஸிம்ஹபுரம்
9. சிவசமுத்திரம்

IV வடநாட்டுத் திருப்பதிகள்:-11

ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தலங்கள்

1. திருக்கண்டமென்னும் கடிநகர் (தேவப்ராயாகை)
2. திருச்சாளக்ராமம்
3. திருச்சிங்கவேள் குன்றம்
4. திருத்வாரகை (துவாரபதி)
5. திருநைமிசாரண்யம்
6. திருப்பருதி (ஜோஷிமட்)
7. திருவடமதுரை (மதுரா)
8. திருவதரியாச்சிரமம் (பத்ரிநாத்)
9. திருவயோத்தி (அயோத்யா)
10. திருவாய்ப்பாடி (கோகுலம்)
11. திருவேங்கடம்.

சிவஸ்தலங்கள் 5

1. ஸ்ரீபர்ப்பதம் (ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சுன புரம்)
2. இந்திரநீலபருப்பதம்
3. அநேகதங்காபதம்
4. திருக்கேதாரம்
5. நொடித்தான் மலை (ஸ்ரீகைலாசம்)

புராண ஸ்தலங்களும், அபிமான ஸ்தலங்களும்

1. பண்டரீபுரம்
2. பஞ்சவடி
3. அவந்தி
4. சித்பூர் (மாத்ருகயா)
5. புற்கரம் (ஆஜ்மீர்)
6. மாயா க்ஷேத்ரம் (ஹரித்வார்)
7. பாண்டு கேச்வர்.

8. விஷ்ணுப்ராயாகை
9. ஜோஷிமடம் (பத்ரீமார்க்கம்)
10. பிரயாகை (அலகாபாத்)
11. கயாக்ஷேத்ரம்
12. ஸ்ரீ கூர்மம்
13. புவனேசரி
14. பூரி ஜகந்நாதம்
15. ஸிம்ஹாசலம்
16. பத்ராசலம்
17. அன்னவரம்
18. மகாநந்தி
19. மங்களகிரி

V தொண்டை நாட்டு ஸ்தலங்கள்

சிவஸ்தலங்கள் 32

1. திருக்கச்சியேகம்பம் (காஞ்சிபுரம்)
2. திருக்கச்சி மேற்றளி
3. ஓணகாந்தன்தளி
4. திருக்கச்சி அநேக தங்காபதம்
5. திருக்கச்சி நெறிக் காரைக்காடு
6. குரங்கணின் முட்டம்
7. மாகறல்
8. திருவோத்தூர்
9. திருப்பனங்காட்டூர் (திருப்பனங்காடு)
10. திருவல்லம்
11. திருமாற்பேறு
12. திருவூறல் (தக்கோலம்)
13. இலம்பையன்கோட்டூர்
14. திருவிற்கோலம் (கூவம்)
15. திருவாலங்காடு
16. திருப்பாசூர்

17. திருவெண்பாக்கம்
18. திருக்கள்ளில்
19. திருக்காளத்தி
20. திருஒற்றியூர்
21. திருவலிதாயம் (பாடி)
22. வடதிருமுல்லைவாயில்
23. திருவேற்காடு
24. மயிலாப்பூர்
25. திருவான்மியூர்
26. திருக்கச்சூர்
27. திருவிடைச்சுரம்
28. திருக்கழுக்குன்றம்
29. அச்சிறுபாக்கம்
30. திருவக்கரை
31. அரசிலி (ஒழிந்தியாப்பட்டு)
32. இரும்பை மாகாளம்.

விஷ்ணு ஸ்தலங்கள்: 22

1. திருஅஷ்டபுயகரம் (காஞ்சிபுரம்)
2. திருஇடவெந்தை (திருவடந்தை)
3. திரு ஊரகம் (காஞ்சிபுரம்)
4. திருஎவ்வுள் (திருவள்ளூர்)
5. திருக்கச்சி-அத்திகிரி (காஞ்சிபுரம்)
6. திருக்கடல்மல்லை (மஹாபலிபுரம்)
7. திருக்கடிகை (சோளங்கிபுரம்)
8. திருக்கள்வனூர் (காஞ்சிபுரம்)
9. திருக்காரகம் (காஞ்சிபுரம்)
10. திருக்கார்வானம் (காஞ்சிபுரம்)
11. திருத்தண்கா (தாப்புல்-காஞ்சிபுரம்)
12. திருநிலாத்திங்கள்துண்டம் (காஞ்சிபுரம்)
13. திருநின்றவூர் (தின்னனூர்)

14. திருநீரகம் (காஞ்சிபுரம்)
15. திருநீர்மலை
16. திருப்பரமேச்சுர விண்ணகரம் (காஞ்சிபுரம்)
17. திருப்பவளவண்ணம் (காஞ்சிபுரம்)
18. திருப்பாடகம் (காஞ்சிபுரம்)
19. திருப்புட்குழி
20. திருவல்லிக்கேணி
21. திருவெஃகா (காஞ்சிபுரம்)
22. திருவேளுக்கை (காஞ்சிபுரம்)

புராணஸ்தலங்களும், அபிமான ஸ்தலங்களும்.

1. சிங்கபெருமாள் கோவில்

VI நடுநாட்டு ஸ்தலங்கள்

சிவஸ்தலங்கள்: 22

1. திருநெல்வாயில் அரத்துறை (திருவரத்துறை)
2. பெண்ணாகடம்
3. கூடலையாற்றூர்
4. எருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரபட்டணம்)
5. திருத்தினைநகர்
6. திருச்சோபுரம் (தியாகவல்லி)
7. திருவதிகை
8. திருநாவலூர்
9. திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)
10. திருநெல்வெண்ணெய்
11. திருக்கோவலூர்
12. அறையணி நல்லூர்
13. இடையாறு
14. திருவெண்ணெய்நல்லூர்

15. துறையூர்
16. வடுகூர் (ஆண்டார்)
17. திருமாணிகுழி (கோயில்)
18. திருப்பாதிரிப்புலியூர்
19. திருமுண்டீச்சுரம்
20. புறவார்பனங்காட்டூர் (பனையபுரம்)
21. திருவாமாத்தூர்
22. திருவண்ணாமலை

ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தலங்கள்

1. திருக்கோவலூர்
2. திருஹீந்திரபுரம்

VII சோழ நாட்டு ஸ்தலங்கள்

சிவஸ்தலங்கள் 190

இவற்றுள்

காவேரிக்கு வடகரையிலுள்ள ஸ்தலங்கள் 63

1. கோயில் (சிதம்பரம்)
2. திருவேட்களம்
3. திருநெல்வாயில் (சிவபுரி)
4. திருக்கழிப்பாலை
5. திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாபுரம்)
6. திருமயேந்திரப்பள்ளி
7. தென்திருமுல்லைவாயில்
8. திருக்கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை)
9. திருச்சாய்க்காடு (சாயாவனம்)
10. திருப்பல்லவனீச்சுரம் (காவிரிப் பூம்பட்டினம்)
11. திருவெண்காடு
12. கீழைத் திருக்காட்டுப் பள்ளி

13. திருக்குருகாவூர்
14. சீகாழி
15. திருக்கோலக்கா
16. திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுரன் கோவில்)
17. திருக்கண்ணார் கோயில் (குறுமாணக்குடி)
18. திருக்கடைமுடி (கீழையூர்)
19. திருநின்றியூர்
20. திருப்புன்கூர்
21. திருநீடூர்
22. அன்னியூர்
23. வேள்விக்குடி
24. எதிர்கொள்பாடி (மேலைத் திருமணஞ்சேரி)
25. திருமணஞ்சேரி (கீழைத் திருமணஞ்சேரி)
26. திருக்குறுக்கை
27. கருப்பறியலூர் (மேலைக்காழி தலைஞாயிறு)
28. குரக்குக்கா
29. திருவாளொளிபுற்றூர்
30. மண்ணிப்படிக்கரை (இலுப்பைப்பட்டு)
31. ஓமாம்புலியூர்
32. கானாட்டு முள்ளூர்
33. திருநாரையூர்
34. கடம்பூர் (மேலைக்கடம்பூர்)
35. பந்தணைநல்லூர்
36. கஞ்சனூர்
37. திருக்கோடிகா
38. திருமங்கலக்குடி
39. திருப்பனந்தாள்
40. திரு ஆப்பாடி
41. திருச்சேய்ஞலூர்
42. திருந்துதேவன்குடி
43. திருவியலூர்
44. கொட்டையூர்

45. இன்னம்பர்
46. திருப்புறம்பயம்
47. திருவிசயமங்கை
48. திருவைகாவூர்
49. வடகுரங்காடுதுறை
50. திருப்பழனம்
51. திருவையாறு
52. திருநெய்த்தானம்
53. பெரும்புலியூர்
54. திருமழபாடி
55. திருப்பழுவூர்
56. திருக்கானூர்
57. அன்பிலாலந்துறை (திருமாலயந்துறை, அன்பில்)
58. திருமாந்துறை
59. திருப்பாற்றுறை
60. திருவானைக்கா (ஜம்புகேசுரம்)
61. திருப்பைஞ்ஞீலி
62. திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி)
63. திருஈங்கோய்மலை (திருவிங்கநாதமலை)

வைஷ்ணவ ஸ்தலங்கள் 21

1. சித்ரக்கூடம் (சிதம்பரம்)
2. திருத்தெற்றியம்பலம் (திருநாங்கூர்)
3. திருத்தேவனார் தொகை (கீழ்ச்சாலை)
4. திருமணிக்கூடம் (திருநாங்கூர்)
5. திருவாலியும் திருநகரியும்
6. திருவெள்ளக்குளம் (அன்னங்கோயில்)
7. திருப்பார்த்தன் பள்ளி (திருநாங்கூர்)
8. திருச்செம்பொன்செய் கோயில் (திருநாங்கூர்)
9. அரிமேய விண்ணகரம் (திருநாங்கூர்)
10. மணிமாடக்கோயில் (திருநாங்கூர்)

11. திருவண்புருடோத்தமம்
12. வைகுந்த விண்ணகரம் (திருநாங்கூர்)
13. திருக்காவளம்பாடி
14. திருக்காழிச் சீராம விண்ணகரம் (சீகாழி)
15. திருப்பேர்நகர் (கோவிலடிப் பெருமாள்)
16. திருஅன்பில்
17. திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்)
18. திருவெள்ளறை (வேதகிரி ஷேத்ரம்)
19. ஸ்ரீ ரங்கம் (திருவரங்கம்)
20. திருஇந்தலூர்
21. திருவெள்ளியங்குடி

காவேரிக்குத் தென்கரையிலுள்ள ஸ்தலங்கள் : 127

1. திருவாட்போக்கி (ஐயர்மலை, ரத்னகிரி, மாணிக்கமலை)
2. கடம்பந்துறை (கடம்பர் கோயில், குழித்தலை)
3. திருப்பராய்த்துறை
4. கற்குடி (உய்யக்கொண்டான்)
5. முக்கீச்சுரம் (உறையூர்)
6. திருச்சிராப்பள்ளி
7. எறும்பியூர்
8. நெடுங்களம்
9. மேலைத்திருக்காட்டுப்பள்ளி
10. திருவாலம்பொழில்
11. திருப்பூந்துருத்தி
12. கண்டியூர்
13. திருச்சோற்றுத்துறை
14. திருவேதிகுடி
15. தென்குடிதிட்டை (திட்டை)
16. திருப்புள்ளமங்கை
17. சக்கிரப்பள்ளி (ஐயம்பேட்டை)

18. திருக்கருகாவூர் (திருக்களாவூர்)
19. திருப்பாலைத்துறை
20. திருநல்லூர்
21. ஆவூர்
22. திருச்சத்திமுத்தம்
23. பட்டீச்சுரம்
24. பழையாறை வடதளி
25. திருவலஞ்சுழி
26. குடமூக்கு (கும்பகோணம்)
27. குடந்தைக் கீழ்க்கோட்டம் (கும்பகோணத்திலுள்ள நாகேசுரசுவாமி கோயில்)
28. குடந்தைக் காரோணம் (கும்பகோணத்திலுள்ள காசி விசுவநாதர் கோயில்)
29. திருநாகேச்சுரம்
30. திருவிடைமருதூர்
31. தென்குரங்காடுதுறை (ஆடுதுறை)
32. திருநீலக்குடி (தென்னலக்குடி)
33. வைகன் மாடக்கோயில்
34. திருநல்லம் (கோனேரி ராயபுரம்)
35. கோழம்பம்
36. திருவாவடுதுறை
37. திருத்துருத்தி (குற்றாலம்)
38. திருவழுந்தூர்
39. திருமயிலாடுதுறை (மாயூரம்)
40. திருவிளநகர்
41. திருப்பறியலூர்
42. திருச்செம்பொன்பள்ளி
43. திருநனிபள்ளி (பூஞ்சை)
44. திருவலம்புரம்
45. தலைச்சங்காடு
46. ஆக்கூர்
47. திருக்கடவூர்

48. திருக்கடவூர் மயானம்
49. திருவேட்டக்குடி
50. திருத்தெளிச்சேரி
51. தருமபுரம்
52. திருநள்ளாறு
53. கோட்டாறு
54. அம்பர் பெருந்திருக்கோயில்
55. அம்பர் மாகாளம்
56. திருமீயச்சூர்
57. திருமீயச்சூர் இளங்கோயில்
58. திலதைப்பதி (மதிமுத்தம்)
59. திருப்பாம்புரம்
60. சிறுகுடி
61. திருவீழிமிழலை
62. திருவன்னியூர்
63. கருவிலி
64. பேனு பெருந்துறை (திருப்பந்துறை)
65. நறையூர்ச்சித்தீசுரம்
66. அரிசிற்கரைப்புத்தூர்
67. சிவபுரம்
68. கலயநல்லூர் (சாக்கோட்டை)
69. கருக்குடி (மருதாந்த நல்லூர்)
70. திருவாஞ்சியம்
71. நன்னிலம்
72. திருக்கொண்டீச்சுரம்
73. திருப்பனையூர்
74. திருவிற்குடி
75. திருப்புகலூர்
76. திருப்புகலூர் வர்த்த மானீச்சுரம்
77. இராமனதீச்சுரம்
78. திருப்பயற்றூர்
79. திருச்செங்காட்டங்குடி

80. திருமருகல்
81. திருச்சாத்தமங்கை
82. நாகைக் காரோணம் (நாகப்பட்டிணம்)
83. சிக்கல்
84. கீழ்வேளூர்
85. தேவூர்
86. பள்ளியின் முக்கூடல் (அரியான்பள்ளி)
87. திருவாரூர்
88. திருவாரூர் அரநெறி
89. திருவாரூர்ப் பரவையுண் மண்டளி
90. திருவிளமர்
91. கரவீரம் (கரையபுரம்)
92. பெருவேளூர் (காட்டூரையன் பேட்டை)
93. தலையாலங்காடு
94. குடவாயில்
95. திருச்சேறை
96. நாலூர் மயானம்
97. கடுவாய்க்கரைப் புத்தூர்
98. இரும்பூளை (ஆலங்குடி)
99. அரதைப் பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்)
100. அவளிவண நல்லூர்
101. பரிதிநியமம்
102. வெண்ணி (வெண்ணியூர்)
103. பூவணூர்
104. பாதாளேச்சுரம் (பாம்பணி-பாமணி)
105. திருக்களர்
106. சிற்றேமம்
107. திருவுசாத்தானம்
108. இடும்பாவனம்
109. கடிக்குளம்
110. தண்டலை நீணெறி
111. கோட்டூர்

112. திருவெண்டுறை
113. கொள்ளம் பூதூர்
114. பேரெயில் (ஓகைப்பேரையூர்)
115. திருக்கொள்ளிக்காடு
116. திருத்தெங்கூர்
117. திருநெல்லிக்கா
118. திருநாட்டியத்தான்குடி
119. திருக்காறாயில் (காறை வாசல்)
120. கண்டுப்பூர்
121. வலிவலம்
122. கைச்சினம்
123. திருக்கோளிலி
124. திருவாய்மூர்
125. திருமறைக்காடு (வேதாரணியம்)
126. அகத்தியான்பள்ளி
127. திருக்கோடி (குழகர் கோயில்)

விஷ்ணு ஸ்தலங்கள்: 19

1. திருக்கோளி
2. திருக்கண்டியூர்
3. திருத்தஞ்சை (மாமணிக்கோயில்)
4. திருக்கவித்தலம்
5. திருக்கூடலூர்
6. நந்திபுர விண்ணகரம்
7. திருஆதனூர்
8. திருப்புள்ளம் பூதங்குடி
9. திருக்குடந்தை
10. திருவிண்ணகரம் (உப்பிலியப்பன் கோயில்)
11. திருவழுந்தூர்
12. திருச்சிறுபுலியூர்
13. திருத்தலைச்சங்க நாண்மதியம்
14. திருநறையூர்

15. திருக்கண்ணபுரம்
16. திருநாகை
17. திருக்கண்ணன்குடி
18. திருக்கண்ணமங்கை
19. திருச்சேறை

புராண ஸ்தலங்களும், அபிமான ஸ்தலங்களும்

1. கோடிக்கரை
2. ராஜமன்னார்குடி
3. வடுவூர்
4. காட்டுமன்னார்குடி
5. தில்லைவிளாகம்
6. திருமண்டங்குடி
7. குணசேகரம்

VIII ஈழநாட்டு ஸ்தலங்கள்

1. திருக்கோணமலை
2. திருக்கேதீச்சுரம்

IX பாண்டிநாட்டு ஸ்தலங்கள்

சிவஸ்தலங்கள் 14

1. திருஆலவாய் (மதுரை)
2. திரு ஆப்பனூர் (திருஆப்புடையார் கோயில்)
3. திருப்பரங்குன்றம்
4. திருவேடகம்
5. கொடுங்குன்றம் (பிரான்மலை)
6. திருப்புத்தூர்
7. திருப்புனவாயில்
8. இராமேச்சுவரம்
9. திருஆடானை

10. திருக்கானப்பேர் (காளையார் கோயில்)
11. திருப்பூவணம்
12. திருச்சுழியல்
13. திருக்குற்றாலம்
14. திருநெல்வேலி

விஷ்ணு ஸ்தலங்கள் 18

1. திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி)
2. திருக்குளந்தை (பெருங்குளம்)
3 திருக்குறுங்குடி
4. திருக்கூடல் (மதுரை)
5. திருக்கோட்டியூர்
6. திருக்கோவலூர்
7. சிரீவரமங்கலநகர் (வானமாமலை)
8. திருத்தண்கால்
9. திருத்தொலைவில்லிமங்கலம்
10. திருப்புல்லாணி
11. திருப்புளிங்குடி
12. திருப்பேரை
13. திருமாலிருஞ்சோலை
14. திருமெய்யம்
15. திருமோகூர்
16. திருவரகுணமங்கை
17. திருவில்லிப்புத்தூர் (ஸ்ரீ வில்லிப்புத்தூர்)
18. திருவைகுண்டம் (ஸ்ரீ வைகுண்டம்)

புராண ஸ்தலங்களும், அபிமான ஸ்தலங்களும்

1. திருச்செந்தூர்
2. பாபநாசம்
3. திருவாதவூர்

4. ராமேச்சுவரம்
5. சங்கரன் கோவில்
6. மன்னார் கோயில்
7. நவபாஷாணம்
8. தனுஸ்கோடி

X நில உலகில் பார்க்க முடியாத ஸ்தலங்கள்

1. திருப்பரமபதம்
2. திருப்பாற்கடல்

வரலாறு

வாணாசுரனைக் கொல்வதற்காக மஹாவிஷ்ணு யோசனையின்படி தேவர்கள் யாகம் செய்தார்கள். அந்த யாக குண்டத்திலிருந்து பராசக்தி பெண் வடிவில் தோன்றினாள். பின் தேவி தென் சமுத்திரக் கரையில் வந்து தவம் செய்தாள். தேவிக்கு மணப்பருவம் வந்ததால் திருமண ஏற்பாடுகள் நடந்தன. பிரம்மாவும் நாரதரும் தேவிக்குத் திருமணம் நடைபெற்றால் வாணாசுர சம்மாரம் நிகழாது என்பதால் மணக் கவரும் பரமசிவனிடம் கண்ணில்லாத் தேங்காய், கணுவில்லாக் கரும்பு, காம்பில்லா வெற்றிலை பொழுதுவிடிவதற்குள் தருவித்தால் மணத்திற்கு இசையுங்கள் என்று கூறினர். தேவியும் அவ்வாறு கட்டளையிட்டாள். சிவபெருமான் அதன்படி பொருள்களைக் கொணர்வதற்குள் சுசீந்திரத்திலிருந்து குமரி வரும் வழியிலுள்ள வழுக்கம்பாறை எனுமிடத்தில் நாரதர் கோழி வடிவில் நின்று கூவினார். கோழி கூவும் சத்தம் கேட்ட பரமசிவன் சுசீந்திரத்தில் தாணுமூர்த்தியாய் நின்றுவிட்டார்.

1. மலைநாடு

கன்னியாகுமரி

தேவி: பகவதி அம்மை.

புராதனமான ஸ்தலம். தேவி சிவபெருமானை அடைவதற்காகத் தவம் செய்த இடம். இங்குச் சூரிய உதயமும் அஸ்தமனமும் பார்க்கலாம். காசிக்கு அடுத்தபடியாகத் தென் திசையில் இராமேஸ்வரம். கன்னியாகுமரி – கடல் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுவது விசேடம். இங்குக் காந்தி மண்டபம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. விவேகானந்தர் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இப்போது இது சுற்றுலா இடமாக உள்ளது.

சுசீந்திரம்

சுவாமி : தாணுமாலயன்-தேவி அறங்காத்த நாயகி

வழி : கன்னியாகுமரியிலிருந்து 19 கி.மீ.

இங்குத் தேவேந்திரன் இறைவன் பூஜை பண்ணுவதாக ஐதீகம். அனுஷ்யா தேவிக்கு, பிரம்மா விஷ்ணு, சிவன் தேவியரோடு தரிசனப் கொடுத்ததாக வரலாறு. கோவில் பெரியது. ஆலயம் 5 ஏக்கர்: திருக்குளம் 5 ஏக்கர்.

I திருவண் பரிசாரம்

திருப்பதி சாரம்

மூலவர் : திருக்குறளப்பன், திருவாழ்மார்பன்; வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : கமலவல்லி

தீர்த்தம் : லட்சுமி தீர்த்தம்

விமானம் : இந்திர கல்யாண விமானம்.

ப்ரத்யட்சம் : விந்தை, காசி, உடைய நங்கை, கருடன்

வழி : சுசீந்தரத்திலிருந்து 5 கி.மீ. பேருந்தில் வந்து நாகர் கோவில் வரவேண்டும். அங்கிருந்து 4 கி.மீ. தூரம் வடக்கே சென்று இவ்வூரை அடையவேண்டும்.

முக்கியத்துவம் : நம்மாழ்வாரின் தாயார் உடைய நங்கை அவதரித்த பூமி. திருமாளிகை கோயிலுக்கு வாயு மூலையில் உள்ளது. நம்மாழ்வார் குழந்தையாகத் தவழ்வது போல் ஓர் அழகிய விக்ரகம் உள்ளது.

பகவான் இரண்யனை வதம் செய்து விட்டு உக்கிர ரூபமாக இருந்தபோது லட்சுமியும் பயந்து தவம் செய்ய வந்ததாகவும் பிரகலாதன் வழிபாட்டிற்கிணங்கச் சாந்த வடிவத்துடன் லட்சுமியைத் தேடிவர லட்சுமி மகிழ்ச்சி யடைந்து பகவானின் திருமார்பில் நித்தியவாசம் செய்த தாகவும் அதனால் பகவானுக்குத் "திருவாழ் மார்பன்" என்ற திருநாமம் ஏற்பட்டதாகவும் ச்ரிய பதி சஞ்சரித் தமையால் "திருப்பதிசாரம்" என்ற பெயர் இந்தப் பூமிக்கு ஏற்பட்டதாகவும் மரபு.

திருப்பதி சாரத்தில் உடைய நங்கை என்ற பெண் விஷ்ணு பக்தையாகி குருகூரில் காரி என்ற விஷ்ணு பக்தருக்கு மனைவியாகி அவர்கள் இந்த ஸ்லத்தில் 41 நாள் விரத மிருந்து ஆவணி சுக்ல ஏகாதேசியான வாமன ஜெயந்தி தினம் ஊஞ்சல் உற்சவம் நடத்தி உடைய நங்கை கர்ப்பவதி யாகி கலி-43 வது நாள் வைகாசி விசாகத்தன்று நம்மாழ் வார் அவதரித்துக் குருகூரில் ஆதி சந்நிதியில் விட, அந்தக் குழந்தை தவழ்ந்து சென்று புளியமரம் பொந்தில் புகுந்து யோக முத்திரையுடன் பத்மாஸன யோகத்தில் அமர்ந்து

மதுரகவி தமக்கு ஹிதோ உபதேசம் செய்யும்படி வேண்ட நம்மாழ்வார் திருவாய்மொழியை அருளிச் செய்ததாக ஸ்தல-புராணம், அனுமார் வழிபாட்டிற்கிணங்க அகத்தியார் ராமாயணம் அருளியதாக ஸ்தல வரலாறு. குலசேகர மன்னன் மண்டப கோபுர பிரகாரங்களை நிர்மாணம் செய்து வாகனங்களைச் செய்து பிரம்மோத்ஸவம் செய்து வைத்ததாக வரலாறு. நம்மாழ்வார்: திருவாய்மொழி 8.3.7.

II திருவெட்டாறு (திருவாட்டாறு)

மூலவர் : ஆதிகேசவப் பெருமாள், புஜங்கசயனம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : மரகதவல்லி நாச்சியார்

தீர்த்தம் : கடல் வாய்த் தீர்த்தம், வாட்டாறு, ராமதீர்த்தம்

விமானம் : அஷ்டாங்க விமானம், அஷ்டாக்ஷர விமானம்

ப்ரத்யட்சம் : பரசு இராமன், சந்திரன்

வழி : நாகர் கோவிலிலிருந்து திருவனந்தபுரம் பேருந்தில் செல்ல வேண்டும். அப்படிச் செல்லும் வழியில் 'தொழுவட்டி' என்ற இடத்தில் இறங்கி அங்கிருந்து வேறு பேருந்தில் 9 கி.மீ தூரம் சென்றால் இவ்வூரை அடையலாம். திருவனந்தபுரம்-கன்னியாகுமரி புகைவண்டிப் பாதையில் உள்ளது. வசதிகள் உள்ளன.

இதன் முக்கியத்துவம் ; இத்திருக்கோயில் திருவனந்தபுரம் கோவிலைப் போலவே கட்டப்பட்டுள்ளது. இங்கும் பெருமாளை வணங்க மூன்று வாயில்களும் பெரிய பிராகாரங்களும் உண்டு. கிருஷ்ணன் சன்னிதானமும் உண்டு. கர்ப்பகிருகத்தில் மூலவர் திருமுக மண்டலத்தில் மாலை நேரங்களில் இயற்கையாகவே சூரிய வெளிச்சம் படும்படி கோயிலை அமைத்திருக்கிறார்கள். கேசி என்ற அரசன் தேவர்களைத் துன்பப்படுத்த, தேவர்கள் பகவானிடம் முறையிட, பகவான்

கேசியிடம் மல்யுத்தம் செய்து கேசியைத் தள்ளி மேலே படுத்துக் கொள்ள, கேசியின் பத்தினி ஆசூரி கங்கையை வழிபட, கங்கை தாமிரபரணியுடன் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிவர பகவான் ஆணைப்படி பூமிதேவி பகவான் இருக்குமிடத்தை மலைபோல மேடாக்க கங்கையும், தாமிரபரணியும் பகவானை வணங்கி மாலை போட்டாற் போல இரண்டாகப் பிரிந்து வட்டமாகிச் சென்ற படியால் இந்த ஸ்தலம் "திருவட்டாறு" என்று பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. ஆதிகேசியைப் பகவான் "நிக்ரஹம்" செய்த படியால் பகவானுக்கு ஆதிகேசர் என்கிற திருநாமம் உண்டாயிற்று. ஆறுகள் பிரியுமிடத்தை "மூவாத்து முகம்" என்றும் நதிகளை அருள்பாலிக்க இங்கே தீர்த்தவாரி நடக்கிறது.

மங்களா சாஸனம்:-

நம்மாழ்வார்:- திருவாய்மொழி 10, 6 பதிகம்

III திருவனந்தபுரம்

மூலவர்: அநந்தபத்ம நாபன், புஜங்கசயனம் (அநந்த சயனம்) கிழக்கே திருமுக மண்டலம்

தாயார்: ஸ்ரீஹரிலட்சுமி

தீர்த்தம்: மத்யஸ தீர்த்தம், பத்ம தீர்த்தம், வராஹ தீர்த்தம்

விமானம்: ஹேம கூட விமானம்

ப்ரத்யட்சம்: இந்திரன், சந்திரன், ஏகாதச ருத்ரர்கள்

வழி: கன்னியாகுமரி-திருவனந்தபுரம் பாதையில் திருவனந்தபுரம் மத்திய புகைவண்டி நிலையத்தில் இருந்து சுமார் 1½ கி.மீ. தூரத்தில் கோவில் உள்ளது. எல்லா வசதிகளும் உள்ள பெரிய நகரம். பேருந்து வசதிகள் உள்ளன. கேரள மாநிலத்தின் தலைநகரம் ஆகும்.

இதன் முக்கியத்துவம்: மிகப்பெரிய திருமேனியாதலால், சிரஸ், உடல் திருவடிகள் இவற்றை 3 வாசல்கள் வழியே தனித்தனியே தரிசிக்க வேண்டும். தென்புறம் பிராகாரத்தில் யோக நரசிம்மனும் சந்நிதிக்கு முன்னால் அனுமானும் பின்னால் கிருஷ்ணனும் காட்சியளிக்கின்றனர். அனுமான் மீது சாத்தப்படும் வெண்ணெய் எவ்வளவு நாட்களானாலும் எந்த வெயில் காலத்திலும் உருகுவதுமில்லை; கெட்டுப் போவதும் இல்லை. லட்சிமி வராகர் திருக்கோயிலும் ஸ்ரீ னிவாசர் திருக்கோயிலும் தெற்குப்பக்கத்தில் உள்ளன. தேசிகன் ம்ங்களாசாஸனம் செய்த ஸ்தலம். திவாகரயோகி என்பார் ஆசாபாசங்களை விட்டு, ஸ்ரீ ராப்தி நாதனைக் கண்டு முக்தி அடைய ஸதாஹரி வழிபாடு செய்து கொண்டிருந்தார். அவருக்கு அருள்பாலிக்க, திருவுள்ளம் கொண்டும் இரண்டு வயதுள்ள குழந்தையாக யோகி முன் தோன்றி யோகி வழிபாடு செய்யும்போது ஒரு ஸாளக்ராமத்தைக் குழந்தை வாயில் போட்டுக் கொண்டதை யோகி பார்த்துக் கண்டிக்க, குழந்தை ஓட, யோகி துரத்த, குழந்தை ஒரு மரப் பொந்தில் புகுந்து மரம் விழுந்து பகவான் பெரிய உருவத்துடன் காட்சியளித்ததாகவும் யோகி வேண்டுகோளின்படி பகவான் தரித்ததண்டத்தளவு வடிவமெடுத்துத் திருமுக மண்டலம், நாபி, பாதம் இப்படி மூன்று த்வாரத்தால் வணங்கும்படி திருக்கோலம் பூண்டதாக வரலாறு. இங்கு அனந்த சயனம் சிறப்புடையது.

மங்களா சாஸனம்

நம்மாழ்வார் : திருவாய் மொழி 10, 2 பதிகம்

புராணஸ்தலம் : வர்க்கலா

பெருமாள் : ஜனார்த்தனப் பெருமாள், நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். ஜலத்தை ஆசமனம் செய்வது போல் வலதுகை குழிவாக இருக்கும் காட்சி.

தீர்த்தம் : ஆஞ்சிநேயபுஷ்கரிணி, சமுத்திரஸ்தானம்.

விமானம் : கிருஷ்ண விமானம்

ப்ரத்யக்ஷம் : பட்டாத்திரீ

வழி : (திருவனந்தபுரம் கொல்லம்-மார்க்கம்)

சிறப்புக்கள் : தக்ஷிண ஜனார்த்தனம் என்று பெயர். அர்ச்சா மூர்த்தி விக்ரஹத்திலுள்ள ஆசமனம் செய்யும் கை, வாய் வரை வந்தால், கலி முடிந்து உலகம் மூழ்கிவிடும் என்பது ஐதீஹம்,

IV திருச்செங்குன்றூர்

(திருச்சிற்றாறு)

மூலவர்: இமயவரம்பன், நின்ற திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : செங்கமலவல்லி

தீர்த்தம் : சங்க தீர்த்தம். திருச்சிற்றாறு.

விமானம் : ஜகத்சோதி விமானம்.

ப்ரத்யக்ஷம் : ருத்திரன் (சிவன்)

வழி : திருவனந்தபுரத்திலிருந்து கொல்லம் வழியாக எர்ணாகுளம் செல்லும் புகைவண்டிப் பாதையில் செங்கண்ணூர் புகைவண்டி நிலையம் உள்ளது. வெளியூர் பேருந்துகள் வருகின்றன. உணவு விடுதிகள் சத்திரங்கள் உண்டு. தருமர் தவம் செய்த இடம். பெரிய நகரம்.

இதன் முக்கியத்துவம் : சூரன், பத்மன் என்ற இருவர் சிவபெருமானிடம் வரம் பெற்று ஓர் உடலாய்ச் சூரபத்மன் என்ற பெயர் பெற்றுத் தேவர்கள் உள்பட எல்லோரையும் துன்புறுத்தியதால் சுப்பிரமணியன் இவர்களை ஸம்ஹாரம் செய்து

அவர்களைக் கொடியில் சேவலாகவும் மயிலாகவும் ஆக்கிக் கொண்டதாக வரலாறு. தன்குருவான துரோணரை யுத்தத்தில் கொல்வதற்கு 'அச்வத்தம்மா ஹத'' என்று உரக்கச் சொல்லி ''குஞ்ஜர'' என்று மெதுவாகச் சொன்னது தரும புத்திரனின் மனத்தை வருத்திய படியால் இந்தத் தலத்திற்கு வருகை தந்து ஆலய ஜீர்ணோத்தாரணம் செய்து, திருச்சிற்றாற்றில் குளித்து விட்டு வழிபாடு செய்து மனம் அமைதி பெற்றதாக வரலாறு. தர்மபுத்திரர் ஜீர்ணோத்தாரணம் செய்ததால் தர்மபுத்திரர் பிரதிஷ்டை என்பர்.

மங்களா சாஸனம் :

நம்மாழ்வார் : திருவாய்மொழி 8, 4 பதிகம்

V திருப்புலியூர் (குட்டநாடு)

மூலவர் : மாயப்பிரான். நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : பொற்கொடி நாச்சியார்.

தீர்த்தம் : பரஞ்ஞான ஸரஸ், பூஞ்சுனை

விமானம் : புருஷோத்தம விமானம்

ப்ரத்யக்ஷம் : ஸப்தரிஷிகள்

வழி : செங்கன்னூரிலிருந்து மேற்கே 5½ கி. மீ தொலைவில் உள்ளது. பேருந்து உள்ளது.

சிறப்புக்கள்: இக்கோவிலைப் பீமன் குடமுழுக்குச் செய்ததால் பீமசேனனால் பிரதிஷ்டை என்று அழைக்கப்படுகிறது. சிபி குமாரன் வருதிஷார்பி அரசாண்டபோது க்ஷாமம் உண்டானதாகவும் அப்போது அங்கு வந்த ஸப்தரிஷிகளுக்கு அரசன் தானம் செய்வதாகவும் சொல்ல அரசர்களிடம் தானம் பெறுவது பெரிய பாவம் என்று ரிஷிகள் போக அமைச்சர்கள்-வழி பொன் கலந்த பழங்களை அனுப்ப ஞான திருஷ்டியால் ரிஷி

கள் அதை உணர்ந்து மறுக்க, அரசன் ஹோமம் செய்து க்ருத்யை என்ற மாரக ஸ்த்ரீயை உண்டாக்கி ரிஷிகளைக் கொல்ல ஏவ, பகவான் இந்திரனை அனுப்பி க்ருத்தியைக் கொன்று ரிஷிகளைச் சொர்க்கத்துக்கு அழைத்துப் போய் ஸ்கானுபவம் செய்து வைத்ததாகப் புராணம் சொல்கிறது. ஸப்தரிஷிகள் ஸ்ரீ மந்நாராயணன் தான் தேவதைகளுக்குள் உத்தமன் என்று பரதேவதா நிர்ணயம் செய்ததால் பகவான் ப்ரத்யக்ஷமாகி மாயப்பிரனாகக்காட்சி கொடுப்பதாக ஐதீகம்.

மங்களா சாஸனம் :

நம்மாழ்வார்	திருவாய்மொழி 8, 9 பதிகம்
திருமங்கையாழ்வார்	சிறிய திருமடல் 71 அடி

VI திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)

மூலவர் : பாம்பணையப்பன். கமலநாதன் நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : கமலவல்லி

தீர்த்தம் : பாபநாச தீர்த்தம், பம்பா தீர்த்தம்.

விமானம் : வேதாலய விமானம்

ப்ரத்யக்ஷரம் : மார்க்கண்டேயர், நாரதர்

வழி ; செங்கன்னூரிலிருந்து வடக்கே 6½ கி. மீ. தூரத்தில் உள்ளது. வசதிகள் இல்லை. நகரப் பேருந்து வசதி உண்டு. திருவல்லாவில் தங்கிச் சுவாமியை வணங்கலாம்.

சிறப்புக்கள் : இத்திருக்கோயிலை நகுலன் குடமுழுக்குச் செய்த காரணத்தால் நகுலனால் பிரதிஷ்டை என்று அழைக்கப்படுகிறது. இவ்வூரில் பூமியைத் தோண்டுகையில் புதிய பெருமான் விக்ரகங்கள் கண்டெடுக்கப்பட்டுப் புதிய ஸந்நிதிகள்

மண்டபங்களுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. நாரதர் ப்ருஹ்மாவினால் சாபமிடப்பட்டு இவ்விடம் வந்து ஸ்ரீ மந்நாராயணனை பூஜித்து,பகவானிடமிருந்து தத்வஞானம் உபதேசிப்பதே தொழிலாக வேண்டும் என்ற வரத்தைப் பெற்ற ஸ்தலம்.

மங்களா சாஸனம் :

நம்மாழ்வார் : திருவாய்மொழி 6, 1 பதிகம்

VII திருவல்லவாழ்

(திருவல்லா - ஸ்ரீ வல்லப க்ஷேத்ரம்)

மூலவர் : கோலப்பிரான், திருவாழ்மார்பன். ஸ்ரீ வல்லபன் நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : செல்வத் திருக்கொழுந்து வாத்ஸல்யதேவி.

தீர்த்தம் : கண்டாகர்ணதீர்த்தம், பம்பாநதி.

விமானம் : சதுரங்க கோல விமானம்.

ப்ரத்யக்ஷம் : கண்டா கர்ணன்

வழி : கொல்லம் - எர்ணாகுளம் புகைவண்டி மார்க்கத்தில் திருவல்லா புகைவண்டி நிலையத்தில் இருந்து 5 கி.மீ. தூரம் உள்ளது. பேருந்து வசதிகள் உள்ளன. 5 திருக்கோயில்கள் உள்ளன.

சிறப்புக்கள் : இக்கோவிலில் சுதர்சன சக்ரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. த்வஜஸ்தம்பம் பொன் தகடு வேயப்பட்டுள்ளது. பெண்கள் ஸந்நிதிக்கு வெளியிலிருந்தே வணங்க வேண்டும். இத்தலத்தில் சங்கர மங்கலத்தம்மை என்கிற பதிவிரதை ஏகாதசி விரதம் இருந்து துவாதசி அன்று ப்ருஹ்மசாரிக்கு பாரணை செய்வித்து வந்ததாகயும் தாலகாகரன் இதற்கு

இடையூறு செய்ததாகவும், பகவான் ப்ருஹ்மசாரி வேடத்தில் வந்து அசுரனைக் கொன்று பாரணைக்கு வந்தபோது க்ருஷ்ணாஜினத்தினால் திருவாழ் மார்பை மறைப்பதைக் கண்ட அப்பதிவிரதையின் பிரார்த்தனைப்படி திருவாழ் மார்பை இன்றும் பக்தர்களுக்கு ஸேவை ஸாதிப்பதாக வரலாறு.

கண்டா கர்ணன் என்பவன், முதலில் சிவ பக்தனாக இருந்து, பிறகு சிவன் உபதேசித்தபடி அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபிக்கும்போது தன் செவியில் க்ருஷ்ண நாமம் தவிர மற்ற எதுவும் விழாதிருக்க, தன் காதில் இரண்டு பொன்மணிகளை அணிந்து அது சப்திக்கும்படி அசைத்துக் கொண்டு தவம் செய்து மோக்ஷம் அடைந்ததாக ஸ்தல வரலாறு.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார்	திருவாய்மொழி 5, 9 பதிகம்
நம்மாழ்வார்	பெரிய திருமொழி 9, 7

VIII திருவாறன்விளை (ஆரம்முளா)

மூலவர் : திருக்குறளப்பன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : பத்மாஸனி

தீர்த்தம் : வேதவ் யஸரஸ், பம்பா தீர்த்தம்

விமானம் : வாமன விமானம்

ப்ரத்யக்ஷம் : ப்ரஹ்மா, வேத வியாசர்

வழி : செங்கன்னூரிலிருந்து கிழக்கே 9½ கி. மீ. பேருந்தில் போகலாம். தேவஸ்தான சத்திரம் உண்டு.

சிறப்புக்கள் : போரில் கர்ணனின் தேர் இடது சக்கரத்தைப் பூமி விழுங்கிய பொழுது கர்ணன் தன் தேரைத் தூக்கி விட்டு

வரும் வரை பூமியில் இருக்கும் தன்னைக் கொல்ல வேண்டாம் என்று சொல்லியும் வஞ்சகமாய்ப் பாணத்தைப் போட்டுக் கொன்றதால் மனது வருந்திய அர்ஜுனன் இங்கே வந்து தவம் செய்தான். அப்போது இக்கோவிலைக் குடமுழுக்குச் செய்த தாக வரலாறு. இக்கோயில் அர்ச்சுனனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. இக்கோவிலின் பக்கத்தில் அழகிய பம்பா நதி ஓடுகிறது. முன்பு ப்ருஹ்ம தேவரிடமிருந்து வேதங்களை மதுகைடபர்கள் அபகரித்த போது ப்ருஹ்மா ஸ்ருஷ்டிஞான சூனியராக, பகவானைக் குறித்துத் தவம் செய்ய, பகவான் ஸ்ருஷ்டி ஞானத்தை ப்ருஹ்மாவுக்குத் திருப்பி அருளிய ஸ்தலம்.

மங்களா சாஸனம் :

நம்மாழ்வார் : திருவாய் மொழி 7, 10 பதிகம்.

IX திருக்கடித்தானம்

மூலவர் : அற்புத நாராயணன் (அம்ருத நாராயணன்) நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : கற்பகவல்லி.

தீர்த்தம் : பூமி தீர்த்தம்

விமானம் : புண்ய கோடி விமானம்

வழி : திருவல்லாவிலிருந்து கோட்டயம் சாலையில் 8 கி.மீ. பேருந்தில் சென்று, செங்கணச்சேரியில் இறங்கி, அங்கிருந்து வேறு சாலையில் கிழக்கே 3 கி.மீ. சென்று இவ்வூரை அடைய லாம். திருவல்லாவாழில் தங்கி இங்கே பேருந்தில் வந்து வணங்கி விட்டுத் திரும்பலாம்.

சிறப்புக்கள் : இங்கே நரசிம்ஹன், க்ருஷ்ணன் ஸந்நிதிகளும் இருக்கின்றன. ருக்மாங்கதன் என்கிற ஸூர்ய வம்சத்து அரசன் ஆண்ட இடம். ஏகாதேசி வ்ரதம் இருந்து அதன்

பலனைத் தேவர்களுக்குக் கொடுத்து அவர்களைத் தேவ லோகம் அனுப்பி வைத்த ஸ்தலம், இந்த ஸந்நிதியை ஸஹா தேவன் ஜீர்ணோத்தாரணம் செய்ததால் ஸஹதேவம் ப்ரதிஷ்டை என்பர்.

மங்களா சாஸனம் :

நம்மாழ்வார் : திருவாய் மொழி 8, 6 பதிகம்.

X திருக்காட்கரை

மூலவர் : காட்கரையப்பன், நின்ற திருக்கோலம், தெற்கே திருமுக மண்டலம்.

தாயார் : பெருஞ்செல்வ நாயகி, வாத்ஸல்யவல்லி

தீர்த்தம் : கபிலதீர்த்தம்

விமானம் ; புஷ்கல விமானம்

ப்ரத்யக்ஷம் : கபிலமுனி

வழி : ஆலவாய். திருச்சூர் புகைவண்டி வழியில் அங்கமாலி புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே சுமார் 14½ கி.மீ. தூரத்திலிருக்கிறது. வசதிகள் ஒன்று மில்லை.

சிறப்புக்கள் : இப்பெருமாளை வாமனன் என்றும் மலையாளர்கள் சொல்லுகின்றனர். ஓணம் பண்டிகை அன்று இக் கோவிலில் பெரிய விழா நடக்கிறது. இத்தலத்தில் ஒரு தனிகன் வாழைத் தோட்டங்கள் ஏற்படுத்தி குலை தள்ளாமலே பலமுறை அழிந்து போய் அந்தத் தனிகன் பொன் வாழைக்குலை செய்து திருக்காட்கரை அப்பனுக்கு வழங்க பகவான் அருளால் தோட்டங்களில் வாழை மரங்கள் உயர்ந்து வாழைக் குலைகளை இட்டதாகவும், அவையே 'நேந்திரம் வாழை' என்று பிரஸித்தமாக இருப்பதாகவும்

வரலாறு. பொன் வழைக்குலை ஒரு சமயம் காணாமல் போனதாகவும், அரசன் ஒரு யோகியைத் தீர விசாரியாமல் சந்தேகித்துத் துன்புறுத்தியதாகவும் அந்தவாழைக்குலைகர்ப்பக் ருஹத்திலேயே இருப்பதைக் கண்டு யோகி தற்கொலை செய்து கொண்டு சாபம் நீங்க ஜனங்கள் யோகி சொல்லிய படி மூங்கில் கூரை ஏற்படுத்திக் கொண்டு கோரைக் கொள்ளியை வெளிச்சத்திற்கு ஏற்படுத்தி நீங்கியதாக ஸ்தல வரலாறு. யோகி ப்ருஹ்ம ரட்சஸ்ஸாகி ஊரில் திரிந்ததாகவும், மக்கள் யோகிக்குச் சிறு கோயில் கட்டி நைவேத்தியம் தினமும் ஏற்படுத்தியதாகவும் வரலாறு.

மங்களா சாஸனம் :

நம்மாழ்வார் : திருவாய்மொழி 9, 6 பதிகம்.

XI திருமூழிக்களம்

மூலவர்: திருமூழிக்களத்தான், அப்பன், ஸ்ரீஸூக்தி நாதர்

பெருமாள்: நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: மதுரவேணி நாச்சியார்

தீர்த்தம்: பெருங்குளம், சங்கதீர்த்தம், சிற்றாறு.

விமானம்: ஸௌந்தர்ய விமானம்

பிரத்யக்ஷம்: ஹாரீத மஹாரிஷி.

வழி: அங்கமாலி புகைவண்டி நிலையத்திலிருந்து பேருந்தில் வரலாம்.

சிறப்புக்கள்: இப்பெருமாளை லட்சுமணன் என்று கூறுவர். ஹாரித மஹரிஷி பல வருஷங்கள் தவமிருந்து பகவானை ப்ரத்யக்ஷமான போது அவர் வர்ணாச்சரம தர்மங்களையும் ஐந்து யோகத்தையும் ப்ரதிபாலிக்கிற ஸம்ஹிதையை, ஸ்ரீ ஸூக்தியை திருமொழியை-இயற்றியபடியால் இந்த ஸ்தலத்திற்கு "திருமொழிக்களம் என்று பெயர்

வழங்கவேண்டும். பெருமாளுக்குத் திருமொழிக்களத்தான் என்ற திருநாமம் இருக்கவேண்டும், என்று பிரார்த்தித்த படி பெயர் உண்டாகியதாகப் புராண வரலாறு.

இராமன் சித்திரக் கூடத்திலிருந்தபோது, பரதன் ராமனைத் திரும்ப அயோத்திக்கு அழைத்துப் போக வந்ததை ஐயம்கொண்டு லட்சுமணன், பரதனைக் கொல்ல முயன்ற பாவத்தைப் போக்க திருமுழிக்களத்தானை அடி பணிந்ததாகவும் அப்போது பரதனே வந்து இன்சொல் லுடன் ஆனந்த பரவசனாய் லட்சுமணனை ஆலிங்கனம் செய்து கொள்ள, பகவானை இருவரும் துதித்ததாகவும், இன்சொல் விளைந்த ஸ்தானமாகையாலே இதற்குத் 'திருமூழிக்களம்' என்று பெயர் உண்டானதாக ஸ்தல வரலாறு. லட்சுமணன் இவ்விடத்தில் கோபுர மண்டப ப்ராகாராதிகளை ஜீர்னோத்தாரணம் செய்ததாக வரலாறு.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்	திருவாய்மொழி 9, 7 பதிகம்
நம்மாழ்வார்	பெரிய திருமொழி 7,1,6.

காலடி

ஆதி சங்கரர் ஸ்தலம். யாத்திரை வாசிகள் அவசியம் தரிசனஞ் செய்ய வேண்டிய ஸ்தலம். பெரியார் என்ற ஒரு நதி ஓடுகிறது. மிகவும் புனிதமான ஸ்தலம். அபிமான ஸ்தலம்.

I சிவஸ்தலம்

திருஅஞ்சைக்களம்

சுவாமி: அஞ்சைக் களத்தப்பர்

தேவி: உமையம்மை

தீர்த்தம்: சிவகங்கை

பதிக்ம்: சுந் 1

வழி: திருச்சூரிலிருந்து பேருந்து வண்டியில் புல்லூற்றுக்கு 37 கி.மீ. போய்த் தோணித் துறையடைந்து வஞ்சி என்ற நாட்டுப் படகில் ஏறி ஆற்றைத் தாண்டினால் திருவஞ்சைக் களத்தை அடையலாம் இப்பொழுது பேருந்து மூலமும் போய்ச் சேரலாம். சுந்தரர் சேரமான் இவர்களுடைய உற்சவ விக்கிரகங்கள் இருக்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் வெள்ளையானையின் மீதும், அவருடைய தோழராகிய சேரமான் பெருமாணாயனார் குதிரையின் மீதும் ஏறிக் கைலாயத்துக்குச் சென்ற ஸ்தலம். பரசுராமர் தாயைக் கொன்ற பாவம் நீங்கும் பொருட்டுப் பூஜித்த ஸ்தலம் இங்குத்தான் குலசேகர ஆழ்வார் அவதாரம் செய்த ஸ்தலம்,

குருவாயூர்

வழி: திருவனந்தபுரம், கொச்சி, ஹோரனூர் புகைவண்டி.

குருவாயூரப்பன், பகவதி அம்மன், விநாயகர், சாஸ்தா, ஸ்வாமி புஷ்கரிணி, பட்டாத்திரிக்கு ப்ரத்யக்ஷமாகி நாராயணீயம் அருளிய ஸ்தலம். வரப்ரஸாதி, நாராயணீயம் பகவத் ஸந்நிதியில் சொல்லி பட்டாத்ரிக்கு வ்யாதி விலகியதாக வரலாறு. நாராயணீயம் சொல்லும்போது பட்டாத்ரிக்கு அந்தந்தக் கட்டத்தில் அந்தந்தக் காட்சியைப் பகவான் நேரில் காட்டியதாகப் புராண வரலாறு.

XII திருநாவாய்

மூலவர்: நாவாய் முகந்தன், நாராயணன், நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: மலர் மங்கை, சிறுதேவி

தீர்த்தம்: செங்கமல ஸரஸ்

விமானம்: வேத விமானம்

ப்ரத்யக்ஷம் : லட்சுமி, கஜேந்திரன், நவயோகிகள்

வழி : சென்னை கள்ளிக்கோட்டை புகை வண்டியில் உள்ள இந்த நிலையத்திலிருந்து ஊரும் கோவிலும் 1½ கி மீ. தூரத்தில் உள்ளன.

சிறப்புக்கள் : கோவில் பாரதப்புழை ஆற்றை ஒட்டியுள்ளது. எதிர்க்கரையில் சிவனுக்கும், ப்ரஹ்மாவுக்கும் கோவில்கள் உள்ளன. இதைக் காசிக்குச் சமமாகக் கருதி சிரார்த்தங்கள் முதலியன செய்கின்றனர். இவ்விடத்தில் ஒன்பது யோகிகள் யாகம் செய்ததால் இந்த ஸ்தலம் திருநவயோகி என்று பெயர் பெற்று நாளடைவில் திருநாவாய் என்று மக்கள் வழக்கில் மாறுபட்டதாக ஐதீஹம்.

ஒரு சமயம் மஹாலட்சுமியும் கஜேந்திரனுக்கு பூ கிடைக்காமல் பகவானிடம் முறையிட பகவான் லட்சுமியை ஏக சிம்மாசனத்தில் அமரச் செய்து கஜேந்திரன் பூஜையை ஏற்றுக் கொண்டதாகப் புராண வரலாறு. மலைநாட்டில் இந்த ஓர் இடத்தில்தான் லட்சுமிக்குத் தனி சந்நிதி உண்டு.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்	திருவாய்மொழி 9, 8 பதிகம்
நம்மாழ்வார்	பெரிய திருமொழி 6,8,3

XIII திருவித்துவக்கோடு

(திருவிச்சிக்கோடு - திருவஞ்சிக்கோடு)

மூலவர்: உய்யவந்த பெருமாள், அபயப்ரதன், நின்ற திருக்கோலம், தெற்கே திருமுக மண்டலம்.

தாயார்: வித்துவக் கோட்டுவல்லி, பத்மபாணி.

தீர்த்தம்: சக்ர தீர்த்தம்.

விமானம்: தத்வ காஞ்சன விமானம்.

ப்ரத்யட்சம்: அம்பரீஷன்

வழி: ஷோரானூர்-கள்ளிக்கோட்டை புகைவண்டி வழியில் பட்டாம்பி புகைவண்டி நிலையத்தில் இருந்து 3 கி.மீ. தூரம். பஞ்சபாண்டவர்கள் தவம் செய்த இடம்.

சிறப்புக்கள் : கோவிலில் நுழைந்ததும் எதிரே சிவன் சந்நிதியும் அதன் பின் பெருமாள் சந்நிதியும் இருக்கின்றன. அம்பரீஷன் ''பரதேவதையை வணங்க வ்யூஹாவதாரத்தை அநுக்ரஹிக்க வேண்டும்'' என்று பகவானை பிரார்த்தித்த படியால் பகவான் இங்கு நான்கு வடிவம் கொண்டு எழுந் தருளி இருப்பதாக வரலாறு.

நடுவில் இருக்கும் மூர்த்தியைத் தர்மபுத்திரரும் மேற்கில் இருக்கும் மூர்த்தியை அர்ஜுனனும் இடப்புறத்திலுள்ள மூர்த்தியைப் பீமஸேனனும் வலப்புறத்திலுள்ள மூர்த்தியை நகுலனும், பூஜை செய்ததாகப் புராண வரலாறு.

மங்களா சாஸனம்

குலசேகராழ்வார்: பெருமாள் திருமொழி 5 பதிகம்

குறிப்பு: இங்கிருந்து கோயம்புத்தூர், சேலம் வந்து கொங்கு நாடு ஸ்தலங்களையும் தரிசனஞ் செய்யலாம். கொங்கு நாட்டு ஸ்தலங்களைத் தரிசித்துவிட்டு அறுபடை வீட்டில் ஒன்று ஆகிய பழநி வந்து தண்டாயுதபாணியைத் தரிசித்து விட்டு மதுரை வந்து பாண்டிய நாடு ஸ்தலத்தையும் தரிசிக்கலாம். பழநி தண்டாயுதபாணியைத் தரிசித்துவிட்டு கொங்கநாட்டு ஸ்தலமாகிய வெஞ்சமாக்கூடல் கரூர், தான் தோனி மலை இந்த இடங்களுக்குப் பல்லப்பட்டி, அருலக் குறிச்சி வழியாக வந்து மேற்படி இடங்களைத் தரிசனம் செய்து, அதன்பின் மற்ற 5 ஸ்தலங்களையும் தரிசனம் செய்யலாம்.

கொங்குநாடு

1 அவிநாசி

சுவாமி: அவி நாசியப்பர்

இறைவி: கருணாம்பிகை

தீர்த்தம்: முத்தலை

மரம்: பாதிரி மரம்

பதிகம்: சுந் 1

வழி ; ஈரோட்டில் இருந்து போத்தவிருக்கும் போகும் வழியில் திருப்பூர் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 12½கி. மீ.

சிறப்புக்கள் : அவிநாசி என்றால் விநாசமில்லாதது என்று பொருள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலை வாயினின்றும் பிராமணப் பிள்ளையை மீட்டுக் கொடுத்தருளிய ஏரியும் இருக்கின்றது. அதன் தெற்கில் தான் திருப்புக் கொளியூர் இருந்ததாம், அங்கே வீடுகள் ஒன்றுமில்லை. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கோயில் இருக்கின்றது. அம்பிகை இங்கே தவம் செய்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். 63 நாயன்மார்களுடைய விக்ரகங்கள் செப்பிற் செய்யப்பட்டிருக்கின்றன.

நந்தி : பெரிய உருவம், முருகன், ஆறுதிரு முகங்களுடன் விளங்குகிறார்.

2 திருமுருகன் பூண்டி

சுவாமி : முருக நாதேசுரர்

தேவி : முயங்கு பூண் முலையம்மை

தீர்த்தம்: ஆவுடை தீர்த்தம்

பதிகம்: சுந் 1

வழி: அவிநாசியிலிருந்து 5 கி.மீ.

சிறப்புக்கள்: துருவாச முனிவர் கற்பகலோகத்திலிருந்து மாதவி (குருகத்தி) மரத்தை இங்குக் கொண்டு வந்தினரென்பர். அவர் முதலினோருக்குப் "பிரமதாண்டவ" தரிசநந் தந்த நடராஜர் சந்நிதி விசேடம். முருகக் கடவுள் பூஜித்த ஸ்தலம். ஆதலால் முருகன்ப் பூண்டி என்னும் பெயர் போந்தது.

சேரமான் பெருமாணாயனார் கொடுத்த திரவியங்களை யெடுத்துக் கொண்டு சுந்தர மூர்த்தி நயினார் திருவாரூருக்கு செல்கையில், சுவாமி பூதர்களை வேடர்களாக அனுப்பி, அத் திரவியங்களைப் பறிக்கச் செய்து, பின்பு நாயனார் பதிகம் பாடித் துதிக்க, அவைகளை மீட்டுங் கொடுத்தருளிய ஸ்தலம். வழிமறித்து நிதிபறித்த இறைவன் இருக்கும் இடத்தைக் கூவென்று கூவிச் சுந்தரமூர்த்திக்குக் காட்டிய விநாயகர் திருமுருகன் பூண்டிக்கு 2½ கிலோ மீட்டரில், அவிநாசிக்குப் போகும் வழியில் வீற்றிருக்கின்றார். அவருக்குக் "கூப்பிடு பிள்ளையார்" என்று பெயர். கோயிலுக்கு வெளியிற் பிள்ளையார் கோயில் ஒன்று இருக்கிறது. அதற்கெதிரில் ஒரு பாறையில் சிறு குழி ஒன்றிருக்கிறது. அதில் 12 வருஷத்துக்கொரு விசை ஜலம் பொங்குவதாக சொல்லுகிறார்கள். பறி கொடுத்து முகம் வாடிய சுந்தர மூர்த்தி ஸ்வாமிகளுடைய உருவமும் இழந்த நிதியை மீட்டும் பெற்ற அவருடைய உருவமும் கோயில் வாயிலிலுள்ளன.

3 திருநணா என்பது பவானி

சுவாமி : சங்கமுக நாதேசுரர்

தேவி : வேத மங்கை, பவானி

தீர்த்தம் : சம் 1

வழி : ஈரோடு புகைவண்டி நிலையத்துக்கு வடக்கே 14½ கி. மீ.

சிறப்புக்கள் : காவிரி, பவாநி, அமுதநதி கூடுதலால் ''பவானி முக்கூடல்'' என்று பெயர். அமுதநதி, அந்தரவாகினி பஞ்ச கிரி மத்திய பிரதேசம். அவைதாம் பத்மகிரி, நாககிரி, சங்க கிரி, மங்கலகிரி, தேவகிரி என்பன.

குபேரன், விசுவாமித்திரர், பராசுரர் முதலியோர் பூஜித்த ஸ்தலம். பிராகாரத்தில் பழைய இலந்த மரங்கள் 2 உள்ளன. கோயிலுக்குள் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும் இருக் கின்றது.

குபேரன் பூஜித்ததால் தக்ஷிணி அறகை 'பராசரசேத் திரம், தட்சிணவதரி காச்சிரமம், தக்ஷிண பிரயாகை திரு வேணி-சங்கமம் என இத்தலம் பெயர் பெறும்.

4. திருப்பாண்டிக் கொடி

சுவாமி: கொடுமுடி நாதர்

தேவி: பண்மொழி நாயகி

தீர்த்தம்: காவேரி

வருஷம்: வன்னி

வழி: பவானியிலிருந்தும் போகலாம். ஈரோட்டிற்குத் தென் கிழக்கே 37 கி. மீ.

சிறப்புக்கள்: சுந்தரமூர்த்தி சுவாமிகள் நமச்சிவாய திருபதிகம் பாடி அருளிய ஸ்தலம். கோயிலுக்குள் பிரங்கநாதர் சந்நிதி தனியாக உள்ளது. வன்னி மரத்தின் அடியில் பிரமதேவர் சந்நிதி உள்ளது.

5 கொடி மாடச் செங்குன்றூர் என்பது திருச்செங்கோடு

சுவாமி: அர்த்த நாரீசுரர்

தேவி: அர்த்த நாரீச்சுவரி, பாகம் பிரியாளம்மை

தீர்த்தம்: சங்கு தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: சேலம் ஜில்லா சங்கரிதுர்க்கம் R. S. தென்கிழக்கே 10 கி.மீ. மலை மேலுள்ளது. வழியில் பல மண்டபங்களும் சுனைகளும் உள்ளன. மலையடி வாரத்தில் ஆறுமுக ஸ்வாமி தேவியாருடன் கோயில் கொண்டிருக்கிறார். மலைமேற் சுப்பிரமணிய ஸ்வாமி சந்நிதி தனியாகவும் பெரிதாகவு முள்ளது. வெண்ணிற மூர்த்தி ஆதிகேசவப் பெருமாள் ச்ந்நிதியொன்று ஆலயத்தில் இருக்கின்றது.

6 கருவூர்

சுவாமி: பசுபதீச்சுரர்

தேவி: கிருபா நாயகி

தீர்த்தம்: ஆம்பிராவதியாறு

பதிகம்: சம் 1

வழி: திருச்சிக்கு மேற்கே 72 கி. மீ; புகைவண்டி நிலையம் உள்ளது.

சிறப்புக்கள்: இலிங்க மூர்த்தி வடபுறம் சாய்ந்திருக்கின்றார். கோயிலும் கோபுரமும் பெரிது. தேவியார் சந்நிதி இரண்டுள் ளன. எறிபத்த நாயனாருடைய ஸ்தலம், கொங்கு தேசத்துக் குரிய புகழ்ச்சோழ நாயனாருடைய சிவகாமியாண்டார் என்னும் பெரியவர் இருந்த இடம், கருவூர்த்தேவர் அவதரித்து முத்தியடைந்த க்ஷேத்திரம்.

அபிமான விஷ்ணு ஸ்தலம்

தான் தோன்றிய மலை

பெருமாள்: பிரஸன்ன வெங்கடேசர் குகையில் கிழக்கே நின்ற திருக்கோலம்,

தாயார்: பத்மாவதி.

தீர்த்தம்: அமராவதி நதி

வழி: திருச்சி-கரூர்-ஈரோடு புகைவண்டி கரூர் அருகாமையில் உள்ளது.

சிறப்புக்கள்: பெருமாள் தானே தோன்றிய படியால் தான் தோன்றிய மலை எனப்பெயர் ஏற்பட்டது.

7. வெஞ்சமாக்கூடல் (கூடல்)

சுவாமி: விகிர்த நாதேசுரர்

தேவி: பண்ணேர் மொழியம்மை விகிர்த நாயகி

தீர்த்தம்: விகிர்த தீர்த்தம்

பதிகம்: சுந் ௧.

வழி: கருவூருக்குத் தெற்கே அரவக் குறிச்சி போகும் வழியில் 28 கி.மீ. குழகனாற்றைக் கடந்தால் இதனை அடையலாம்.

சிறப்புக்கள் : வெஞ்சன் வேட அரசன் எனவும் கூறுவர். கோயில் சுற்றுப் பள்ளத்திலிருக்கிறது. சிவ பெருமான் தம் மாட்டுபத்தி முதிர்ந்த ஒரு கிழவியிடம் தம் பிள்ளைகளை ஈடு காட்டிப் பொன் வாங்கிச் சுந்தரமூர்த்திக்கு அளித்த ஸ்தலம்.

துளுவநாடு

மைசூர் ராஜ்ஜியம்

ஸ்ரீரங்கப்பட்டினம்

பெருமாள்: ரெங்க நாதர், சயனத்திருக்கோலம்

தாயார்: ரெங்கநாயகி

தீர்த்தம்: காவேரி நதி

விசேஷம்: லஷ்மி ந்ருஸிம்ஹர் ஸந்நிதி உண்டு. ஸ்ரீரங்கத்தைப் போல் காவேரி மத்தியில் இருக்கிறது. சாப்பாட்டு வசதி உண்டு. மைசூரில் காவேரிக்கரையில் அமைந்திருக்கிறது.

திருநாராயணபுரம்

பெருமாள், மூலவர் : திருநாராயணன். மேற்கே நின்ற திருக்கோலம்.

உத்ஸவர் : செல்வப்பிள்ளை, ஸம்பத்குமார், ராமப்ரியர்.

தாயார் : யதுகிரி நாச்சியார். பெருமாளுடைய பாதத்தில் பூமிதேவி (நாச்சியார்) வரநந்தினி.

தீர்த்தம் : கல்யாணி முதலான அஷ்டதீர்த்தங்கள் தனுஷ்கோடி தீர்த்தம். வேதபுஷ்கரிணி

விமானம் : ஆனந்தமயம்

ப்ரத்யக்ஷம் : கருடன்

வழி : பெங்களூர்-மைசூர் புகைவண்டி நிலையத்திலிருந்து 19 கி.மீ. பேருந்து மலை மீதே போகின்றது.

சிறப்புக்கள் : மலைமீது ந்ருஸிம்ஹன் தேசிகன். எம்பெருமானார் ஸேவை ஸாதிக்கிறார். ஸ்ரீ ராமானுஜர் உகந்ஸ்தலம் பட்டர் திருவடிகளைச் சரணமடைந்த நஞ்சீயர் அவதார ஸ்தலம். சாண்டில்ய மஹரிஷி பகவான் அநுக்ரஹத்தால் பத்ரிகாச்சரம் பெருமாளாகக் காட்சி கொடுத்தபடியால் இத்தலத்திற்குத் தக்ஷிண பத்ரி காச்ரமம் என்று பெயர் உண்டானதாக ஐதீஹம். பத்ரீ போக முடியாதவர்கள் இங்கே

திருநாராயணனைப் பத்ரீ நாராயணராக நினைத்து வணங்கலாம். பத்ரீ சென்ற புண்ணியமும் உண்டு ராமனுக்கு ப்ருஹ்மாவால் கொடுக்கப்பட்டு, இராமன் குமாரனனான குசனுக்கு கனகமாலிகை என்ற பெண் பிறந்து கல்யாண காலத்தில் ஸ்திரீதனமாகக் கொடுக்கப்பட்டு, யதுசேகர மஹாராஜாவால் ஆராதிக்கப்பட்டு, அவள் பரம்பரையில் வந்த வசுதேவரால் ஆராதிக்கப் பெற்றுப் பிறகு, பலராமக்ருஷ்ணரால் ஆராதிக்கப்பட்டதாகப் புராண வரலாறு. ஒருகாலத்தில் ப்ரஹ்லாதன் குமாரன் வீரோசனன் பாற்கடலில் பள்ளி கொணடிருந்த க்ஷீ ராப்தி நாதனின் கிரீடத்தை அபகரிக்க, பகவான் கருடாழ்வாரை அதை மீட்கும்படி ஆஞ்ஞாபிக்க, அதன் படி கருடன் விரோசனனை ஜயித்து க்ரீடத்தை மீட்டு பூலோகத்தில் க்ருஷ்ணனைக் கண்டு அவர் தலையில் அதை வைக்க, சரியாகப் பொருந்தாமல், க்ருஷ்ணன் ஆராதித்த ஸ்ரீ ராமப்ரிய விக்ரகத்திற்குச் சாத்த, அது பொருத்தமாக இருக்க, பிறகு கருடன் பாற்கடல் சென்று பகவானிடம் இந்த விவரங்களைச் சொல்ல, பகவான் கட்டளைபபடி திரும்பி வந்து க்ரீடத்தை ஸ்ரீராமப்ரியருக்கே சாத்தினதாகப் புராணவரலாறு. கருடன் கரீடததைச் சாத்தினதால் வைந (வைதேயன்-கருடன) முடி என்று பெயர் ஏற்பட்டதாகவும் நாளடைவில் வைரமுடி என்று பெயர் ஏற்பட்டதாகவும் புராண வரலாறு. இன்றும் இத்தலத்தில் பங்குனி மாதம் வைரமுடி உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.

தொண்டனூர்

பெருமாள்: நப்பீநாராயணன் பார்த்தஸாரதி, கண்ணன், யோக ந்ருஸிம்ஹர்.

தாயார்: அரவிந்தவல்லி, ருக்மணி, மஹாலட்சுமி

தீர்த்தம்: பாஷ்யக்காரர் ஏரி

சிறப்புக்கள்: ராமாநுஜர் அனுபவித்த ஸ்தலம்

1. நரஸிம்மபுரம்

மைசூர் ராஜ்யம்

மைசூரிலிருந்து பேருந்து வசதி உண்டு.

பெருமாள்: குஞ்சால ந்ருஸிம்ஹர்

தாயார்: மஹாலஷ்மி

வழி: மைசூர் மேல் கோட்டை பேருந்து மார்க்கம். மைசூர்-பெங்களூர் புகை வண்டி வழியில் பாண்டவ புர ஸ்டேஷனிலிருந்து 19 கி. மீ.

சிறப்புக்கள்: பவானி, காவேரி ஸங்கமம். காசிக்கு வீசம் உயர்வு என்று பிரஸித்தம். பெரிய நகரம். வசதிகள் உண்டு.

சிவசமுத்திரம்

(மைசூர் ராஜ்யம்)

பெருமாள்: ரங்கநாதர், சயனத் திருக்கோலம்

தாயார்: ரெங்கநாயகி

தீர்த்தம்: காவேரி நதி

சிறப்புக்கள்: மத்யரங்கம் என்று சொல்லுகிறார்கள். மைசூரிலிருந்தும், பெங்களூரிலிருந்தும் பேருந்து வசதி உண்டு. இந்த தலமும் காவேரி மத்தியில் உள்ளது. சாப்பாட்டு வசதி உண்டு.

சுப்பிரமண்ஸ்தலா

இறைவன்-மயூரநாதர்

மைசூரிலிருந்து 320 கிலோமீட்டர் தொலைவில் உள்ள தலம். ஆலய நிதியிலிருந்து கல்விச்சாலைகள் நடத்தி வருகின்றனர். மதிய உணவு யாத்திரிகர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

தர்மசாலை

மைசூரிலிருந்து 416 கி. மீ. இங்குள்ள ஆலயம் சிவாலயம். சமண மதத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது.

இறைவி — கன்யாகுமரி

இறைவன் — மஞ்சநாதன்

இராத்ரீகர்கள் வந்தவண்ணம் உள்ளனர். அவர்களுக்கு உணவு திருப்பதிபோல் இங்கும் வழங்குகின்றனர். ஆலயத்திலிருந்து கல்விச் சாலைகள் நடத்துகின்றனர். சுப்பிரமண்யஸ் தலாவிலிருந்து 96 கி. மீ. தொலைவில் இத்தலம் உள்ளது.

உடுப்பி (மைசூர் ராஜ்யம்)

மங்களூரிலிருந்து பேருந்து வசதி உண்டு. பாலகிருஷ்ணன் ஆலயம். அஷ்டமடம் மூர்த்தி மிகவும் அழகு வாய்ந்தது. அஷ்டமட மடாதிபதிகள் (8 வயது உள்ளவர்கள்) மூன்று வருடத்திற்கு ஒரு முறை, முறையாகப் பதவியேற்றுக் கிருஷ்ணனை ஆராதித்து வருகிறார்கள். மடங்களிலேயே சாப்பாட்டு வசதி உண்டு. தர்மசாலையிலிருந்து 120 கி.மீ. தொலைவில் உள்ளது.

கொல்லூர்

தேவி மூகாம்பிகை. சக்தி கொலுவிருக்கும் தலம். யாத்ரீகர்களைக் கவரும் தலம். மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்தலம் உருட்பியிலிருந்து 80 கி.மீ. தொலைவில் உள்ளது.

மறைந்த தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர் அவர்கள் தமக்கு மக்கள் வழங்கிய தங்க வாளினை இவ்வம்மனுக்கு வழங்கியுள்ள விவரம் யாவரும் அறிந்ததே.

I திருக்கோகர்ணம்
(சிவாலயம்)

இறைவன் : மகாபல நாதர்

இறைவி : கோகர்ண நாயகி

தீர்த்தம் ; கோகர்ண என்ற கோடி தீர்த்தம்

பதிகம் : சம் 1 அப் 1

வழி : பம்பாய் இராஜதானியில் வடகன்னடம் ஜில்லாவில் உள்ளது. இப்போது மைசூர் அரசாங்கத்தில் சேர்ந்து உள்ளது. பெங்களூரிலிருந்து சாஹர் புகை வண்டி நிலையத்தில் இறங்கி பேருந்தில் 96 கி.மீ. சென்று சீர்சீ சேர்ந்து அங்கிருந்து பேருந்து ஏறி கும்டா வழியாக 96 கி.மீ. சென்றால் இதனையடையலாம். இத்தலம் கொல்லூர் மூகாம்பிகை ஆலயத்திலிருந்து 15. கி.மீ. தொலைவில் உள்ளது.

இராவணன் இலங்கையில் ஸ்தாபிக்கும் படி சிவபெருமானிடம் பெற்றுக்கொண்டு வந்த சிவலிங்கத்தைத் தேவர்களின் வேண்டுகோளின் பேரில் விநாயகமூர்த்தி ஓர் உபாயத்தாற் பெற்றுப் பிரதிஷ்டை செய்து விட்ட ஸ்தலம். அச்சிவலிங்கத்தை இராவணன் தன் பலங்கொண்ட மட்டும் எடுக்க முயன்றும் முடியாமையால் "இது மஹா பல லிங்கேஸ்வரர்" என்றும் பெயர் எய்தியது. லிங்கம் பசுவின் காதுபோற் குழைந்து நீண்டபடியால் இந்த ஸ்தலத்திற்குக் கோகர்ணம் (பசுவின் காது) என்றும் பெயர் உண்டாயிற்று. ராவணனைப் பந்தாடிய விநாயகர் த்விபுஜ விநாயகர் தனிக்கோயிலில் இருக்கின்றார். கம்பீரமான திருவுருவம். நின்ற திருக்கோலம். த்வ்யசுந்தர மூர்த்தி இவர் போன்ற மூர்த்தி காண்பதற்கரிது

சிவராத்திரி தினத்தில் இத்தலத்தில் கோடி தீர்த்த ஸ்நானமும், தரிசநமும் மஹா விசேடம். மேற்கு பார்த்த சந்நிதி கோகர்ணமே, மஹாகாசி, மஹா பலகர விசுவநாதர், கோடி தீர்த்தம், கங்கை சமுத்திரம் கூட இருப்பதால் பின்னும் விசேஷம். காசி ஸ்ரீ சைலம் என்னும் தலங்களிற் போல இங்கும் பிராமணர் அல்லாதாகும். தீர்த்தம் கொண்டு வந்து தாமே மஹாபலருக்கு அபிஷேகம் செய்யலாம்.

வடநாடு

பண்டரீபுரம் — புராணஸ்தலம்

பெருமாள்: பாண்ரெங்கன் நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: ருக்மாபாய்

தீர்த்தம்: கிருஷ்ண தீர்த்தம், சந்திரபாகா நதி.

விமானம்: ஞானாந்தகம்

விசேஷங்கள்: இரண்டு திருக்கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு பாகவதர்களுடன் பஜனை செய்யும் பாவம்.

வழி: பம்பாய் புகைவண்டி, சூர்து வாடி ஜங்ஷன், சிறங்கா நேரோகாஜ் புகைவண்டி மார்க்கமாய் இத்தலத்தை அடையலாம்.

புண்டரீகன் தாய் தந்தையர்களுக்குப் பணிவிடைசெய்து கொண்டிருந்த போது பகவான் அவன் பக்தியைச் சோதிக்க அவ்விடம் எழுந்தருளி விருத்ராசுரனைக் கொன்ற பாபத்திற்காக இந்திரன் புண்டரீகன் வீட்டில் ஒரு செங்கல்லாக மாறி இருக்க பகவான் வந்தபொழுது புண்டரீகன் அந்தச் செங் கல்லைப் பகவானிடம் விட்டெறிந்து அதன் மீது பகவானைச் சிறிது நேரம் இருக்கச் சொல்ல பகவான் மிதித்தவுடன்

அந்தச் செங்கல் இந்திர ரூபமாகி பகவானைத் துதிக்க அது கண்டு புண்டரீகன் பெற்றோர் பணிவிடைகளை முடித்துப் பகவானைத் துதிக்க, புண்டரீகன் பிரார்த்தனைப்படி பகவான் விட்டலன் என்று திருநாமம் கொண்டு எழுந்தருளியிருக்கிறார் என்று வழங்கி வருகிறது.

பஞ்சவடி எனற நாசிக்

பம்பாய் To கல்கத்தா (or) பம்பாய் To டெல்லி குருடுவாடி மேன்மேடு நாசிக்வண்டிகள் மாறிப்போக வேண்டும். கோதாவரி நதிக்கரையில் இருக்கிறது. இங்கிருந்து நர்மதா நதி, இந்தோர், "உஜ்ஜயினி" ஜாவரா வழியாக "டகோர் த்வாரகை" வந்து சேரவேண்டும். துவாரகை பஞ்சத்வாரகையாகவும் அவ்வந்தைனுள் இதுவும் ஒன்று என்று சொல்லப் படுகிறது. இவ்விடத்தில் த்வாரகா தீசன் ஸன்னதி மிகப் பெரியதாகவும விஷேச ஸம்பத்தையுடையதாகவும் ஆச்சரியமான ஆராதன நிவேதனமுடையதாகவும் காணப்படுகிறது. இவ்விடத்திலும் மேற்சொல்லப் போகும் த்வாரகையிலும் வல்லப ஸம்ராதயங்தர்களின் ஆதிக்யமும், அதிகாரமுமே உள்ளதால் க்ருஷ்ணபத்தி தாண்டவம் ஆடுகிறது. மூர்த்தி தர்சனம மிகவ்ன? வாரகம, சனனதிக்கு எதிரில் ஏரிப்போன்ற மிகப்பெரிய தடாகம் அதைக் கோமதி நதியென்று சொல்லுகிறார்கள். ஸ்தாருபா நதிகளுக்கு மிகவும் அருமையான தீரத்தம் 'டாகோர்த்' வாரகையிலிருந்து கலோல் தாராபூர் அஹமதாபாத் வழியாக, கோமதி துவாரகை தர்சிக்கலாம.

அவந்தி (உஜ்ஜயினி)

பெருமாள்: ஸ்ரீகிருஷ்ணன்

தாயார்: பத்மாவதி

தீர்த்தம்: கோமதி

ப்ரத்யக்ஷம்: ஸாந்தீபனி மஹரிஷி

வழி: டெல்லி பம்பாய் மார்க்கத்தில் உஜ்ஜயினி ரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ.

விசேஷங்கள்: ஸாந்திபனி ஆச்ரமத்தில் பலராமக் கிருஷ்ணர்கள் எழுந்தருளியிருக்கிறார்கள். அங்காரக அவதார ஸ்தலம். கிருஷ்ணனும் குசேலரும் குருகுல வாஸம் செய்த ஸ்தலம்.

முன்பு திரிபுரன் என்ற அசுரன் ப்ரஹ்மாவிடமிருந்து வரப்பெற்று உலகத்தை ஹிம்ஸிக்க, தேவர்கள் அவந்தியில் ருத்திரனைச் சரணடைய ருத்திரன் க்ருத்தியை நோக்கித் தவஞ் செய்து பாசுபதாஸ்த்ரத்தைப் பெற்று அதனால் அசுரனை ஸம்ஹரித்ததால் இத்தலத்திற்கு உஜ்ஜயினி என்று பெயர் ஏற்பட்டதாகப் புராண வரலாறு.

I திருத்வாரகை (துவரை, துவாரபதி)

மூலவர்: கல்யாண நாராயணன், த்வாரகா தீசன்

தாயார்: கல்யாண நாச்சியார்

தீர்த்தம்: கோமதி நதி, ஸமுத்திர ஸங்கமம்

விமானம்: ஹேம கூட விமானம்

ப்ரத்யக்ஷம்: த்ரௌபதி

வழி: பம்பாய், அமதாபாத், வீராம்காம், ராஜ்கோட், ஜாம்நகர் வழியாக ஒகா துறைமுகம் செல்லும் ரயில் பாதையில் துறைமுகத்திற்குச் சுமார் 30 கி.மீ. ல் துவாரகா புகைவண்டி நிலையம் உள்ளது. அங்கிருந்து 2¼ கி.மீ. வண்டியில் போய்க் கோவிலை அடையலாம். வசதிகள் எல்லாம் உண்டு. ஆமதாபாத்திலிருந்தும் நேராகத் துவாரகைக்குப் பேருந்துகள் செல்லுகின்றன.

சிறப்புக்கள்: இது சித்தி தரும் ஏழு ஸ்தலங்களுள் ஒன்றாகும். ஜராஸந்தன் ஜனங்களுக்குத் தொந்திரவுகொடுக்காமல்இருக்க

ஸ்ரீ கிருஷ்ணன் சமுத்திர ராஜனிடம் இடம் கேட்டு வாங்கி விஸ்வகர்மாவைக் கொண்டு துவாரகையை ச்ருஷ்டித்ததாக ஐதீஹம். மோக்ஷத்துக்கு த்வாரமாக இருப்பதால் த்வாரகை என்று பெயர் உண்டாயிற்று. கோவிலிலிருந்து பலபடிகள் இறங்கிச் சென்றால் எதிரே கோமதி நதி கடலில் சங்கம மாகும் அந்த இடத்திலிருந்து விசைப்படகில் பேட் த்வாரகா (தீவுதுவாரகை) என்ற தீவுக்குப் போகலாம். இது தான் கிருஷ்ணன் திருமாளிகை. சுமார் 1500 க்ருஹங்கள் இங்கே இருக்கின்றன. காலை 5மணி முதல் பகல் 11 மணி வரை யிலும் மாலை 4மணி முதல் இரவு 8மணி வரை ஸேவையா கும். இங்குள்ள மூலவர் சங்கு சக்ர கதாதாரியாக ஸேவை ஸாதிக்கிறார். 5 கி.மீ. தொலைவில் சங்க தீர்த்தம் அற்புத மாய் இருக்கிறது. அலங்காரம் நம் எதிரிலேயே நடக்கிறது.

திருமார்பில் லக்ஷ்மி ஸேவை ஸாதிக்கிறார். ருக்மினி உத்ஸவத்தாயார். இன்றும் கல்யாணராமர், த்ரிவிக்ரமூர்த்தி தேவகீ ஜாம்பவதி லக்ஷ்மி நாராயணன் போன்ற பலருடைய ஸந்நிதிகள் உள்ளன, காலை 5 மணி முதல் ஸேவை ஆகும். பிரதி தினமும் பகவானுக்குக் குழந்தைபோலவும் ராஜாவைப் போலவும் வைதிகோத்தமன் போலவும் அலங்காரம் செய்கி றார்கள். திருமஞ்சனமும் தினமும் நடக்கிறது.

மங்களா சாஸனம் :

பெரியாழ்வார் **ஆண்டாள்** **திருமங்கையாழ்வார்** **நம்மாழ்வார்**	நான்முகன் திருவந்தாதி 71, திரு வாய்மொழி 5, 3, 6, பெரியாழ் வார் திருமொழி 4, 1, 6 நாச்சி யார் திருமொழி 1, 4. பெரிய திரு மொழி 6, 6, 7.

சித்பூர் (மாத்ருகயா)

சரசுவதி கோயில், சரசுவதிநதி தாயாருக்குப் பிண்டம் போடும் இடம் என்கிறார்கள், பிரயாகையில் ஸரஸ்வதி நதி கண்ணுக்குத் தெரியாது. இங்கே தெரியும்.

வழி : டெல்லி To அகமதாபாத் To பம்பாயில் ரயில் மார்க்கம்.

புஷ்கரம் (ஆஜ்மீர்)

பெருமாள்: பரம புருஷன்

தாயார்: புண்டரீகவல்லி

தீர்த்தம்: ரூப தீர்த்தம்

விமானம்: மங்கள விமானம்

வழி: டெல்லி பம்பாய், புகைவண்டி வழியில் ஆஜ்மீர் புகை வண்டி நிலையத்திலிருந்து 17 கி மீ. பேருந்து வசதி உண்டு. வைகுண்டநாதர் கோயிலில் தங்கும் வசதிகள் உண்டு.

சிறப்புக்கள்: ப்ரஹமாவக்கு தனிக்கோயில் உண்டு. இங்கு உள்ள புஷ்கரிணியில் நீராடி ப்ரஹ்மா கோயிலில் ப்ரஹ்மா வைப் பூஜித்ததால் தலையில் எழுதிய எழுத்து மறைந்து விடுவதாக ஐதீஹம். 8 ஸ்வயம்யக்த ஸ்தலங்களில் ஒன்று. இந்த ஷேத்திரத்தில் தாமரைப் பூ விழுந்ததனால், ப்ரம்ஹா புஷ்கரம் என்று பெயரிட்டதாக வரலாறு. இவ்விடத்தில் ஸாவித்ரி சபித்தபடியால் ப்ரஹ்மாவுக்கு இத்தலத்தைத்தவிர வேறு இடத்தில் கோயில் இல்லை என்றும் வரலாறு.

II திருவடமதுரை (மதுரா)

மூலவர் : கோவர்த்த நேசன், பாலகிருஷ்ணன்

தாயார் : ஸத்யபாமா நாச்சியார்

தீர்த்தம் : இந்த்ர தீர்த்தம், கோவர்த்தன தீர்த்தம்

விமானம் : கோவர்த்தன விமானம்

ப்ரத்யக்ஷம் : இந்திராதி தேவர்கள்

வழி : டெல்லியிலிருந்து ஆக்ரா போகும் புகைவண்டி பாதையில் மதுரா என்ற ஜங்ஷனிலிருந்து சுமார் 3 கி. மீ தொலைவில் ஊரும், கோவில்களும் உள்ளன. இங்குத் தங்கும் வசதிகள் அதிகபாக இல்லாததால் இங்கிருந்து 11 கி.மீ. தொலைவிலுள்ள பிருந்தாவனப் என்ற ஊரில் தங்கிக்கொள்ளலாம். அல்லது டெல்லியில் தங்குபவர்கள் நேராகப் புகை வண்டியிலோ, பேருந்திலோ வந்து வணங்கி விட்டுத் திரும்பலாம்.

சிறப்புக்கள் : இங்கிருந்து சுமார் 2½ கி.மீ. தொலைவில் ஜன்ம பூமி என்ற புதிய கோவில் ஸ்ரீ க்ருஷ்ணன் பிறந்த சிறைச்சாலை இருந்த இடமாகக் கருதப்படும். சுமார் 12½ கி.மீ. தொலைவில் கோவர்த்தனகிரி உள்ளது.

மைய இடமாகக் குறிப்பிட்டுள்ள ப்ருந்தா வனத்தில் தென்னாட்டுப் பாணியில் அமைக்கப்பட்ட ரங்க மந்திரர் என்ற கோவில் உண்டு. இங்கே தமிழ்நாட்டு வைஷ்ணவர்களே கைங்கர்யம் செய்வதுடன் தங்குவதற்கும் சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்து தருகிறார்கள்.

இவ்வூரில் ஆழ்வார்களால் பாடப்பட்ட கோவில் மூர்த்திகள் இப்போது இல்லை.

மங்களா ஸாசனம்

திருப்பாவை—5, பெரிய திருமொழி - 9, 9, 6
திருவாய் மொழி 9-1-9

ஆண்டாள் :	நாச்சியார் திருமொழி 14 ப்திகம்
நம்மாழ்வார்	பெரியாழ்வார் திருமொழி 3.5
பெரியாழ்வார் ஆண்டாள்	பதிகம் 4 10-8
திருமங்கை ஆழ்வார்	நாச்சியார் திருமொழி 12, 8.

திருவாய்ப்பாடி (கோகுலம் கோகுல்)

மூலவர்: நவமோஹன க்ருஷ்ணன்

தாயார்: ருக்மிணி ஸத்யபாமா

தீர்த்தம்: யமுனா நதி

விமானம்: ஹேமகூட விமானம்

வழி: மதுரா சந்திப்பிலிருந்து 5 கி. மீ. தூரமுள்ள யமுனைப் பாலத்தைக் கடந்து அங்கிருந்து 8 கி.மீ. பேருந்தில் சென்று இவ்வூரை அடையலாம்.

சிறப்புக்கள்: ஆழ்வார்கள் பாடிய கோவில்களோ மூர்த்திகளோ ஒன்றும் இப்போது இல்லை. கோகுல் என்ற இடத்திற்குச் சுமார் $3\frac{1}{4}$ கி. மீ. தொலைவில் "புராண கோகுல்" என்று ஓர் ஆலயத்தை ஸ்தாபித்துள்ளனர். கோவில்வாசலில் யமனை நதி ஓடுகிறது. நந்த கோபால், யசோதா, பலராமன் விக்ரகங்களுக்கடியில் குழந்தை கிர்ஷ்ணன் ஒரு சிறிய மரத்தொட்டியில் ஸேவை சாதிக்கிறார். அனைத்தும் மர விக்ரஹங்கள். இந்த இரண்டு கோகுலங்களில் எது உண்மையானது என்று தெரியாது.

மங்களா சாஸனம்:

பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார்	பெரியாழ்வார் திருமொழி 1,1,2 திருப்பாவை 1, பெரியதிருமொழி 5, 5, 5

மாயா க்ஷேத்ரம் (ஹரித்வார்)

பெருமாள்: பரதனாகக் காட்சி கொடுத்த ஸ்தலம், நின்ற திருக்கோலம், கிழக்கே நின்ற திருக்கோலம்.

தாயார் : ஆதிலக்ஷ்மி

தீர்த்தம் : கங்கைவதி, கனகல தீர்த்தம், ரம்பா தீர்த்தம், குசாவர்த்த தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம்

ஸ்தல வ்ருஷம் : நந்தாகிரி, காஷ்டகிரி

விமானம் : ஆனந்த விமானம்

பரத்யக்ஷம் : ரைப்யர், சோமசர்மா

வழி : கல்கத்தா - டேர்ாடூன் புகைவண்டி வழியில் ஹரித்வார் புகைவண்டி நிலையத்திலிருந்து ¾ கி.மீ.

சிறப்புக்கள் : ஸ்ரீமந் நாராயணனாகிய ஹரிகோயில் கொண்டுள்ள தபோபூமிச்கு (த்வார்) வழியாக அமைந்திருப்பதால் ஹரித்வார் என்ற பெயர் ஏற்பட்டது. ப்ருஹ்மகுண்டம் என்ற கட்டடம் விசேஷம். கங்கா நதி மலைப் பிரதேசத்தை விட்டு விசாலமாகப் பளிங்கு போன்று தெளிவுடன் சமவெளியில் முதன்முதலாகப் பாய்ந்து வரும் இடம். கங்காஜலம் செம்புகளில் எடுத்து, சீல் செய்து யாத்திரை முடிந்து எடுத்துச் செல்லும் இடம். தட்சபிரஜாபதி யாகம் செய்த இடம். புது கங்கா கால்வாய் ஏற்படுத்தி, கங்கா கால்வாய் நடுவில் கங்கா மாதா கோயில் அமைந்து, இரவில் இலை தொன்னைகளில் நெய்விளக்கேற்றி ஆற்றில்விட்டுத் தீபங்கள்கோயிலைச் சுற்றி வலம் வருவது கண் கொள்ளாக் காட்சி. முக்தி தரும் ஏழு நகரங்களில் ஒன்று.

IV திருக்கண்டமென்னும் கடிநகர்

(தேவப்ரயாகை)

மூலவர் : நீலமேகப் பெருமாள். (புருஷோத்தம்) நின்ற திருக்கோலம், கிழக்கே நின்ற திருக்கோலம்.

தாயார் : புண்டரீக வல்லி

தீர்த்தம் : மங்கள தீர்த்தம், கங்கை நதி

விமானம் : மங்கள விமானம்

ப்ரத்யக்ஷம் : பரத்வாஜமுனி

வழி: ரிஷி கேசத்திலிருந்து பத்ரிநாத் போகும் வழியில் 72 கி.மீ. தூரத்திலும், ஹரித்வாரத்திலிருந்து பத்ரிக்குச் செல்லும் வழியில் 96 கி. மீ. தூரத்திலும் உள்ளது. பத்ரியி

லிருந்து திரும்புகையில் இறங்கி வணங்கி விட்டு அடுத்த பேருந்தில் வரலாம். கடல் மட்டத்திலிருந்து 1700 அடி உயரம்.

சிறப்புக்கள்: கோவிலுக்குப் பின்புறம் அழகான சிறிய அநுமார் இருக்கிறார். இங்கு அளகநந்தா, பாகீரதி இவற்றின் சங்கமம். ஆதி கங்கையாகப் போற்றப்படுகின்ற புண்ணிய ஸ்தலம். மிக்க ரமணீயமான க்ஷேத்திரம். ஆழ்வார் பாடிய பெருமாளை ரகுநாத்ஜீ என்றழைக்கின்றனர். இங்கே ப்ருமஹ்தேவ், தசரத மஹாராஜன், ராமன் முதலானோர் தவம் செய்த ஸ்தலம். இங்கே கோயில் கொண்டுள்ள ஸ்ரீ ரகுநாதனின் மூர்த்தியை ஆதிசங்கரர் ஸ்தாபித்தார். ரகுநாத ஜீயன் கோயிலுக்கு அருகில் பத்ரிநாத் காலபைரவர், மஹாதேவர், அநுமார் முதலானோரின் அழகான மூர்த்திகளும் உள்ளன.

மங்களா சாஸனம் :

பெரியாழ்வார் : பெரியாழ்வார் திருமொழி 4, 7 ம் பதிகம்

V திருப்பிரீதி (ஜோஷிமட் நந்தப்பராயர்)

மூலவர் : பரமபுருஷன், புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : பரிமள வல்லி

தீர்த்தம் : இந்திர தீர்த்தம். கோவர்த்தன தீர்த்தம், மானஸரரஸ்

விமானம் : கோவர்த்தன விமானம்

ப்ரத்யக்ஷம் : பார்வதி

வழி : இது அரித்துவாரிலிருந்து 216 கி.மீ.

சிறப்புக்கள்: ஆதி சங்கரரால் கட்டப்பட்ட நரசிம்மர் ஆலயமும், வாசுதேவர் ஆலயமும் உள்ளன. வாசுதேவர் நின்ற

திருக்கோலத்தில் உள்ளார். இப்பெருமாளை ஆழ்வார் பாடி உள்ளார். ஆதிசங்கரர் இவ்விடத்தில் ஜ்யேஹிஸ் பீடத்தை ஸ்தாபனம் செய்து ஒரு முசுக்கட்டை மரத்தடியில் தவமிருந்து அருள்ஞானம் பெற்றுச் சங்கர பாஷ்யத்தை இயற்றியதாக வரலாறு.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 1. 2, பதிகம்

VI திருவதரியாச்சிரமம் (பத்ரிநாத்)

மூலவர்: பத்ரி நாராயணன், வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: அரவிந்தவல்லி

தீர்த்தம்: தப்தகுண்டம்

ஸ்தல வ்ருஷம்: பத்ரீ (இலந்தை) வ்ருஷம்

விமானம்: தப்தகாஞ்சந விமானம்

ப்ரத்யக்ஷம்: நரன்

வழி: டெல்லியிலிருந்து ஸஹரன்பூர், லக்ஸார் வழியாக அல்லது கல்கத்தா டேராடூன் எக்ஸ்பரஸில் ஹரித்வார் நிலையத்திற்கு வந்து, அங்கிருந்து ரிஷிகேசில் தங்கி, அங்கிருந்து 295 கி. மீ. பேருந்தில் இமயமலையில் பயணம் செய்து, பத்ரிநாத்தை அடைய வேண்டும். இங்கு ஏராளமான சத்திரங்களும் பல வசதிகளும் உண்டு. முதலில் ஹரித்வார் வந்து, அங்குள்ள ப்ரஹ்மகுண்டம் என்ற ஸ்நான கட்டத்தில் நீராடி, யாத்திரையைத் துவக்கினால் நலம். ஹரித்துவாரத்திலிருந்து 24 கி. மீ. தொலைவில் உள்ள ஹ்ருஷீகேசத்தை அடைய வேண்டும். ஹ்ருஷீகேசத்தில் பத்ரீநாத் போகும் பேருந்து மூலம் தேவப்ரயாகையை அடைய வேண்டும். இதுதான்

''கண்டமென்னும் கடிநகர்'' என்ற திவ்யதேசம். இங்கிருந்து புறப்பட்டு 1706 அடி உயரத்திலுள்ள ஸ்ரீநகர் என்ற ஊரை ராணுவ தளத்தின் வழியாக அடைய வேண்டும். பிறகு கௌஸார் என்ற விமான தளத்தை அடைந்து, கர்ண பிரயாகையை அடைந்து, அதன்பின், நந்த ப்ரயாகையை அடைய வேண்டும். இங்கிருந்து 3 கி.மீ. தொலைவில் ராவணன் சிவபெருமானைக் குறித்து, தவம்செய்து கைலாஸ பர்வத்தைத் தூக்கியதாக வரலாறு. அதன்பிறகு சமோலி என்ற இடத்தை அடையவேண்டும். இங்கிருந்து பீபல்கோடி அடைந்து, பிறகு ஜோஷிமடம் அடைய வேண்டும். ஜோஷி மட்டிலிருந்து பத்ரிநாத் வரை ஒரு வழிபோக்கு ஏற்பாடு உள்ளது. அதன் பிறகு விஷ்ணுப்ரயாகை எனும் இடம் அடையவேண்டும். கடுங்குளிர், கம்பளிப் போர்வைகள் தேவைப்படும். அளகா நந்தாவும் தோலிகிங்காவும் சங்கமம் ஆகும் இடம். அதன்பிறகு பாண்டுகேச்வர் என்ற ஊர் வர வேண்டும். பத்ரிநாத் கோவிலிலுள்ள உத்ஸவ மூர்த்திகள் பனிமூடிய ஆறுமாதகாலம் இங்குள்ள வாஸீதேவர் கோவி லில் வைத்துப் பூஜிக்கப்படுகின்றன. இங்கிருந்து அனுமான் சட்டியைத் தாண்டிய சுமார் 5 கி.மீ. தூரத்திலேயே பத்ரி காச்ரமத்தின் காட்சி எதிரே தென்படுகிறது. பேருந்து நிலை யத்தில் இருந்து ½கி.மீ. தொலைவில் அளகா நந்தாவின் கரை யில், ஸ்ரீ பத்ரீ நாராயணன் கோவில் உள்ளது.

சிறப்புக்கள் : இது சமுத்திர மட்டத்திலிருந்து 10,404 அடி உயரத்திலும் ஹரித்துவாரத்திலிருந்து 132 கி.மீ. தொலை விலும் உள்ளது. இங்குப் பல அன்ன சத்திரங்களும், திருப்பதி தேவஸ்தானத்தின் விடுதிகளும் உள்ளன. கங்கைக் கரையி லேயே உள்ள கீதாமந்திரர் வசதியான இடம்.

கங்கையின் எதிர்க்கரையில் தப்தகுண்டம் என்ற வெண் ணீர் ஊற்றும், எதிரே பத்ரிநாராயணன் ஆலயமும் உள்ளன. ஆலயத்திற்கு எதிர்ப்புறம் நரநாராயணன் பர்வதங்களும் வலப்புறம் நீலகண்ட பர்வதமும் உள்ளன. தப்தகுண்டத்தி

லிருந்து சிலபடிகள் மேலேறி ஸிம்ஹத்வாரத்தில் இருக்கும் கருடாழ்வானுக்கு அஞ்சலி செலுத்தி விட்டுக் கோவிலின் பிராகாரத்தை அடைய வேண்டும். கோவிலின் ஸ்ரீபத்ரி நாராயணன் அரவிந்த வல்லித்தாயார் கருடன், நாரதன், நரநாராயணர்கள் முதலியவர்களுடன் மிக அழகாக அலங் கரிக்கப்பட்டுக் காட்சி தருகிறார். பெருமாள் மட்டும் ஸாளக் கிராமச் சிலையாலான மூலமூர்த்தி. மற்றவையெல்லாம் உத்ஸவமூர்த்திகளே. உரிய கட்டணத்தை முன்னாடியே செலுத்தி விசேஷ அபிஷேகங்களும் திருமஞ்சனமும் அர்ச் சனையும், கர்ப்புர ஆரத்தியும் செய்யலாம். ''க்யூ'' வரிசை யில் எத்தனை முறை வேண்டுமானாலும் சென்று வணங்க லாம். கர்ப்ப க்ருஹத்திற்கு வெகு அருகாமையில் அமர்ந்து அபிஷேகங்களையும் அர்ச்சனைகளையும்முடியும்வரை அமர்ந் திருந்து பகவானை மனத் திருப்தியுடன் வணங்கலாம். இப் பெருமாளுக்கு எதிரில் திரை போடுவதே இல்லை. திருமஞ் சனம் சாத்துப்படி நைவேத்யம் எல்லாம் மக்கள் எதிரிலேயே நடக்கின்றன. இரவில் வடநாட்டுப் பிராமணர்கள் சாந்தி பஞ்சகம் போன்ற மந்திரங்களைச் சேவிக்க ஆடைகளையும், மாலைகளையும் ''ராவால்'' களைந்து சிறிய துண்டு சாத்தும் காட்சிக்குக் கீதகோவிந்தம் என்று பெயர். கோயிலில் பூஜை விதிமுறைகளை நன்றாகக் கற்றறிந்தவர்களாகவும் ஸம்ஸ்க் ருத பாஷையில் தேர்ந்தவர்களாகவும் நல்லொழுக்கம் பூண்ட வர்களாகவும் உள்ளவர்களையே இந்த ஸ்தானத்திற்கு நிய மிக்கப் படுகிறார்கள்.

கோவிலுக்குச் சிறிது வடக்கே கங்கையின் கரையில் ப்ர மஹ்க பாலம் என்ற பெரிய பாறையொன்று இருக்கிறது இங்குப் பிதுருக்களுக்குச் சிரார்த்தம் செய்வதால் ஈரேழு தலை முறைகளும் மோஷமடைவதாகவும் பிறகு சிரார்த்தங்கள் செய்யாவிட்டாலும் பரவாயில்லை என்றும் நம்பப்படுகின் றது. கோயில் ப்ரகாரத்திற்குள் லக்ஷ்மி தேவிக்கும், ஆதி சங்கரருக்கும் தனிக்கோயில்கள் உள்ளன. கோயிலுக்குப் பின்

னால்லக்ஷ்மிக்கு ஸிம்ஹமந்திர். தனிக்கோயில்களில்ஸ்ரீஸ்வாமி தேசிகன், ஸ்ரீமந் ராமாநுஜர் முதலியோருக்கு சந்நிதிகள் உள்ளன. கோயிலுக்கு நாற்புறமும் பனி மலைகளுக்கு எதிரே நரநாராயண பர்வதங்களும் வலப்புறத்தில் நீலகண்ட பர்வதமும் உள்ளன. இது தவிர இவ்வூரில் வஸிதாரா என்ற பனி மலை நீர்வீழ்ச்சியின் திவலைகள் தன்மேல் பட்டுப் புனிதமாவதற்குப் பல யாத்ரிகர்கள் அங்கே செல்வதுண்டு.

மங்களா சாஸனம்

பெரியாழ்வார் }
திருமங்கையாழ்வார் }

பாண்டுகேச்வர்

பெருமாள்: வாசுதேவர் நின்ற திருக்கோலம்

தாயார்: ருக்மணி ஸத்யபாமா

வழி: ஹரித்வார்-பத்ரிநாத் பேருந்து வழியில் 296 கி.மீ.

சிறப்புக்கள்: பத்ரீநாத்தில் பனிமூடிய ஆறுமாத காலம் இங்கேதான் பத்ரிநாராயணனின் உத்ஸவமூர்த்தியை வைத்துக்கொண்டு ஆராதனம் செய்துவருகின்றனர். பாண்டவர்கள் ஜன்மஸ்தானம். பாண்டு மஹாராஜா தவம் செய்த இடம்.

விஷ்ணுப்ரயாகை

பெருமாள்: மஹாவிஷ்ணு, நின்ற திருக்கோலம்

தாயார்: மஹாலக்ஷ்மி

வழி: ஹரித்வார் பத்ரிநாத் பேருந்து மார்க்கத்தில் 283 கி.மீ.

சிறப்புக்கள்: அலகாநந்தாவும், தோலிகங்காவும் (விஷ்ணு கங்கா) சங்கமம் ஆகும் இடம். தேவரிஷி நாரதர் அஷ்டாக்ஷர மந்திரத்தினால் விஷ்ணுவை பூஜைசெய்த புண்ணிய ஸ்தலம்.

ஜோஷிமடம் (பத்ரீ மார்க்கம்)

பெருமாள்: பரமபுருஷன், புஜங்கசயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: பரிமள வல்லி

தீர்த்தம்: ந்ருஸிம்ஹதாரை

விமானம்: வாஸுதேவ விமானம்

ப்ரத்யக்ஷம் : பார்வதி

வழி : ஹரித்வாரத்திலிருந்து ரிஷிகேசம் வழியாகப் பத்ரிநாத் செல்லும் வழியில் 304 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்தில் செல்லலாம்.

சிறப்புகள் : நரஸிம்ஹருக்கும் வாசுதேவருக்கும் ஆலயங்கள் உள்ளன. ஆதிசங்கராசாரியார் இவ்விடத்தில் ஜ்யோதிஷ் பீடத்தை ஸ்தாபனம் செய்ததாக வரலாறு. அவர் இங்கே ஒரு முசுக்கட்ட மரத்தடியில் தவமிருந்து அருள்ஞானம் பெற்றுச் சங்கரபாஷ்யம் இயற்றியதாக வரலாறு.

1 சிவாலயம் இந்திர நீலபருப்பதம்

சுவாமி : நீலாசலநாதர்

தேவி : நீலாம்பிகை

தீர்த்தம் : இந்திர தீர்த்தம்

பதிகம் : சம். 1

சிறப்புக்கள்: வடநாட்டுத் தலங்கள் ஐந்தனுள் ஒன்று. தேவேந்திரனால் பூசிக்கப்பட்ட ஸ்தலம். இதனைத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் இத்தல தேவரேத்தின் திருக்கடைக்காப்பிலே 'இந்திரன்தொழு நீலபப்பருதம்' என்று கூறியிருத்தலை அறிக. இதற்குச் சரியான மார்க்கம் தெரியவில்லை.

2. அனேகதங்காவதம்

இறைவன்: அருள்மன்னேசுரர்

இறைவி: மனோன்மணியம்மை

தீர்த்தம்: ஞானர்த்தம்

பதிகம்: சம். 1.

வழி: திருக்கேதாரம் பார்க்கவும்

இது வடநாட்டுத் தலங்களில் ஒன்று. இஃது அம்பிகை தவஞ்செய்த ஸ்தலமாகிய "கௌரி குண்டம்" என்று சொல்லப்படுகின்றது. சூரியனும், சந்திரனும் பூஜித்த ஸ்தலம்.

3. திருக்கேதாரம்

இறைவன்: கேதாரேசுரர்

இறைவி: கேதார கௌரி

தீர்த்தம்: மந்தாகினி

பதிகம்: சம். 1, சுந். 1

வழி: இது இமயமலைச் சாரலில் உள்ளது. ஹரித்துவாரத்திலிருந்து 249 கி.மீ. ஹரித்துவாரத்திருந்து ரிஷிகேசம் 24 கி.மீ. அங்கிருந்து தேவபிரயாக் 78 கி.மீ. இதுவரை பேருந்து பயணம். பின்புகுலசுசட்டி 8 கி.மீ. ராணி பாக் 4 கி. மீ. ரம்பூர் 5கி.மீ. விலேகதர் 9கி மீ. ஸ்ரீநகர் 5 கி.மீ. இவ்வளவு தூரம் தபால் வழிகள் உண்டு. பின்பு சுக்ரதா 8 கி.மீ. பாட்டிசாராசரி 5 கி.மீ. கர்கோடா 9 கி.மீ. ருத்தப்பிரயாகை 6½ கி மீ. அகஸ்தியமுனி 1½ கி.மீ. கௌரி குண்டம் அநேக தங்காவதம் 16 கி.மீ. ஜங்கல் சட்டி 3கி.மீ. ராம்பாரா 6½ கி.மீ. கேதார்நாத் 8 கி.மீ. ஆக ஹரித்துவாரத்தினின்று 249 கி.மீ. திருக்கேதாரம்.

கோயில் உறைபனியால் மூடப்பட்டது. பனிக்கட்டிகளை உளியாற் செதுக்கிய பின்தான் சதவைத் திறக்க முடியும். கோயில் மே மாதம் திறக்கப்பட்டு அக்டோபர் மாதம் மூடப்படுகிறது. ஆறுமாதம் தேவர்களாலும் ஆறுமாதம் மானிடர்களாலும் பூஜிக்கப்படும் ஸ்தலம். பிருங்கி ருஷிக்காகப்பார்வதி தேவியார் பரமசிவனைப் பூஜித்து வாமபாகம் பெற்ற ஸ்தலம்.

4. திருநொடித்தான் மலை (or) கயிலாயம்

இறைவன் : கயிலாய நாதர்

இறைவி : பார்வதியம்மை

தீர்த்தம் : சரவணப் பொய்கை

பதிகம் : சம். 2, அப்4, சுந்.

"விண்ணுலகத்தவர்கள் விரும்பு வெள்ளை யானையின் மேல் என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான் மலை உத்தமனே" என்று சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சொல்லியுள்ள நொடித்தான் மலையிதுவே. இது நம் போலிகள் பார்க்கக் கூடிய ஸ்தலமன்று. அப்பர் ஸ்வாமிகளுக்கு இந்த ஸ்தல தர்சனம் காவிரி வடகரையில் இருக்கும் திருவையாற்றில் தான் கிடைத்தது.

VII திருநைமிசாரண்யம்

மூலவர்: தேவராஜன் நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: புண்டரிகவல்லி

தீர்த்தம்: சக்ர தீர்த்தம், கோமுகி நதி, நேமி, திவ்விய விச்ராத்த தீர்த்தங்கள்

ஸ்தல வ்ருக்ஷம்: தபோவனம்

விமானம்: ஸ்ரீஹரி விமானம்

ப்ரத்யஷம்: இந்திரன், சுதர்மன், தேவரிஷி, சூதபுராணிகள், வேதவ்யாசர்.

வழி: கல்கத்தா டேராடூன் புகைவண்டி வழியில் பாலமாவ் சந்திப்பு வந்து அங்கிருந்து சீதாப்பூர் போகும் கிளை ரயிலில் ஏறி நைமிசாரண்யா நிலையத்தில் இறங்கி 3 கி மீ. தூரம் மாட்டு வண்டியில் செல்லலாம். அல்லது நடந்து செல்ல லாம். இங்கு அஹோபில மடமும் ராமாநுஜ கூடமும் உள்ளன.

சிறப்புக்கள்: இங்குப் பகவான் காடாகவே காட்சியளிப்பதாக நம்பி காட்டையே வணங்குகிறார்கள். கோமுகி ஆற்றில் குளித்துவிட்டுச் சக்ரதீர்த்தத்தில் குளிக்கலாம். இந்தத் தீர்த் தக் கரையில் சக்கரத் தாழ்வார், விநாயகர், ராம லஷ்மண சீதை ஆகியோரின் கோயில்கள் உள்ளன. கோமுகி நதிக்குப் போகும் வழியில் வியாசகட்டி என்ற இடத்தில் வேதவியாசர் கோயில் உள்ளது. இதுதான் வியாச பகவானும் சுகப் பிரமமும் ப்ரவசனங்கள் செய்து பாரதம் பாகவதம் முதலிய இதிகாசங்களியற்றிய புண்ணிய பூமி.

ஊரின் வேறொரு பகுதியில் புராணமந்திர் என்ற சுக பகவான் ஆலயத்தில் அவருடைய வெண்கலச்சிலை கிளி மூக்குடன் பெரியதாக வைக்கப்பட்டுள்ளது. இதற்குச் சற்று அப்பால் ஒரு சிறிய குன்றின் மேல் அனுமான் கட்டி என்ற ஆலயத்தில் மிகப்பெரிய உருவமுள்ள அநுமார் இராம இலக் குமணர்களை இரு தோள்களிலும் வைத்துக் கொண்டு நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 1,6 பதிகம்

VIII திருவயோத்தி (அயோத்யா)

மூலவர்: ஸ்ரீராமன், சக்கரவர்த்தி திருமகன், ரகுநாயகன், வீற்றிருந்த திருக்கோலம். வடக்கே திருமுக மண்டலம்.

தாயார்: சீதாதேவி.

தீர்த்தம்: பரமபத ஸத்ய புஷ்கரிணி, ஸரயூ நதி

விமானம்: புஷ்கல விமானம்.

ப்ரத்யக்ஷம்: பரதாழ்வான், தேவர்கள், முனிவர்கள்

வழி: மொகல்சராஸ் (காசி-வாரணாசி) புகைவண்டி வழியில் பைசாபாத் நிலையத்திலிருந்து வண்டியில் போக வேண்டும். அங்கிருந்து அயோத்தி சுமார் 5 கி.மீ. உள்ளது. இவ்வூரில் தங்குவதற்கு பிர்லாமந்திரும் மற்றும் பல சத்திரங்களும் உள்ளன.

சிறப்புக்கள்: ஸரயு நதிக்கருகில் தென்னிந்திய வழியில் கட்டப்பட்டுள்ள அம்மாஜி மந்திர் என்ற கோயில் அதே பழைய இடத்தில் இருக்கிறது. ஸ்ரீரங்கநாதன் சந்நிதியுடன் கூடிய ராமர் ஸந்நிதி அதே பாணியில் உள்ளது. இங்கே தென்னிந்திய வைஷ்ணவர்கள் வழிபாடு செய்கின்றனர். இங்கே அர்ச்சகரிடம் அனுமதி பெற்றுத் தங்கலாம். ப்ருஹ்மாவின் முதல் பிள்ளையாகிய ஸ்வாயம்புவனுக்கு ஸ்ரீமந் நாராயணன் வைகுண்ட மத்தியிலிருந்து அயோத்தி என்னும் பாகத்தை ப்ருஹ்மா வழியாக மனுச் சக்கரவர்த்தி கையில் கொடுக்க அவர் அதைப் பூலோகத்துக்குக் கொண்டு வந்து சரயூ நதியின் தென்கரையில் ஸ்தாபித்ததால் 'அப்புயத்தோன் அயோத்தி மன்னருக்கு அளித்த கோயில்' என்னும்படி ஆயிற்று. ஏழு முக்தி தரும் நகரங்களில் இதுவும் ஒன்று.

மங்களா சாஸனம்:

பெரியாழ்வார் குலசேகராழ்வார் தொண்டரடிப் பொடியாழ்வார்	திருவாய்மொழி 7, 5, 1, பெருமாள் திருமொழி 10, 1, பெரியாழ்வார் திருமொழி 4,8ம் பதிகம் முதலியன.
திருமங்கையாழ்வார் நம்மாழ்வார்	திருப்பள்ளியெழுச்சி 4, பெரிய திருமொழி 10, 3, 8.

பிரயாகை (அலஹாபாத்)

பெருமாள்: மும்மூர்த்திகள் நதிரூபம் (பிரஹ்மா, விஷ்ணு, சிவன்)

தீர்த்தம: கங்கை, யமுனை, ஸரஸ்வதி நதிகள், திரிவேணி சங்கமம்.

ப்ரத்யக்ஷம்: பரணி, தநுர்த்வஜன், பத்மாவதி

வழி: வாரணாசி - தரியாகஞ்ச் - அலகாபாத் புகைவண்டி வழியில் மீட்டர் கேஜ், பிராட் கேஜ் இரு ரயில் நிலையங்களும் உள்ளன.

சிறப்புக்கள் : கங்கா நதி தனியாகவும், யமுனை நதி தனியாகவும் வந்து த்ருவேணி என்ற இடத்தில் சங்கமம் ஆகின்றன. ஸரஸ்வதி மறைவாகப் பூமிக்கடியில் கலப்பதாக வரலாறு. முதலில் சுத்த கங்கையில் ஸ்நானமும் செய்து, பிறகு படகில் ஸங்கமம் ஆகும் இடம் சென்று நடுவில் கட்டபபட்டிருக்கும் மூங்கில் பிளாட்பாரத்திலிருந்து இறங்க ஸங்கல்பம் செய்து ஸ்நானம் செய்யவேண்டும். பால், எலுமிச்சைப் பழம் பணம் முதலியவை அர்ப்பிக்க வேண்டும். எலுமிச்சைப் பழம் மிதப்பதில்லை. திருதண்டி மடம், அஹோபில மடம், வெங்கட்ராம சாஸ்திரிகள் க்ருஹம் இங்கே தங்கலாம். கும்ப மேளா வருஷம் மிகவும் சிறப்பு. பரணி என்ற தனவானும், பத்மாவதி என்ற அவன் மனைவியும் இத்தலத்தில் தேவர்களையும், அந்தணர்களையும், அதிதிகளையும் பூஜை செய்து வந்தபோது ஒருநாள் தனவான் வெளியூர் சென்றிருந்தபோது

துர்த்வஜன் என்ற பாபி கெட்ட எண்ணத்துடன் பத்மாவதியை அணுக அவள் தோழிகள் அவனைத் தடுத்து, கங்கையும் யமுனையும் சேரும் இடத்தில் விழச் செய்ய, அதேமாதிரி அவன் விழுந்து பிறகுஅந்த பாபி, பத்மாவதியின் கணவனைப் போல் ரூபமெடுத்து, பத்மாவதியும் கணவனும், அவன் ரூபமெடுத்த பாபியும் இருவரும் பத்மாவதி வீட்டிற்கு வர, யார் தன் கணவன் என்று தெரியாமல் பகவானை பிரார்த்திக்க, பகவான் பத்மாவதியைத் தன் ஸ்தானத்துக்கு அழைத்துக் கொண்டதாகப் புராண வரலாறு.

காசி (வாரணாசி)

பெருமாள் : கேசவன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : லக்ஷ்மி.

தீர்த்தம் : சக்ர தீர்த்தம், கங்கா, வாரணா நதி,

விமானம் : அவிமுக்த விமானம்

ப்ரத்யக்ஷம்: சிவன்

வழி: கல்கத்தா–வாரணாசி புகைவண்டி வழியில் வாரணாசி புகைவண்டி நிலையத்திலிருந்து 12 கி.மீ.

சிறப்புக்கள்: காசிவிசுவநாதர், அன்னபூர்ணா, விசாலாக்ஷி ஆலயங்கள் விசேஷம். மைசூர் சத்திரம், த்வாரகா தீச மந்திரம், விச்வநாதி சாஸ்த்ரி க்ருஹம், இங்கே சௌகர்யமாகத் தங்கலாம். காசி நகரத்தில் ப்ரஹ்மஹத்யா தோஷத்துடன் நுழைந்த சிவபெருமானுக்கு ப்ரஹ்மஹத்யா தோஷம் நீங்கி காசி மாநகரை விஷ்ணுவிடம் பிரார்த்தித்துத் தானமாகப் பெற்றபடியால் காசி சிவ க்ஷேத்திரம் என்று பிரணத்தி அடைந்தது. பூர்வ ஜன்மங்களில் செய்த பாவங்களைப் பலன் கொடுக்காதபடி, தடுக்கும் வாரா என்ற நதிக்கும், ஐம்புலன்களினால் நாம் செய்யும் பாவங்களை நாசம்

செய்யும் நாசி என்ற நதிக்கும் மத்தியில் இத்தலம் இருப்ப தால் இந்த க்ஷேத்திரத்திற்கு வாரணாசி என்ற பெயர் ஏற்பட்டதாக வரலாறு. சிவன் ராமநாம மஹிமையை பாடி ஆடிக் கொண்டிருக்கும்போது, ராம சந்த்ரனைக் கண்டு ஆனந்த தாண்டவம் ஆடினதாகவும் சிவன் காதில் உள்ள மணிமயமான குண்டலம் சக்ர தீர்த்தத்தில் விழுந்த தாகவும், சிவன் வேண்டியபடி கங்கா தீர்த்தத்திலுள்ள இந்த க்ஷேத்திரத்தில் மரணமடைபவர்கள் மோக்ஷமடைகிறார்கள் என்கிற ஐதீஹம். திருவாரூரில் பிறக்க முத்தி; திருவண்ணா மலையை நினைக்க முத்தி; தில்லையைத் தரிசிக்க முத்தி; காசியில் இறக்க முத்தி என்பது மரபு.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளையும் முறையே பின்பற்றித் தீவினை ஏதும் செய்யாமல் இறை வனை ஆலயம்தோறும் சென்று தொழுது வருபவர்கள் முத்தி அடைவர். உலகப் பற்றுகளை அறுத்து இறைவனடியே நினைத்திருப்போர்தாம் முத்திப்பேறு பெறுவர். திருநாவுக் கரசர் முத்திப் பேற்றினை அடைந்த செய்தியினைச் சேக்கிழார்,

''மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
'புண்ணியா! உன்னடிக்கே போதுகின்றேன்' எனப் புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அர(சு) அமர்ந்திருந்தார்''

என்று விவரிக்கிறார். இதே கருத்தினைத் திருவதிகை மன வாசகங் கடந்தார், தாம் அருளிச் செய்த உண்மை விளக் கத்தில்,

''முத்துதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு -மெத்தவே
இன்பங் கொடுத்தல்இறை இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள் அப்பா,'' என்று கூறுகிறார்.

இங்கே 64 ஸ்நான கட்டங்கள் உள்ளன. அவைகளில் ஹரிச்சந்த்ர கட்டம், விச்வநாத கட்டம், கேதார கட்டம்,

ஹனுமான் கட்டம், விசாலாக்ஷி கட்டம், அன்னபூர்ணா கட்டம், மணிகர்ணிகா கட்டம் விசேஷமானவை.

இம்மணிகர்ணிகா கட்டத்தில் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர் வெண்மை நிறக் கோடு சடைமுடியோடு கூடிய சிவபெருமான் பிணங்கள் ஒவ்வொன்றிடமும் சென்று அவ் வுயிரைத் தட்டி எழுப்பி அவர்களின் காதுகளில் மந்திரத்தை ஓதி மோட்சத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டார் என்று 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்' எனும் நூலில் 'புனிதப் பயணம்' எனும் அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சியும் அன்பர்கள் யாவரும் காசியின் மகிமையை அறிய உதவும்.

கயா க்ஷேத்ரம்:

பெருமாள்: கதாதரர், நின்ற திருக்கோலம், வடக்கே திருமுக மண்டலம், விஷ்ணுபாதம், திருவடி.

தீர்த்தம்: உத்திர பங்குனி நதி

ஸ்தலவ்ருக்ஷம்: அக்ஷய வடம் (ஆல வ்ருக்ஷம்)

விமானம்: வைகுண்ட விமானம்

ப்ரத்யக்ஷம்: கயா ஸுரன்

வழி: கல்கத்தா-வாரணாசி புகைவண்டி வழியில் கயா புகை வண்டி நிலையத்திலிருந்து 3 கி.மீ.

சிறப்புக்கள்: நாராயணச்சார் ஆச்ரமம், சங்கரமடம் முதலி யவை இருக்கின்றன. பித்ருக்களுக்கு ச்ராத்தம் செய்து பிண்டம் போடுவது விசேஷம். காயாவாளிகளையே ச்ராத்த போஜனத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இங்கே ச்ராத்தம் செய்தால் 7 தலைமுறை பித்ருக்கள் மோக்ஷம் அடைகிறார்கள் என்று சொல்கிறது ஸ்தலபுராணம். அட்சயவடத்தில் ச்ராத்தம் செய்பவர்கள் தம் வாழ்நாள் முழுதும் ஏதாவது ஒரு காய், ஒரு பழம், ஒரு இலையை உண்ப

தில்லை என்று வ்ரதம் கொள்ளவேண்டும். கயாஸுரன் என்பவன் இத்தலத்தில் விஷ்ணுவைக் குறித்துத்தவம் செய்து அவன் சரீரம் பிருஹ்மா சிவன் இவர்களுடைய சரீரங்களை விடப் பரிசுத்தமாக இருக்க பிரார்த்தித்து, அடைந்து ஸகல ஜனங்களும் கயாசுரனைத் தொட்ட மாத்திரத்தில் புன்யாத் மாவாகி யமனுக்கு வேலை இல்லாமல் போகவே, தேவர்கள் விஷ்ணுவைப்பிரார்தித்து விஷ்ணு கட்டளையின்படிப்ரஹ்மா கயாசுரன் சரீரத்தின்மீது யாகம் செய்ய அதற்குத் தேவர்கள் ப்ரஹ்மா சிவனுடன் வந்து அசுரன் தலை ஆடுவது நிற்காமல் போகவே, விஷ்ணுவும் நேரில் வந்து அசுரன் தலைமீது பாதத்தை வைத்து அழுத்த, அவன் தலை ஆடாமல் இருந்து யாகம் பூர்த்தி அடைந்தது. அசுரன் பிரார்த்தித்தபடி மும்மூர்த்திகளும் ஸகல தேவதைகளும் இத்தலத்தில் திவ்ய வாஸம் செய்கிறார்கள். விஷ்ணு பாதம் வைத்து மிதித்த இடத்தில் யார் பிண்டம் போடுகிறார்களோ அவர்களுடைய 21 தலைமுறையிலுள்ள பித்ருக்களை நற்கதி அடையச் செய்வதாகப் புராணம்.

IX திருச்சாளக்ராமம் (ஸாளக்ராமம்)

மூலவர் : ஸ்ரீ மூர்த்தி நின்ற திருக்கோலம். வடக்கே திருமுக மண்டலம்

தாயார் : ஸ்ரீ தேவி

தீர்த்தம் : சக்ரதீர்த்தம், கண்டகி நதி

விமானம் : கனக விமானம்

ப்ரத்யக்ஷம் : ப்ரஹ்மா, ருத்ரர், கண்டகி

வழி : இந்த இடம் நேபாள நாட்டில் உள்ளது. போகும் வழியில் எங்கும் தங்கவோ உணவு வசதிகளோ கிடையாது. மலையேறுபவர்கள் சொந்த வசதிகளுடனே கூட்டமாகச் செல்ல வேண்டும்.

சிறப்புக்கள் : இந்த ஸ்தலம் இருக்குமிடத்தைப் பற்றி மாறுபாடான கருத்துக்கள் உள்ளன. எனினும் நேபாள நாட்டின்

தலைநகரான காட்மண்டு நகரிலிருந்து 192 கி.மீ. தொலைவில் உள்ள முக்திநாராயண க்ஷேத்ரம் (முக்திநாத்) போகும் வழியில் கண்டகி நதிக்கரையில் உள்ளது என்று சொல்லப்படுகிறது. ஸாளக்ராமம் என்பது வேறுஇல்லை. முக்தி நாராயண க்ஷேத்ரமேதான் சாளக்ராமம் என்று சொல்லுவோரும் உண்டு. இங்கே தான் கண்டகி நதியின் ஆரம்பப்பகுதி. கண்டகி நதிக்கரையில் காட்மண்டுவிலிருந்து சுமார் 104 கி:மீ. தொலைவில் உள்ள ''தாமோதர குண்ட்'' என்னும் இடம்தான் ஸாளக்ராமம் என்றும் கூறுகிறார்கள்.

ஸாளக்கிராம க்ஷேத்திரத்தில் கண்டகீ நதியில் நாம் பூஜை செய்யும் ஸாளக்ராமங்கள் கிடைக்கின்றன என்பது பற்றிக் கருத்து வேற்றுமை இல்லை. இவ்விடத்திற்குப் போவதற்கு நேபாள அரசாங்கம், யாத்ரிகிர்களின் பாதுகாப்பைக் கருதி 50 பேர்களுக்குக் குறைவான கோஷ்டிகளுக்கு அனுமதி வழங்குவதில்லை. ஸ்ரீ ராமாநுஜர் மங்களாசாஸனம் செய்த இடம்.

மங்களா சாஸனம் :

பெரியாழ்வார்	206-399
திருமங்கையாழ்வார்	988-997

புவனேசர்

இறைவன் பெயர் : புவனேசர், லிங்கேசுரர்

தேவி : புவனேசுவரி

சிவலிங்கம் மிகவும் பெரியது. ஜனங்கள் ஏராளமாக வந்து தரிசனம் செய்யுமிடம். ஒரிஸா மாகாணத்தில் புதிய தலைநகர் புவனேச்வர்.

ஸ்ரீ கூர்மம். புராண ஸ்தலம்

பெருமாள் : ஸ்ரீகூர்மநாதன் நின்ற திருக்கோலம்

தாயார் : ஸ்ரீகூர்மநாயகி

தீர்த்தம் : சக்ரதீர்த்தம், வம்சதாரை, ஸாங்கல ர்த்தம்

விமானம்: ஸ்ரீகூர்மவிமானம்

ப்ரத்யக்ஷம் : ச்வேதபூபாலன், திலோத்தமை வக்ராஸ்ய மஹரிஷி, சுசிசித்தன் பைரவேசர்

வழி: வால்டேர்-கல்கத்தா ரயில் மார்க்கத்திலிருந்து ஸ்ரீகாகுளம் நிலையத்தில் இருந்து 28 கி.மீ. வால்டேர்-ஸ்ரீகூர்மம் பேருந்து பாதையில் ஸ்ரீராம க்ஷேத்திரம், ஸ்ரீபத்மநாபம் என்று இரண்டு புராதின வைஷ்ணவ ஸ்தலங்கள் இருக்கின்றன.

பூரிஜகந்நாதம் (புருஷோத்தம க்ஷேத்ரம்)

புராண ஸ்தலம்

பெருமாள்: ஜகந்நாதன், க்ருஷ்ணன், பலபத்திரன் சுபத்திரை ஸமேதராக நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தீர்த்தம்: மார்க்கண்டேயர் வருண, ரோகினி தீர்த்தங்கள், ஸமுத்திர ஸ்நானம்

ஸ்தலவ்ருஷம்: ஆலமரம்

விமானம்: இந்திர, ஸ்ரீமந்தர விமானம்

ப்ரத்யக்ஷம்: இந்த்ரத்யும்னன்

வழி: சென்னை, கல்கத்தா புகைவண்டி வழியில் குர்தா ரோடு ஜங்ஷனில் வண்டிமாறி கல்கத்தா–பூரி ரயில் மார்க்கத்தில் பூரி ஸ்டேஷனிலிருந்து 1½ கி.மீ. தூரம்.

சிறப்புக்கள்: இத்தலத்தில் பகவான் வ்ருக்ஷ வடிவமாக எழுந்தருளியிருக்கிறார். இந்த்ரத்யும்ன சக்ரவர்த்திக்கு ஸ்வப்னத்தில் ஸேவை ஸாதித்தபடி பகவானே வ்ருத்தச்சன் வேடம் பூண்டு ஸமுத்திரத்திலிருந்து தாருவைக் கொண்டு வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு மஹா வாத்ய கோஷம் செய்ய, தேவர்கள் புஷ்பங்ருஷ்டி செய்ய, கர்ப்பக்ரஹ கதவைத் திறக்க ஜகந்நாதன், பலபத்திரன், சுபமுத்திரை.

ஸுதர்சனம் ஆக நான்கு வடிவம் கொண்டு பகவான் 15 நாட்களுக்குப் பிறகு ஸேவை ஸாதித்ததாகவும், தச்ச ரூபத்தில் வந்த உருவம் மறைந்து விட்டதாகவும் ஐதீஹம். ஸ்ரீந்ருஸிம்ஹன்தான் இந்த ரூபத்தில் ஆவிர்பாவித்ததாகவும், ப்ரஹ்மா பிரதிஷ்டை செய்ததாகவும் புராண வரலாறு. இங்கே ஜகந்நாதனுக்கு நிவேதித்த பிரஸாதம் யார் செய்தது என்றும், யாராவது பார்த்து விட்டார்களா, தொட்டார்களா இத்யாதிகளை விசாரிக்கக்கூடாது என்றும் ஒரு நிபந்தனை உண்டு. சத்திரங்கள் உண்டு. தளிகை செய்து சாப்பிடலாம்.

ஸிம்ஹாசலம்

பெருமாள்: வராஹ ந்ருஸிம்ஹர். திருமால் ஸ்தம்பமாக நின்ற த்ருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: லட்சுமி

தீர்த்தம்: ந்ருஸிம்ஹதாரை

விமானம்: தார்ட்சயத்ரி விமானம்

வழி: சென்னை-கல்கத்தா புகைவண்டியில் வால்டேர் நிலையத்திலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ளது. தேவஸ்தான பேருந்து நிலையத்திலிருந்து சென்று வருகிறது.

சிறப்புக்கள்: பக்தர்களின் பிரார்த்தனைப்படி ஹிரன்யாக்ஷ ஹிரண்யகசிபு என்ற துவார பாலர்களை ஸம்ஹரித்த இரு அவதாரங்களை ஒன்றாய்த் துராஹ நரஸிம்ஹ ரூபத்தில் ஸேவைஸாதிப்பதாகப் புராணம்.

அண்ணாவரம்

இறைவன்: சத்திய நாராயணன்

பிரம்மா சிவனுக்கும் ஆலயம் உண்டு. ஆலயம் மலையின் மேல் இருக்கிறது. தினசரி பக்தர்கள் கூட்டமாக வந்து

தரிசனம் செய்வார்கள். தங்குவதற்கு வசதி உண்டு. புகை வண்டி நிலையத்திலிருந்து சுமார் ½ கி. மீ.

பத்ராசலம்

பெருமாள் : ராமன் நின்ற திருக்கோலம்

தாயார் : ஸீதாதேவி

தீர்த்தம் : கோதாவரி நதி, ராமகுண்டம்

ப்ரத்யக்ஷம் : பக்தராமதாஸ்

வழி : பெஜவாடா - காஜீபெட் - ஹைதரபாத் புகைவண்டி வழி. பேருந்து வசதிகள் உண்டு.

சிறப்புக்கள் : ஹைதராபாத் நிஜாமிடம் மந்திரியாய் வேலை பார்த்த அக்கன்னா-மாமன்னாவின் மருமகன் கோபன்னா. இவர் பத்ராசலம் தாசில் தாராக இருந்து சர்க்கார் பணத்தை ராமன் கோயில் கட்டுவதற்கும், விக்ரஹங்களுக்கு அலங்கார மாக நகைகள் செய்தும் ராமன் உத்ஸவாதிகள் நடத்தி பிராம்மணர்களுக்கு உணவு போட்டும் செலவழித்ததற்காகச் சிறையில் அடைக்கப்பட்டு, பல கஷ்டங்கள் அனுபவித்து கடைசியில் ராமலெட்சுமணர்கள் சேவகர்களாக வேஷம் தரித்து நிஜாமுக்குத் தரிசனம் கொடுத்து, கோபன்னா விடு தலையாகி அன்று முதல் ராமதாஸ் என்ற திருநமத்துடன் நாவாப் ஆதரவுடன் பலகாலம் பகவானுக்கு உத்ஸாவாதிகள் நடத்திய ஸ்தலம்.

மங்களகிரி (பெஜவாடா)

பெருமாள் : பாகை நருஸிம்ஹர், மலைமீது ஸந்நிதி

தாயார் : மஹாலக்ஷ்மி

தீர்த்தம் : க்ருஷ்ணா நதி

வழி : சென்னை-கல்கத்தா மார்க்கத்தில் பெஜவாடா ரயில் நிலையத்திருந்து 14 கி. மீ.

சிறப்புக்கள் : நருஸிம்ஹருக்கு எவ்வளவு பானகம் வாயில் ஸமர்ப்பித்தாலும் பாதி மீந்து ஸமர்பித்தது பக்தர்களுக்குத் திரும்பி கிடைப்பதாக ஐதீஹம்.

X திருச்சிங்கவேள் குன்றம் (அஹோபிலம்)

வழி : சென்னை-பம்பாய் புகைவண்டிப் பாதையிலுள்ள கடப்பா நிலையத்தில் இறங்கி அங்கிருந்து பேருந்தில் (பஸ் ஸ்டாண்டு 2 கி. மீ. உள்ளது) 86 கி.மீ. மைல் தூரம் சென்று அர்லகட்டா என்ற ஊரில் இறங்கி அங்கிருந்து வேறு பேருந்தில் 1 மணி நேரத்தில் அஹோபிலம் போய்ச் சேரலாம் கருனுல் ஜில்லா நந்தியாலா நிலையத்திலிருந்து போகலாம்.

இங்கு அஹோபில நரஸிம்மன், வராஹ நரஸிம்மன், மாலோல நரஸிம்மன், யோகா நந்த-நரஸிம்மன், பாவந்த நரஸிம்மன், காரஞ்ச நரஸிம்மன், சக்ரவட நரஸிம்மன், பார்க்கவ நரஸிம்மன், ஜ்வாலா நரஸிம்மன் என்ற 9 நரஸிம்ஹர்களின் கோவில்கள் இருப்பதால் இதற்கு நவந்ருஸிம்ஹ க்ஷேத்ரம் என்ற வேறு பெயரும் உண்டு. மலைமீது ப்ருஹ்லாத நரஸிம்ஹர், வாரக நரஸிம்ஹர், உக்ர நரஸிம்ஹர் ஸந்நிதிகள் உண்டு.

ப்ரஹ்லாத வரதன் ஸந்நிதி (கீழே அஹோபிலம்)

இதைக் கீழ் அஹோபிலம் என்றும் கூறுவார்கள் அஹோபில மடத்தின் தலைமை ஸ்தலமே இந்தக் கோவில் தான்.

மூலவர்: ப்ரஹ்லாத வரதன், லட்சுமி நருஸிம்ஹன் வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: மாலோல நரஸிம்ஹர் தவிர மற்ற 8 நரஸிம்ஹர்களுக்கு உத்ஸவ மூர்த்திகளும் இங்கே உள்ளனர். மாலோல உத்ஸவர் அஹோபில மடத்து அழகிய சிங்கரின் திருவாராணத்தில் உள்ளது.

தயார்: அம்ருதவல்லி, செஞ்சு லட்சுமி

தீர்த்தம்: இந்த்ர, பாவநாச, கஜ, பார்க்கவத

விமானம்: குகை விமானம்

ப்ரத்யக்ஷம்: அஹோபில மடத்து முதல் அழகிய சிங்கருக்கு யோகி ரூபத்தில் ப்ரத்யக்ஷம்.

அஹோபில நரஸிம்ஹர் (மேல் அஹோபிலம்)

கீழ் அஹோபிலத்திலிருந்து சுமார் 9கி.மீ. தொலைவு தார் சாலை வழியாக மலையேறி மேல் அஹோபிலத்தை அடையலாம். சில சமயங்களில் பேருந்து போவதும் உண்டு. இது ஒரு குடைவரைக் கோயில்.

மூலவர்: அஹோபில நரஸிம்ஹர்

தாயார்: லட்சுமி

தீர்த்தம்: பவநாசினி

விமானம்: குகை விமானம்

ப்ரத்யட்சம்: ப்ருஹ்லா தாழ்வார்.

சிறப்புக்கள்: சீதையைத் தேடிவரும் இராமன் தம்பி லட்சுமணன் அஹோபிலம் வந்து ஸ்ரீலஷ்மி ந்ருஸிம்ஹனை 5 சுலோகங்களால் துதித்ததால் சீதை கிடைத்து விடுவதாக ஐதிஹம். மாமனார் வேடுவர் குலமானபடியால் இன்றும் மாசிமாதம் நடக்கும் ப்ருஹ்மோத்ஸவத்தின் போது, மறவர்கள் கூத்தும் ஆர்ப்பாட்டங்களும் சீர் வரிசைகளும் நடைபெறுகின்றன. மலை கருடாத்திரி, கருடாசலம், காருடைசைலம் என்றழைக்கப்படுகிறது. பவநாசினி என்ற நீர்வீழ்ச்சியின் கரை வழியாக மலைமேல் ஏறிச்சென்று வராஹ நரஸிம்ஹனை வணங்கிவிட்டு இன்னும் மேலே சென்று வராஹ நரஸிம்மனை வணங்கிவிட்டு இங்கிருந்து 2 கி.மீ. தொலைவில் ஸ்ரீநரஸிம்ஹன் வெளிப்பட்டதாகக் கூறப்பட்ட தூண் உள்ளது.

இது காட்டு மிருகங்கள் எல்லாம் நடமாட்டமுள்ள பிரதேசமாகையால் ஸேவைகளை எல்லாம் பிற்பகலுக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 1, 7 பதிகம்

மகாநந்தி

இறைவன் லிங்கேசுரர். விஷ்ணுஆலயம் உண்டு. தங்கு வதற்கு வசதி உண்டு. ஆகார வசதி குறைவு. திருப்பதி தேவ ஸ்தானத்திலிருந்து வரும் பக்தர்கள் தங்குவதற்குக் கட்டடம் கட்டிப் போட்டு இருக்கிறார்கள். நந்திவாயிலிருந்து தெளி வான ஜலம் இரவும் பகலும் வந்து கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் சாகுபடி ஆகிறது. கருனுல் ஜில்லாவில் நந்தியாலா நிலையத்திலிருந்து போக வேண்டும்.

சிவாலயம்

5 திருப்பதம் என்பது ஸ்ரீ சைலம்

இறைவன் : பருப்பநாதர்

இறைவி : பருப்பநாயகி

தீர்த்தம் : பாலாநி

பதிகம் : சம்1, அப்1, சுந்1.

மல்லிகார்ச்சுனபுரம் என்பதும் இதுவே. கர்னுல் ஜில்லாவிலுள்ள நந்தியால் புகைவண்டி நிலையத்துக்கு வட கிழக்கு 105 கி. மீ. 64 கி.மீ. தூரத்திலுள்ள நாகலொட்டி என்னும் ஊர் வரையில் மாட்டுவண்டி போகும். மற்ற 41½ கி.மீ. மலைவழி. இவ்வழியிற் பெத்த செறாவு 16 கி.மீ. அப்

பாற் பீமகுண்டம் 16 கி. மீ. அதன் பின்னர் ஸ்ரீ சைலம் 9½ கி.மீ. மலைவழிச் சந்து கஷ்டம். இப்போது விஜயவாடா குண்டூரிலிருந்து சுமார் 12 மணிக்கொருவில் பேருந்து மூலம் மலையில் யாத்திரை செய்து சிவாலயம் அடையலாம்.

''செல்லுறவரிய சிவன் சீபர்ப்பத மலையை'' என்பது சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் திருவாக்கு. தூரத்திலிருந்து தொழுவார்க்கும் வீடருளும் ஸ்தலம். ''சேண்பார்த்தவர்க்கு வீடருள் சீபர்ப்பத நற்றாலம்'' ஞாந வரோதயர் உபதேச காண்டம், 1166. இம்மலை மிசைஏறி, வீழ்ந்தோர் எண்ணிய எண்ணத்தை மறு பிறப்பினல்கு மலை''.

நந்திதேவர் பர்வத வடிவமாகச் சிவபெருமானைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஸ்தலம்.

மந்த்ராலயம் (அபிமான ஸ்தலம்)

சென்னை-பம்பாய் ரயில் மார்க்கத்தில் உள்ளது. ஸ்ரீசைலத்திலிருந்து பேருந்துமூலம் போகலாம். பஸ் வசதியும் உண்டு. ஸ்ரீராகவேந்தர ஸ்வாமிகள் மடம் இருக்கிறது. மிகப் ரஸிகதம் துங்கபத்ரா நதி இருக்கிறது. ஸ்ரீராகவேந்தர மடத்தில் சாப்பாட்டு வசதி உண்டு. ஆனிமாதம் ஜென்ம நட்சத்திரத்து அனுசரித்து, பத்து நாள் திருவிழா நடைபெறுகிறது!

1 திருவேங்கடம்

(திருப்பதி, திருமலை, ஆதிவராஹ க்ஷேத்ரம்)

சென்னை-பம்பாய் புகைவண்டிப் பாதையிலுள்ள ரேணிகுண்டாவிலிருந்து சுமார் 11 கி.மீ. தொலைவிலுள்ள புகைவண்டி நிலையம் திருப்பதி, சென்னையிலிருந்து நேராக வரும் புகைவண்டிகளும் உண்டு. சென்னையிலிருந்தும், வேறு பல ஊர்களிலிருந்தும் நிறைய பேருந்துகள் உண்டு.

திருப்பதி, திருமலை, திருச்சானூர் என்ற மூன்று முக்கிய பிரிவுகளிலும், தேவஸ்தான சத்திரங்களும், உணவு விடுதிகளும் மற்ற எல்லா வசதிகளும் உள்ளன. கீழ்த் திருப்பதியிலிருந்து திருச்சானூருக்குச் செல்ல பேருந்து முதலிய வாஹன வசதிகள் நிறைய உள்ளன.

(1) முதல் பிரிவு: கீழ்த் திருப்பதி, கோவிந்த ராஜப் பெருமாள் கோவில்.

மூலவர்: கோவிந்த ராஜப் பெருமாள், புஜங்கசயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: புண்டரீக வல்லி

சிறப்புக்கள்: இங்கு ஆண்டாள், உடையவர்களின் ஸந்நிதிகள் உண்டு.

(2) இரண்டாம் பிரிவு: திருமலை

மூலவர்: திருவேங்கடமுடையான், ஸ்ரீநிவாசன் வெங்கடாசலபதி, பாலாஜி, நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: கல்யாண வெங்கடேச்வரர்

தீர்த்தம்: சேஷாசல ஸ்வாமி புஷ்கரிணி, பாபவிநாச நீர் வீழ்ச்சி, ஆகாச கங்கை, கோனேரி தீர்த்தம், 14 தீர்த்தங்கள். வைகுண்ட தீர்த்தம், சக்ரதீர்த்தம், ஜாபாலிதீர்த்தம், வருண தீர்த்தம், ஆகாச கங்கை, பாபவிநாசம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரை, இராமக்ருஷ்ண தீர்த்தம், தும்புரு தீர்த்தம், சேஷ தீர்த்தம், ஸீகஸந்தின தீர்த்தம், யுத்தகள தீர்த்தம், சீதம்ம தீர்த்தம் உள்ளன.

விமானம்: ஆநந்த நிலய விமானம்

ப்ரத்யட்சம்: தொண்டைமான், ஆறுமுகன்

ஆதிவராஹர் ஸந்நிதி : சுவாமி புஷ்கரிணியின் வடமேற்கு மூலையில் கோவில் கொண்டுள்ள இப்பெருமாளுக்குத்தளிகை சமர்ப்பித்த பிறகே, அது ஸ்ரீநிவாஸனுக்கும் சமர்ப்பிக்கப்படு கிறது . ஏழுபர்வதங்கள்: வெங்கடாத்ரி, சேஷாசலம். வேதா சலம், கருடாசலம், வ்ருஷபாத்ரி, அஞ்சனாத்ரி, ஆனந்தாத்ரி என்ற பெயர்களுடன் இருக்கின்றன. இதனுடைய மத்தியில் கோவில் அமைந்துள்ளது. ஸ்ரீ நிவாஸன் எழுந்தருளுவதற்கு முன் ஆதிவராஹன் இத்தலத்தில் சேவை சாதித்ததனால் ஆதிவராஹரை சேவித்த பிறகுதான் ஸ்ரீ நிவாஸனை வணங்க வேண்டும்,

(3) மூன்றாம் பிரிவு: திருச்சானூர் (அலர்மேல் மங்காபுரம்)

மூலவர்: தாயார்: அலர்மேல் மங்கை (பத்மாவதி) கிழக்கே திருமுக மண்டலம்

தீர்ததம்: பத்மஸரோவரம்

சிறப்புக்கள்: இக்கோவிலில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும், ஸௌந்தர ராஜனுக்கும் சந்நிதிகள் உள்ளன. இத்திருக்கோயிலை ஸ்ரீநிவாஸன் நியமனப்படி தொண்டைமான் என்ற அரசர் கட்டி, பகவான் மிக்க ஆனந்தத்துடன் எழுந்தருளியதால் ஆனந்த விமானம் என்று பெயர் உண்டானதாக ஸ்தல வரலாறு. ப்ருஹ்மா லோக ஷேமார்த்தம் இரண்டு விளக்கு களை ஏற்றி வைத்ததாகவும், அந்த தீபம் இப்பொழுதும் பிரகாசிப்பதாவும் வரலாறு. அஹோபிலத்து மடத்து முதல் ஜீயர் ஸ்ரீ ஆதிவன் சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருமலைக்குப் படிக்கட்டுகளைக் கட்டி வைத்தாராம். மணவாள மாமுனிகள் ஸுப்ரபாதம், ப்ரபத்தி மங்களம் எல்லாம் அருளிச் செய்து பல்லாண்டுகள் தங்கி இருந்து மங்களா சாஸனம் செய்துள்ளார்.

மங்களா சாஸனம்

மதுரகவியாழ்வார் தொண்டரடிப்பொழியாழ் வாரைத் தவிர மற்றனைவரும் மங்களா சாஸனம் செய்துள்ளனர்	பெரியாழ்வார் திருமொழி 5,4,1 நாச்சியார் திருமொழி 8ஆம் பதிகம் பெருமாள் திருமொழி 4ஆம் பதிகம். திருச்சந்த விருத்தம்; 81 அமலனாதிப் பிரான் 1; பெரிய திருமொழி 1,9 பதிகம் முதலியன. முதல் திருவந்தாதி 26 இரண்டாந் திருவந்தாதி 25 மூன்றாந் திருவந்தாதி 14 திருவாய் மொழி 3,3 பதிகம் முதலியன.

தொண்டை நாடு

1. திருக்காளத்தி (ஸ்ரீகாளஹஸ்தி)

இறைவன் : காளத்திநாதர்

இறைவி : ஞானப்பூங்கோதையம்மை

தீர்த்தம் : பொன்முகலி

பதிகம் : சம் 2, அப் 1, சுந்

இரயில் நிலையம் ரேணுகுண்டா இரயில் நிலையத்திற்கு வடகிழக்கு 24 கி.மீ. வடக்கு நோக்கி ஓடும் ஸ்வர்ண முகியாற்றைக் கடந்து ஊருக்குச் செல்லவேண்டும். காளத்தி புகைவண்டி நிலையத்திலிருந்து 3 கி.மீ.

இது பஞ்ச பூதங்களில் வாயுஸ்தலம் விராட் புருஷனுடைய விசுத்தித் தலம் ஸ்வாமி சந்நிதானத்தில் எரியும் தீபங்களில் ஒன்று காற்றினால் மோதப்பட்டாற்போல் எக்கால

மூம் அசைந்து கொண்டே இருக்கின்றது மேற்கு நோக்கிய ஸந்நிதி.

ஸ்ரீகாள ஹஸ்தி என்பது (ஸ்ரீ) சிலந்தி (காளம்) பாம்பு, (ஹஸதி) யானை இம்மூன்றும் பூசித்தி முக்தி பெற்ற ஸ்தலம். சிவலிங்கத்து அமைப்பில் யானையின் தந்தம் போன்ற உருவம் காணப்படுகின்றது. இது தக்ஷிண கைலாசமென்று சொல்லப்படும் திருக்காளத்தி மலையிலுள்ள சிவலிங்கப் பெருமானை அன்புடன் வழிபட்டுக் கண்ணிடந் தப்பலாகிய அருமையான தொண்டைச் செய்து கண்ணப்ப நாயனார் ஆறுநாளிலே முக்தியடைந்தார்.

அவருடன் அப்பெருமானைப் பூசித்து வந்த சிவகோசரியார் என்னும் பிராமணோத்தமரும் மோக்ஷமடைந்தார். நக்கீரதேவரும் இந்திரன், இராமன், முசுகுந்தர் இவர்களும் வழிபட்டுப் பேறு பெற்றார்கள்.

கோயிலுக்கு வடக்கில் துர்க்காம்பிகை மலையும், தெற்கில் கண்ணப்பர் மலையும் கிழக்கில் குமாரசுவாமி மலையும் இருக்கின்றன. பிரஸந்நவரத பெருமாள் கோயில் ஊர் மத்தியில் இருக்கின்றது.

திருத்தணிகை

R. S. புகைவண்டி நிலையம் முருகன் அறுபடை வீடுகளில் ஒன்று. தரிசனம் செய்ய வேண்டிய ஸ்தலங்களில் இதுவும் ஒன்று,

I வைஷ்ணவஸ்தலம்

திருக்கடிகை (சோளசிங்கபுரம்-சோளங்கிபுரம்)

வழி : அரக்கோணம் சந்திப்பிலிருந்து நேராகப் பேருந்தில் செல்லலாம். இங்குக் கீழே உத்ஸவருக்கு ஒரு கோயிலும் மலைமேல் மூலவருக்கு ஒரு கோயிலும் இன்னொரு சிறிய மலையில் அனுமார் கோவிலும் உள்ளன.

(1) கீழே உள்ள கோவில் மூலவர் இல்லை.

உத்ஸவர் - பக்த வஸ்தலப் பெருமாள்.

இந்தக் கோயிலின் பின்புறமுள்ள ஆதிகேசவப் பெருமாளைக் குறிப்பிட்ட நேரங்களில் வழிபட முடியும். ஆண்டவர் ஆழ்வார் ஆசாரியர்கள், எறும்பியப்பர், தொட்டாசாரியார் சந்நிதிகள் உள்ளன.

2 பெரியமலை : (கடிகாசலம்) சுமார் 500 அடியில் உள்ளது

மூலவர் : யோகத்தில் நரஸிம்ஹர் காட்சி தருகிறார். வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : அம்ருதவல்லி

தீர்த்தம் : அம்ருத தீர்த்தம், தக்கான்குளம்.

விமானம் : ஸிம்ஹ கோஷ்டாக்ருதி விமானம்

ப்ரத்யட்சம்: சிறிய திருவடி

3 சிறியமலை : யோக ஆஞ்சனேயர். கையில் சங்கு சக்கரங்கள் உள்ளன. நான்கு திருக்கரங்கள்.

சிறப்புக்கள் : இவ்வூரில் சிறிது நேரம் தங்கியிருந்தாலே மேலுலகம் கிடைக்கும். ஆகவே கடிகாசலம், திருக்கடிகை என்ற பெயர்கள் வந்தன. மலைக்குப் போகும் வழியில் கருடாரூடாரூடரான வரதராஜப் பெருமாள் கோயில் உள்ளது. உச்சிவேளையில் உறுதியாக வழிபடலாம் தொட்டாசாரியார் என்ற மஹாசாரியாருக்குக் காஞ்சி வரதராஜன் தனது கருட சேவையைத் தந்ததாக வரலாறு.

நரசிம்ம அவதாரத்தை வழிபட விரும்பிய சப்தமுனிவர்கள் இவ்விடத்தில் தவம் செய்ய, ஆரம்பித்து ஒரு நாழிகைக்குள் அவர்கள் பயன் பெற்ற காரணத்தினால் கடிகாசலம் என்ற பெயர் பெற்றது. இங்கு ஒரு நாள் தங்கினாலும் பீடைகள் தொலைந்து மேலுலகம் கிடைக்கும்.

மங்களா சாஸனம்: பேயாழ்வார்
திருமங்கையாழ்வார்
மூன்றாத் திருவந்தாதி 61
பெரிய திருமொழி 8,9,4

2 திருவல்லம்

இறைவன்: வல்லநாதர்

இறைவி: வல்லாம்பிகை

தீர்த்தம்: திருவல்லம், கௌரி தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: இது திருவலம் என்று வழங்குகிறது. புகைவண்டி நிலையத்திலிருந்து 3 கி.மீ. நிவா என்னும் நதியின் மேல் கரையிலிருக்கின்றது.

விநாயகர் : வரசித்தி விநாயகர்

நவகிரகங்களும், வல்லாளனென்னும் அரசனும் பூஜித்த ஸ்தலம். நந்தியின் நின்ற திருவுருவம் கிழக்குத் திசை நோக்கி இருக்கின்றது. திக்காலி என்னும் அவுணன் பூசித்ததால் தீக்காலி வல்லம் எனவும் சொல்லப்படும்.

திருவல்லத்துக்கு வடக்கு 13 கி.மீ. "வள்ளிமலை" என்னும் சுப்பிரமணியர் ஸ்தலம் இருக்கிறது. இம்மலையில் வள்ளியம்மை காத்த தினைப்புனம், நீராடிய சுனை, சூரியன் காணாச்சுனை முதலியன உள்ளன.

3 திருவாலங்காடு

(வடாரணியம் பழையனூர் ஆலங்காடு.)

இறைவன் : ஊர்த்துவ தாண்டவப் பெருமான் என்ற தேவர் சிங்கப் பெருமாள்.

இறைவி: வண்டார் குழலம்மை

தீர்த்தம்: முத்தி தீர்த்தம்

மரம்: பலா

பதிகம்: சம் 1, அப் 2, சுந் 1

வழி: சென்னைப் பட்டினத்திற்கு மேற்கு 60 கி.மீ. திரு ஆலங்காடு புகைவண்டி நிலையத்திற்கு வடகிழக்கு 5 கி.மீ. இடையில் ஒரு சிற்றாறு ஓடுகின்றது.

பஞ்ச சபைகளில் ஒன்றாகிய ரத்ந சபையையுடைய ஸ்தலம். சிவபெருமான் காளியுடன் நிருத்தஞ் செய்தருளிய ஸ்தலம். ஊர்த்வ தாண்டவம்.

''ஆடினார் காளிகாண ஆலங் காட்டடிகளாரே'' என்பது தேவாரம். இருடி முஞ்சிகேசருடன் கார்க்கோடகன் நடன தரிசனம் செய்த ஸ்தலம்.

திருக்குளம் பெரிது. இதற்கு வடகிழக்கிலும் கோயிலுக்கு வடமேற்கிலும் காளி கோயில் இருக்கின்றது. காரைக்காலம் மையார் கைலாச கிரியிலிருந்து தலையாலே நடந்து வந்து ஸ்வாமியைத் தரிசித்து அவருடைய குஞ்சிதபாதத்தின் வீழ்ச்சி ஆநந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஸ்தலம். அவ் வம்மையார் அருளிச் செய்த திருப்பதிகத்தைப் பெற்றுள்ள க்ஷேத்திரம்.

ஒரு செட்டிப் பிள்ளைக்குத் தாங்கள் கொடுத்த வாக் கைக் காப்பாற்றும் நிமித்தம் தங்கள் உயிரைக் கொடுத்த மேன்மையாளர்களாகிய வேளாள குலத்தார் வசிக்கும் பழையனூர். இதற்குக் கிழக்கு 1½ கி மீ. தொலைவில் இருக் கின்றது. இங்கும் ஒரு சிவாலயம் உண்டு. இங்ஙனம் பழைய னூர் இயம்பு மொழி காத்த கதையினை திருஞான சம்பந்தர் ''துஞ்சவருவாரும்'' என்னும் திருவாலங்காட்டுப் பதிகத்திற் சிறப்பித்து ஓதியுள்ளார்.

4. திருப்பாசூர்

இறைவன் : பாசூர்நாதர்

இறைவி : பசுபதிநாயகி

பதிகம் : சம் 1 அப். 2

வழி: சென்னைப் பட்டினத்திற்கு மேற்கு 42 கி.மீ. யிலுள்ள திருவெவ்வுளூர் புகைவண்டி நிலையத்திற்கு வடமேற்கு 7 கி.மீ., கடம்பத்தூர் புகைவண்டி நிலையத்துக்கு வடக்கு 5½ கி.மீ. சிவபெருமான் ஒரு (பாசு: மூங்கில்) மூங்கிலடியில் தோன்றியருளிய ஸ்தலம். கரிகால் சோழனுக்கு எதிரியான குறும்பராஜன் ஒருவனுக்கு உதவியாக ஒரு பெரும்பாம்பை இடத்தில் விட்டு, சமணர்கள் சோழனிடம் அனுப்ப, அச் சோழனுக்கு உதவியாகச் சிவபெருமான் அப்பாம்பை எடுத்து ஆட்டியருளிய ஸ்தலம், இதனைத் திருநாவுக்கரசு நாயனார் பாடியுள்ளர்.

II வைஷ்ணவத்தலம் திருஎவ்வுள் (திருவள்ளூர்)

(திருவள்ளூர்-புண்யாவர்த்த, விட்சாரண்ய க்ஷேத்ரம்)

மூலவர்: வீரராகவ பெருமாள், புஜங்க சயனம், கிழக்கே திருமுகமண்டலம்

தாயார்: கைவல்லி (வஸுமதி) தனிக்கோவில் நாச்சியார்

தீர்த்தம்: ஹ்ருத்தாப நாசினி 1 புஷ்கரிணி

விமானம்: விஜயகோடி விமானம்

ப்ரத்யக்ஷம்: சாலிஹோத்ரமுனி

வழி : சென்னை-அரக்கோணம் புகை வண்டிப் பாதையில் திருவள்ளூர் நிலையத்திலிருந்து 5 கி.மீ., வண்டியில் அல்லது டவுன் பஸ்ஸில் போக வேண்டும்.

சிறப்புக்கள் : மூலவராகிய வீரராகவன் தனது வலது திருக் கையை சாலிஹோத்திர முனிவரின் தலைமீது வைத்தபடியும் நான்முகனுக்கு வேதங்களை உபதேசிக்கும் வண்ணமாக இடது கையில் ஞான முத்திரையோடு எழுந்தருளியுள்ளார். அம்மாவாசையன்று இந்த புஷ்கரிணியில் குளிப்பது மிகவும் புண்ணியமானது. இக்கோயில் அஹோபில மடம் ஜியரின் மேற்பார்வையில் உள்ளது. திருமால் சாலிஹோத்திரமுனி வருக்குக் காட்சியளித்து ''உறைதற்குரிய உள்ளவ்வுள்'' என்று வினவியதால் இத்தலத்திற்கு ''திருஎவ்வுள்'' என்று பெய ராயிற்று.

2. **திருமங்கையாழ்வார் :** நான்முகன் திருவந்தாதி 36.

திருவெண்பாக்கம்

இறைவன்: வெண்பாக்கநாதர், ஊன்றீசுவரர்

இறைவி: மின்னலொளியம்மை, கனிவாய் மொழியம்மை

தீர்த்தம்: கைலாய தீர்த்தம்

மரம்: இலந்தை

பதிகம்: சுந் *1*

சென்னைப் பட்டினத்துக்கு மேற்கு 42 கி.மீ. திருஎவ்வு ளூர் புகைவண்டி நிலையத்தில் இறங்கி வடக்கு 4 கி.மீ. சென்று ஊரை அடைந்து அங்கிருந்து மேற்கே (4) திருப் பாசூருச்குப் போகும் வழியில் 1 கி.மீ. சென்று, வடக்கே திரும்பி நாகலாபுரம் சத்தியவேடு ஆகிய இடங்களுக்குப் போகும் வழியில் 2 கி.மீ. சென்று வழியை விட்டு மேற்கே திரும்பித் தங்கானூர் கொழுந்தலூர் வெண்பாக்கம் என்னுங் கிராமங்கள் வழியாகச் சுமார் 3 கி.மீ. சென்று மறுபடி வடக்கே திரும்பி $1\frac{1}{2}$ கி.மீ. சென்றால் இந்த ஆலயம் இருக் கும். இப்போது (அந்தோ, அந்தோ) பூண்டி நீர் நிலையில் மூழ்கிக் கிடக்கின்றது. அந்த நீர்த்தேக்கத்தின் கரையில்

புதிதாக ஒரு சோயில் கட்டப்பட்டுள்ளது. திருவெவ்வுளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து 11 கி.மீ. ஆலயமிருந்த ஸ்தலம். திருவளம் புதூர் என வழங்கப்படுகிறது. சுந்தர மூர்த்தி நாயனார் இந்த ஸ்தலத்துத் திருப்பதிகத்தின் ஒவ்வொரு செய்யுளிலும் "உளோம் போகிர் என்றானே" ன்எறு அருளிச் செய்திருப்பதால் "உளோம் போகிர்" என்பது மருவி உளம்புதூர் என்றாகி, இந்த ஊருக்குத் திருவளம்புதூர் என்ற பெயர் உ ண்டாயிற்றுப் போலும். திருவெண்பாக்கம் என்னும் ஊர் திருவளம் புதூருக்குத் தெற்கு ½ மைல் அங்கும் ஒரு சிறு ஆலயமிருந்து குசஸ் தலை யாறு சமீபத்தில் உள்ளது.

சுந்தரர், சங்கிலி நாச்சியாருக்குச் செய்த பிரமாணந் தவறித் திருவொற்றியூர் எல்லையைக் கடந்து சென்றதாற் பார்வை இழந்து இங்கு வந்து சிவபெருமானைத் துதித்து ஊன்றுகோல் பெற்றனர்.

நந்தியின் வலது கொம்பு சிறிது ஒடிந்திருக்கின்றது. பக்க லில் இடது கையில் ஊன்றுகோலுடன் சுந்தரமூர்த்தி சுவாமி யின் உருவம் இருக்கின்றது. ஊன்றுகோல்பட்டு நந்தியின் கொம்பொடிந்ததாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சிபுரம் போகும் வரையில், அவர் முன் தேவியார் மின்னல் போலத் தோன்றித் தோன்றி மறைந்த காரணத்தால் "மின்னலொளி யம்மை" எனப் பெயர் போந்தார்.

6 திருவிற்கோலம் என்பது கூவம்

இறைவன் : திரிபுராந்தகர்

இறைவி : திரிபுராந்தகியம்மை

தீர்த்தம்: கூபாக்கிணி தீர்த்தம்

பதிகம் : சம் 1

சென்னைப் பட்டினத்துக்கு மேற்கிலுள்ள கடம்பத்தூர் புகைவண்டி நிலையத்திற்குத் தெங்கே 10 கி.மீ. சென்னையிலிருந்தே பேருந்து மூலமாகப் போகலாம். 72 கி.மீ. இலம்பைங் கோட்டூர் இதற்குச் சமீபத்திலிருக்கின்றது. சுவாமி தீண்டாத் திருமேனி, அதிகமழை பெய்கிறதாக இருந்தால் சுவாமிமேல் வெண்மையான வர்ணம் படருகின்றதும், யுத்தம் நேரிடுவதாயிருந்தாற் சிவந்த வர்ணம் படருகின்றதுமான அதிசயமான ஸ்தலம். கோயிலுக்குக் கிழக்கில் திருக்குளம் இருக்கின்றது. திரிபுரமெரித்த மூர்த்தி திருக்கையில் விற்கோலமாகத் தங்கிய இடம்.

"புரங்கள் வெந்தறச் செருத்தவனுள் விடந்திருவிற்கோலமே" என்பது சம்பந்தர் திருவாக்கு. சிவப்பிரகாச ஸ்வாமிகள் அருளிய தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது.

7 இலம்பையங் கோட்டூர்

சுவாமி : சந்திரசேகரேசுரர், தேவ நாயகர்

தேவி : கோடேந்து முலையம்மை, கதிர்முலையம்மை

தீர்த்தம் : சுந்திரதீர்த்தம்

பதிகம் : சம்!

திருவிற்கோலமாகிய (6) கூவத்துக்குச் சொல்லி இருக்கும் வழியைப் பார்க்க, கூவத்துக்குத் தென்மேற்கு $1\frac{1}{2}$ கி.மீ. கூவத்து ஏரியில் ஜலமில்லாதிருக்கும் பொழுது அதிலிறங்கிப் போனால் சமீபத்தில் இருக்கின்றது. ஏரியில் ஜலமிருந்தால் ஏரிக்கரையின் மேல் $1\frac{1}{2}$கி.மீ. மேற்கே சென்று பின்பு தெற்கே திரும்பி, ஏரியின் மேற்புறமாகவே 1 கி.மீ. சென்றால் இந்த ஸ்தலத்தை அடையலாம். செம்மையான வழியில்லை. சென்னையில் இருந்தும் மோட்டார் வண்டியில் கூவம் சேரலாம். 72 கி.மீ. அரம்பையர் பூசித்த ஸ்தலம். கூவத்திற்போல

இங்கும் ஸ்வாமி தீண்டாத் திருமேனி திருக்குளம் கோயிலுக்குத் தெற்கில் உள்ளது.

இலம்பையங் கோட்டூர் முழுமையும் இப்பொழுது கிறித்தவக் கிராமமாயிருக்கின்றது பிரதி தினமும் கூவத்திலிருந்து குருக்கள் ஒருவேளை பூஜை செய்துவிட்டுப் போகிறார்.

8 திருஊறல் என்பது தக்கோலம்

இறைவன் : உமாபதீசுரர், ஜலநாதேசுரர்

இறைவி : உமையம்மை. கிரராஜ கன்னிகை

தீர்த்தம் : பார்வதி தீர்த்தம்

பதிகம் : சம் 1

தக்கோலம் புகைவண்டி நிலையத்துக்குக் கிழக்கு 5 கி.மீ. திருவாலங்காடு புகைவண்டி நிலையத்திலிருந்தும் இத்தலத்தை அடையலாம். நந்தி தேவரது வாயிலிருந்தும் ஜலம் எப்பொழுதும் விழுந்து கொண்டிருக்கிறது. இதனால் இவ்வூருக்குத் திருவூறல் என்றும் பெயர் எய்தியது. ஊருக்குக் கிழக்கே ஒரு புறத்தில் கோயில் இருக்கின்றது. கோபுரம் மேற்கிலிருக்கின்றது. கோயிலுக்கு வடக்கில் நந்தி தீர்த்தம் இருக்கின்றது. நந்தி தீர்த்தத்துக்குக் கிழக்கே கல்லாயூ என்கிற விருத்தட்சரநதி ஓடுகின்றது. கோயிலுக்குள்ளும் ஒரு திருக்குளம் இருக்கின்றது. பிராகாரத்திற் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட முருகர் கோயில் இருக்கின்றது. சுரகுருவுக்கு இளையரான சம்வர்த்த முனிவர் பூசித்த ஸ்தலம். இவ்வூர் "கலிகை மாநகர்" எனப்படும்.

9. திருமாற்பேறு

இறைவன்: மணிகண்டேசுரர், மால்வணங்கீசுர்

இறைவி: அஞ்சனாட்சியம்மை, கருணைநாயகி

தீர்த்தம்: அரிதீர்த்தம்

மரம்: வில்வம்

பதிகம்: சம் 2, அப் 4.

காஞ்சிபுரத்துக்கு அடுத்த திருமாற்பேறு புகைவண்டி நிலையத்துக்குத் தென்மேற்கு 4 கி.மீ.

காஞ்சிபுரத்துக்கு வடமேற்கு 11 கி.மீ. ஸம்ஸ்கிருதத்தில் இந்த ஸ்தலத்துக்கு "ஹரிச்சக்ரபுரா" என்று பெயர். குபன் என்னும் அரசன் பொருட்டு மகாவிஷ்ணு ததிசிமுனிவருடன் போர் செய்யத் தமது சக்கிரம் அம்முநிவருடைய வஜ்ர சரீரத்திற் பட்டு வாய் மடிந்து விட்டபடியால், வேறு சக்கிரம் பெற யோசித்து, சலந்திரனைக் கொன்ற சக்கிரம் சிவ பெருமானிடத்திருப்பன அறிந்து அதைப் பெறும் பொருட்டு இந்த தலத்துக்கு வந்து சிவபெருமானைத் தினந்தோறும் ஆயிரம் தாமரை மலர்களை கொண்டு அர்ச்சித்து வந்தார். பரமசிவன் அவருடைய பக்தியின் திறத்தைக் காணும் பொருட்டு ஒருநாள் ஒரு மலரை மறைத்தருள, அவர் சஹஸ்ரநாம அர்ச்சனை செய்யும்போது ஒரு திருநாமத்துக் குத் தாமரை மலர் குறைவு படுதலைக் கண்டு வருந்தி, தமது கண்ணையேயிடந்து சாத்தி பூஜையை நிறைவேற்றினார். அப்பொழுது பரமசிவன் பிரசந்நமாகி அவருக்குச் "சுதரிசனம்" என்னும் சக்கிரத்தையும் கண்ணையிடந்து அர்ச்சித்த காரணத்தினாற் "பத்மாக்ஷன்" என்னும் பெயரையும் கொடுத்தருளி இந்தத் தலத்தில் ஒரு கணப் பொழுது வதித வருக்கும் முக்தியளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டபடி அநுக்கிரகமும் செய்து மறைந்தருளினார். சோமனும் பூஜித்த ஸ்தலம்.

"மன்னிமாலொடு சோமன் பணி செயு"
மன்று மாற் பேற் றடிகளை.

என்பது சம்பந்த சுவாமிகள் திருவாக்கு. நந்திகேசுரர் நின்ற திருக்கோலமாய்ச் சுவாமி சந்நிதியில் உட்பிரகாரத்தில் இருக்

கின்றார். ஸ்வாமிக்கு எதிரில் விஷ்ணுமூர்த்தி நின்ற திருக்கோலமாய்க் கூப்பிய கரத்துடன் இருக்கின்றார்.

"திருமறுமார்பன் காலற்செயல் பெற
அரனைப் பூசித்திருகர முகிழ்த்து நேர்நின்றேத்
திட முதுலாம்" திருவினை-அருச்சனைகள்.

திருக்குளம் கோயிலுக்கு வெளியில் இழைக் கோபுரத்துக்குப் பக்கத்திலும், ஸ்தல விருஷமாகிய வில்வம் தேவியார் சந்நிதிக்குப் போகும் வழியில் வெளிப் பிரகாரத்திலும் இருக்கின்றன. ஸ்வாமி தீண்டாத் திருமேனி. குவளை சாத்தி அபிசேகம் நடக்கின்றது.

திருமாற்பேறு புகைவண்டி நிலையம் பன்னார் என்னும் ஊரில் இருக்கின்றது. பன்னாருக்குத் தெற்கு 2½ கி.மீ. கோவிந்த வாடி அகரம் என்னும் ஊரில் வ்ருத்தட்சி நதியாகிய பழைய பாலாற்றுக்குத் தென்கரையில் தக்ஷினா மூர்த்தி கோயில் இருக்கின்றது.

10. திருக்கச்சி யேகம்பம்: காஞ்சிபுரம்

மூலவர் : ஏகாம்பரநாதர்

இறைவி : காமாட்சியம்மை, ஏலவார் குழலி.

தீர்த்தம் : சிவகங்கை, கப்பா நதி

மரம் : மா

பதிகம் : சம் 1, அப் 7, சுந் 1.

புகைவண்டி நிலையம். பஞ்சபூத ஸ்தலங்களிற் பிருதிவிஸ்தலம். உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்து முப்பத்திரண்டறமும் வளர்த்தருளிய ஸ்தலம். விகடசக்ர விநாயகர் மாவடி முருகர், நிலாத்துண்டப் பெருமாள் சந்நிதிகள் உள்ளன.

சிதம்பரம் முதலாகிய சிவஸ்தலங்டோறும் சென்று திருப்பணி செய்து, ஸ்தலத்துக்கு ஒவ்வொரு திருவெண்பா வீதம் ஷேத்திர வெண்பா பாடின ஐயடிகள் காடவர் கோனாயநர் அரசாட்சி செய்திருந்த ஸ்தலம். திருவொற்றியூர் எல்லையைக் கடந்தவுடன் இரண்டு கண்களின் பார்வையையும் இழந்த சுந்தரமூர்த்தி நாயனார் இடது கண் பார்வையைப் பெற்ற ஸ்தலம். திருக்குறிப்புத் தொண்ட நாயனாரும், சாக்கிய நாயனாரும் முக்தியடைந்த முதுநகர். முச்தி ஸ்தலங்கள் ஏழுனுள் ஒன்றாகிய விசேஷ ஸ்தலம். காமாக்ஷியம்மை ஆலயமாகிய காமகோட்டம் முருகக்கடவுள் ஆலயமாகிய குமரகோட்டம் விஷ்ணு ஆலயமாகிய அத்திகிரி முதலிய அநேக ஆலயங்கள் நிறைந்த மகாக்ஷேத்திரம் "நகரேஷு காஞ்சி" என்று நகரங்களுள் விசேஷமாகக் கொண்டாடப்படும். பெருமையையுடைய பெரும்பதி "அப்பதியே யதனுக் கிணையன்றிச் செப்பரிதாற் பிறசீர் கெழு காஞ்சி" கந்தபுரா நகர் இத்தலத்திற் சிவராத்திரி தரிசனம் விசேடம் "கடமாதம் கம்பம் பிரானைச் சில் நிசிகள் வணங்கில் கம்பரந்தாதி. அசு.

குமர கோட்டத்து அருச்சகர்-கச்சியப்ப சிவா சாரிய ஸ்வாமிகள் கந்தபுராணம் அரங்கேற்றிய அரும்பதி.

11 திருக்கச்சி மேற்றளி என்பது திருமேற்றளி

இறைவன்: திருமேற்றளி நாதர்

இறைவி: காமாட்சியம்மை

தீர்த்தம்: விஷ்ணு தீர்த்தம்

பதிகம்: *அப் 1, சுந் 1*

இந்த ஆலயம் காஞ்சிபுரத்தின் (10) மேற்குப் பாகமாகிய பிள்ளைப்பாளையத்திலிருக்கின்றது.

மகாவிஷ்ணு சிவ சாரூபம் பெறும் பொருட்டுத் தவஞ் செய்து கொண்டிருந்து திருஞான சம்பந்த ஸ்வாமிகளின் திருப்பதிகத்தாற் சிவஸ்வரூபம் பெற்ற ஸ்தலம். இரண்டு சந்நிதி. ஒன்று ஓதவுருகீசுரர் சந்நிதி. அவர் விஷ்ணு ரூபமாயிருந்தவர். திருஞான சம்பந்தர் பாடலாற் சிவலிங்க மாய் உருகினார். மற்றொன்று திருமேற்றளி யீசுரர் சந்நிதி. இந்த சந்நிதி மேற்கே நோக்கியது. இவ்விரண்டு சந்நிதிகளுக்குக் கிழக்கே வீதிமுனையிற் சம்பந்தர் கோயி லிருக்கின்றது. அதற்கு மேற்கில் அவர் பாடலை உற்றுக் கேட்ட முத்தீசுரர் கோயிலிருக்கின்றது.

12 திருக்கச்சி அநேக தங்காபதம்

இறைவன் : அநேகதங்காபதேசுரர் என்ற காவதநாதர்

இறைவி : காமாட்சியம்மை

தீர்த்தம் : தாணுதீர்த்தம்

பதிகம் : சுந் 1

காஞ்சிபுரத்தின் வடமேற்கில் கழனி வெளி மத்தியிலிருக் கின்றது. கணபதியும் குபேரனும் பூசித்த ஸ்தலம்.

''ஆனையுரித்த பிரான திடங்கலிக்கச்சி
யநேகதங் தாபதமே''

எனச் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் கூறியதற்கேற்ப ''ஆனையுரித் தான் வயல்'' எனப் பெயரிய வயல்கள் கோயிலுக்கு மேற்கே உள்ளன.

13 திரு ஓண காந்தன் தளி

இறைவன் : ஓண காந்தேசுவரர்

இறைவி : காமாட்சியம்மை

தீர்த்தம் : ஓணகாந்த தீர்த்தம்

பதிகம் : சுந் 1

இவ்வாலயம் (10) பத்து காஞ்சிபுரத்துக்கு மேற்கிலுள்ள சர்வ தீர்த்தத்துக்கு வடக்கில் ஏகாம்பரேஸ்வரராலயத்துக்கு மேற்கு $1\frac{1}{2}$ கி.மீ. இருக்கின்றது.

சுந்தரமூர்த்தி நாயனார் ''நெய்யும் பாலும்'' என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்தும் பொன்பெற்ற ஸ்தலம். வானாசுரனுடைய சேனைத் தலைவர்களாகிய ஓணன்காந்தன் என்னும் இரண்டு அசுரர்கள் பூசித்த ஸ்தலம். மூன்று சந்நிதிகள் உள்ளன ஓணன் பூசித்த மூர்த்தியும், காந்தன் பூசித்த மூர்த்தியும் வபால் ஓராலயத்திலும், சலந்தரன் பூசித்த மூர்த்தி தென்பால் வேனோராலயத்திலும் வீற்றிருக்கின்றார்கள்.

14 திருக்கச்சிநெறிக் காரைக்காடு

இறைவன்: காரைத்திரு நாகேசுவரர்

இறைவி: காமாட்சியம்மை

தீர்த்தம்: இந்திர தீர்த்தம், காரைதீர்த்தம்

பதிகம்: சம் 1

காஞ்சிபுரத்தின் (10) வடகிழக்கில் கொல்லை வெளியிலிருக்கின்றது. இது திருக்காலீசுரன் கோயில் என்று வழங்கப்படுகிறது. வேப்பங்குளம் என்ற நல்ல தண்ணீர்க் குளம் தெற்கே இருக்கின்றது. காரை மிகுந்திருத்தலினாற் காரைக்காடு என்னும் பெயர் எய்தியது. இந்திரன், புதன் பூசித்த ஸ்தலம். மேற்கு நோக்கிய சந்நிதி.

III திருக்கச்சி-அத்திகிரி

[அத்தியூர், காஞ்சிபுரம், ஸத்யவ்ரக்ஷேத்ரம்]

மூலவர்: வரதராஜன், பேரருளாளன், தேவாதிராஜன்,

தேவப் பெருமாள், நின்ற திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம்.

தாயார்: பெருந்தேவித் தாயார் [தனிக் கோவில்] மஹாதேவி.

தீர்த்தம்: வேகவதி நதி, அனந்தஸரஸ், சேஷ, பத்ம, அக்னி குசல, வராஹ, ப்ருஹ்ம முதலிய பல தீர்த்தங்கள்.

விமானம்: புண்யகோடி விமானம்

ப்ரத்யக்ஷம்: ப்ருகு, நாரதர், ஆதிசேஷன், ப்ரஹ்மா, கஜேந்திரன்.

வழி: செங்கற்பட்டு அரக்கோணம் புகைவண்டி பாதையில் இந்தக் காஞ்சிபுரம் புகைவண்டி நிலையம் உள்ளது.

சிறப்புக்கள் : இது கச்சிப்பதியாகும். அத்திகிரி எனவும் அழைக்கப்படும். அத்தியூர், காஞ்சிபுரம் ஸத்யவ்ரத சேத்திரம் எனப் பல பெயர்கள் வழங்குகின்றன.

ஸ்ரீ சுவாமி தேசிகன் அவதார தலம் ஸ்ரீரங்கத்தைப் போலவே உபய வேதாந்த வித்வான்களின் கால க்ஷேமங்களாலும் மற்றும் பல அறவழிகளாலும் வைணவம் வளர்க்கப் பட்ட திருத்தலமாகும்.

இங்குக் குளத்தில் மூழ்கி கிடக்கும் அத்திவரதர் என்ற அத்தி மரத்தாலான சிலை 40 வருடங்களுக்கு ஒருமுறை வெளியில் எடுக்கப்பட்டு 10 நாட்கள் சேவை செய்ய வைக்கப்படுகிறது. எம்பெருமானின் வைகாசி விசாக சேவை மிகவும் சிறப்புடையதாய் உள்ளது ஐராவதமே மலையுருவில் எம்பெருமானைத் தாங்கியதாகையால் இதற்கு அத்திகிரி (வேதகிரி) என்று பெயர் வந்தது எனப்படுகிறது. இங்கு பிரம்மா செய்த யாகத்திற்கு உகந்து எம்பெருமான் வரம் தந்ததினால் வரதராஜன் என்று அழைக்கப்படுகிறார்.

அயோத்தியாதிபதியான சகரனுடைய பிள்ளை அஸமஞ்சனும் அவன் மனைவியும் சாபத்தினால் பல்லிகள் ஆனார்கள். உபமன்னியு என்பவர் இந்தப் பல்லிகளுக்கு ஸ்ரீவரதனை சேவை செய்து வைத்ததனால் பல்லிகள் தங்களின் உண்மை உருப்பெற்றுச் சுவர்க்கம் புகுந்தன.

உபமன்யு முனிவ்ரின் சரணாகத ரக்ஷணம் உலகுக்கு நிரந்தரமாகப் பிரகாசிக்க, டல்லிகளின் சரீரங்கள் தன் பிரகாரத்தில் ஸ்வர்ண சிரசுகளுடன் இருக்கட்டும் என்றும், தன்னைச் சேவித்துப் பிரகாரத்தில் இருக்கும் இந்தப் பல்லிகளைத் தொடுவோரது சகல நோய்களும் நீங்கும் என்றும் ஸ்ரீவரதன் அருள்புரிந்தார். அதனால் நோயாளிகள் ஸ்ரீவரதனைச் சேவித்து, பல்லிகளைத் தொட்டு நோய் நீங்கி நலம் பெறுகிறார்கள்.

முன்பு ஒரு காலத்தில் பிரம்மாவினால் இங்கு யாகம் செய்யப்பட்டதால் இது யாகம் செய்து பூஜிக்கப்பட்டபடியால் காஞ்சி எனப் பெயர் பெற்றது. (க-பிரமனால், அஞ்சிதம் - பூஜிக்கப்பட்டது) ஆளவந்தார், திருக்கச்சி நம்பி, ஸ்ரீ ராமானுஜர், ஆழ்வார், ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமணவாள மாமுனிகள் மங்களா சாஸனம் செய்த இடம்.

மங்களா சாஸனம் :

பூதத்தாழ்வார்
திருமங்கையாழ்வார் } இரண்டாம் திருவந்தாதி 95-ம் பாசுரம்

4 அஷ்டபுயகரம் (காஞ்சிபுரம்)

மூலவர் : ஆதிகேசவப் பெருமாள், கஜேந்த்ர வரதன், சக்ர தரர் நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : அலர்மேல் மங்கை, பத்மாஸனி

தீர்த்தம் : கஜேந்திர புஷ்கரிணி

விமானம் : சுகநாக்ருதி (வ்யோமாகார விமானம்)
சக்ராக்ருதி விமானம்

ப்ரத்யட்சம் : கஜேந்த்ரன்

காஞ்சியில் வரதராஜர் சந்நிதியில் இருந்து 1½ கி.மீ. தொலைவில் மேற்கே அமைந்தது. ஹாட்சன் பேட்டை (தேரடிக்கு) அண்மையில் உள்ளது.

சிறப்புக்கள் : மூலவருக்கு 8 திருக்கரங்களுடன் 8 ஆயுதங்கள் உள்ளன. வலக்கரங்கள் நான்கில் சக்கரம், கத்தி, புஷ்பம், அம்பு ஆகியவைகளும், இடக்கரம் திருக்கைகளில் சங்கு, வில், கேடயம், கதை ஆகியவைகளும் ஏந்தியபடி சேவை தருகிறார்.

உத்ஸவருக்கு நான்கு புஜங்களே உள்ளன. கதையும் வேலும் உண்டு. நருசிம்மனைக் கொல்ல வந்த சரபம், அஷ்டபுஜத்தானைக் கண்டு பயந்து விஷ்ணுவைச் சரணடைந்தது. பகவான் ஆணைப்படி யாக சாலைக்கு வாயு மூலையில் சரபேசன் என்ற பெயருடன் சிவன் யாகத்தைக் காப்பதாக ஐதீஹம்.

ஒரு யானை ஸூக்ருத விசேஷத்தினால் அஷ்ட புஜக்குளத்தில் தாமரைப் பூ பறித்து எம்பெருமானை ஆராதித்து வரும் பொழுது ஒருநாள் யானையின் கால்களை முதலை பிடித்துக் கொண்டதும் யானை ஆதிமூலமே என்று அபயம் இட, பகவான் தமது சுதர்சனத்தால் அந்த முதலையைக் கொன்று யானையைக் (கஜேந்திரன்) காத்த புண்ணியதலம். ஸ்ரீசுவாமி தேசிகனும் மணவாள மாமுனிகளும் மங்களா சாஸனம் செய்த இடம்.

மங்களா சாஸனம்

பேயாழ்வார்	மூன்றாந் திருவந்தாதி 99ம் பாசுரம்
திருமங்கையாழ்வார்	பெரிய திருமொழி 2. 8ஆம் பதிகம்.

5 திருத்தண்கா

மூலவர்: தீபப்ரகாசர், விளக்கொளிப் பெருமாள், திவ்யப்ர காசர், நின்ற திருக்கோலம், மேற்கே திருமுக மண் டலம்.

தாயார்: மரகதவல்லி

தீர்த்தம்: ஸரஸ்வதி தீர்த்தம்

விமானம்: ஸ்ரீகர விமானம்

ப்ரத்யக்ஷம்: ஸரஸ்வதி

வழி: காஞ்சியில் அஷ்டபுயகரத்திலிருந்து ½ கி.மீ. மேற்கே உள்ளது.

சிறப்புக்கள்: ஸ்ரீ பாஷ்யகார சித்தாந்த சாம்ராஜ்ய பட்டாபிஷிக்தரான சுவாமி தேசிகனின் திரு அவதார ஸ்தலம். இங்கு இவரது சந்நிதியும் இருக்கிறது. பகவான் பிரம்மாதி தேவர்களைக் காப்பாற்ற ஒளிவடிவமாக ஆவிர் பவித்த ஸ்தலம்.

தெற்கு நோக்கி வேதாந்த தேசிகன் வைபவம் முழுவதும் சித்திர ரூபமாக வரையப்பட்டு உள்ளது. சந்நிதியிலுள்ள தேசிகன் ஞான முத்திரையுடன் எழுந்தருளியிருக்கிறார். தேசிகனுடைய குமாரரான நயின வரதசார்யார் பிரதிஷ்டை செய்த திருமேனி பக்கத்தில் தேசிகனுடைய திருவாரதனப் பெருமாளான ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் எழுந்தருளியுள்ளார். மற்றொரு சந்நிதியில் தீபப்பிரகாசர் எழுந்தருளியுள்ளார். பிரம்மா செய்யும் யாகத்தைக் கெடுக்க வந்த அசுரர்கள் உலகம் முழுவதையும் இருட்டாக்கிவிட எம்பெருமான் ஒரு பேரொளியாய்த் தோன்றி இருளைப் போக்கியதால் தீபப் பிரகாசர் என்றும் விளக்கொளி என்றும் திருநாமம் ஏற்பட்ட தாகத் தலபுராணம்.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகம் 14

6 திருவேளுக்கை (காஞ்சிபுரம்)

மூலவர் : அழகிய சிங்கர், ந்ருஸிம்ஹர், முகுந்தநாயகன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : வேளுக்கைவல்லி, அம்ருதவல்லி

தீர்த்தம் : கனக ஸரஸ், ஹேமஸரஸ்

விமானம் : கனக விமானம்

ப்ரத்யக்ஷம் : ப்ருகுமுனி.

வழி : காஞ்சிபுரத்திலேயே, அஷ்டபுயகரத்திலிருந்து 1கி.மீ. தென் மேற்குத் திசையில் உள்ளது.

சிறப்புக்கள் : ந்ருஸிம்ஹன் ஹஸ்தி சைல குகையிலிருந்த படியே வேறொரு நரசிம்ம வடிவம் கொண்டு மேற்குத் திசையில் அசுரர்களைத் துரத்திக் கொண்டு போய் அசுரர்கள் மறுபடி வராதபடி செய்ய அங்கேயே யோக நரஸிம்மராக யிருக்கிறார்.

மங்களா சாஸனம் :

பேயாழ்வார் மூன்றாந் திருவந்தாதி

திருவெஃகா (காஞ்சிபுரம்)

மூலவர் : யதோக்தகாரி, சொன்ன வண்ணம் செய்த பெருமாள். வேகாஸேது, புஜங்க சயனம், மேற்குத் திருமுக மண்டலம்.

தாயார் : கோமளவல்லி நாச்சியார்

தீர்த்தம் : பொய்கைப் புஷ்கரிணி

விமானம் : வேதஸார விமானம்

ப்ரத்யட்சம் : ப்ரஹ்மா, பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், கணிகண்ணன்

இது காஞ்சிப்புறத்திலுள்ள திவ்ய தேசம் அஷ்டபுயகரத்திலிருந்து சுமார் $1\frac{1}{2}$ கி.மீ. தூரத்திலுள்ளது.

சிறப்புக்கள்: கணிகண்ணன் என்ற சீடனுக்காக ஊரை விட்டே திருமழிசையாழ்வார் பகவானை அழைக்க பாம்பணைச் சுருட்டிக்கொண்டு புறப்பட்டார். பின்னர் அவர் அங்கேயே இருக்கச் சொல்லி வேண்டியபோது பாம்பணையை விரித்துப் படுத்ததால் இவருக்குச் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்று பெயர். மற்ற திருக்கோயில்களைப் போல் அல்லாமல் இங்குப் பகவான் வலமிருந்து இடமாகச் சயனித்துள்ளார். பொய்கை புஷ்கரிணியில் முதல் ஆழ்வார்களுள் ஒருவரான பொய்கையாழ்வார் ஒரு பொற்றாமரையில் அவதரித்தார். அசுரர்கள் வழிப்பாட்டிற்கிணங்க ப்ருஹ்மா செய்யும் யாகத்தை அழிக்க சினங்கொண்டு வேகவதி ஆறாக ஓடிவர, தேவர்களும் ப்ருஹ்மாவும் விஷ்ணுவைச் சரணமடைய, வேகவதியாற்றின் வெள்ளத்தைத் தடுக்க, பெருமாள் அணையென குறுக்கே சயனித்த வரலாறு பேசப்படுகிறது.

மங்களா சாஸனம்:

பொய்கையாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார்	முதல் திருவந்தாதி 77, மூன்றாந் திருவந்தாதி 76, திருச்சந்த விருத்தம் 63, திருவிருத்தம் 26, பெரிய திருமொழி 10, 1, 7.

திருநீரகம் (காஞ்சிபுரம்)

மூலவர் : இல்லை

உத்ஸவர் : ஜகதீச்வரர், நின்ற திருக்கோலம், கிழக்கே திரு முக மண்டலம்

தாயார் : இலமங்கைவல்லி

தீர்த்தம் : அக்ரூர தீர்த்தம்

விமானம்: ஜகதீச்வர விமானம்

ப்ரத்யக்ஷம் : அக்ரூரர்

பெரிய காஞ்சிபுரத்தில் திரு ஊரகம் (உலகளந்தப் பெரு மாள்) கோவிலிலேயே உள்ளது.

சிறப்புக்கள் : உலகளந்தப் பெருமாள் கோவிலின் வடபுறத் துப் ப்ரகாரத்தில் மிகச் சிறிய சந்நிதியில் உத்ஸவர் மட்டுமே எழுந்தருளியிருக்கிறார்.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகம் 8

9 திரு ஊரகம் (காஞ்சிபுரம்)

மூலவர் : திருவிக்ரமன், உலகளந்தப் பெருமாள், நின்ற திருக் கோலம் (மேற்கே திருமுக மண்டலம்)

உத்ஸவர் : பேரகத்தான்

தாயார் : அமுதவல்லி நாச்சியார், அம்தவல்லி

தீர்த்தம் : நாக தீர்த்தம் (சேஷ தீர்த்தம்)

விமானம் : ஸாரஸ்ரீகர விமானம்

ப்ரத்யக்ஷம் : ஆதிசேஷன்

வழி : பெரிய காஞ்சிபுரத்தில் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது.

சிறப்புக்கள்: இவ்விடம் ஊரகம் தவிர நீரகம், காரகம், கார் வானம் ஆகிய 3 திவ்விய தேசங்களின் பெருமாள்கள்

எழுந்தருளியிருக்கிறார். பலிசக்கரவர்த்தி பகவானைப் பணிந்து பகவான் திருவிக்ரமாவதாரம் செய்தபொழுது பகவான் திருவடியின்கீழ் அகப்பட்டுக் கொண்டபடியால் திருவிக்ரம கோலத்தை வணங்க முடியவில்லை. அதனால் திருவிக்ரம கோலத்தை வணங்க வேண்டும் என்கிற வழிப் பாட்டிற்கிணங்க அத்திருக்கோயிலில் அந்த அவதாரத்தை எடுத்துக் காண்பித்ததாக உலகளந்தப் பெருமாள் கோயில் வரலாறு. உலகளந்தப் பெருமாள், ஊரகம் இரண்டும் சேர்ந்து ஒரே திவ்விய தேசமாகக் கருதப்படுகிறது. மிகப் பெரிய உருவத்தை நிமிர்ந்து வணங்க முடியாமல் பக்கத்தில் ஒரு சிறிய சந்நிதியில் ஆதிசேஷனாய்த் திருக்கோலம் கொண்டு இருப்பதாக வரலாறு.

மங்களா சாஸனம் :

திருமழிசையாழ்வார்	திருச்சந்த விருத்தகம் 63
திருமங்கையாழ்வார்	திருநெடுந்தாண்டகம் 8

10 திருக்காரகம் (காஞ்சிபுரம்)

மூலவர் : கருணாகரப் பெருமாள் நின்ற திருக்கோலம் தெற்கே திருமுக மண்டலம்

தாயார் : பத்மாமணி நாச்சியார் (ராமாமணி நாச்சியார்)

தீர்த்தம் : அக்ராய தீர்த்தம்

விமானம் : வாமன விமானம், ரம்ய விமானம்

ப்ரத்யக்ஷம் : கார் ஹமஹரிஷி

பெரிய காஞ்சியின் உலகளந்தப் பெருமாள் கோவில் ப்ரகாரத்திலேயே உள்ளது.

குறிப்பு: இந்த திவ்விய தேசம் இருந்த இடம், அதன் தீர்த்தம் இருக்கும் இடம் முதலிய ஒரு செய்தியும் தெரியவில்லை.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: திருநெடுந்தாண்டகம்

11 திருக்கார் வானம் (காஞ்சிபுரம்)

மூலவர்: கள்வர், நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்

தாயார்: கமலவல்லி (தாமரையாள்)

தீர்த்தம்; கௌரீ தடாகம் (தராதர தீர்த்தம்)

விமானம்: புஷ்கல விமானம்

ப்ரத்யக்ஷம்: கௌரி (பார்வதி)

பெரிய காஞ்சியில் உலகளந்தப் பெருமாள் கோவில் சுற்றுப் பிரகாரத்திலேயே ஒரு சந்நிதியாக உள்ளது.

குறிப்பு: இந்தத் திவ்விய தேசம், தீர்த்தம். இவை ஏற்கனவே இருந்த இடம் தெரியவில்லை.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார், திருநெடுந்தாண்டகம்

12 திருக்கள்வனூர் (காஞ்சிபுரம்)

மூலவர்: ஆதிவராஹப் பெருமாள், நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார்: அஞ்சிலைவல்லி நாச்சியார்

தீர்த்தம்: நித்ய புஷ்கரிணி

விமானம்: வாமன விமானம்

ப்ரத்யக்ஷம்: அச்வத்த நாராயணன்

பெரிய காஞ்சிபுரத்தில் காமாஷி அம்மன் கோவிலுக்குள், கர்ப்பக்ரஹத்துக்கு வலது பக்கத்தில் இருக்கிறது.

சிறப்புக்கள்: ஒரு காலத்தில் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் விவாதம் ஏற்பட,சிவபெருமான் சினம் கொண்டு பார்வதி தேவியைச் சபிக்கவும் பார்வதி சிவனைப் பணிந்து அருள் வேண்ட, சிவன் ஆணைப்படி ஒரு காலால் நின்று வாமனரை நோக்கித் தவம் செய்து காமாட்சி என்று பெயர் பெற்றுச் சிவனை மணந்ததாக வரலாறு.

ஸ்ரீமன் நாராயணன் காமக் கோட்டத்தில் பஞ்ச தீர்த்தக்கரையில் லட்சுமி, பார்வதியுடன் ஸல்லாபம் செய்வதை ஒளிந்து கேட்டபடியால் பார்வதி சிவபெருமானுக்குக் கள்வன் என்று பெயர் சூட்டினாள். பார்வதியின் வழிபாட்டிற்கிணங்க, சிவபெருமான் பூதத்தின் மேல் நின்று இருந்து கிடந்தபடியால், நின்றான், இருந்தான், கிடந்தான் என்ற சந்நிதிகள் ஏற்பட்டன.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார். திருநெடுந்தாண்டகம்

13 திருப்பவள வண்ணம் (காஞ்சிபுரம்)

மூலவர் : பவள வண்ணன், நின்ற திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம்

தாயார் : பவளவல்லி (தனிக்கோயில் நாச்சியார்)

தீர்த்தம் : சக்ர தீர்த்தம்

விமானம் : ப்ரவாள விமானம்

ப்ரத்யக்ஷம் : அச்விநி தேவதை, பார்வதி

பெரிய காஞ்சிபுரத்தில் புகைவண்டி நிலையத்திற்குப் பக்கத்தில் உள்ளது. இங்கே பவளவண்ணன்,பச்சைவண்ணன் சந்நிதிகள் உள்ளன. பக்தர்கள் இரண்டையும் ஒரே ஸ்தலமாகக் கருதி வழிபடுவர். இரண்டும் எதிரெதிரே உள்ளன.

சிறப்புக்கள் : இந்தக் கோயில்கள் கங்கை கொண்டான் மண்டபத்திலிருந்து கிழக்காகச் செல்லும் செங்கழு நீரோடைத் தெருவின் இடையில் வலதுபுறம் செல்லும் சாலையில் எதிர்எதிரே உள்ளன. பச்சை வண்ணர் ஆதி கேசவன் மீது வீற்றிருந்த திருக்கோலத்தில் பிரமபத நாத னாக எழுந்தருளி உள்ளார்.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்: திருநெடுந்தாண்டகம் 9

பச்சைவண்ணன் (காஞ்சி)

[அபிமான ஸ்தலம்]

பெருமாள் : பச்சை வர்ணன், நின்ற திருக்கோலம்.

காஞ்சிக்குக் கிழக்கே உள்ளது, ப்ருகு மஹரிஷி யாகம் செய்து மஹாலஷ்மி புத்திரியாக அவதரித்துப் பெருந்தேவி என்ற பெயர் கொண்டு வரதராப் பெருமாளை விவாஹம்ஜ செய்து கொண்டதாக ஐதீஹம்.

14 திருப்பரமேச்சுர விண்ணகரம்

(காஞ்சிபுரம்-வைகுண்ட பெருமாள் கோவில்)

மூலவர் , பரமபதநாதன், வைகுந்தநாதன், வீற்றிருந்த திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : வைகுந்தவல்லி (தனிக்கோவில் நாச்சியார்)

தீர்த்தம் : ஐரம்மத தீர்த்தம்

விமானம் : முகுந்த விமானம்

ப்ரத்யக்ஷம் : பல்லவ ராஜன்

வழி : பெரிய காஞ்சிபுரத்தில் புகைவண்டி நிலையத்தி லிருந்து 1/4 கி.மீ, தொலைவில் உள்ளது. பேருந்து நிலையத்

திற்குப் பின்புறம் உள்ள கிழக்கு ராஜவீதியில் வலதுபுறம் செல்லும் சாலையில் உள்ளது.

சிறப்புக்கள்: விமானம் மூன்று அடுக்காக அஷ்டாங்க விமானமாக உள்ளது. கீழ் அடுக்கில் பெருமாள் வீற்றிருந்த நிலையிலும், மத்தியில் ஸ்ரீதேவி பூதேவியுடன் ரங்கநாதன் சயனத் திருக்கோலத்திலும் மேல் அடுக்கில் நின்ற திருக்கோலத்திலும் உள்ளனர். விதர்ப்பதேசத்தை அரசாண்ட விரோசனனுக்கு மகப்பேறு இல்லாமல் காஞ்சியில் உள்ள கைலாச நாதரைப் பூஜை செய்ய, அவருடைய அருளால் விஷ்ணுவின் த்வாரபாலர்கள் இரண்டு புதல்வர்களாகப் பல்லவன், வில்லவன் என்பவர்கள் விஷ்ணுப் பக்தர்களாகப் பிறக்க புத்திரர்கள் புண்ணியகோடி விமானத்துக்கு வாயு மூலையில் அச்வமேதயாகம் செய்ய ஸ்ரீமன் நாராயணன் அவர்கட்கு ஸ்ரீ வைகுண்ட நாதனாகக் காட்சியளித்தார். அத்திருக்கோலத்துடன் இன்றும் காட்சி அளிக்கிறார்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 2, 9 பதிகம்.

15 திரு நிலாத்திங்கள் துண்டம்

மூலவர் : நிலாத்திங்கள் துண்டத்தான், சந்த்ர சூடப் பெருமாள், நின்ற திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம்

தாயார் : நேர் ஒருவரில்லா வல்லி. நிலாத்திங்கள் துண்டத் தாயார்

தீர்த்தம் : சந்த்ர புஷ்கரிணி

விமானம் : புருஷஸூக்த விமானம் (ஸூர்ய விமானம்)

ப்ரத்யக்ஷம் : சிவன்

பெரிய காஞ்சிபுரம் ஏகாம்பரேச்வரர் திருக்கோவிலில் உட்பிரகாரத்தில் சிறிய சந்நிதியாக உள்ளது.

சிறப்புக்கள் : ஒரு மாமரத்தின் அடியில் பார்வதி தவம் செய்ததாகவும் பார்வதியின் தவத்தைச் சோதிக்க சிவன் மாமரத்தை எரிக்க, பார்வதி வாமனனை வழிபாடு செய்ய வாமனர் சங்க சக்ரகதாபாணியாக அம்ருத கிரணங்கள் கொண்டு மாமரத்தைத் தழைக்கச் செய்து பார்வதியும் தாபம் தீர்ந்து தவம் செய்ததாகவும் பார்வதியின் தாபத் தைத் துண்டித்தபடியால் பெருமாளுக்கு நிலாத்திங்கள் துண்டத்தான் என்ற பெயர் உண்டாயிற்றாம்.

சிவன் தன் தலையிலுள்ள கங்கையைப் பார்வதியின் தவத்தைக் கெடுக்க ஏவ கங்கையும் வேகமாக வர பார்வதி தன் தமக்கை என்று கருதி வணங்கியும் சட்டை செய்யாத தால் மணலினால் செய்த லிங்கம் கரையாமல் இருக்க பார்வதி அதை அணைத்துக் கொள்ள சிவன் சந்துஷ்டனாகி அந்த லிங்கத்தில் ஆவிர் பவித்ததாக வரலாறு. பார்வதி யின் வேண்டுகோளின்படி வாமனர் அவள் பக்கத்தில் இன்னும் இருப்பதாக வரலாறு.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகம் 8

16 திருப்பாடகம்

மூலவர்: பாண்டவ தூதர், வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: ருக்மணி, ஸத்யபாமா

தீர்த்தம்: மத்ஸய தீர்த்தம்

விமானம்: பத்ர விமானம், வேத கோடி விமானம்

ப்ரத்யக்ஷம்: ஜனமேஜயன், ஹாரீத முனி

கங்கை கொண்டான் மண்டபத்தின் அருகில் இந்த சந்நிதி உள்ளது.

சிறப்புக்கள்: ஜனமேஜய மன்னன் வைசம்பாயனரிடம் பாரதக் கதையைக் கேட்டு, கிருஷ்ணன் பாண்டவர்கட்காக ஹஸ்தினாபுரம் தூது சென்ற விச்வரூபம் எடுத்ததை கேள்விப்பட்டு அதை நேரில் வணங்க விரும்பி, காஞ்சி வந்து அச்வமேதயாகம் செய்து பூர்ணாஹுதி ஆனதும் பகவான் பாண்டவதூத வேஷத்துடன் ஆவிர்பவித்ததாக வரலாறு.

இங்கு அருளாளப் பெருமாள் எம்பெருமானார் எழுந்தருளி இருக்கிறார். மணவாளமாமுனிகள் மங்களா சாஸனம்.

மங்களா சாஸனம் :

பூதத்தாழ்வார்	இரண்டாம் திருவந்தாதி 94
பேயாழ்வார்	மூன்றாம் திருவந்தாதி 30
திருமழிசையாழ்வார்	திருச்சந்த விருத்தம் 63
திருமங்கையாழ்வார்	பெரிய திருமொழி 6,10,4

17 திருப்புட்குழி

மூலவர் : விஜயராகவப் பெருமாள், வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : மரகதவல்லி நாச்சியார் (வருத்தபயறு முளைக்க வைத்த நாயகி)

தீர்த்தம் : ஜடாயு தீர்த்தம்

விமானம் : விஜயகோடி விமானம் (வீரகோடி விமானம்)

ப்ரத்யக்ஷம் : ஜடாயு

வழி : காஞ்சிபுரத்திலிருந்து 11 கி.மீ. மேற்கே சென்னை-வேலூர் சாலையில், பாலுசெட்டி சத்திரம் என்ற ஊரிலிருந்து இடதுபுறம் ½ கி.மீ. தூரத்தில் இருக்கிறது.

சிறப்புக்கள் : பிள்ளைப்பேறு வேண்டும் பெண்கள், கொஞ்சம் பயிற்றை மடைப்பள்ளியில் கொடுத்து வறுத்து நனைத்து மடியில் கட்டிக் கொண்டு தூங்குவார்கள். வருத்த பயிர் முளைத்தால், பிள்ளைப்பேறு உண்டு என்று பொருள். இந்தத் திருக்கோயிலில் சீதையைத் தேடப் போனபோது இராமன் சிறிதுகாலம் தங்கியிருந்தான். அது சமயம் ஜடாயுவுக்குத் தர்ப்பணம் செய்து மேலுலகம் அளிக்க ஜடாயு தீர்த்தத்தை உண்டாக்கியதாகவும் எனவே இத்தலத்திற்குத் திருப்புட்குழி என்று பெயர் ஏற்பட்டதாகவும் வரலாறு.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 72,78

கூரம்

மூலவர் : ஆதிகேசவ பெருமாள்

தாயார் : பங்கஜவல்லி தாயார், கூரேசவல்லி தாயார்

கூரத்தாழ்வார் அவதார ஸ்தலம்

வழி : காஞ்சிபுரத்திலிருந்து 10 கிலோ மீட்டர்

15 குரங்கணின் முட்டம்

இறைவன்: வாலீசுரர்

இறைவி: இறையார் வளையம்மை

தீர்த்தம்: வாலிதீர்த்தம், நளகங்கை

பதிகம்: சம்பந்தர்-1

இது காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்துக்குத் தெற்கே 9 கி.மீ. பாலாற்றின் தென் கரைக்கப்பால் இருக்கிறது. தூசிக்குத் தென் கிழக்கில் $1\frac{1}{2}$ கி.மீ. குரங்கு (வாலி) அணில் (முட்டம்-காக்கை) இவைகள் பூசித்த ஸ்தலம்.

திருவாயிலிற் குரங்கு பூசித்தது. வட பாலும் அணிலுங் காக்கையும் பூஜித்தது. தென் பாலுமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. காக்கை மடுகோயிலைச் சுற்றியுள்ளது.

16 திருமாகறல்

இறைவன்: அடைக்கலங்காத்த நாதர் என்ற அகத்தீசுரர்

இறைவி : திரிபுவனேஸ்வரி,

தீர்த்தம் : அக்கினி தீர்த்தம், நவ்விதீர்த்தம்

பதிகம் : சம்பந்தர்-1

காஞ்சிபுரத்துச்குத் தெற்கு 16 கி,மீ. வழியில் வேகவதியாற்றையும் பாலாற்றையும் கடக்க வேண்டும். இந்த ஸ்தலத்துக்குத் தெற்கு ½ கி.மீ சேயாறு ஓடுகின்றது. அதன் தென் கரையிற் கடம்பர் கோயிலும், அப்பால் 11 கி.மீ. உத்திரன் மேருரும் இருக்கின்றது. விநாயகர் பொய்யா விநாயகர் தேவேந்திரன் பூஜித்த ஸ்தலம்.

ராஜேந்திர சோழனுக்கு ஸ்வாமி பொன்னுடும்பாகத் தோன்றி, அவன் துரத்துங்கால் ஓடிப்புற்றில் ஒளிந்து வெளிப்பட்டருளினரென்பர். சுவாமி புற்றிலிருந்து உதயம், உடும்பு தழுவிக் கொண்டிருக்கின்றது. இத்தலத்திற் சோமவார தரிசனம் விடுசட்டம் பிள்ளைவரம் வேண்டுபவர் அங்கப் பிரதக்ஷணப் செய்கிறார்கள். அந்தப் பிரகாரம் நல்ல ஸத்தியில் இருக்கின்றது. அக்கினி மூலையில் அக்கினி தீர்த்தம் இருக்கின்றது. காஞ்சியிற் 1 சர்வதீர்த்த ஸ்நாநம், சஹஸ்ரேஸ்வரதர் தர்சனம், யமலோக பயம் நாஸ்தி-சிவலோக நிரந்தரம் என்பது போல இங்கும் "அக்நிதீர்த்த ஸ்நாநம் அகஸ்த்யேச்வர தீர்த்தம் யமலோகே பயம் நாஸ்திசிவலோகே நிரந்தரம்" என்னும் வழக்குள்ளது.

17 வண் பார்த்தான் பனங்காட்டூர் (திருப்பனங்காடு)

இறைவன்: பனங்காட்டுநாதர்

இறைவி: அமிர்தவல்லியம்மை

தீர்த்தம்: சடாகங்கை

மரம்: பனை

பதிகம்: சுந் 1

காஞ்சிபுரத்துக்குத் தெற்கு 6½ கி.மீ. சென்று ஐயன் குளம் என்னும் கிராமத்தை அடைந்து அங்கிருந்து மேற்கு ஆற்காட்டுக்குப் போகும் வழியில் (ஆற்காடு) 5½ கி.மீ. சென்று அங்கு வடக்கே சென்று 1 கி.மீ. சென்றால் இந்தத் தலத்தை அடையலாம்.

வழியில் வேகவதி ஆற்றையும், பாலாற்றையும் கடக்க வேண்டும். வன்பாக்கம் கிராமம் அருகில் 2 கி.மீ. இருக்கின்றது.

ஆலயத்திற் சந்நிதிகளிரண்டு தெற்கிலிருப்பது அகஸ்தியர் பூஜித்தது.

சுவாமி : தாலபுரீசுரர், தேவியார், ஸ்தூல கோமளபதாம்பாள், அமிர்த வள்ளியம்மை வடக்கிலிருப்பது புலஸ்தியர் பூஜித்தது.

சுவாமி : கிருபாநாதேசுரர், தேவியார், கிருபாநாயகி, ஜடாகங்கை என்னும் தீர்த்தத்தின் கோயிலுள் எதிரொலி கேட்கின்றது. இரண்டு பனைமரங்கள் இருக்கின்றன.

18 திருஓத்தூர்

இறைவன்: வேதநாதேசுரர்

இறைவி: இளமுலை நாயகி

தீர்த்தம்: கலியாண கோடி (குளம்)

பதிகம்: சம் 1

காஞ்சிபுரத்துக்குத் தென்மேற்கு 31 கி.மீ. அங்கிருந்து 5 கி.மீ. பாலாற்றைக் கடக்கவேண்டும். நல்லவழி. மோட்டார் பேருந்து வசதியுண்டு.

கோயிலுக்கு அருகிற் சேயாறு ஓடுகின்றது. கோயில் பெரியது. மதில் உயரமானது. வெளிப் பிரகாரத்தில் 4,5 பனைமரங்கள் உள்ளன. நந்திக் கிழக்குப் பார்க்கிறது. கலியாண கோடி தீர்த்தம். திருக்குளம் கோயிலுள் இருக்கின்றது. வடக்குப் பிராகாரத்தில் பஞ்சபூதலிங்கள் உள்ளன.

இஃது ஆண்பனை பெண்பனையான ஸ்தலம் இதனைக் ''குரும்பை யாண்பனை''யின் குலையோத்தூர் என்னுந் திருஞான சம்பந்த ஸ்வாமிகள் தேவாரத்தின் திருக்கடைக் காப்பால் அறிக. கல்லினால் ஒரு பனைமரம் கோயிலுள் இருக்கின்றது. அதுபாதி ஆணும், பாதி பெண்ணுமாயிருக்கின்றது சிவபெருமான் வேதத்தின் பொருளை, முனிவர்களுக்குந் தேவர்களுக்கும் அருளிச் செய்த ஸ்தலம். ஆதலால் திருஓத்தூர் என்னும் பெயர் பெற்றது.

மதுர மங்கலம்

பெருமாள்: வைகுண்டநாதன்

தாயார்: கமலவல்லி

எம்பார்: அவதார ஸ்தலம்

வழி: காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீபெரும்புதூருக்கு வரும் வழியில் சுங்குவார் சத்திரம் இருக்கிறது. அங்கிருந்து 8 கி.மீ. தூரம்.

ஸ்ரீவைஷ்ணவ அபிமான ஸ்தலம்

ஸ்ரீபெரும்புதூர் (சென்னை-காஞ்சி மார்க்கம்)

பெருமாள் : ஆதிகேசவப் பெருமாள், கிழக்கே நின்ற திருக்கோலம்

தாயார் : எதிராஜவல்லி

தீர்த்தம் : எம்பெருமானார் ஏரி

விசேஷம் : ராமாநுஜர் அவதாரஸ்தலம்

திருமழிசை

பெருமாள் : ஜெகந்நாதன், கிழக்கே நின்ற திருக்கோலம்
தாயார் : திருமங்கை வல்லி

விசேஷம் : திருமழிசையாழ்வார் அவதாரஸ்தலம்

வழி : சென்னை பூந்தமல்லி திருவள்ளூர் பஸ் வழி

XVIII திருநின்றவூர் (தின்னனூர்)

மூலவர் : பக்தவத்ஸலப் பெருமாள், பத்தராவிசப் பெருமாள், நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : ஸீதாவல்லி (என்னைப் பெற்ற தாயார்)

தீர்த்தம் : வருண புஷ்கரிணி, விருத்தக்ஷீர நதி

விமானம் : ஸ்ரீநிவாஸ (உத்பல) விமானம்

ப்ரத்யக்ஷம் : வருணன்

வழி : சென்னை-அரக்கோணம் புகைவண்டிப் பாதையில் தின்னனூர் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார்

1½ கி.மீ. தெற்கே சென்று கோவிலை அடைய வேண்டும். சென்னையில் இருந்து இவ்வூருக்குப் பேருந்து வசதிகளும் உண்டு. சென்னை திருவள்ளூர் பேருந்து மார்க்கம்.

சிறப்புக்கள் : மங்களா சாஸனம் செய்யாமல் சென்றுவிட்ட திருமங்கையாழ்வாரைப் பிராட்டியார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எம்பெருமான் மாவல்லிபுரம் சென்று தளக்ருவுருபாசரம் பிரசாதிக்கும்படி வேண்டி ஆள்வாரும் பாடி அருளிய இடம்.

நசரத் பேட்டை

மூலவர் : பச்சைவண்ணன்

தாயார் : அமிர்தவல்லி

முதலியாண்டான் அவதார ஸ்தலம்

வழி : பூந்தமல்லியிலிருந்து 5 கி.மீ. தூரம்

பூந்தமல்லி

இறைவன் : வரதராஜப் பெருமாள்

இறைவி : புஷ்பவல்லித் தாயார்

தீர்த்தம் : கருடபுஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : கஜேந்திரர்

வழி : திருவேற்காட்டிலிருந்து !9 கி.மீ. சென்னையிலிருந்து 22 கி.மீ. பேருந்து வழி

விசேஷம் : திருக்கச்சி நம்பி அவதாரம்

பிரதி வருஷம் மாசி மாதம் 21 ம் தேதி முதல் மூன்று நாட்களுக்குத் தினமும் காலை 6½ மணிக்குள் சூரிய பூசை நடக்கும்

19 திருவேற்காடு

இறைவன் : வேதபுரீசுரர், வேற்காட்டீசர்

இறைவி : வேற்கண்ணியம்மை, பாலாம்பிகை

தீர்த்தம் : வேற்கண்ணி வேலாயுத தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : சென்னைப் பட்டினத்துக்கு மேற்கு 21 கி.மீ. ஆவடி ஸ்டேஷனிலிறங்கி அங்கிருந்து தெற்கே பூவிருந்தவல்லிக்குப் போகும் வழியில் 6 கி.மீ சென்று, அங்கே கிழக்கே உள்ள "காடு வெட்டியாறு" என்று இப்பொழுது வழங்கும் பழைய பாலாற்றைக் கடந்தால் இந்தஸ்தலம் இருக்கின்றது. இதற்குத் தெற்கு 3 கி.மீ. பூவிருந்தவல்லி இருக்கின்றது. திருவேற்காடு வடவேதாரண்யம் எனப்படும் விஷம் தீண்டாமகிமையுள்ள ஸ்தலம். மூர்க்க நாயனார் திருஅவதாரஞ் செய்த இடம். அவருடைய சிலையுருவம் துவார பாலகர்களுக்கு வடபாலும் அகஸ்தியருக்கு மணக்கோல தரிசனம் கொடுத்தருளிய பார்வதி பரமேஸ்வர வுருவங்கள் இலிங்க மூர்த்திக்குப் பின்பாலும், விநாயகருருவம் வலப்பாலும் இருக்கின்றன. திருவேற்காட்டும் பாலாம்பிகையையும் திருவலிதாயம் ஜகதாம்பிகையும் திருஒற்றியூர் வடிவாம்பிகையையும் ஒரே தினத்தில் தரிசித்தால் இம்மை மறுமைப் பயன் கிடைக்கும். சூரசம்ஹாரம் செய்த பின் முருகவேள் பூசித்த ஸ்தலம். "விண்டமாம் பொழில் சூழ்தரு வேற்காடு" எனச் சம்பந்தப்பெருமான் கூறியதன் உண்மை இன்றும் பிரத்யக்ஷம்.

20 வடதிருமுல்லைவாயில்

இறைவன் : மாசிலாமணி ஈசுரர்

இறைவி : கொடியிடை நாயகி

தீர்த்தம் : பாலாறு, சுப்பிரமணிய தீர்த்தம்

பதிகம் : சுந் 1

வழி : சென்னைப் பட்டிணத்துக்கு மேற்கு 16 கி.மீ. அம்பத்தூர் புகைவண்டி நிலையத்துக்கு வடமேற்கு 2½ கி.மீ, ஆவடி புகைவண்டி நிலையத்திற்கு 4 கி.மீ.

சுப்ரமண்ய சுவாமி பூசித்த ஸ்தலம். தொண்டைமான் சக்ரவர்த்தி, அநுக்கிரகம் பெற்ற ஸ்தலம். திருப்பதி-அவருக்கு அவசரக்காக்ஷி கொடுத்து யுத்தத்துக்குத் துணையாக நந்தியையனுப்பியதாகச் சொல்லுகின்றார்கள். ஒரு நந்தி கிழக்கு நோக்கியிருக்கிறது. சுவாமி தீண்டாத் திருமேனி. சந்தனக் காப்பிடுகின்றார்கள். லிங்கத்தின் மேல் சிறிய லிங்கம் போன்ற ஒரு உருவம் தெரிகின்றது. சுவாமி சந்நிதியில் இரண்டு எருக்கத் தூண்கள் இருக்கின்றன. இவைகளுக்கு மூன்று இடங்களிற் பூணிட்டிருக்கின்றது. அடியார்கள் சந்தனத் தைலம் பூசுகிறார்கள். தலம்-சண்பகாரண்யம், ''செண்பகச் சோலை சூழ் திருமுல்லை வாயிலாய்' (சுந்தரர்).

21 திருவலிதாயம் என்பது பாடி

இறைவன்: வலிதாய நாதர்

இறைவி: தாயம்மை

தீர்த்தம்: வலிதாயம்

பதிகம்: சம் 1

வழி: சென்னை பட்டினத்துக்கு மேற்கு 13 கி.மீ. வில்லிவாக்கம் (கொன்னூர்) புகைவண்டி நிலையத்துக்குத் தென் மேற்கு 3 கி.மீ. குறட்டூர் புகைவண்டி நிலையத்துக்குத் தெற்கு 2 கி.மீ.)

பாரத்துவாஜர், பிருஹஸ்பதி. ஹனுமார் முதலியோர் பூஜித்த ஸ்தலம். கோயில் சிறியது. அதன் கிணற்று நீர் நன்றாக இருக்கின்றது.

XIX ஸ்ரீவைஷ்ணவ ஸ்தலம்

திருவல்லிக்கேணி

(ப்ருந்தாரண்ய க்ஷேத்ரம்)

(1) மூலவர்: வேங்கடகிருஷ்ணன் ருக்மிணி பிராட்டியுடன், (பலராமன், ஸாத்யதி, அநிருத்தன், ப்ரத்யும்னன் இவர்களோடு நின்ற திருக்கோலம்) கிழக்கே திருமுகமண்டலம்.

உத்ஸவர், பார்த்தஸாரதி

(2) மூலவர்: ரங்கநாதன், மன்னாதன், புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார்: வேதவல்லி (தனிக்கோவில் நாச்சியார்)

(3) மூலவர்: ஸீதா, லக்ஷ்மண, பரத, சத்ருக்ன, ஹனுமாருடன் ஸ்ரீராமர், நின்ற திருக்கோலம். தெற்கே திருமுக மண்டலம்.

(4) மூலவர்: வரதராஜன், தேவப்பெருமாள், கருடன் மீதமர்ந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

(5) மூலவர்: தெள்ளிய சிங்கர் (நரஸிம்ஹன்), வீற்றிருந்த திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம். வடமேற்குப் பக்கம் தனி ஆண்டாள் சந்நிதியும் உண்டு.

தீர்த்தம்: அல்லிக்கேணி, இதில் 5 தீர்த்தங்கள் உள்ளன.
விமானம்: ஆனந்த விமானம், ப்ரணவ விமானம், புஷ்பக விமானம், சேவி விமானம், தைவிக விமானம்.

ப்ரத்யக்ஷம்: ருக்மிணிப் பிராட்டி, தொண்டமான் ஸீமதிராஜன், அருச்சுனன், ப்ருஹீ

மஹரிஷி, மார்க்கண்டேயர், மதுமான் மஹரிஷி, ஸப்தரோமா, அத்ரி மஹரிஷி, ஜாபாலி மஹரிஷி.

சிறப்புக்கள் : திருவேங்கடமுடையான், சுமதி என்னும் துண்டீர மண்டலாதிபதிக்குப் பாரத யுத்தத்தில் அருச்சுன னுக்கு ஸாரத்யம் செய்த திருக்கோலத்துடன் காட்சியளிக் கிறேன் என்று வாக்களித்தபடி, ஆத்ரேய மஹரிஷியைக் கொண்டு பாரத்சாரதியைச் சங்கம் வலக்கையிலும் தான முத்திரை இடக்கையிலுமாகப் பிரமாணப்படி அர்ச்சா விக்ர ஹத்தை அமைத்து ருக்மிணி, பலராமன், ஸாத்யகி, அநிருக்தன் ப்ரத்யும்னன் இவர்களோடு வைகானஸ வீதி யாலே ப்ரதிஷ்டை செய்ததாக வரலாறு.

கிருஷ்ணன் குடும்பமாய் எழுந்தருளி இருப்பது இத்தலத் தில் மட்டுமே. அழகிய அல்லி மலர்கள் நிரம்பிய குளத்தை உடைய ஊர் என்ற காரணத்தால் திருவல்லிக்கேணி என்று வழங்குகிறது. புரட்டாசி சனிக்கிழமைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

மங்களா சாஸனம்

பேயாழ்வார்	மூன்றாந் திருவந்தாதி 16,
திருமழிசையாழ்வார்	நான்முகன் திருவந்தாதி 35,
திருமங்கையாழ்வார்	பெரிய திருமொழி 2,3 பதிகம்

22 மைலாப்பூர்

இறைவன்: கபாலீச்சுரர்

இறைவி: கற்பகவல்லியம்மை

தீர்த்தம்: கபாலி, மணிகர்ணிகை

மரம்: புன்னை, புன்னாகம்

பதிகம்: சம் 1

வழி: சென்னைப் பட்டினத்துக்குத் தெற்கு 6 கி.மீ.

சிறப்புக்கள்: பார்வதி தேவியார் மயிலாயிருந்து பூஜித்த ஸ்தலம். இங்கு வாயிலார் நாயனார் திருவவதாரஞ் செய்த னர். திருஞான சம்பந்த சுவாமிகள் பூம்பாவைத் திருப் பதிகம் பாடி சிவநேச செட்டியாருடைய அருமைப்புதல்வி பூம்பாவை அரவு கடித்து இறந்து தகனமான எலும்பைப் பெண்ணுருவாக்கியருளின ஸ்தலம்.

ஸ்ரீராமர் பூஜித்து ஐப்பசி ஓணத்தில் திருவிழா நடத் தினது புராணத்திற் கூறப்பட்டுள்ளது. திருக்குறளாசிரியர் தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனார் எழுந்தருளியிருந்த ஸ்தலம்.

மேற்குப்பார்த்த சந்நிதி கோயிலுள் சுப்பிரமணிய சுவாமி சந்நிதி தெற்குப் பிராகாரத்திலும் வாயிலார் நாயனார் சந்நிதி நிருதி முனையிலும் உள்ளன. திருக்குளம் கோயிலுக்கு மேற்கிலிருக்கின்றது. மேற்கு வாயிலுக்குச் சற்று வடபால் சம்பந்தமூர்த்தி குடத்தின் மேற் பூம்பாவை இவர்கள் உருவ மும், வடக்குப் பிரகாரத்தில் புன்னை விருக்ஷமும், மயிலம்மை பூஜிக்கும் இலிங்க மூர்த்தியும், கிழக்குப் பிரகாரத்தில் விநாயகர் சந்நிதியுமிருக்கின்றன. பங்குனி மாதத்தில் 63 நாயன்மாருடைய உற்சவம் பிரபலமாய் நடக்கிறது, திரு மயிலைப் புராணம் அச்சிடப்பட்டிருக்கின்றது.

23 திருக்கள்ளில்

இறைவன்: சிவாநந்தேசுரர்

இறைவி: ஆனந்த வல்லியம்மை

தீர்த்தம்: சிவானந்த தீர்த்தம் (குளம்)

பதிகம்: சம் 1

இது 'திருக்கள்ளம்' என வழங்குகின்றது. சென்னையி லிருந்து நெல்லூருக்குப் போகும் வழியில் 25 கி. மீட்டருக்கும் 26 கி. மீக்கும் இடையிற் பெரிய பாளையம் போகும் வழியில்

திரும்பி 6 கி.மீ. சென்றால் கன்னிபுத்தூர் இருக்கின்றது. மோட்டார் பேருந்து வசதி உண்டு. அதற்குத் தெற்கு 3கி.மீ. இந்தத் தலம் இருக்கின்றது. வழியில் 17½ கி.மீ. குலுக்கன் சத்திரம் என்னும் ஊரும் இருக்கின்றது. கன்னிப் புத்தூருக்கும் திருக்கள்ளிலுக்கும் இடையில் நெய்வேலி என்ற ஒரு கிராமம் இருக்கின்றது. திருக்கள்ளில் பெரியபாளையத்திற்குத் தெற்கு 10 கி.மீ.

பிருகு முனிவர் பூசித்த ஸ்தலம். கோயில் சிறியது. சந்நிதிக்கு எதிரில் சிவநந்த தீர்த்தம் என்னும் நல்ல தண்ணீர்க்குளம் இருக்கின்றது.

24 திருவொற்றியூர்

இறைவன் : மாணிக்கத் தியாகர், ஆதிபுரீசுரர்

இறைவி : வடிவுடையம்மை, திரிபுரசுந்தரியம்மை

தீர்த்தம் : பரம தீர்த்தம்

மரம் : மகிழமரம்

பதிகம் : சம் 1, அப் 5, சுந் 2

புகைவண்டி நிலையம் சென்னைக்கு வடக்கு 8 கி.மீ. திருவிளக்குத் தொண்டு செய்து வந்த கலிய நாயனாருடைய ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலி நாச்சியாரை மணம்புரிந்த ஸ்தலம். அவர் சங்கிலியாருக்கு மகிழ மரத்தின் கீழ்ப் பிரமாணஞ் செய்து கொடுத்த ஐதீஹத்தை முன்னிட்டு மகிழடி உற்சவம் மாசி மாதத்திற் பிரபலமாக நடக்கின்றது. தியாகேசரது சந்நிதி விசேஷம் கோயில் பெரியது. அதனுள் அநேக லிங்கங்கள் இருக்கின்றன. புற்றிடங் கொண்டார் சந்நிதிக்கு வடக்கே ஆதிலிங்கம் மிகவு பளபளப்பாயிருக்கின்றது. சுந்தரர், சங்கிலியார் இவர்களுடைய உற்சவ விக்கிரகங்கள் மணவாள கோலமாய் இருக்கின்றன.

மூற்றுந்துறந்தவராகிய பட்டினத்துப் பிள்ளையார் முக்தியடைந்த முதுநகர். பட்டினத்தாருக்கும் அப்பர் சுவாமிகளுக்கும் தனி ஆலயங்கள் இருக்கின்றன. இந்தத் தலத்துக்கு ''ஆதிபுரி'' என்றுப் பெயர். சுவாமி சந்நிதிக்கு ஒரு பால் வட்டப் பாறையம்மை துர்க்கை சந்நிதி உள்ளது.

பிரளயத்தை மேல் வராது தடுத்தமையால் ஒற்றியூர் எனப்பெயர் போந்தது. வாசுகியை இறைவர் தமது திருவுருவத்திற் சேர்த்துக் கொண்டபடியால் ''படம் பக்க நாதர்'' எனப் பெயர் பெற்றார். அன்பர் ஏலேல சிங்கருக்கு மாணிக்கங்கள் கொடுத்து ''மாணிக்கத் தியாகர் ஆனார். மாந்தாதா. என்னும் அரசன் தலங்களின் கட்டளைகளைக் குறைத்து எழுதச் சொல்லிய ஏட்டில் வரிபிளந்து ''திருவொற்றியூர் நீங்கலாக'' என்று எழுதினதால் சுவாமி ''எழுத்தறியும் பெருமான்'' ஆயினர். ஸ்தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது.

XX ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தலம்

திருநீர்மலை (தோயாதரி க்ஷேத்ரம்)

மலை அடிவாரக் கோவில்

(1) மூலவர் : நீர்வண்ணன், நீலமுகில் வண்ணன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுகமண்டலம்

தாயார் : அணிமாமலர் மங்கை, (தனிக் கோவில் நாச்சியார்)

மலைமேல் கோயில்

(2) மூலவர் : (இருந்தான்) சாந்த நரஸிம்மன், வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

(3) மூலவர் : (கிடந்தான்) ரங்கநாதன், மாணிக்க சயனம், தெற்கே திருமுக மண்டலம்.

தாயார் : ரங்கநாயகி, (தனிக் கோவில் நாச்சியார்) கிழக்கே திருமுக மண்டலம்.

(4) மூலவர் : த்ரிவிக்ரமன் (நடந்தான்) நின்ற திருக் கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

மலை அடிவாரத்தில் சக்ரவர்த்தித் திருமகனுக்குத் தனி சந்நிதி உண்டு. கிழக்கே திருமுக மண்டலம்.

தீர்த்தம் : மணிகர்ணிகா தடாகம்-க்ஷீர புஷ்கரிணி, காருண்ய புஷ்கரிணி, ஸித்த புஷ்கரிணி, ஸ்வர்ண புஷ்கரிணி என்று நான்கு தீர்த்தங்கள் அடங்கியது.

விமானம் : தோயகிரி விமானம்

ப்ரத்யக்ஷம் : தொண்டைமான், ப்ருகு, மார்க்கண்டேயர்

வழி: சென்னை-தாம்பரம் புகைவண்டிப் பாதையில் பல்லா வரம் நிலையத்திலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. பேருந்து வசதி உண்டு. மற்ற வசதிகளும் உண்டு. இங்கு ஒரு சிறிய மலை இருக்கிறது. மலைக்குச் செல்லும் படிக்கட்டு கள் முதலியன புதுப்பிக்கப்பட்டுள்ளன. பெருமாள் கீழே ஒருவராகவும் மலைமேலே மூவராகவும் (நின்றான், இருந் தான், கிடந்தான், நடந்தான் என்ற திருப்பெயர்களில்) நான்கு திருக்கோலங்களில் எழுந்தருளியிருக்கிறார்.

சிறப்புக்கள்: வால்மீகி மஹரிஷி இந்தத் தலத்திற்கு வந்து மலைமீது ஏறி ரெங்கநாதன், நரஸிம்மன், த்ரிவிக்ரமன் என்ற மூன்று மூர்த்திகளையும் வணங்கி வழிபட்டுக் கீழே இறங்கி மலை அடிவாரத்தில் உள்ள ஸரஸ்ஸில் கிழக்கு முகமாக நின்று கொண்டு ஸ்ரீராமனை வழிபட ரெங்கநாதன் இராமனாகவும் லட்சுமி ஜானகியாகவும் ஆதிசேஷன் இலக்கு மணனாகவும் சங்கு, சக்கரங்கள், சத்ருக்கன, பரதர்களாகவும் காட்சியளித்து மறைந்தபோது ரிஷிகளின் வழிபாட்டிற் கிணங்க அற்புதமான நீர்வண்ணனாகக் காட்சியளித்ததாக வரலாறு.

திருமங்கையாழ்வார் மங்களா சாஸனம் செய்ய வந்திருக்கும்போது இந்த மலையைச் சுற்றி நீர் அரண்போல சூழ்ந்திருந்தது. ஆறு மாதகாலம் ஊருக்கு வெளியே காத்திருந்ததாகவும், அதனால் இம்மலைக்கு நீர்மலை என்று பெயர் உண்டானதாகவும் வரலாறு.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	இரண்டாம் திருவந்தாதி 46 பெரிய திருமொழி 2 4ஆம் பதிகம் முதலியன.

25 திருவான்மியூர்

இறைவன் : மருந்தீசுரர்

இறைவி : சொக்கநாயகி

பதிகம் : சம் 2. அப் 1.

வழி: இது கடற்கரையோரம் மயிலாப்பூருக்குத் தெற்கு 5 கி.மீ.

வான்மீகரிஷி பூஜித்த ஸ்தலம். சுவாமி பால் வண்ணநாதர். பால் நிறமான சுயம்பு மூர்த்தி சந்நிதி மேற்குப் பார்த்தது. தேவர்கள் அமுதத்தால் (மருந்து-அமுதம்) இலிங்கம் செய்து பூஜித்ததால் "மருந்தீசர்"

திருக்குளம் கோயிலுக்குக் கிழக்கில் இருக்கின்றது. இலிங்கமூர்த்தி சற்று வடபாற் சாய்ந்திருக்கிறார். பசுபால் சொரிந்து அபிஷேகித்த பொழுது பட்ட குளம்பின் வடு தெரிகின்றது.

வான்மீக ரிஷியின் உற்சவ விக்கிரகம் பிரகாரத்திலிருக்கின்றது. ஊரின் வடமேற்கில் வான்மீகராலயம் ஒன்றிருக்கின்றது. மேலைக் கோபுரவாயிலில் வான்மீகருக்குத் தியாகராஜர் பௌர்ணமிதோறும் நடன தரிசனந் தருகின்றார்.

நடனம் கோயிலைச் சுற்றியும் மாடவீதிகளிலும் நடக்கின்றது.

வைஷ்ணவ ஸ்தலம்

XXI திருஇடவெந்தை (திருவிடந்தை)

மூலவர் : லக்ஷ்மி வராஹப் பெருமாள், நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : நித்ய கல்யாணப் பெருமாள் (தாடையில் பொட்டுடன் எழுந்தருளி இருக்கிறார்)

தாயார் : கோமளவல்லி நாச்சியார். ஆண்டாள், ஸ்ரீ ரங்கநாதன், ஸ்ரீ ரங்கநாயகி, ஸன்நிதிகளும் உண்டு.

தீர்த்தம் : கல்யாண தீர்த்தம், வராஹ தீர்த்தம்

விமானம் : கல்யாண விமானம்

ப்ரத்யக்ஷம் : மார்க்கண்டேயர்

வழி : சென்னை கோவளம் வழி. மகாபலிபுரம் செல்லும் சாலையில் 44 கி.மீ. தூரத்திலுள்ளது. கோயில் வாசலிலேயே இறங்கலாம். பேருந்து வசதி உண்டு.

சிறப்புக்கள் : காலவ மஹரிஷியின் 360 பெண்களையும் பகவான் ஒரே கன்னியாக்கி மடியில் வைத்துக் கொண்டு 360 கன்னிகளை 360 நாள் கல்யாணம் செய்து கொண்டதாகச் சொல்லுவதால் நித்திய கல்யாணன் என்று அழைக்கப்படுகிறார். இடப்புறத்தில் பிராட்டியைக் கொண்டுள்ளபடியால் திருஇடவெந்தை எனப் பெயர் பெற்றது. மணவாள மாமுனிகளிடம் மங்களா சாஸனம் பெற்ற பெருமாள்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 2,7 பதிகம்

XXII திருக்கடல் மல்லை (மஹாபலிபுர க்ஷேத்திரம்)

மூலவர் : ஸ்தல சயனப் பெருமாள், சயனத்திருக்கோலம், புஜங்கசயனம், கிழக்கே திருமுக மண்டலம், வலது திருக்கரத்தைத் திருமார்பின் மீது உபதேச முத்திரையாக வைத்து, 'ஞானத் தமிழ் புரிந்த நான்' என்பதை விளக்குகிறார்.

உத்ஸவர் : ஸ்தல சயனத்துறைவார் (உலகுய்ய நின்றான்)

தாயார் : நிலமங்கைத் தாயார் (தளிக்கோவில் நாச்சியார்).

தீர்த்தம் : புண்டரீக புஷ்கரிணி, கருடநதி

விமானம் : ககனாக்ருதி விமானம் (அனந்த விமானம்)

ப்ரத்யக்ஷம் : புண்டரீக மஹரிஷி

வழி : (21) திருவிடவெந்தையிலிருந்து 11 கி.மீ.

சிறப்புக்கள் : பூதத்தாழ்வார் தோன்றிய இடம். கலைகள் மலிந்த இடம். சிறப்புக் கலைகளுள் முக்கியமானவை பகீரதன் தவம் பஞ்சபாண்டவர்கள் ரதம் போன்றவை. இங்கு ஆண்டாள் ராமன் கோயில்களும் உள்ளன. புண்டரீக மஹரிஷி தாமரஸ புஷ்பங்களைக் கொண்டு க்ஷீராப்தி நாதனை வழிபட புஷ்பங்களைப் பறித்து ஒரு கூடையில் வைத்துக் கிழக்குப் பக்கமாகச் செல்ல, கடல்வழி அடைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, பக்தி மேலீட்டால் சமுத்திரத் தண்ணீரைக் கைகளால் இறைத்து விடலாம் என்று நினைத்து இறைக்க ஆரம்பிக்க பகவான் விடுத்த ப்ராம்மண வேடம் கொண்டு அவரை ஆகாரம் கேட்டு ஆகாரம் கொண்டு வருவதற்குள் ரிஷி ஆராதிக்க வேண்டும் என்று எண்ணிய எம்பெருமானார் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான் (ஆதிசேஷன்) மேல் சயனித்திருக்கும் திருக்கோலத்தில் புண்டரீகக் கூடையில் வைத்திருந்த வாடாமல் இருந்த தாமரஸ புஷ்பங்களைச் சாத்திக்கொண்டு மிகத

கம்பீரமாகச் சயனத் திருக்கோலத்தில் காட்சியளிக்க ஸ்தல சயனப் பெருமாள் என்ற பெயர் வழங்கியதாக வரலாறு.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	இரண்டாந் திருவந்தாதி, 70, பெரிய திருமொழி 2, 5 ம் பதிகம், 2,6 ம் பதிகம் முதலியன.

26 திருக்கழுக் குன்றம்

இறைவன்: வேதகிரீசுரர்-மலை மருந்தீசர்

இறைவி: பெண்ணினல்லாளம்மை

தீர்த்தம்: பட்சிதீர்த்தம், சங்கு தீர்த்தம், நந்தீசுர தீர்த்தம்

பதிகம்: சம் 1, அப் 1, சுந் 1.

வழி: செங்கற்பட்டு புகைவண்டி நிலையத்திற்குத் தென் கிழக்கே 14½ கி. மீ. மஹாபலிபுரத்தில் இருந்தும் பேருந்தில் வரலாம்.

தினந்தோறும் உச்சிக் காலத்தில் இரண்டு கழுகுகள் வந்து தங்களுக்குக் கொடுக்கப்படும் சர்க்கரை அன்னத்தையும நெய்யையும் புசித்து மலையை வலமாகச் சுற்றிக்கொண்டு போகும் அற்புதமான ஸ்தலம்.

> ''முள்வாய்க் கங்க வடிவெடுத் திருவர்
> நோற்கு மலையிது''
> -திருவிளை-அருச்சனை-கரு
> ''கழுகு தொழு வேதகிரி'' ... -திருப்புகழ்-325

சாபத்தாற் கழுகுகளாயின சண்டன், பிரசண்டன் கிரேதாயுகத்தும், சம்பாதி-சடாயு திரேதாயுகத்தும்,

சம்புகுத்தன்-மாகுத்தன் துவாபரயுகத்தும் வழிபட்ட தலம். சம்பு-ஆதி கலியுகத்தில் வழிபடுகின்றன. இந்திரன் பூசித்துப் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருமுறை "இடி பூஜை" செய்யும் மகிமை வாய்ந்த ஸ்தலம்.

12 வருஷத்தக் கொருவிசை சங்கு பிறக்குங் காரணத் தாற் "சங்கு பிறந்த குளம்" என்று சொல்லப்படும் மகிமை யான திருக்குளத்தையுடையது. தன்னிடத்தில் வசித்து, சங்கு பிறந்த குளத்தில் ஸ்நாநஞ் செய்து, கிரிப்பிரதக்ஷிணம் நியம மாகச் செய்யும் அடியார்களுடைய எவ்வித பிணியையும் போக்கியருளும் புண்ணிய ஸ்தலம். இங்கு மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் சிவபெருமான் குரு வடிவமாயெழுந்தருளித் தரிசநங் கொடுத்தருளினார்.

"எனையாண்டு கொண்டு, நின் தூய்
மலர்க்கழல் தந்து
காட்டினாய் கழுக்குன்றிலே"

— திருவாசகம் — திருக்கழுக்குன்றப் பதிகம் எ.

மலையினின்றும் பிரதக்ஷிணமாய் இறங்குவதற்கு வழி வேறாயிருக்கின்றது. மலைமேற் சொக்க நாயகியம்மை சந்நிதானம் குகைபோன்ற இடத்தில் இருக்கின்றது.

கீழே ஊரில் உள்ள கோயிலுக்குள் நந்திதீர்த்தம் இருக்கின்றது. சுவாமி பக்தவத்சலர். தேவியார் 'திரிபுரசுந்தரி' கோயிலுக்குக் கிழக்கு ½ மைல் தூரத்தில் சங்கு பிறந்த குளம் இருக்கின்றது.

சங்கு தீர்த்தத்துக்குத் தென் கிழக்கில் "ருத்ரகோடி" என்னுந் தேவார வைப்பு ஸ்தலம் இருக்கின்றது. சுவாமி ருத்ரகோடீசுரர். தேவியார்-அபிராம சுந்தரி.

மலைவலம் வரலாம். 3½ கி.மீ. தூரம் வேதங்களே மலையாய் நிற்றலின் இம்மலை 'வேதகிரி' எனப்படும். 'கதலி வனம்' என்றும் இத்தலத்துக்குப் பெயர் உண்டு.

27 திரு இடைச்சுரம்

இறைவன் : இடைச்சுரநாதர்

இறைவி : இமைய மடக்கொடி

தீர்த்தம்: மதுர தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: செங்கற்பட்டிலிருந்து கிழக்கே திருப்போரூருக்குப் போகும் வழியில் 8 கி.மீ. சென்றால், வழிக்கு வடக்கு $\frac{3}{4}$ கி.மீ. இந்த ஸ்தலமிருக்கின்றது.

சநற்குமார முனிவர் பூசித்த ஸ்தலம். லிங்கம் திவ்ய தேஜோமய மரகதலிங்கம் என்பர்.

28 திருக்கச்சூர் - ஆலக்கோயில்

இறைவன்: விருந்திட்ட ஈசுரர்

இறைவி: அஞ்சநாக்ஷியம்மை

மரம்: ஆல்

தீர்த்தம்: விருந்து தீர்த்தம், கூர்ம தீர்த்தம்

பதிகம்: சுந் 1

வழி: செங்கற்பட்டுக்கு வடக்கிலுள்ள சிங்கப்பெருமாள் கோவில் புகைவண்டி நிலையத்திற்கு வடமேற்கு $2\frac{1}{2}$ கி.மீ.

ஆல்-தலவிருக்ஷம் ஆதலின் ஆலக்கோவில். கச்சபம் (ஆமை) பூசித்த ஊர்-கச்சூர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பசியால் வருந்தி இருந்தபொழுது சுவாமி பிராமண வீடுகள் தோறுஞ்சென்று அன்னம் யாசித்துக் கொண்டுவந்து அளித் தருளிய ஸ்தலம். அமுதம் திரண்டு வருவதற்காக விஷ்ணு (கச்சபம்-ஆமை) கூர்மமாயிருந்து பூசித்த தலம். தாழக் கோயில் கச்சபேசுரர் அஞ்சனாட்சியம்மை ஆலயம். இலிங்கம்

மிகவும் சிறியது பிராகாரத்தில் 'விருந்திட்ட ஈசுரர்' என்ற இலிங்கம் இருக்கின்றது. கோயிலுள் அமூர்த தியாகர் சந்நிதி இருக்கின்றது.

இவ்வாலயத்துக்கு மேற்கு ½ கி.மீ.யில் மலை மருந்தீசர் ஆலயமிருக்கின்றது. தேவியார் இருணீக்கித்தாயார். அருகிலிருக்கும் மலைக்கு ஔஷதகிரி என்று பெயர். இவ்வாலயத்துக்குப் போகும் வழியில் தாலமூல விநாயகர் அல்லது கருக்கடி விநாயகர் இருக்கிறார். அதற்கு மேற்கில் 'இருந்திட்ட ஈசுரர்' வீற்றிருக்கும் ஒரு சிறு கோயிலிருக்கின்றது.

ஸ்ரீ வைஷ்ணவ அபிமான ஸ்தலம்

சிங்கப்பெருமாள் கோயில்

மூலவர் : லக்ஷ்மிந்ருஸிம்ஹன், கிழக்கே வீற்றிருந்த திருக்கோலம்

தாயார் : அஹோபிலவல்லி

வழி : சென்னை-செங்கல்பட்டு பேருந்து, புகைவண்டி வழி மலை அடிவாரத்தில் குஹையில் சந்நிதி உள்ளது.

மதுராந்தகம்

மூலவர் : கருணாகரன், கிழக்கே நின்ற திருக்கோலம்

தாயார் : ஜனகவல்லி

சிறப்புக்கள் : பாஷ்யக்காரர் ஸந்நியாஸம் பெற்ற ஸ்தலம். ஒரு சமயம் வெள்ளம் வந்த பொழுது ஏரி நிரப்பியதால், ஏரியின் ஜலம் ஊருக்குள் புகாமல் ராமலக்ஷ்மணர்கள் காவல் காத்ததாகவும், இந்தக் காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (ஆங்கிலேயர்கள்) கண்ணாரக் கண்டதாகவும் வரலாறு. இங்கு ஸம்ஸ்க்ருத கல்லூரி உள்ளது.

29 அச்சிறுபாக்கம்

இறைவன் : பாக்கபுரேசர்

இறைவி : சுந்தர நாயகி

மரம் : கொன்றை

தீர்த்தம் : தேவ தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : புகைவண்டி நிலையம் சென்னையிலிருந்து தெற்கு 94 கி.மீ.

சிவபெருமான் திரிபுரதகனஞ் செய்யும் பொருட்டுத் தேவர்கள் அமைத்த தேரில் எழுந்தருளின பொழுது, அத் தேவர்கள் விநாயக மூர்த்தியை நினையாத காரணத்தால் தேரின் அச்சு இற்றது (முறிந்தது). அந்தக் காரணத்தால் இந்த ஸ்தலத்துக்கு அச்சிறுபாக்கம் எனப் பெயருண்டாயிற்று. கண்ணுவரும் கௌதமரும் பூசித்த தலம். இரண்டு மூலஸ் தானங்கள்.

கிழக்கே பெரிய கோபுரம். கோபுர வாயிலுக்கும் புகை வண்டி ரோட்டுக்கும் மத்தியிற் பாநு தீர்த்தம் இருக்கின்றது. துவஜ ஸ்தம்பமும் நந்தியும் கோபுரவாயிலுக்கு நேராக இல்லாமற் சற்று வடக்கே இருக்கின்றன. துவஜஸ்தம்பத் துக்கு நேராக மூலஸ்தானம், கோபுரவாயிலுக்கு நேராகப் பாண்டியன் பிரதிஷ்டித்த சிவலிங்கமும் (உமையாட்சி நாதர்) அம்மனும் (மெல்லியலாள்) இருக்கின்றனர். மூலவா 'ஆட்சி நாதர்', தேவியார் - இளங்கிளியம்மை (பாலசுகாம் பிகை) வடக்குப் பிராகாரத்திற் கொன்றை விருக்ஷமும், சிம்ஹகூபம் என்னுந் தீர்த்தமும (கிணறும்), இளங்கிளியம்மை சந்நிதியும் இருக்கின்றன. கோயிலுக்கு வடக்கே சற்று தூரத்திற் சங்கு தீர்த்தம் என்னும் நல்ல தண்ணீர்த் தாமரைக்குளம் இருக்கின்றது.

30 திருவக்கரை

இறைவன் : சந்திரசேகரர்

இறைவி : வடிவாம்பிகை

தீர்த்தம் : சந்திர தீர்த்தம், பிரம தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : மயிலம் புகைவண்டி நிலையத்தில் இருந்து (5 கி.மீ.) மயிலம் ஊருக்குச் சென்று அங்கிருந்து வானூர் போகும் வழியில் 6 கி மீ. சென்று 140 கி.மீ. கல் இருக்கும் இடத்துக்கு அப்பால் சுமார் ½ கி.மீ. சென்று அங்கு வழியை விட்டு வயல் வழியாகச் செல்லும் வண்டிப் பாதையில் 8 கி.மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம். வழியில் எரையூரும் ஞெமலியுமிருக்கின்றன. திண்டிவனம், புதுச்சேரி வழியில் மானூரிலிருந்து மேற்கே 3 கி.மீ. மானூர் புதுச்சேரியிலிருந்து 17½ கி.மீ.

விழுப்புரம் புகைவண்டி நிலையத்தில் இருந்து வடக்கு 9 கி.மீ. சென்று, புறவார் பனங்காட்டூரையடைந்து அங்கிருந்து கிழக்கு 13 கி.மீ. சென்று கூனிச்சம்பட்டைச் சேர்ந்து, அங்கு வடக்கே திரும்பி 1½ கி மீ. சென்று கொடுக்கூர் ஆற்றைக் கடந்து, அப்பால் ¾கி.மீ. சென்றாலும் திருவக்கரையை அடையலாம்.

சந்திரனுக்காக ஒருமுகமும், பிரம்மனுக்காக ஒரு முகமும், திருமாலுக்காக ஒரு முகமும் என சுவாமி மும்முகத்துடன் விளங்குகின்றார். வக்கிரா சூரன் பூஜித்த லிங்கம் கோயிலுக்குள் முற்புறத்தில் வடபால் இருக்கின்றது. கட்டிடம் இடிந்து கிடக்கிறது. பரிதாபம். வக்கிராசுரனைத் திருமால் சங்கரித்த பொழுது அவனிரத்தம் பூமியிற் படாதபடி நாவை நீட்டி உறிஞ்சின காளியின் உருவம் தென்பால் இருக்கின்றது. காளியின் வலது காதில் ஒரு குழந்தையின் உருவம் குண்டலமாகத் தொங்குகின்றது. இடது கையில் வில் இருக்கின்றது.

பெரிய பிராகாரத்தில் வடக்கில் விஷ்ணு ஆலயம் மேற்கு பார்த்து இருக்கின்றது. நந்தி மிகப் பெரியது.

திண்டிவனம் தண்டகவனம் எனவும், திருவக்கரை குண்டலிவனம் எனவும் சொல்லுகின்றார்கள். குண்டலருஷி உருவம் வடக்குப் பிராகாரத்தில் இருக்கின்றது.

31 இரும்பை மாகாளம்

இறைவன் : மாகாளேசுரர்

இறைவி : குயில் மொழியம்மை

பதிகம் : சம் 1

வழி : புதுச்சேரி புகைவண்டி நிலையத்துக்கு வடமேற்கு 8 கி.மீ. இதற்கப்பால் 5 கி.மீ. அரசிலி என்னும் ஸ்தலம் இருக்கின்றது.

மாகாளர் பூசித்த ஸ்தலம்

பங்குனிஉத்திரத்தில் முருகக் கடவுளுக்குப் பல காவடிகள் வருகின்றன. கார்த்திகை சோம வாரந்தோறும் உற்சவம், பிராகாரத்தில் ஆறுமுகக் கடவுள் தேவிமாருடன் வீற்றிருக்கிறார்.

32 அரசிலி என்பது ஒழிந்தியாப்பட்டு

இறைவன் : அரசிலிநாதர்

இறைவி : பெரிய நாயகி

தீர்த்தம் : அரசடி தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : புதுச்சேரியிலிருந்து திண்டிவனம் போகும் வழியில் வடமேற்கு 8 கி.மீ. சென்று இரும்பை மாகாளத்தைச் சேர்ந்து,

அங்கிருந்து ஒட்டன் பாளையம் வழியாய் வடகிழக்கு 5கி.மீ. சென்றால் அரசிலியை அடையலாம்.

வாமதேவ முநிவர் பூசித்த ஸ்தலம். கோயில் நல்ல ஸ்திதியிலிருக்கின்றது. லிங்கமூர்த்தி சிறிய உருவம். சுவாமி சந்நிதிக்கு வடகிழக்கு அம்பிகை சந்நிதி. ஆறுமுகக் கடவுள் தேவிமாருடன் பிராகாரத்தில் வீற்றிருக்கின்றார். அரசடி தீர்த்தம் அழகாக அமைந்துள்ளது.

நடுநாடு

1 திரு அண்ணாமலை

இறைவன்: அருணாசலேசுரர், அண்ணாமலையார்

இறைவி: உண்ணாமுலையம்மை

தீர்த்தம்: பிரமதீர்த்தம், சிவகங்கை

மரம்: மகிழமரம்

பதிகம்: சம் 2, அப் 8

வழி: புகைவண்டி நிலையம், விழுப்புரத்துக்கு வடமேற்கு 67 கி.மீ திண்டிவனம் செஞ்சி வழியாகவும் பேருந்து வழியே செல்லலாம்.

இது பஞ்சபூத ஸ்தலங்களில் தேயு ஸ்தலம். விராட் புருஷனுடைய மணிபூரகஸ்தானம். நினைக்க முத்தியளிக்கும் நிர்மல க்ஷேத்திரம்.

"நினைத்துத் தொழுவார் பாவந் தீர்க்கும்
நிமல ருறைகோயில்" (ச)

"தில்லையைக் காணக் காசியி லிறக்கச்
சிறக்குமா ரூர்தனிற் பிறக்க
எல்லையி லருண கிரிதனை நினைக்க வெய்தலா முத்தி."

சிவபெருமான் வல்லாள மகாராசனுக்குப் புத்திரராய்த் தோன்றி அநுக்கிரகித்த ஸ்தலம். 'யான் பரம்', 'யான் பரம்' என்று தர்க்கித்த பிரம விஷ்ணுகளுக்குமுன் சிவபெருமான் அக்கினி மலையாய்த் தோன்றி, அவர்கள் அன்னமாயும், பன்றியாயுஞ் சென்று முடியையும் அடியையுந் தேடிக் காணாமல் அகந்தை தீர்ந்து திகைத்து நிற்கத் தாமே பரம் பொருள் என்று ஸ்தாபித்தருளிய ஸ்தலம். இந்த ஐதிஹ்யத்தைக் கொண்டு இப்பொழுதும் பிரதி வருஷமும் கார்த்திகை மாதக் கிர்த்திகையில் உலகப் பிரசித்தமான தீபதரிசன உற்சவம் நடந்து வருகிறது.

மிகப் பெரிய கோயில். நாலு பக்கமும் பெரிய கோபுரங்கள் இருக்கின்றன. மேலைக் கோபுரம் பேய்க் கோபுரம் எனப்படுகிறது. மலைப் பிரதக்ஷிணம் 13 கி.மீ. வழியிற்பல தீர்த்தங்களும் அணி அண்ணாமலை என்னுந் தலமும், குகை நமசிவாயரது கோயிலும் உள்ளன. கார்த்திகை தீபம் இத்தலத்தில் மிக விசேடம். தீபதரிசனத்தின் போது "அரகர என்பது கடலின் முழங்கிய தருணை வளம்பதியே" என்னும் அருணாசலப் புராண வாக்கின் உண்மையைக் காணலாம்.

பார்வதி தேவியார் தவஞ்செய்து சிவபெருமானுடைய இடப்பாகம் பெற்ற ஸ்தலம். இந்த ஐதிஹ்யம் "பவளக் குன்று" என இப்பொழுது வழங்கும் குன்றின்மேல் உள்ள ஆலயத்தில் விளக்கமுறுகின்றது.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாத சுவாமிகளுடைய ஜநந பூமி. அவருக்கு அநுக்கிரகஞ்செய்த முருகக் கடவுளினுருவம் கோயிலுக்குக் கிழக்கே ஒரு ஸ்தம்பத்திலிருக்கிறது. அவருக்குக் "கம்பத்திளையனார்" என்று பெயர். 'கோபுரத்திளையனார்' சந்நிதியில் அருணகிரி நாதருடைய உருவம் சிலையிலிருக்கின்றது.

ஸ்தல புராணம் 'அருணாசல புராணம்' என வழங்கும் சைவ எல்லப்ப நாவலர் பாடியது. அவர் பாடிய அருணைக் கலம்பகமும் விசேஷமான நூல்.

2 திருக்கோவலூர்

இறைவன்: வீரட்டேசுரர்

இறைவி: சிவாநந்த வல்லி

தீர்த்தம்: பெண்ணையாறு

பதிகம்: சம் 1, அப் 1

வழி: இது பெண்ணையாற்றின் தென் கரையிலிருக்கின்றது. புகைவண்டி நிலையம் வடகரையில் (3) அறையணி நல்லூரி லிருக்கின்றது. அஷ்ட வீரத்தலங்களில் ஒன்று. அந்த காசுரனைச் சங்கரித்தருளிய ஸ்தலம்.

மெய்ப்பொருள் நாயனாருடைய திருப்பதி திருக் கோவலூர் 'மேலூர்' என்றும் 'கீழூர்' என்றும் இரண்டு பாகமாக இருக்கின்றது. மேலூரே திருக்கோவலூர் என இப்பொழுது வழங்குகின்றது. சிவாலயம் கீழூரிலுள்ளது. சந்நிதி மேற்குப் பார்த்தது. தேவி கோயில் தனியாக இருக் கின்றது. மேலூரில் திரிவிக்ரம பெருமாள் கோயில் இருக் கின்றது.

திருக்கோவலூர்ப் புராணம் அச்சிடப்பட்டுள்ளது.

1 ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தலம்

திருக்கோவலூர்

மூலவர்: த்ரிவிக்ரமன், திருவடியை உயரே தூக்கிய நிலை, நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: ஆயனார், கோவலன் (கோபாலன்)

தாயார் : பூங்கோவல் நாச்சியார்.

தீர்த்தம் : பெண்ணையாறு, க்ருஷ்ண தீர்த்தம், சக்ரதீர்த்தம்

விமானம் : ஸ்ரீ கர விமானம்

ப்ரத்யக்ஷம் : பலிசக்ரவர்த்தி, ம்ருகண்டு, ப்ரஹ்மா, இந்திரன், குக்ஷி, சௌனகர், காச்யபர், காலவர், குசத்வஜன், முதலாழ்வார்கள்.

வழி : விழுப்புரம்-காட்பாடி இருப்புப் பாதையில் திருக்கோவலூர் நிலையத்திலிருந்து கோவில் 3 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. கடலூரிலிருந்து பேருந்து மூலமும் போகலாம். புதுச்சேரி—பெங்களூர், சித்தூர்-திருச்சி பேருந்து பாதை உள்ளது.

சிறப்புக்கள் : வாமன திருவிக்கிரம அவதாரஸ்தலம். இந்த புண்ணிய நாட்டில்தான் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், என்ற முதலாழ்வார்கள் மூவரும் ஓரிரவில் இடைகழியில் சந்தித்து, பெருமாளையும் பிராட்டியையும் நேரில் இருட்டில் நெருக்கியபடி சேவித்து மூன்று திருவந்தாதிகளையும் பாடினார்கள்.

மூலவர் வலக்கையில் சங்கும், சக்கரத்தை இடக்கையிலும் தாங்கியவாறு வலக்காலால் உலகளந்தபடி நிற்கிறார். கோவிலுக்குள் இருக்கும் துர்க்கை தேவதாந்திரமாகக் கருதப்படுவதில்லை. மாவலியின் கர்வத்தை அடக்கி ஆட்கொண்ட புண்ணியத் தலம்.

தேசிகன் தேஹளீசஸ்துதி இயற்றிய தலம். எம்பெருமானார் ஜீயர் பரம்பரை மகான்கள் ஆதிக்கத்துக்கு உட்பட்ட தலம். இந்த ஊர் பஞ்சகிருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்களில் ஒன்று. ஸ்ரீகிருஷ்ணன் நித்திய சாநித்தியம் செய்தருளும் தலம்.

மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் பெற்ற புண்ணியத் தலம்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார்	முதல் திருவந்தாதி 86, இரண்டாந்திருவந்தாதி 70, பெரிய திருமொழி 2, 10 ம் பதிகம்.

3 அறையணிநல்லூர்

இறைவன்: அறையணி நாதேசுரர்

இறைவி: அருள்நாயகி

தீர்த்தம்: பாண்டல தீர்த்தம், ஆரண்ய தீர்த்தம், பெண்ணையாறு

பதிகம்: சம் 1

வழி: திருக்கோவலூர் புகைவண்டி நிலையத்துக்கு தென் கிழக்கு ½ கி.மீ. பெண்ணையாற்றின் வடகரை.

கோயில் ஒரு சிறு குன்றின்மேற் கட்டப்பட்டிருக்கின்றது. இக்குன்றின் மேலிருந்து பார்த்தால் திருவண்ணாமலைச் சிகரம் தெரியும். (அறையணி நல்லூர்...மலைமிசை வலங்கொள்வார்...அண்ணாமலை அன்பர் காட்டிடக் கண்டார்-பெரியபுராணம்-சம்பந்தர்-969) சந்நிதி மேற்குப் பார்த்தது. பெரிய கோபுரம். கோயிலுக்குக் கிழக்கிலுந் தெற்கிலும் பாறையில் ஒரு பெருங்குளம் இருக்கின்றது. இதற்கருகிற் பஞ்சபாண்டவர் குகை என ஐந்து அறைகளும், திரௌபதையிருந்ததொரு சிற்றறையும், அதற்கெதிரில் ஒரு சிறு சுனையும் உள்ளன. விநாயக உருவம் சுவரிலேயே அமைந்திருக்கின்றது. பாறையும் கோபுரமும் வெகு அழகாயுள்ளன. பிரசண்டருஷி பூஜித்த ஸ்தலம். இதற்கெதிரிற் பெண்ணையாற்றின் தென்கரையில் திருக்கோவல் வீரட்டம் இருக்கின்றது.

4 திரு இடையாறு

இறைவன்: இடையாற்றீசுரர்

இறைவி: சிற்றிடை நாயகி

தீர்த்தம்: சிற்றடை, பெண்ணைநதி

பதிகம்: சுந் 1

வழி: திருவெண்ணெய் நல்லூருக்கு (11) வடமேற்கு 5 கி.மீ. அத்தலத்துக்குச் சொல்லியிருக்கும் வழியைப் பார்க்க. மாம்பழப்பட்டு நிலையத்திலிருந்து தென்மேற்கே 7 கி.மீ. வழியிற் பெண்ணையாற்றையும் மலட்டாற்றையும் கடக்க வேண்டும்.

சுகர் பூசித்த ஸ்தலம்

5 திரு ஆமாத்தூர்

இறைவன்: அழகிய நாதர், அபிராமேசுரர்

இறைவி: முத்தாம்பிகை, அழகிய நாயகி

தீர்த்தம்: பதுமதீர்த்தம், பம்பையாறு

மரம்: வன்னி

பதிகம்: சம் 2, அப் 2, சுந் 1

வழி: விழுப்புரம் புகைவண்டி நிலையத்துக்கு வடமேற்கு 6 கி.மீ. பம்பை என்னும் ஒரு சிற்றாற்றின் வடகரையி லுள்ளது.

பசுக்களுக்குத் தாயகமான ஸ்தலம். இராமர் பூசித்த ஸ்தலம். சத்தியின் சாபத்தால், வன்னிமரமான பிருங்கு முனிவர் சத்தியைப் பூசித்துச் சாபம் நீங்கின தலம். கோயிலில் வன்னி விருக்ஷமும், கொன்றை விருக்ஷமும் உள்ளன. அம்பிகைக் கோயிலுக்குப் பெரிய கோபுரம் இருக்கின்றது. அம்மையை ''முத்தார்நகை அழகுடையாள்'' என்பர் அருணகிரிநாதர். ஊரின் ஒரு புறத்திற் புலவர் புராணம்

பாடின 'தண்டபாணி சுவாமிகள்' என்பாரது சமாதி இருக்கின்றது.

6 திருப்புறவார் பனங்காட்டூர் என்பது பனையபுரம்

இறைவன் : பனங்காட்டீசுரர்

இறைவி : புறவம்மை

தீர்த்தம் : பதும தீர்த்தம்

மரம் : பனைமரம்

பதிகம் : சம் 1

வழி : விழுப்புரம் ஸ்டேஷன் வடக்கே 9 கி.மீ. முண்டியம்பாக்கம் புகைவண்டி நிலையத்திற்கு வடகிழக்கு 3 கி.மீ. திண்டிவனம் போகும் வழியில் 1½ கி.மீ. சென்று பின்பு கிழக்கே 1½ கி.மீ. செல்ல வேண்டும்.

இந்த ஸ்தலத்தில் சித்திரை மீ முதல் தேதி முதல், ஏழாந்தேதி வரையில், ஒவ்வொரு நாள் காலையிலும் சூரியன் உதயமாகும் போது, கிரணங்கள் முதலில் ஸ்வாமி மேலும், பின்பு தேவியார் மேலும் விழுகின்றது.

சூரியன் பூஜித்த தலம். புறாவுக்கு அபயங்கொடுத்த சிபிச் சக்கரவர்த்தி தம் கண்ணைப் பறித்திட்டவுடன் புறாவின் எடை சரியாகி, ஸ்வாமி பிரத்தியக்ஷமான காரணத்தால், ஸ்வாமிக்கு நேத்திரோத்தாரக ஈசுரர் என்று பெயர். இரண்டு பழைய பனைமரங்கள் உள்ளன.

7 வடுகூர்

இறைவன் : வடுகேசுரர்

இறைவி : வடுவகிர்க் கண்ணம்மை

பதிகம் : சம் 1

இஃது திரு ஆண்டார் கோயில் என வழங்குகின்றது.

புதுச்சேரிக்கு மேற்கு 16 கி.மீ. சின்னபாபு சமுத்திரம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கு 3 கி.மீ. வடுகனாகிய வைரவர் பூசித்த ஸ்தலம்.

8 திருத்துறையூர்

இறைவன் : பசுபதீசுரர், சிட்ட குருநாதர்

இறைவி : பூங்கோதை நாயகி, சிவலோக நாயகி

பதிகம் : சுந் 1

தீர்த்தம் : பெண்ணை நதி

புகைவண்டி நிலையம். பண்ணுருட்டி புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கு 8 கி.மீ., ஊர் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கு 2½ கி.மீ.

நாரதர் பூஜித்தது. சிவஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த சாஸ்திரத்தைச் செய்தருளிய சகலாகம பண்டிதர் என்னும் காரணப் பெயருடைய அருணந்தி சிவாசாரியராகிய சந்தானாசாரியார் திருஅவதாரஞ் செய்து முக்தி பெற்ற ஸ்தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்குக் காட்சிகொடுத்த மூர்த்தி மூலஸ்தானத்திற்கு மேலே உள்ள விமான நிலையில் வீற்றிருக்கின்றார். அருணந்தி சிவாசாரியார் சந்நிதானமும், சுந்தரரைத் தடுத்தாட்கொண்டவர் சந்நிதானமும் கோயிலுக்கு வெளியே மேற்கே திருக்குளத்துக்கு அருகில் உள்ளன. கோயிலுக்குள் பீமன், சூரியன் இவர்கள் பூசித்த லிங்கங்கள் உள்ளன.

9 திருஅதிகை

இறைவன் : அதிகவீரட்டேசுரர்

இறைவி : திரிபுரசுந்தரி

மரம் : சுரக்கொன்றை

பதிகம் : சம் ., அப் 16, சுந் 1

தீர்த்தம் : கெடில தீர்த்தம்

வழி: பண்ணுருட்டி புகைவண்டி நிலையத்திலிருந்து தென் கிழக்கு $1\frac{1}{2}$ கி.மீ. கெடில நதியின் வடகரையில் இருக்கிறது.

"வீசுங் கெடில வடகரைத்தே யெந்தை வீரட்டமே" என்பது தேவாரம். எல்லாத் தலங்களிலும் அதிகம் ஆதலால் அதிகை எனப் பெயர் பெற்றது. "அதியரைய மங்கை அமர்ந்தான் றன்னை" என அப்பர் சுவாமிகள் பாடிய தலம். அட்ட வீரட்ட தலங்களிலொன்று. திரிபுர தகனஞ் செய்த ஸ்தலம். தேவர்களின் மமதை அடங்க புன்னகையும், சிவபூஜை தவறாத திரிபுரத்தலைவர் மூவரும் உய்யத் தண்ணகையும், சிவபூஜை தவறிய முப்புரவாசிகள் மடிய வெண்ணகையும் ஆக மூன்று நகை இத்தலத்திற் சிவபிரான் செய்தனர். திருநாவுக்கரசு நாயனாருடைய தமக்கை யாராகிய திலகவதியார்சிவபெருமானை வழிபட்ட திருப்பதி. அந்நாயனார் ஜைன மதத்தைவிட்டுச் சைவராய்"கூற்றாயின வாறு விலக்ககிலீர்" என்னும் திருப்பதிகம் பாடி சூலைநோய் தீரப் பெற்ற திருநகர். காடவன் மகேந்திரவர்மன் என்னும் சமணராசன் சைவ சமயம் மெய்யெனத் தெளிந்த பின், பாடலிபுரத்திலிருந்து சமணருடைய பள்ளிகளையும் பாழி களையும் இடித்து அவற்றின் கற்களைக் கொண்டு கட்டிய "குணதரேச்சுரம்" என்னும் ஆலயமும் இந்தத் தலத்தில் இருக்கின்றது.

கோயிலுக்கு உள்ளே திருக்குளமும், சூலைநோய் தீர்த்த கிணறும் இருக்கிறது. கர்ப்பக்கிரகம் தேர்போலப் பதுமை களால் அலங்கரிக்கப் பெற்றும் நிழல் பூமியில் சாயாதபடியும் கட்டப்பட்டிருக்கிறது. அப்பர் சுவாமியின் மூலவிக்ரகமும் உற்சவ விக்ரகமும், திலகவதியாரின் மூலவிக்ரகமும் உள்ளன. லிங்கம் பட்டை பட்டையாய்த் திகழ்கின்றது.

10 திருநாவலூர்

இறைவன் : திருநாவலேசுரர்

இறைவி : சுந்தர நாயகியம்மை

தீர்த்தம் : கருட தீர்த்தம்

மரம் : நாவல்

பதிகம் : சுந் 1

வழி : திருவெண்ணெய்நல்லூருக்குத் தென்கிழக்கு 8 கி.மீ. பண்ணுருட்டி புகைவண்டி நிலையத்திலிருந்து 16 கி.மீ. இது திருநாமநல்லூர் என வழங்குகின்றது.

சிறப்புக்கள் : சுக்கிரன் பூசித்த ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் திரு அவதாரஞ் செய்த ஸ்தலம். சுவாமிக்குப் பக்தஜனேசுரர் என்ற பெயரும் தேவிக்கு மனோன்மணியம்மை என்ற பெயரும் வழங்குகின்றன. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சந்நிதி வெளிப்பிரகாரத்தில் தென் கிழக்கில் இருக்கின்றது. வரதராஜப் பெருமாள், சந்நிதி கோயிலுக்குள்ளும், நாவல் மரம் தேவி சந்நிதிக்குச் சமீபத்திலும் இருக்கிறது. கோயிலுக்கு மேற்புரம் கோமுகி தீர்த்தம் என்ற சிற்றோடையும் தெற்கு ¾ கி.ம். தூரத்தில் கெடில நதியும் இருக்கிறது.

11 திருவெண்ணெய் நல்லூர்

இறைவன் : தடுத்தாட் கொண்ட நாதர், அருட்டுறைநாதர்

இறைவி : வேற்கண்ணியம்மை

தீர்த்தம் : பெண்ணை நதி

பதிகம் : சுந் 1

வழி : திருவெண்ணெய் நல்லூர் ரோடு புகைவண்டி நிலையத்திலிருந்து 6 கி.மீ., பண்ணுருட்டிக்கு மேற்கு 24கி.மீ. விழுப்புரத்திலிருந்து 19கி.மீ. திருக்கோவலூரிலிருந்து 22கி.மீ.

இத்தலத்திலுள்ள ஆலயத்திற்குத் "திருவருட்டுறை" என்று பெயர். இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொண்ட மூர்த்தி "வெண்ணெய்நல்லூரில் அற்புதப் பழ வாவணங் காட்டி யடியரை என்னையாளது கொண்ட நற்பதத்தை" என்பது சுந்தரர் திருவாக்கு. மெய்கண்ட தேவரென்னுங் காரணப் பெயருடைய ஸ்வேதவனப் பெருமாளாகிய சந்தானாசாரியார் வீற்றிருந்தருளிய ஸ்தலம். இதற்குச் சமீபத்தில் உள்ள புத்தூரிலே சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்குத் திருமணமாகுஞ் சமயத்தில் சிவபெருமான் ஒரு விருத்தப் பிராமண வேடங் கொண்டுவந்து தடுக்க, மணந் தவிர்ந்தபடியால், அவ்வூர் "மணந் தவிர்ந்த புத்தூர்" என்று வழங்குகிறது. பண்ணுருட்டிக்கு 6 கி.மீ. திருவெண்ணெய் நல்லூருக்குப் போகும் வழியில் இருக்கிறது. இதுவன்றி "தடுத்தாட் கொண்டவூர்" என்ற ஒரு கிராமம் திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கு 2 கி மீ.யில் இருக்கிறது. இத்தலத்தில் முருகவேள் (மயில்மீது) நடன தரிசனத்தை அருணகிரியாருக்குத் தந்தனர்.

"திரு வெண் ணெய் நற்பதி
புகழ்பெற அற்புத மயிலின்
மிசை கொடு திருநட மிட்டுரை
பெருமாளே" —திருப்புகழ்

12 திருமுண்டீச்சுரம் (திருக்கண்டீச்சுரம்)

இறைவன்: முண்டீச்சுரர், சிவலோக நாதர்

இறைவி: கானார் குழலியம்மை

தீர்த்தம்: முண்ட தீர்த்தம்

பதிகம்: அப் 1

வழி: திருவெண்ணெய் நல்லூர்க்குக் கிழக்கு 5 கி.மீ. திருவெண்ணெய் நல்லூர் ரோடு புகைவண்டி நிலையத்தி

லிருந்து திருவெண்ணெய் நல்லூருக்குப் போகும் வழியில் 1½ கி.மீ.,

பிரமனும், தேவேந்திரனும் பூசித்த ஸ்தலம்.

13 திருநெல்வெண்ணெய்

இறைவன்: வெண்ணெயப்பர்

இறைவி: நீலமலர்ச்கண் அம்மை

தீர்த்தம் : வெண்ணெய்த் தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : உளுந்தூர்ப் பேட்டை புகைவண்டி நிலையத்தில் இருந்து வடமேற்கே 6 கி.மீ.,இது 'நெய்வெணை'யென வழங்குகின்றது.

சநகர், சநற்குமாரர் முதலியோர் பூசித்த ஸ்தலம்.

14 திருமுதுகுன்றம் என்பது விருத்தாசலம்

இறைவன் : பழமலைநாதர்

இறைவி : பெரிய நாயகி

தீர்த்தம் : மணிமுத்தாறு

மரம் : வன்னி

பதிகம் : சம் 7, அப் 1, சுந் 3

வழி : புகைவண்டி நிலையம். நிலையத்திற்கும் ஊருக்கும் 3 கி.மீ. இருக்கும். மணிமுத்தாநதி கோயிலுக்கு அணித்தாக ஓடுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரின் பொருட்டுச் சுவாமியை வேண்டிப் பொன் பெற்ற ஸ்தலம்.

சிவபிரான் முதல் முதல் படைத்த மலை. இது விருத்த காசி எனப்படும். இங்கு உயிர்விடும் பிராணிகளுக்கெல்லாம்

பார்வதி தேவியார் தமது வஸ்திரத்தினால் வீசி இளைப் பாற்ற, சிவபெருமான் பஞ்சாட்சரோபதேசஞ் செய்து, அப் பிராணிகளைத் தமதுருவமாக்கும் அரும்பதியாதலால், இது காசியினுஞ் சிறந்ததெனக் கந்தபுராணம் வழிநடைப் படலத் திற் கூறப்பட்டிருக்கின்றது.

இது முத்தி தரும் தலம். "முக்தி தரும் உயர் முது குன்றம்". சம்பந்தர் "முடிபவர் வடிவறு சுசிகர முறை தமிழ் முதுகிரி" —திருப்புகழ். பிரளயத்தை வென்ற தலம்; செழு நிலத்தை மூடவந்த மூவாத முழங் கொலிநீர் கீழ்தாழ மேலுயர்ந்த முதுகுன்றம்' சம்பந்தர்.

பிரகார மட்டத்தின் கீழ் 16 படிகள் இறங்கினால் "ஆழத்துப் பிள்ளையாரின்" தனிக்கோயில் உளது. தேவி மார்-பாலாம்பிகை, விருத்தாம்பிகை என இரண்டு சந்நிதி கள் உள்ளன. காமகலிங்கம் முதல் 28 ஆகம லிங்கங்கள் உள்ளன. அறுபத்து மூவர் உருவங்களுக்கு இறுதியில் மாற் றுரைத்த பிள்ளையார் இருக்கின்றார். கோயில் பிரதான வாயிலுக்கு மேற்கில் உள்ள மண்டபம், மஹாபலிபுரத்திற் போல, அருமையான வேலைப்பாடு உள்ளது. ஹைட் என்னும் கலெக்டர்-தம் பெயர் எழுதித் தேருக்குச் சங்கிலி கள் கொடுத்துள்ளார்.

மாடவீதியை வலம் வந்தால் பழமலையை வலம் வந்ததாகும்.

15 திருஎருக்கத்தம்புலியூர் என்பது ராஜேந்திர பட்டினம்

இறைவன் : நீலகண்டேசுரர்

இறைவி : நீலமலர்க் கண்ணம்மை

தீர்த்தம் : நீலோற்பல தீர்த்தம்

மரம் : வெள்ளெருக்கு

பதிகம் : சம் 1

வழி: திருமுதுகுன்றத்துக்கு (14) தெற்கே 11 கி.மீ. நல்ல வழி.

கோயிலுக்குள் வெள்ளெருக்கஞ்செடி யொன்றிருக்கின்றது. திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகங்களை யாழிலிட்டு வாசித்த திருநீலகண்டப் பெரும்பாண நாயனார் திருவவதாரஞ் செய்த ஸ்தலம். உருத்திர சன்மர் வழிபட்டுத் தமது ஊமைத் தன்மையை நீக்கிக் கொண்ட தலம். இத்தலத்தில் உருத்திர சன்மரின் பிம்பமும் உண்டு.

ஸ்ரீமுஷ்ணம் (புராண ஸ்தலம்)

இறைவன்: பூவரசுஹன், நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். யச்ஞவராஹர் (உத்ஸவர்).

தாயார்: அம்புஜவல்லி

தீர்த்தம்: நித்ய புஷ்கரிணி

விமானம்: ஸச்சிதாநந்தம், வேதவிமானம்

ப்ரத்யக்ஷம்: கமடன், ஜில்லிகை, ஸுத்யும்ணன் பூமிதேவி, ஸுதர்மா

வழி: திருஎருக்கத்தம்புலியூரிலிருந்து கிழக்கே 6 கி. மீ.

16 கூடலையாற்றூர்

இறைவன்: நெறிகாட்டு நாயகர்

இறைவி: புரிகுழலாம்பிகை

தீர்த்தம்: மணி முத்தநதி, வெள்ளாறு, சங்கு தீர்த்தம்

பதிகம்: சுந் 1

வழி: விருத்தாசலத்திலிருந்து (14) கிழக்கே புவனகிரிக்குப் போகும் வழியில் 19 கி.மீ. சென்று வளையமாதேவி என்னும் ஊரைச் சேர்ந்து, அங்கிருந்து தெற்கே 3 கி.மீ. சென்று, திருமணிமுத்த நதியும், வெள்ளாறும் ஒன்றாய்ச் சேர்ந்து செல்லுமிடத்து அவற்றைக் கடந்தால் இந்த க்ஷேத்திரத்தை அடையலாம்.

சிதம்பரம் புகைவண்டி நிலையத்திலிருந்து குமரகுடி வழியாகவும் போகலாம். குமரகுடி 19 கி.மீ. அதற்கப்பால் கூடலையாற்றூர் 6 கி.மீ.

தெற்கயிருந்து சுந்தரமூர்த்தி நாயனார் விருத்தாசலத்துக்குப் போகும்பொழுது, சுவாமி பிராமண வடிவமாய் அவர்முன் தோன்றி, 'இந்தக் கூடலையாற்றூர் வழியாகத்தான் விருத்தாசலத்துக்குப் போகவேண்டியது' என்று சொல்லி அவரை அழைத்து வந்து பதிகம் பெற்ற ஸ்தலம்.

இதற்குத் தென்மேற்கு 6 கி.மீட்டரில் ஸ்ரீமுஷ்ணம் என்னும் விஷ்ணுத்தலம் இருக்கின்றது.

17 திருபெண்ணாகடம்

திருக்கடந்தைநகர்

இறைவன்: சுடர்க்கொழுந்தீசுரர்

இறைவி: கடந்தை நாயகி

தீர்த்தம்: பெண்ணை நதி

விமானம்: (கசவிமானம்) யானை முதுகு போன்றது

பதிகம்: சம் 1, அப் 1

வழி: புகைவண்டி நிலையம் விருத்தாசலம் (14) தென்மேற்கு 17 கி.மீ.

தேவகன்னியரும், காமதேனுவும், வெள்ளை யானையும் பூசித்தபடியால் இப்பெயர் வந்தது. இந்தத் தலத்திலுள்ள ஆலயத்துக்குத் தூங்கானை மாடம் என்று பெயர். கலிக்கம்ப நாயனாருடைய ஸ்தலம். அப்பர் சுவாமிகள் திருப்பதிகம் பாடித் தம்முடைய தோளின்மேற் சூலக்குறியும் இடபக்குறியும் பொறித்தருளப் பெற்ற ஸ்தலம். மெய்கண்ட தேவரின் தந்தை அச்சுத களப்பாளர் இருந்த ஊர்.

18 திருநெல்வாயில் அரத்துறை

இறைவன் : அரத்துறை நாதர்

இறைவி : ஆநந்த நாயகி

தீர்த்தம் : வெள்ளாறு

பதிகம் : சம் 1, அப் 1, சுந் 1

வழி: திருபெண்ணாகடம் (17) புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ., இது 'நிவா' நதியின் வடகரையில் இருக்கிறது. ஆதித்துறை (காரியனூர்). திருவாலந்துறை, திருமாந்துறை, ஆடுதுறை, திருவதிட்டத்துடை (திட்டக்குடி), திருவரத்துறை, திருக்கைத்துறை என உள்ள துறைகள் ஏழையும் சப்த ரிஷிகள் பூஜை செய்யவேண்டி "நிவா" என்றழைத்ததாக ஐதீஹம்.

திருநானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபெருமான் முத்துச் சிவிகையும், முத்துக் குடையும் முத்துச் சின்னங்களும் கொடுத்தருளிய ஸ்தலம். இதனை இத்தலத்துத் திருப்புகழிலுங் காணலாம். கணபதிக்கு அருகில் உள்ள அஷ்ட லஷ்மிகளும், சுவரின் மாடங்களிலுள்ள சிற்ப வேலைகளும் மிகப் பாராட்டற்பாலன.

19 திருச்சோபுரம் என்பது தியாகவல்லி

இறைவன்: சோபுரநாதர்

இறைவி: சோபுரநாயகி

தீர்த்தம் : சோபுர தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : கூடலூருக்குத் தெற்கே 11½ கி.மீ. ஆலப்பாக்க புகைவண்டி நிலையத்திற்கு வடகிழக்கு 3 கி.மீ. தோணியேறி உப்பங்கழியைக் கடந்து மணல் வழியே போகவேண்டும்.

அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. தியாகவல்லி என்னும் அரசகுமாரி பூசித்தனளாம். அவள் உருவமும் திரிபுவன சக்கரவர்த்தியின் உருவமும் வடகீழ்ப் பால் பிரகாரத்தில் உள்ளன.

இத்தலம் மணலினால் மூடப்பட்டிருந்து, சுமார் 125 வருஷங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டதாம். தரிசநஞ் செய்துவந்த இரண்டு தம்பிரான்கள் இத்தலத்தைக் கண்டு பிடித்துத் திருப்பணி செய்வித்தனராம். ஆதலால், தலத் துக்குத் "தம்பிரான் கண்ட தலம்" என்னும் பெயருண்டாம். சுற்றிலும் உயர்ந்த மணற்குன்றுகள் இருக்கின்றன. கடலும் சமீபத்திலிருக்கின்றது.

20 திருத்தினை நகர்

இறைவன் : சிவக்கொழுந்தீசுரர், நந்தீசுரர்

இறைவி : ஒப்பிலா நாயகி
இளங்கொம்பன்னாள்

தீர்த்தம் : திருந்து தீர்த்தம்

மரம் : கொன்றை

பதிகம் : சுந் 1

வழி : ஆலப்பாக்கம் புகைவண்டி நிலையத்தில் இருந்து சிறிது தூரம் மேற்கே சென்று, கூடலூரிலிருந்து சிதம்பரம்

போகும் பெரிய வழியைச் சேர்ந்து, அவ்வழியே தெற்கே 5 கி.மீ. சென்று (22 கி.மீ. கல் இருக்கும் இடத்து) மேற்கே திருப்பி 2 கி.மீ. சென்று, தானூர் என்னும் கிராமத்தை அடைந்து, பின்னும் $1\frac{1}{2}$ கி.மீ. மேற்கெ சென்றால் இத் தலத்தை அடையலாம்.

பரங்கிப்பேட்டை புகைவண்டி நிலையத்துக்கு வடமேற்கு 11 கி.மீ. புதுச்சத்திரம் புகைவண்டி நிலையத்துக்கு வட மேற்கு 5 கி.மீ., குள்ளன் சாவடி புகைவண்டி நிலையத்துக்குக் கிழக்கே 8 கி.மீ.

தாமரைக்குளத்தின் நீர் குட்டம் தீர்க்கும். பெரியான் என்னும் பள்ளன் ஒருவன் உழுது கொண்டிருக்கையிற் சிவ பெருமான் ஜங்கமர் போல் அவனிடத்திற்கு வந்து அன்னம் கேட்க, அவன் தன் ஊருக்குச் சென்று கொண்டுவருவதாய்ச் சொல்லிப் போனான். அவன் வருவதற்குள் சுவாமி அவன் உழுதிருந்த புலத்தில் தினை விளைந்து பழுத்திருக்கும்படி செய்து மறைந்து விட்டார். பள்ளனும் அவன் மனைவியும் வந்து தினை விளைந்திருக்கக் கண்டு ஆச்சரியமுற்று ஜங்கம ரைக் காணாது திகைத்து நின்றார்கள். சுவாமி இடபவாகன ருடராய் அவர்களுக்குத் தரிசனங்கொடுத்து அவர்களைத் தம்முடைய லோகத்திற் சேர்த்தருளினார். அதிசயமாகத் தினைவிளைந்த காரணத்தால் இந்தத் திருப்பதிக்குத் திருத்தினைநகர் என்னும் பெயர் எய்தியது. தினையமுது நைவேத்யம். கோயிலுக்கு வடக்கில் 'ஜாம்புவ தடாகம்' இருக்கின்றது.

ஜாம்புவர் பூசித்த லிங்கம் தேவி கோயிலில் இருக்கின் றது. பெரியான், ஜங்கமர் இவர்கள் உருவங்கள் கோயில் சுவரில் இருக்கின்றன.

II வைணவஸ்தம்

திருவஹீந்திரபுரம்

மூலவர்: தெய்வநாயகன், நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: மூவராகிய ஒருவன், தேவநாதன், திவிஷயந் நாதன், விபுதநாதன், தாஸஸத்தியன், அடிய வர்க்கு மெய்யன்.

தாயார் : ஹேமாம்புஜவல்லித் தாயார் (வைகுண்ட நாயகி)

தீர்த்தம் : கருடநதி, சந்திர தீர்த்தம், சேஷ தீர்த்தம், (பூ தீர்த்தம்)

விமானம் : சந்த்ர விமானம், சுத்தஸத்வ விமானம்

ப்ரத்யக்ஷம் : சந்த்ரன், கருடன்

வழி : திருப்பாதிரிப்புலியூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து 5 கி.மீ.

சிறப்புக்கள் : கோவிலுக்கு அருகில் ஔஷதகிரி என்ற குன்றின் மேல் ஹயக்ரீவர் சந்நிதியிருக்கிறது. வடகலை வைஷ்ணவ ஆசார்யரான ஸ்ரீசுவாமி தேசிகன் இங்கே தவம் செய்து கருடன் அருளையும் ஹயக்ரீவன் அருளையும் பெற்றார்.

கோவிலுள் இருக்கும் தேசிகன் சந்நிதி மிகவும் சிறப்புப் பெற்றது. புரட்டாசி மாதத்தில் நடைபெறும்மலை உத்சவமும் தீர்த்தவாரியும் முக்கியமானவை. சுவாமி தேசிகன் தம்மைப் போலவே தன்னுடைய திருக்கரத்தாலேயே ஒரு உற்சவ விக்கிரகம் செய்து போட்டியில் வென்ற இடம் இது.

ஆதிசேடன் அமைத்த தலம் ஆனதால் திருஅஹீந்தர புரம் என்ற பெயர் பெற்றது. கருடன் விரஜா தீர்த்தத்தையும் (கருடநதி) ஆதிசேடன் பாதாள கங்கை தீர்த்தத்தையும் (சேஷதீர்த்தம்) கொண்டுவந்து பரமனுக்குச் சமர்ப்பித்த தலம். தை, ஆடி மாதங்களில் இத்தலத்தில் புற்றுக்குப் பால் தெளிக்கும் வழக்கம் இல்லை.

கோவில் பிரகாரத்திற்குள் இருக்கும் சேஷ தீர்த்தத்தில் தான் (கிணறு) பால் தெளிக்கும் வழக்கம் இருக்கிறது. சேஷ தீர்த்தம் நிவேதனத்திற்கும், கருட தீர்த்தம் திருமஞ்சனத் திற்கும் பயன்பட்டு வருகிறது.

தேசிகன் நாற்பது வருடகாலம் இந்த ஊரில் வசித்த திருமாளிகையும் அவர் திருக்கரத்தால் கட்டிய கிணறும் இன்றும் சேவிக்கப்படுகிறது.

தேசிகன் பல அற்புதங்கள் புரிந்துள்ள இவ்வூருக்கு மணவாள மாமுனிகளும் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். அவருக்கு இப்போது மாடவீதியில் சந்நிதி உள்ளது.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி *3,1* பதிகம்

21 திருப்பாதிரிப்புலியூர்

இறைவன் : தோன்றாத் துணைநாதர், பாடலீசுரர்

இறைவி : தோளகயம்பிகை,
பெரிய நாயகியம்மை

தீர்த்தம் : கெடில நதி

மரம் : பாதிரி

பதிகம் : *சம் 1, அப் 1.*

வழி : புகைவண்டி நிலையம். கூடலூருக்கு வடக்கு 5 கி.மீ. கெடில நதியின் தென்கரையில் இருக்கிறது.

வியாக்கிரபாதர் பூஜித்தமையால் இது வடபுலியூர் எனப் படும். சாபத்தினால் முடக்காலுள்ள முயலுருப் பெற்ற மங்கண முநிவர் அவ்வுரு நீங்கப் பெற்ற ஸ்தலம். திருநாவுக்

கரசு நாயனாரைச் சமணர்கள் கற்றூணிற் கட்டிக் கடலிற் றள்ளிவிட, அவர் 'சொற்றுணை வேதியன்' என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை யோதிக் கரையேறப்பெற்ற ஸ்தலம். அந்த இடம் 'கரையேறவிட்ட குப்பம்' என்று சொல்லப்படுகின்றது. நாயனார் கரையேறின பின்பு ''ஈன்றாளுமாய்'' என்னும் பதிகம் பாடிச் சிவபிரானைத் துதித்துச் சிலநாள் எழுந்தருளியிருந்த ஸ்தலம். அக்நி, கங்கை, மங்கணர் முதலியோர் பூசித்தனர்.

22 திருமாணிகுழி

இறைவன்: மாணிக்க வரதர்

இறைவி: மாணிக்கவல்லி

தீர்த்தம்: மாணிக்க தீர்த்தம், கெடில ஆறு

மரம்: கொன்றை

பதிகம்: சம் 1

வழி: திருப்பாதிரிப்புலியூர் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே 4 கி.மீ. சென்று, 'திருவஹீந்திரபுரம்' என்னும் விஷ்ணு க்ஷேத்திரத்துக்குத் தென்புறத்திலிருக்கும் கேபர்மலை யோரமாகக் கொடிவழியே மேற்கு 1½ கி.மீ. சென்றால் இந்தத் தலத்தை அடையலாம்.

''தக்ஷிண கங்கை' எனப்படும் கெடில நதியின் தென்கரை. சுவாமி தேவியாருடன் இருப்பதாக ஐதீஹம். எப்பொழுதும் திரையிட்டிருக்கின்றது. திரையில் ஏகாதச ருத்திரர்களுள் பீமருத்திரரின் உருவம் இருக்கின்றது. இவருக்குத்தான் முதலில் அர்ச்சனை, தீபாராதனை முதலிய செய்கின்றார்கள். அதன் பின்புதான் இலிங்கமூர்த்தியைத் தரிசிக்கலாம்.

வாமனாவதாரஞ் செய்த விஷ்ணு சிவபெருமானைப் பூஜித்த ஸ்தலம்.

காவிரி நதியின் வடகரையில் உள்ள ஆலயங்கள்:

1 கோயில் என்பது சிதம்பரம்

இறைவன் : திருமூலநாதர் என்ற சபாநாயகர்

இறைவி : உமையம்மை, சிவகாமியம்மை

தீர்த்தம் : சிவகங்கை, பரமாநந்தகூபம்

மரம் : ஆலமரம்

பதிகம் : சம் 2, அப் 8, சுந் 1

வழி : புகைவண்டி நிலையத்திலிருந்து 1 கி.மீ.

சிறப்புக்கள் : இது 'பூலோக கயிலாயம்' எனப்படும் புண்ணிய பூமி. தரிசிக்க முக்தியளிக்கும் ஸ்தலம். பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் இருடிகளுக்காகச் சபாநாயகர் பஞ்ச சபைகளில் ஒன்றாகிய கநக சபையிலேயே எக்காலமும் ஆநந்த தாண்டவஞ் செய்தருளும் பதி. பஞ்சபூத ஸ்தலங்களில் ஆகாய ஸ்தலம். "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று சபாநாயகராலேயே புகழப் பெற்ற பெருமையாளர்களாகிய தில்லை மூவாயிரவர் பூசிக்குந் திவ்ய க்ஷேத்திரம்.

மாணிக்கவாசகர் ஸ்வாமிகள், திருநீலகண்ட நாயனார், திருநாளைப் போவார் நாயனார், கூற்றுவ நாயனார், கோச்செங்கட்சோழ நாயனார், கணம்புல்ல நாயனார், மறைஞாந சம்பந்த சிவசாரியார், உமாபதி சிவாசாரியார் முதலிய எண்ணிறந்த அடியார்கள் முக்தி பெற்ற தெய்வீக ஸ்தலம். மாணிக்கவாசக ஸ்வாமிகள் 'திருச்சிற்றம்பலக் கோவையார்' பாடியருளின பழம்பதி. சேரமான் பெருமாணாயனார் 'பொன் வண்ணத் தந்தாதி'பாடின திருப்பதி. 'சபா நாதருடைய திருவடிகளே நமக்குப் பெருந்துணை' என்று நம்பிப்பூசித்து வந்த அச் சேரமான் பெருமாணாயனாருக்கு,

அவர் பூஜை முடிவிலே சபாநாயகர் தம்முடைய திருச்சிலம்பொலி கேட்பித்தருளினார். திருக்கோவலூரிலிருந்த மெய்ப்பொருணாயனார் தாம் உயிர்விடுங் காலத்திற் சபாநாயகரைத் தியானித்து அவரால் முக்தியளிக்கப் பெற்றனர்.

அபயகுலசேகர சோழ மகாராஜாவின் காலத்திலே நம்பியாண்டார் நம்பியால் தேவாரப் பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட ஸ்தானம். அநபாய சோழ மகாராஜாவின் காலத்திலே சேக்கிழார் நாயனார் பெரியபுராணம் பாடியரங்கேற்றிய அரும்பதி.

மற்ற எல்லா க்ஷேத்திரங்களிலுள்ள சிவகலைகள் அனைத்தும் அர்த்தஜாமத்தில் தன்னிடத்தில் வந்து சேரப்பெற்ற ஒப்புயர்வில்லாத க்ஷேத்திரம். இன்னும் சொல்லுதற்கரிய அநேக மகிமைகள் பொருந்திய இணையில்லாத மஹா க்ஷேத்திரம்.

கோயில் மிகப் பெரியது. நாற்புறங்களிலும் கோபுரங்கள் உள்ளன. சிவகங்கை தீர்த்தம் கோயிலுக்குள் வடகிழக்கில் இருக்கின்றது. நடராஜப் பெருமான் சந்நிதியில் ரத்ந சபாபதி அபிஷேகம், ரஹஸ்ய தரிசனம் முதலியன தரிசிக்கற்பாலன. தேவியார் சந்நிதி தனியாக இருக்கின்றது. கநக சபைக்குத் தென்மேல்பாற் கோவிந்தராஜ பெருமாள் பள்ளி கொண்டிருக்கிறார்.

வைஷ்ணவ ஆலயம்

11. திருசித்ரக் கூடம் (சிதம்பரம்)

மூலவர்: கோவிந்தராஜன், போகசயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: தேவாதிதேவன், பார்த்தஸாரதி, வீற்றிருந்த திருக்கோலம, சித்திரக்கூடத்துள்ளான் என்ற

மற்றொரு உத்ஸவரும் உபய நாச்சிமாருடன் காட்சி தருகிறார்

தாயார்: புண்டரீகவல்லி (தனி நாச்சியார் சந்நிதி)

தீர்த்தம்: புண்டரீக புஷ்கரிணி

விமானம்: ஸாத்விக விமானம்

ப்ரத்யக்ஷம்: தில்லைமூவாயிரவர், பாணினி, பதஞ்ஜலி, வ்யாக்ராபாதர்

சிறப்புக்கள்: நடராசப் பெருமான் உள்ளிட்ட தில்லை மூவாயிரவர் இவரை வணங்க இங்கு வந்ததாகவும், தன் முன்னால் நடனமாடிய நடராசப்பெருமாள் தாண்டவத்தைப் பெருமாள் கண்டு ரசித்ததாகவும் வரலாறு. பாணினி சிவன் ஆடும் ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டு பரவசமடைந்த இடம். உலகத்திலுள்ள எல்லா நடனக்கலைகளையும் இங்குக் காணலாம். பரதமுனிவர் நாட்டிய நூலை ஏற்படுத்திய கோயில். தில்லை அம்மனும் நடராசருடன் தாண்டவம் ஆடியபடியால் தில்லைநகர் என்ற பெயர் பெற்றது.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்:
குலசேகரராழ்வார்:
} பெருமாள் திருமொழி 10, 1,
பெரிய திருமொழி 3, 2 பதிகம் 3, 3 பதிகம்.

2 திருவேட்களம்

இறைவன்: பாசுபதேசுரர்

இறைவி: நல்ல நாயகி

தீர்த்தம்: சிவகங்கை

பதிகம்:: சம் 1, அப் 1

வழி : சிதம்பரம் (1) லிருந்து தென்கிழக்கில் 3 கி.மீ.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சிதம்பரத்திலே யிருப்பதற்கஞ்சி இங்கே இருந்துகொண்டு சிதம்பரத்துக்குப் போய்ச் சபாநாயகரைத் தரிசித்து வந்தனர். இங்குள்ள ஆலயமும், சிவபுரியி (3) லுள்ள இரண்டு ஆலயங்களும் ஒரே விதமான அமைப்பும் அளவும் கொண்டுள்ளன. அருச்சுன னுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுத்த ஸ்தலம். பாசுப தாஸ்திரம் கையிலேந்திய உற்சவ விக்கிரகமும் அருச்சுனனு டைய உற்சவ விக்கிரகமும் கோயிலிலிருக்கின்றன. வைகாசி விசாகத்தில் இவ்வுற்சவம் நடக்கின்றது.

3 திருநெல்வாயில் என்பது சிவபுரி

இறைவன்: உச்சிநாதேசுரர்

இறைவி: கனகாம்பிகை

தீர்த்தம்: கிருபா சமுத்திரம்

பதிகம் : சம் 1

வழி: சிதப்பரம் (1) க்குத் தென்கிழக்கே 5 கி.மீ.

சிறப்புக்கள்: இந்தத் தலத்தில் ஆலயங்கள் இரண்டு. வடக்கேயிருக்கும் ஆலயம் இந்தத் தலத்துக்கு உரித்தானது. தெற்கேயிருக்கும் ஆலயத்திலே முன் திருக்கழிப்பாலை யிலிருந்த பால்வண்ண நாதரென்னும் சிவலிங்கப் பெருமான் வீற்றிருக்கின்றார். திருக்கழிப்பாலையிலிருந்த ஆலயம் இப் பொழுது கொள்ளிட நதியாற் கொண்டுபோய் விடப்பட்டது. நெல்வாயில் சிவலிங்க மூர்த்தியின் பின்புறத்தில் பார்வதி பரமேசுரர் உருவங்கள் உள்ளன.

4 திருக்கழிப்பாலை

இறைவன்: பால்வண்ண நாதேசுரர்

இறைவி: வேதநாயகி

பதிகம்: சம் 2, அப் 5, சுந் 1

வழி: சிதம்பரம் (1) லிருந்து தென்கிழக்கே 11 கி. மீ.

சிறப்புக்கள்: கொள்ளிடத்தின் வடகரையிற் காரை மேட்டிலிருந்த இந்த ஸ்தலத்துக் கோயில் கொள்ளிட நதியாற் கொண்டுபோய் விடபட்டப்படியால், அங்கிருந்த மூர்த்தியை இப்பொழுது சிதம்பரத்துக்குத் தென்கிழக்கே 4 கி. மீட்டரிலுள்ள சிவபுரி (3) என்னும் ஸ்தலத்தில் ஒரு தனி ஆலயத்தில் வைத்திருக்கின்றார்கள் இவ்வாலயம் சிறிது. லிங்கமூர்த்தி சிறிதாயும் வெண்ணிறமாயுமிருக்கின்றார்.

வைஷ்ணவ அபிமான ஸ்தலம்
காட்டு மன்னார்குடி

பெருமாள்: வீரநாராயணப் பெருமாள், கிழக்கே நின்ற திருக்கோலம்

தாயார்: மஹாலக்ஷ்மி

தீர்த்தம்: காவேரி நதி

வழி: சிதம்பரம் (1) லிருந்து ஓமமாம் புலியூருக்கு போகும் வழியில் இருக்கிறது.

சிறப்புக்கள்: நாதமுனிகள் அவதார ஸ்தலம்

5 ஓமமாம்புலியூர்

இறைவன்: துயர் தீர்த்த நாதர்

இறைவி: பூங்கொடி நாயகி

தீர்த்தம்: கொள்ளிடம்

பதிகம்: சம் 1, அப் 1

வழி: சிதம்பரத்திற்கு (1) தென்மேற்கே 24 கி.மீ. காட்டு மன்னார்குடிக்குத் தெற்கே 6 கி.மீ.

சிறப்புக்கள்: தக்ஷிணாமூர்த்தியிடம் அம்பிகை பிரணவ உபதேசம் பெற்ற ஸ்தலம். இந்தக் குருநாதர் பெரிதுங் கொண்டாடப்படுகிறார். தலம் "பிரணவ வியாக்ரபுரம்" எனப்படும்.

புலிக்குப் பயந்து வில்வமரத்திலேறிக் கொண்ட ஒரு வேடன் இரவு முழுவதும் வில்வ இலைகளைப் பறித்துப் போட்டுக்கொண்டிருக்க அவை மரத்தடியிலிருந்த சிவலிங்கத் தின் மேல்விழ, சிவபெருமான் மனமிரங்கிக் காலையில் அவ்வேடனுக்குப் பிரத்தியக்ஷமாகி அவனுக்கு முக்தியளித்த தலம்.

கோயிலுக்குக் கீழ்ப்பாரிசத்தில் வடதளி என்னும் ஆலயம் இருக்கின்றது.

6. திருக்கானாட்டு முள்ளூர் என்கிற கானாட்டம்புலியூர்

இறைவன் : பதஞ்சலி நாதேசுரர்

இறைவி : கானார் குழலி என்கிற கோல்வளைக்கையம்மை

தீர்த்தம் : புட்கரணி

பதிகம் : சுந் 1

வழி : ஓமமாம்புலியூரிலிருந்து வடகிழக்கே கொள்ளிடம் வட கரையோரம் 5 கி.மீ.

சிறப்புக்கள் : பதஞ்சலி முனிவர் பூசித்த ஸ்தலம். கோயிலில் அத்திமரமும் வெள்ளெருக்கஞ் செடியும் இருக்கின்றன.

7 திருநாரையூர்

இறைவன் : சௌந்தரேசுரர்

இறைவி : திரிபுரசுந்தரியம்மை

தீர்த்தம் : காருண்ய தீர்த்தம்

மரம் : புன்னாகம்

பதிகம் : சம் 3, அப் 2

வழி : சிதம்பரத்துக்குத் (1) தென்மேற்கே 16 கி.மீ. சிதம்பரத்திலிருந்து மன்னார்குடிக்குப் போகும் வழியில் 2½ கி.மீ. சென்று, அங்கு வழியைவிட்டுத் தெற்கே திரும்பி 1¼ கி.மீ. சென்றால் இந்தத் தலத்தை அடையலாம்.

சிறப்புக்கள் : நாரை பூஜித்த ஸ்தலம். சிதம்பரத்திற் சேமித்து வைத்திருந்த தேவாரத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி மூலமாய் வெளிப்படுத்தருளிய கருணாகர மூர்த்தியாகிய பொல்லாப் பிள்ளையார் என்னும் விநாயக மூர்த்தி எழுந்தருளியிருக்கும் ஸ்தலம்.

8 திருக்கடம்பூர் (கரக்கோவில்)

இறைவன் : அமிர்தகடேசுரர்

இறைவி : சோதிமின்னம்மை

தீர்த்தம் : ஆதி தீர்த்தம்

பதிகம் : சம் 1, அப் 2

வழி : ஓமமாம்புலியூருக்கு வடமேற்கே 6 கி.மீ.

சிறப்புக்கள் : தேவேந்திரன் பூசித்து அமிர்தம் உண்டாகும் படி வரம்பெற்ற ஸ்தலம்; மூலஸ்தானம் ரதம், சக்கரம் குதிரையுடனிருக்கின்றது. இந்திரன் தன் கரத்தால் அகழ்ந்து கொண்டுபோக எத்தனித்ததாற் (கரக்கோவில்) ஆயிற்று. கணங்கள் பூசித்த ஸ்தலம்.

9 திருநல்லூர்ப் பெருமனம் என்பது ஆச்சாபுரம்

இறைவன் : சிவலோகத்தியாகேசர்

இறைவி: நங்கையுமையம்மை என்ற திருவெண்ணீற்றுமை யம்மை

தீர்த்தம்: பஞ்சாக்ர தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: சிதம்பரம் (1) விருந்து தெற்கே 7 கி.மீ. உள்ள கொள்ளிடம் புகைவண்டி நிலையத்திற்கு 5 கி.மீ

சிறப்புக்கள்: திருஞாந சப்பந்தமூர்த்தி நாயனார் திருக் கலியாணம் முடிந்தவுடன் மனைவியாருடன் ஆலயத்துக்குச் சென்று அங்கே ஒரு ஜோதி தோன்றக் ''காதலாகி'' என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை யோதி, தாமும் மனைவி யாரும், தங்களுடைய திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவந்த திருநீலநக்க நாயனார் முதலிய அடியார்களுடன், அந்த ஜோதியிற் றோன்றிய வாயில் வழியாய்ப் புகுந்து சிவசா யுஜ்ஜியம் அடைந்த ஸ்தலம். ''நல்லூரப் பெருமணம் புககிருந்தீ ரெனமப் போக்கருளீரே'' —''ஞாந சம்பந்தன் பெறுப்பதம்... உறும் பொருளாற் சொன்ன ஒண்டமிழ்'' என்பன சம்பந்த சுவாமிகளின் திருவாக்கு. சப்பந்த சுவாமிக் குத் தனிச் சந்நிதி இருக்கின்றது. கோயிலுக்கு எதிரிற் டஞ்சாக்கர தீர்த்தம் திருக்குளம் இருக்கின்றது.

10 திருமயேந்திரப்பள்ளி என்கிற கோயிலடிப்பாளையம்

இறைவன் : திருமேனியழகர்

இறைவி : வடிவாம்பிகை

தீர்த்தம் : மந்திரபுட்கரணி

பதிகம் : சம் 1

வழி : சிதம்பரத்திற்குத் (1) தெற்கே கொள்ளிடம் புகை வண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 5 கி.மீ. உள்ள ஆச்சார புரத்துக்கு வடகிழக்கே 6 கி.மீ.

சிறப்புக்கள் : சந்திரன், சூரியன், பிரமன், இந்திரன் ஆகிய வர்கள் வழிபட்ட ஸ்தலம்

11 தென்திருமுல்லைவாயில்

இறைவன் : முல்லைவனநாதர்

இறைவி : கோதையம்மை

தீர்த்தம் : சக்கர தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : சீர்காழிச்குக் கிழக்கே கடலோரத்தில் 14 கி.மீ.

சிறப்புக்கள் : தேவேந்திரனும், கார்க்கோடகனும், சுதர்ம னும் பூஜித்த ஸ்தலம். தேவி - கோதையம்மை - பூசித்து ஐந்தெழுத்து உபதேசம் பெற்ற ஸ்தலம்.

12 திருக்கலிக்காமூர் என்பது அன்னப்பன் பேட்டை

இறைவன் : சுந்தரேசுரர்

இறைவி : அழகம்மை

தீர்த்தம் : அப்புலி தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : தென்திருமுல்லை வாயி (11) லுக்குத் தென்மேற்கே 5 கி.மீ. திருவெண்காட்டிற்கு (15) வடகிழக்கே 5 கி.மீ. சாயாவனத்திலிருந்து (13) 6 கி.மீ.

சிறப்பு : பராசரருஷி பூசித்த ஸ்தலம்.

13 திருச்சாய்க்காடு என்பது சாயாவனம்

இறைவன்: சாயாவனேசுரர்

இறைவி: குயிலினு நன்மொழியம்மை

தீர்த்தம்: காவிரி

பதிகம்: சம் 1

வழி: சீர்காழிக்குத் தென்கிழக்கே 14 கி.மீ. வழியில் 11 கி. மீட்டரில் திருவெண்காடு உள்ளது.

சிறப்புக்கள்: உபமந்நியரிஷி பூசித்த ஸ்தலம். காசிக்குச் சமானமாகச் சொல்லும் 6 க்ஷேத்திரங்களில் ஒன்று. தேவி பெயர் கோஷாம்பாள் என்றும் சொல்லுகிறார்கள். கோயிலுக்கெதிரில் ஐராவத தீர்த்தம் இருக்கின்றது கோயிலை ஒட்டித் தேர் போன்ற விமானமொன்று சக்கிரத்துடன் இருக்கின்றது. இந்திரன் இக்கோயிலை விண்ணுலகுக்கு எடுத்துச் செல்ல முயன்றனனென்பர். இயற்பகை நாயனார் அவர் மனைவி இவர்களின் உற்சவ விக்கிரகங்கள் இருக்கின்றன.

14 காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சுரம்

இறைவன்: பல்லவனேசுரர்

இறைவி: சௌந்திர நாயகி

தீர்த்தம்: காவிரி

பதிகம்: சம் 1

வழி: சீர்காழிக்கு (18) தென்கிழக்கே 16 கி.மீ. திருவெண்காடு (15) 11 கி. மீட்டரிலும், திருச்சாய்க்காடு 14 கி.மீ. தூரத்தில் உள்ளன.

சிறப்புக்கள்: பல்லவராஜன் பூசித்த ஸ்தலம். இயற்பகை நாயனாரும், பட்டினத்துப் பிள்ளையாரும் திருவவதாரஞ் செய்தருளிய ஸ்தலம்.

திருச்சாய்க்காட்டுக் கோயிலுக்கும் பல்லவனீச்சுரத்துக் கோயிலுக்கும் ½ கி.மீ.

15 திருவெண்காடு

இறைவன்: சுவேதாரணியேசுரர்

இறைவி: பிரமவித்யாநாயகி

தீர்த்தம் : சோம, சூர்ய, அக்னி ஆகிய முக்குளம்

பதிகம் : சம் 3, அப் 2, சுந் 1

வழி : சீர்காழிக்கு (18) தென்கிழக்கே 11 கி.மீ. வைத்சுதீரன் கோயிலுக்குக் கிழக்கே 11 கி.மீ.

சிறப்புக்கள் : ஆதி சிதம்பரம், சுவேதாரணியம் எனவும் இத்தலத்தைக் கூறுவர் ஐந்து பிரகாரங்கள். கோயிலுள் வெளிப் பிரகாரத்தில் அக்கினி மூலையில் அக்கினி தீர்த்தமும், தெற்குப் பிரகாரத்திற் சூரிய தீர்த்தமும், வடக்குப் பிரகாரத்தில் தேவி கோயில் தீர்த்தம் என வழங்கும் சந்திர தீர்த்தமும் இருக்கின்றன. உட்பிரகாரத்தில் அகோர வீரபத்திரமூர்த்தி சந்நிதானமும் நடராஜர் சந்நிதானமும் உள்ளன. அகோர மூர்த்தி கையிற் சூலத்துடன் தெற்கு நோக்கி வீற்றிருக்கின்றார். ஞாயிற்றுக்கிழமை இரவுகளில் தரிசனம் விசேடம்: எதிரே காளி சந்நிதி இருக்கின்றது. நடராஜர் சந்நிதி சிதம்பரத்தைப் போலவே அமைந்து பிரபலமாயிருக்கின்றது.

இத்தலத்தில் மூன்று தீர்த்தங்களும், மூன்று மூர்த்திகளும் மூன்று விருக்ஷங்களும் விசேஷமென்கின்றார்கள். விருக்ஷங்கள் வில்வம், கொன்றை, ஆல்.

வெள்ளையானை பூஜைசெய்து பேறுபெற்ற ஸ்தலம், தேவேந்திரன் வழிபட்டுப் பூஜித்த ஸ்தலம். சிவபிரான் இத்தலத்தில் எம்மை மாய்வித்ததாக வால்மீகி ராமாயணத்திலும், சம்பந்தர் தேவாரத்திலும் கூறப்பட்டுள்ளன.

சோம, சூரிய, அக்கினி என்னும் முக்குளங்களில் ஸ்நாநஞ் செய்வோர்க்கு நினைத்த காரியம் தப்பாது சித்தியாகும். திருப்பெண்ணாகடத்து அச்சுத களப்பாளர் இங்கு வந்து முக்

குளத்தில் விதிமுறை மூழ்கி வழிபட்டு சுவேதவனப் பெருமாள் என்னும் மெய்கண்ட தேவரைப் பெற்றனர்.

16 கீழைத்திருக்காட்டுப்பள்ளி

இறைவன் : ஆரணிய சுந்தரேசுரர்

இறைவி: அகிலாண்ட நாயகி

தீர்த்தம்: அமிர்தப் பொய்கை என்னும் குளம்

பதிகம்: சம 1

வழி: சீர்காழி (18) யிலிருந்து தென்கிழக்கே காவிரிப்பூம்பட்டினம் வழியில் 11 கி.மீ. சென்று திருவெண்காட் (15) டைச் சேர்ந்து, அந்த மேலைக் கோபுரத்துக்கு மேற்கு 1½ கி.மீ. சென்றால் இதனை அடையலாம்.

சிறப்புக்கள்: விருத்திராசுரனைக் கொன்ற பழிபற்றித் திரிந்த தேவேந்திரன் அப்பழி நீங்கி வந்து தேவலோகத்தை ஆளவேண்டும் என்று இரந்து தேவர்கள் பூசித்த ஸ்தலம்.

இஃது ஆரணியேசுரர் கோயில் என வழங்குகின்றது. மேற்குப் பார்த்த சந்நிதி. கோயில் சிறிது. தக்ஷிணாமூர்த்தி சந்நிதிக்கு மேற்கில் கடல் ஒலி போன்ற ஒலி மதிற் சுவரிலிருந்து கேட்கப்படுகிறது.

17 திருக்குருகாவூர் என்ற வெள்ளடை

இறைவன் : வெள்ளடையீசுரர், சுவேதரிஷபேசுரர்

இறைவி : காவியங்கண்ணியம்மை, நீலோற்பல விசாலாக்ஷி

பதிகம் : சம் 1, சுந் 1

இது 'திருக்கடாவூர்' என வழங்குகின்றது.

வழி : சீர்காழி (18)க்கு கிழக்கில் 6 கி.மீ. திருமுல்லைவாயிலுக்கு (11) போகும் வழியில் 5 கி.மீட்டரில் தெற்கே திரும்பி ¾ கி.மீ.

சிறப்புக்கள் : சீர்காழியிலிருந்து வந்த சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் அவருடன் வந்த பரிசனங்களுக்கும் சிவபெருமான் கட்டமுதுந் தண்ணீருங் கொடுத்தருளிய ஸ்தலம். இவ்விழா சித்திரை பௌர்ணமியில் நடக்கின்றது. கோயிலுக்கு வெளியே 'பாற்கிணறு' தீர்த்தம். தை அமாவாசையில் சுவாமி தீர்த்தம் கொடுக்கும் சமயத்தில் தீர்த்தம் பால் நிறமாதல் அற்புதம்.

வெள்விடை பூசித்ததால் சுவாமி வெள்விடை நாதர் என்பர். வெள்ளடை என்பது பரமாகாசம். "வேதனை தீர்சரும் வெள்ளடை" திருமந்திரம் (1157)

18 ஸ்ரீகாழி

இறைவன் : பிரமபுரீசுரர், திருத்தோணியப்பர்

இறைவி : திருநிலைநாயகி, பெரிய நாயகி

தீர்த்தம் : பிரம தீர்த்தம், கழுமல ஆறு

பதிகம் : சம் 67, அப் 3, சுந் 1

வழி : புகைவண்டி நிதையம் உள்ளது. சிதம்பரத்திற்கு (1) தெற்கே 17 கி.மீ.

சிறப்புக்கள் : திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்தருளிய திருப்பதி. அவரொடு திருநீலகண்டப் பெரும்பாண நாயனார் சேர்ந்து அவர் அருளிச்செய்யும் தேவாரத் திருப்பதிகங்களை யாழில் வாசிக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றிருந்த ஸ்தலம். கணநாத நாயனார் வசித்திருந்த ஸ்தலம். ஸ்ரீகாழி, பிரமபுரம், தோணிபுரம், வேணுபுரம், சிரபுரம், புகலி, வெங்குரு, பூந்தராய், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம் என்னும் 12 திருநாமங்களை உடைய ஸ்தலம்.

பிரமன் பூசித்ததால் பிரமபுரம் எனவும், அமரர்கள் புகலிடமாகப் புகுந்த காரணத்தாற் புகலி எனவும், பிரளய

காலத்தில் தோணி போல மிதந்த காரணத்தால் தோணி புரம் எனவும் இத்தலத்துக்குப் பெயர்கள் வந்தன.

திருஞான சம்பந்தருக்குத் தனி ஆலயம் இருக்கின்றது. அவர் ஞானப்பாலுண்ட தடாகம் கோயிலுக்குள் இருக்கின்றது. கோயிலுக்குள் மலைக்கோயில் உச்சியில் சட்டைநாதர் ஆலயமும் அதற்கு அடுத்த கீழ்நிலையில் தோணியப்பர் சந்நிதியுமிருக்கின்றன.

II திருக்காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி)

மூலவர்: த்ரிவிக்ரமன், தாடாளன். உலகளந்த திருவுருவம், நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: த்ரிவிக்ரம நாராயணன்

தாயார்: மூலவர்: லோகநாயகி, உத்ஸவர்-மட்டவிழ்குழலி

தீர்த்தம்: சங்க புஷ்கரிணி, சக்ரதீர்த்தம்

விமானம்: புஷ்கலாவர்த்த விமானம்

ப்ரத்யக்ஷம்: அஷ்டசோண மகரிஷி

வழி: சீர்காழி புகைவண்டி நிலையத்திலிருந்து ¾ கி.மீ. தூரத்திலுள்ளது.

சிறப்புக்கள்: பெருமாள் தமது இடதுகாலைத் தூக்கி விண்ணை அளக்கிறார். இவ்வூரில் திருமங்கையாழ்வார் திருஞானசம்பந்தரை வாதில் வென்று அவருடைய வெற்றி வேலைப் பரிசு பெற்றதுடன் "கடியுண்ட நெடுவாளை" என்ற ஓர் அழகிய பாடலாலும் புகழ் பெற்றார். நாலுகவிப் பெருமாள் என்ற விருதையும் பெற்றார்.

மணவாள மாமுனிகளின் மங்களா சாஸனம் பெற்றவர் தாளாளன்.

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 3, 4, பதிகம்.

III திருத்தெற்றியம்பலம்

மூலவர் : செங்கண்மால், ரங்கநாதன், ஸ்ரீ லக்ஷ்மீரங்கர் என்ற திருநாமங்கள், 4 புஜங்கள், புஜங்கசயனத் திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : செங்கமலவல்லி

தீர்த்தம் : ஸுர்ய புஷ்கரிணி

விமானம் : வேத விமானம்

ப்ரத்யக்ஷம் : நாச்சியார், அநந்தாழ்வார்

வழி : சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ள திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது.

சிறப்புக்கள் : பள்ளிகொண்ட பெருமாள் என்ற பெயரால் தான் பெருமாள் ப்ரஸித்தம்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 4-4 பதிகம்

IV திருமணிக்கூடம்

மூலவர்: வரதராஜப் பெருமாள் (மணிக்கூட நாயகன்) நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார்: திருமாமகள் நாச்சியார் (ஸ்ரீதேவி), பூதேவி, தனிக்கோயில் நாச்சியார் கிடையாது.

தீர்த்தம்: சந்த்ர புஷ்கரிணி

விமானம்: கனக விமானம்

ப்ரத்யக்ஷம்: பெரிய திருவடி, சந்த்ரன்

வழி: திருநாங்கூர் எல்லையிலிருந்து கிழக்கே ½ கி.மீ. தூரத்தில் உள்ளது.

குறிப்பு: அர்ச்சகரை திருநாங்கூரிலிருந்து அழைத்துச் செல்ல வேண்டும்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 4-5 பதிகம்

V திருச்செம்பொன்செய் கோவில் (திருநாங்கூர்)

மூலவர்: பேரருளாளன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: ஹேமரங்கர், செம்பொன்னரங்கர்

தாயார்: அல்லிமாமலர் நாச்சியார்

தீர்த்தம்: ஹேம புஷ்கரிணி, கனக தீர்த்தம்

விமானம்: கனக விமானம்

ப்ரத்யக்ஷம்: ருத்ரன்

வழி: திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது.

சிறப்புக்கள்: இராவணவதத்திற்குப் பிறகு இராமன் இந்தப் பூமியில் த்ருடநேத்ரர் என்ற முனிவர் ஆஸ்மரத்தில் தங்கினார். முனிவர் கூறியபடி தங்கத்தில் பசு செய்து அதில் நான்கு நாட்கள் தங்கி ஒரு பிராமணனுக்குத் தானம் செய்தார். அதைக் கொண்டு அந்த பிராமணான் இக்கோயிலைக் கட்டியபடியால் செம்பொன்செய் கோயில் என்ற பெயர் பெற்றது.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 4,3 பதிகம்

VI திரு அரிமேய விண்ணகரம்

மூலவர்: குடமாடுகூத்தன் (தைலக் காப்புத் திருமேனி) வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: சதுர்புஜங்களுடன் கோபாலன்

தாயார்: அம்ருதகடலல்லி

தீர்த்தம்: கோடி தீர்த்தம், அம்ருத தீர்த்தம்

விமானம்: உச்சச்ருங்க விமானம்

ப்ரத்யக்ஷம்: உதங்க முனிவர்

வழி: திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது

விசேஷம்: தை மாதம் அமாவாசைக்கு மறுநாள் கருட ஸேவை மிக விசேஷம்.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 3, 10ம் திருப்பதிகம்

VII திருமணி மாடக்கோயில்

மூலவர்: நாராயணன், நந்தாவிளக்கு, வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மணடலம்

உத்ஸவர்: 1. நாராயணன் 2. அளத்தற்கரியான் என்று வீற்றிருக்கும் மற்றொரு உத்ஸவரும் உண்டு,

தாயார்: புண்டரீகவல்லித் தாயார்

தீர்த்தம்: இந்திர புஷ்கரிணி, ருத்ர புஷ்கரிணி

விமானம்: ப்ரணவ விமானம்

ப்ரத்யக்ஷம்: இந்திரன், ஏகாதசருத்ரர்கள்

வழி: திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது.

சிறப்புக்கள்: தை அமாவாசைக்கு மறுநாள் திருநாங்கூரில் "கருடசேவை நடக்கும். திருநாங்கூரைச் சேர்ந்த" திவ்விய தேசத்துப் பெருமாள்களும் கருட வாகனங்களில் எழுந்தருள்வார்கள்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 3-8 பதிகம்

VIII திருவண்புருடோத்தமம்

மூலவர் : புருஷோத்தமன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : புருஷோத்தம நாயகி

தீர்த்தம் : திருப்பாற்கடல் தீர்த்தம்

விமானம் : ஸஞ்ஜீவிவிக்ரஹ விமானம்

ப்ரத்யக்ஷம் : உபமன்யு

வழி : திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது

சிறப்புக்கள் : உத்ஸவப் பெருமாளின் திருவுருவம் மிக அழகியது. தை அமாவாசைக்கு மறுநாள் நடக்கும் கருடசேவை மிக விசேஷம்.

குறிப்பு: திருமணிமாடக் கோவில், திருஅரிமேய விண்ணகரம், திருத்தெற்றியம்பலம், திருவண் புருடோத்தமம் இந்நான்கும் திருநாங்கூரின் ஒரே தெருவின் பக்கங்களில் உள்ளன. உத்ஸவத்தின் போது வரும் யாத்ரீகர்களுக்கு இராமனுஜக் கூடங்களில் பிரஸாதம் கொடுக்கிறார்கள்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 4-2 பதிகம்

IX திருவைகுந்த விண்ணகரம்

மூலவர்: வைகுந்த நாதன், தாமரைக் கண்ணுடைய பிரான், உபய நாச்சிமார்களும் வீற்றிருக்கின்றனர். கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: உத்ஸவர்களும், அதே கோலத்தில் உள்ளனர்.

தாயார்: வைகுந்தவல்லி (தனிக்கோவில் நாச்சியார் இல்லை)

தீர்த்தம் : லக்ஷ்மி புஷ்கரிணி, உதங்க புஷ்கரிணி, விரஜா தீர்த்தம்

விமானம் : அனந்த ஸத்யவர்த்தக விமானம்

ப்ரத்யக்ஷம் : உபரி சரவஸு, உதங்க மஹரிஷி

வழி : திருநாங்கூரிலேயே உள்ளது

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி **3-9** பதிகம்

X திருக்காவளம்பாடி

மூலவர் : கோபாலகிருஷ்ணன் (ராஜகோபாலன்) ருக்மணீ ஸத்யபாமாவுடன், நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : மடவரல் மங்கை, செங்கமல நாச்சியார், நாச்சியார் ஸந்நிதி இல்லை

தீர்த்தம் : தடமலர்ப் பொய்கை

விமானம் : ஸ்வயம்பு விமானம்

ப்ரத்யக்ஷம் : சேனைத் தலைவர், ருத்ரன்

வழி : சீர்காழி புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 11 கி.மீ. வைத்தீசுரன் கோயில் புகைவண்டி நிலையத்திலிருந்து 8 கி.மீ.

சிறப்புக்கள் : திருமங்கையாழ்வார் அவதாரஸ்தலமான திருக்குறையலூர், மங்கை மடம், இரண்டும் இத்தலத்திற்கு மிக அருகில் உள்ளது. தை அமாவாசைக்கு மறுநாள்

திருநாங்கூரில் நடக்கும் கருடஸேவை வைபவத்தில் இந்த ஊர்ப் பெருமாளும் கருட வாஹனத்தில் எழுந்தருளுவார்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 4, 6 பதிகம்

XI திருப்பார்த்தன்பள்ளி

மூலவர்: தாமரையாள் கேள்வன், நின்ற திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: பார்த்த ஸாரதி

தாயார்: தாமரை நாயகி

தீர்த்தம்: சங்க ஸரஸ் (கங்கா தீர்த்தம்)

விமானம்: நாராயண விமானம்

ப்ரத்யக்ஷம்: பார்த்தன், வருணன், ஏகாதசத்ருரர்கள்

வழி: சீர்காழியிலிருந்து 11 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருவெண்காட்டிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது.

சிறப்புக்கள்: மூலவர், உற்சவர் இருவருக்குமே ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி, என்று மூன்று தேவிகள் உண்டு.

கோலவல்லி ராமன் என்று மற்றொரு அழகிய உத்ஸவர் உண்டு. சங்கு, சக்ர, கதையுடன் நிற்கும் இவருக்கு வில்லும், அம்பும் சார்த்தப்பட்டுள்ளார் இவரது மூலவர் சிறிது தூரத்தில் ஒரு தோப்பில் தனிக்கோயிலில் இருக்கிறாராம். இங்கே பார்த்தனுக்குத் தனி ஸந்நிதி உள்ளது. அர்ச்சகர் கோவில் பக்கத்திலேயே குடி இருக்கிறார். தை மாதம் புஷ்ய நக்ஷத்திரத்தன்று தீர்த்தவாரி விசேஷம். சரம சுலோகார்த்தம் விளங்கிய இடம்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 1-2 பதிகம்

XII திருவெள்ளக்குளம் (அண்ணன் கோவில்)

மூலவர்: ஸ்ரீநிவாஸன், கண்ணன், நாராயணன், அண்ணன் பெருமாள், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார்: அலர்மேல் மங்கை, உத்ஸவர், பத்மாவதி, பூவார் திருமகள்

தீர்த்தம்: திருவெள்ளக்குளம்

விமானம்: தத்வத்யோதக விமானம்

ப்ரத்யக்ஷம்: ருத்ரர், ச்வேதராஜன்

வழி: சீர்காழி புகைவண்டி நிலையத்தில் இருந்து 11 கி மீ.
சிறப்புக்கள்: இது திருநாங்கூர் திருப்பதிகள் 11ல் ஒன்று. இத்தலத்தைத் தென் திருப்பதி என்று கூறுவர். வேங்கடேசப் பெருமானுக்கு வழிபாடு செய்து பெருமாளுக்கான பிரார்த்தனைத் கல்யாணங்களையும் இங்கே செய்கின்றனர். இத்தலத்தில் குமுதவல்லித்தாயார் குமுதப்பூவுடன் ஒரு பிராம்மணரால் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டு, திருமங்கை ஆழ்வார்க்கும் குமுதவல்லிக்கும் திருமணமான தாக வரலாறு.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 4-7 பதிகம்

XIII திருத்தேவனார் தொகை (கீழச்சாலை)

மூலவர்: தெய்வ நாயகன். நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: மாதவப் பெருமாள்

தாயார்: கடல் மகள் நாச்சியார்

உத்ஸவர்: மாதவ நாயகி

தீர்த்தம்: சோபன புஷ்கரிணி, தேவ சபா புஷ்கரிணி

விமானம்: சோபன விமானம்

ப்ரத்யக்ஷம்: வஸிஷ்டர்

வழி: சீர்காழி புகைவண்டி நிலையத்திலிருந்து தென் கிழக்கே 6 கி.மீ. சீர்காழி திருவெண்காடு பஸ்மார்க்கத்தில் திருவாலியில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. திரு நாங்கூரிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ளது.

சிறப்புக்கள்: இங்கு, தேவர்கள் கூடிப் பேசியதாக வரலாறு. இதுவுப் திருநாங்கூர் 11 திருப்பதிகளில் ஒன்று.

குறிப்பு: திருவெள்ளக்குளம், திருக்காவளம் பாடி அர்ச்சகர் இவ்வூரிலும் கைங்கர்யம் செய்வதால், ஸேவிக்கும் நேரத்தை முன் கூட்டியே அமைத்துக்கொள்ள வேண்டும்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி,- பெரிய திருமொழி 4,1 பதிகம்

XIV திருவாலியும் திருநகரியும்

மூலவர்: லக்ஷ்மி ந்ருஸிப்ஹர், வயலாளி மணவாளன். வீற்றிருந்த திருக்கோலம், மேற்கே திருமுகமண்டலம்

உத்ஸவர்: திருவாலி நகராளன்

தாயார்: அம்ருதகடவல்லி

தீர்த்தம்: இலாக்ஷணி புஷ்கரிணி

விமானம் : அஷ்டாக்ஷர விமானம்

ப்ரத்யக்ஷம் : திருமங்கையாழ்வார், அலாதி நிகஞ்சமப்ரஜாபதி

வழி : சீர்காழி திருவெண்காடு பேருந்து சாலையில் உள்ளது. சீர்காழி நிலையத்திலிருந்து தென்கிழக்கே

9½ கி.மீ. திருநாங்கூரிலிருந்து சுமார் 9½ கி.மீ. கீழச்சாலையி லிருந்து 1 கி.மீ.

சிறப்புக்கள் : இது திருமங்கையாழ்வாரின் தேவி குமுதவல்லி நாச்சியார் வளர்க்கப்பட்ட இடம்.

திருநகரி

மூலவர் : வேதராஜன் (வயலாளி மணவாளன்) வீற்றிருந்த திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம்

உத்ஸவர் : கல்யாண ரங்கநாதன்

தாயார் : அமிர்தவல்லி

வழி: திருவாலியில் இருந்து சுமார் 5 கி.மீ. தூரம் நெப்பத் தூர் வழியாகப் போக வேண்டும். திருநாங்கூரிலிருந்து நேர் பாதையும் உள்ளது.

சிறப்புக்கள் : திருமங்கையாழ்வார் தோன்றிய இடம். அவர் ஆராதித்த 5 நரசிம்ஹர்களில் இரண்டு மூர்த்திகள் இங்கே உள்ளனர் கோவிலுக்குள் திருமங்கையாழ்வாருக்கு சந்நிதி உள்ளது. ஆழ்வார் வேடனுக்கு உண்டான வேடத் துடன் காட்சி தருகிறார். ஆழ்வாரின் பக்கத்தில் அவர் ஜீவிய காலத்தில் ஆராதித்து வந்த "சிந்தனைக்கினியான்" என்ற மிகச் சிறிய உத்ஸவமூர்த்தி பக்கத்தில் அமர்ந்துள் ளார். இங்கிருந்து சுமார் ¾ கி.மீ. தூரத்தில் உள்ள வேத ராஜபுரம் என்ற இடத்தில்தான் திருமங்கையாழ்வார் பெரு மாளை வழிப்பறி செய்ய, பெருமாள் இவருக்குத் திருமந்த்ர உபதேசம் செய்தது. இச்செய்தியை உணர்த்தும் வேடுபறி உத்ஸவம் இங்கே நடக்கின்றது. ரெங்கநாதப் பெருமாள புதிய இளந்தப்பதிகளாக ஆழ்வாருக்குக் காட்சி அளித்துத் தடுத்தாட்கொண்ட இடம். கல்யாண திருக்கோலத்தில் பகவான் காட்சி அளித்ததால் கல்யாண ரெங்கநாதர் எனப் பெயர் வந்தது. ஸ்ரீ மணவாள மாமுனிகள் பலமுறை எழுந் தருளி மங்களா சாஸனம் செய்த இடம்.

குறிப்பு : திருவாலியும், திருநகரியும் ஒரு திவ்ய தேசமாகப் பாடப்பட்டிருக்கிறது.

மங்களா சாஸனம்

1. குலசேகர ஆழ்வார்
2 திருமங்கையாழ்வார்
} பெருமாள் திருமொழி 8-9 பெரிய திருமொழி 3-5 பதிகம் முதலியன.

19. திருக்கோலக்கா

என்பது திருத்தாளமுடையார் கோயில்

இறைவன்: சத்தபுரீசுரர்

இறைவி: ஓசை கொடுத்த நாயகி

தீர்த்தம்: சூரிய தீர்த்தம்

பதிகம்: சம் 1. சுந் 1

வழி: சீர்காழி (18) புகைவண்டி நிலையத்துக்குத் தென் கிழக்கு சீர்காழி கோயிலுக்கு மேற்கே ¾ கி.மீ.

சிறப்புக்கள்: திருஞான சம்பந்த மூர்த்தி பொற்றாளம் பெற்ற ஸ்தலம்.

20. புள்ளிருக்கு வேளூர்

என்பது வைத்தீசுரன் கோயில்

இறைவன்: வைத்தியநாதர்

இறைவி: தையல் நாயகி

தீர்த்தம்: சித்தாமிர்த தீர்த்தம்

மரம்: வேம்பு

பதிகம்: சம் 1, அப் 2

வழி: புகைவண்டி நிலையம் சீர்காழி (18) தென்மேற்கு 5¾ கி.மீ.

சிறப்புக்கள் : சம்பாதி-ஜடாயு, இருக்கு வேதம், முருகக் கடவுள் இவர்கள் பூஜித்தமையின் இப்பெயர் வந்தது. ''புள்ளினார் பணி புள்ளிருக்கு வேளூர்''-என்பது தேவாரம். சூரியனும் பூஜித்த ஸ்தலம். இந்தத் தல ஆலயத்துக்குள் இருக்கும் முத்துக் குமாரஸ்வாமி சந்நிதி மிகப் பிரபலமானது. கிருத்திகைத் தினங்களில் அடியார்கள் திரளாகச் செல்கின்றார்கள்.

21 திருக்கண்ணார்கோவில்

இறைவன்: கண்ணாயிரநாதர்

இறைவி: முருகுவளர் கோதைநாயகி

தீர்த்தம்: இந்திர தீர்த்தம், மணிகர்ணிகை

பதிகம்: சம் 1

வழி: வைத்தீசுரன் கோயிலுக்குத் (20) தென்கிழக்கு 2 கி.மீ. தேவேந்திரன் சாபம் நீங்கி ஆயிரம் கண் பெற்ற ஸ்தலம். வாமனர் பூசித்த தலம். கோயில் சிறிது. தீர்த்தம் எதிரிலுள்ளது.

22 திருப்புன்கூர்

இறைவன்: சிவலோக நாதர்

இறைவி: சொக்கநாயகியம்மை

மரம்: புங்க மரம்

பதிகம்: சம் 1, அப் 1, சுந் 1

வழி: வைத்தீசுரன் கோயில் (20) புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே 5 கி.மீ. சீர்காழி (18) தென்மேற்கு 3 கி.மீ.

சிறப்புக்கள்: திருநாளைப் போவார் (நந்தனார்) நேரே தரிசிக்கும் பொருட்டு, ஸ்வாமி தமக்கு முன்னிருந்த நந்தி

தேவரைச் சற்று விலகியிருக்கும்படி செய்தருளிய ஸ்தலம். நந்தனாருடைய சிலை யுருவம் வெளிப் பிராகாரத்திற் கோபுரத்துக்கு அருகில் இருக்கின்றது. கையிற் கஞ்சிக் கலசமும் மண் வெட்டியும் இருக்கின்றன. புங்கமரம் ஸ்தல விருக்ஷமாதலால் 'கரஞ் சாரண்யம்' என்று தலத்துக்குப் பெயர். வெளிப் பிராகாரத்தில் இவ்விருக்ஷமும், கோயிலுக்குப் பின்புறத்தில் திருக்குளமும் இருக்கின்றன.

சுந்தரமூர்த்தி நாயனாரும், ஏயர்கோன் கலிக்காம நாயனாரும் நண்பர்களான பின்பு, இருவருமாகச் சென்று வணங்கிய ஸ்தலம். கலிக்காம நாயனார் அநேக திருப் பணகள் செய்த ஸ்தலம். அவர் பொருட்டுச் சிவபெருமான் ஈராறுவேலி இருமுறை கொண்டு, மழையின்றி உயிர்கள் வருந்திய காலத்து, மழை பெய்வித்து உலகை உய்வித்த ஸ்தலம். இவ்வுண்மை இத்தலத்துத் தேவாரப் பதிகத்தில் "வையக முற்றும்" என்னும் இரண்டாவது செய்யுளானும், "ஏத நன்னில மீரறு வேலியேயர் கோன்" என மூன்றாஞ் செய்யுளில் உள்ள அடைமொழியானும், கோயிற்றிருப் பண்ணியர் விருத்தத்தில் நம்பியாண்டார் நம்பி கூறுதலானும் நன்கு விளங்கும். கவசம் சாத்திய லிங்கமூர்த்தி புனுகு சட்டம் சாத்தினால் மாத்திரம் கவசமின்றித் தரிசிக்கலாம். திரிபுரம் எரிபட்டபோது எஞ்சிய மூவரில் ஒருவன் இறைவன் நடமாடும் பொழுது மணிமுழா முழக்குவன் எனச் சுந்தரர் இந்தத் தலத்துப் பதிகத்திற் கூறியபடி நடராஜ மூர்த்தியின் தெலமேல்பால் ஒரு உருவம் மணிமுழா முழக்குவதைக் காணலாம்.

கலிக்காம நாயனார் ஊராகிய திருப்பெருமங்கலம் திருப் புன்கூருக்கு வடக்கு $1\frac{3}{4}$ கி.மீட்டரில் இருக்கின்றது. தெற்கு $1\frac{3}{4}$ கி.மீட்டரில் திருநாளைப் போவார் (நந்தனார்) ஊராகிய 'ஆதனூர்' இருக்கின்றது.

23 கருப்பறியலூர்

இறைவன் : குற்றம் பொறுத்த நாதேசுரர்

இறைவி : கோல்வளையம்மை

தீர்த்தம் : இந்திர தீர்த்தம், சூரிய தீர்த்தம்

மரம்: கொகுடிமுல்லை

பதிகம்: சம் 1, சுந் 1

வழி: வைத்தீசுரன் கோயில் (20) புகைவண்டி நிலையத்திலிருந்து திருப்புன்கூர் (22) வழியாக 5 கி.மீ.

சிறப்புக்கள்: இத்தலம் 'மேலைக்காழி' என்றும், 'தலைஞாயிறு' என்றும் வழங்கும்.

ஆலயத்துக்குக் 'கொகுடிக் கோயில்' என்று பெயர். கொகுடிமுல்லை படரும் மரமும் லிங்கமும் பிராகாரத்தில் உள்ளன. இத்தலத்து அந்தணர்களைத் தேவாரத்தில் விசேஷித்துச் சொல்லியிருக்கின்றது.

ஒருகால் தேவேந்திரன் இறுமாப்பாய்க் கயிலைக்குப் போக, சிவபெருமான் பூதவடிவமாய் அவனுக்கு முன் தோன்ற, அதை உணராது தேவேந்திரன் குலிசத்தை அவர் மேல் எறிந்தபொழுது, அவர் கோபங்கொள்ள, தேவேந்திரன் தன் குற்றத்தைப் பொறுக்கவேண்டுமென்று வணங்கிப் பூசித்த ஸ்தலம். இக்காரணத்தாற் சுவாமிக்குக் 'குற்றம் பொறுத்த நாதர்' என்ற பெயர் வந்தது.

சீர்காழியிற்போல மேலே ஏறிப் பார்வதி பரமேசுரரையும், அதன் மேலும் ஏறிச் சட்டை நாதரையும் பார்க்கலாம். தெற்குப் பிரகாரத்திலிருந்து சட்டநாதரை தரிசிக்கலாம்.

திருக்கருப்பறியலூருக்கு வடக்கே $1\frac{3}{4}$ கி.மீட்டரில் குரக்குக்கா (24) இருக்கின்றது.

24 குரக்குக்கா

இறைவன் : குந்தள நாதர் (குந்தளேசுரர்)

இறைவி : குந்தள நாயகி

தீர்த்தம் : சுந்தர தீர்த்தம்

பதிகம் : அப் 1

வழி : திருக்கருப்பறியலூருக்கு வடக்கே 1½ கி.மீ. ஆற்றைக் கடக்க வேண்டும்.

சிறப்பு : ஹநுமார் பூசித்த ஸ்தலம். ஹநுமார் திருவுருவங் கள் உள்ளன.

25 திருவாளொளிபுற்றூர் (திருவாழ்கொழிபுற்றூர்)

இறைவன் : மாணிக்க வண்ணர்

இறைவி : வண்டார் பூங்குழலம்மை

தீர்த்தம்: பிரம தீர்த்தம்

மரம்: வாகை மரம்

பதிகம் : சம் 2, சுந் 1

வழி : வைத்தீசுரன் கோயிலுக்கு (20) மேற்கு 3 கி.மீட்டரி லுள்ள திருப்புன்கூருக்கு (22) மேற்கே 3 கி.மீ. இலுப்பைப் பட்டி (26)லிருந்து வைத்தீசுரன் கோயில் போகும் வழியில் 5 கி.மீ. சென்று தெற்கே ¾ கி.மீ. போக வேண்டும்.

சிறப்புக்கள் : விஷ்ணுமூர்த்தி மாணிக்கத்தை வைத்துப் பூஜித்த ஸ்தலம். அதனால் ஸ்தலத்துக்கு அரதனபுரம் எனவும் பெயருண்டு. வண்டு பூஜித்த ஸ்தலம். விஜயனுடைய கைவாளை ஸ்வாமி ஒரு புற்றில் ஒளித்து வைத்த ஸ்தலம். அக்காரணத்தால் 'வாள் ஒளிபுற்றூர்' என்னும் பெயர் வந்தது. ''உன் கரவாள் நின்ற வாகையி லயற் புற்றொளித் தனன்''—என்பது ஸ்தலபுராணம். பஞ்சவர் லிங்கங்களும் திரௌபதி பூசித்த வலம்புரி விநாயகரும், எதிரில் நச்சுப் பொய்கையும் காணத் தகுவன. துர்க்கை சந்நிதி விசேடம்.

வாசுகி புற்றிலிருந்து வழிபட்டு ஆபரணமாகும் பேறு பெற்றது.

26 திருமண்ணிப்படிக்கரை என்பது இலுப்பைப்பட்டு

இறைவன்: *நீலகண்டர்*

இறைவி: *அமிர்தகரவல்லியம்மை*

மரம்: இலுப்பை

தீர்த்தம்: *அமிர்த தீர்த்தம்*

பதிகம்: *சுந் 1*

வழி: வைத்தீசுரன் கோயில் (*20*) க்கு மேற்கு *12¾* கி.மீ. வழியில் *3* கி.மீ. திருப்புன்கூரும் (*22*) அப்பால் 5 கி.மீ. திருவாளொளி புற்றூரும் (*25*) இருக்கின்றன. பந்தணை நல்லூருக்கு (*35*) கிழக்கு *11* கி.மீ. குறுக்கைக்கு (*30*) வடக்கு 6 கி.மீ.

சிறப்புக்கள்: ஸ்தல விநாயகர்-வலம்புரி விநாயகர், பாண்டவர் ஐவரும் பூஜித்த லிங்கங்கள் உள்ளன.

சிவபெருமான் ஆலகால விஷத்தை யருந்திய பொழுது, உமாதேவியார் அவருடைய கண்டத்தைப் பிடிக்க, அவர் அவ்விஷக் கறையைத் தமது கண்டத்திற் காட்டியருளிய ஸ்தலம்.

27 திருக்கடைமுடி

இறைவன்: *கடைமுடி நாதேசுரர்*

இறைவி: *அபிராமியம்மை*

பதிகம்: *சம் 1*

இது கீழையூர் எனவும் வழங்குகின்றது.

வழி: ஆனந்த தாண்டவபுரம் புகைவண்டி நிலையத்துக்கு வடகிழக்கே *3* கி.மீ. திருநின்றியூருக்குத் தென் கிழக்கு 6 கி.மீ. நனிபள்ளிக்கு வடமேற்கே 1¾ கி மீ.

சிறப்பு : பிரமன் பூசித்த ஸ்தலம். மேற்குப் பார்த்த சந்நிதி.

28 திருநின்றியூர்

இறைவன்: மகாலக்ஷ்மீசுரர்

இறைவி: உலகநாயகி

பதிகம்: சம் 1, அப் 1, சுந் 2

வழி : மாயூரத்துச்கு வடக்கிலுள்ள ஆநந்த தாண்டவபுரம் புகை நிலையத்துக்கு வடகிழக்கே 3 கி.மீ.

சிறப்புக்கள் : இலக்குமி பூசித்த ஸ்தலம். பரசுராமன் உருவம் உள்ளது. லிங்கமூர்த்தியின் சிரசில் வெட்டுப்பட்ட பள்ளம் இருக்கிறதாம். ஓர் அரசன் வெளிப்பட்டனராம்.

29 திருநீடூர்

இறைவன் : அருட்சோம நாதேசுரர், கானநிர்த்த சங்கரர்

இறைவி : வேயுறு தோளியம்மை

மரம்: மகிழமரம்

தீர்த்தம் : செங்கழு நீரோடை

பதிகம் : சுந் 1

வழி : மாயூரம் புகைவண்டி நிலையத்திலிருந்து $1\frac{3}{4}$ கி.மீ. தூரம்

சிறப்புக்கள் : இங்கே முனையடுவார் நாயனார் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்து வந்து முத்தி பெற்றனர். இவருடைய உற்சவ உருவம் உளது.

ஊழிக் காலத்திலும் உலவாது நீடித்திருக்குந் தலமாதலின் இத்தலத்துக்கு நீடூர் என்னும் பெயர் எய்தியது. இந்திரன், சூரியன், சந்திரன், நண்டு, காளி இவர்கள் பூசித்த ஸ்தலம். இதற்கு வகுளாரணியம், மகிழாரணியம்

மகிழவனம் என்றும் பெயர். ஆவணி ஞாயிற்றுக் கிழமைகளில் சூரிய பூஜை.

XV திருஇந்தளூர் (திருவிந்தளூர்)

மூலவர்: பரிமள ரங்கநாதன், மருவினிய மைந்தன் என்றும் திருநாமம், சுகந்தவன நாதன், வீரசயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: பரிமள ரங்க நாயகி, சந்த்ரசாப விமோசன வல்லி, புண்டரீக வல்லி என்ற பெயர்கள்.

தீர்த்தம்: இந்து புஷ்கரிணி

விமானம்: வேதசக்ர விமானம்

பிரத்யக்ஷம்: சந்திரன்

வழி: இது மாயவரம் முனிஸிபாலிட்டியிலேயே ஒரு பகுதி. காவேரியின் வடகரையிலுள்ளது.

சிறப்புக்கள்: இதனைச் சுகந்தவன க்ஷேத்திரம் என்றும் சொல்வார்கள். பெருமாளுக்குச் சயனத்திருக்கோலத்தில் 4 புஜங்கள் இருக்கின்றது. தலைமாட்டில் காவேரித் தாயாரும், கால்மாட்டில் கங்கைத்தாயாரும் அமர்ந்திருக்கின்றனர். ஐப்பசி மாதம் முழுவதும் இங்கு விழா நடக்கும். காவேரியும், சமுத்திரமும் சங்கமம் ஆகும் இடத்தில் கடைமுகஸ்நானம். முடவன் முழுக்கு ஸ்நானம் மிகவும் முக்கியத்துவம். இந்த விழாவுக்கு யாத்ரீகர்கள் வந்து போவது, கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 4-9 பதிகம்

30 திரு அன்னியூர் என்பது பொன்னூர்

இறைவன்: ஆபத்சகாயேசுரர்

இறைவி: பெரிய நாயகி

தீர்த்தம்: வருண தீர்த்தம்

மரம்: எலுமிச்சை

பதிகம்: சம் 1, அப் 1

வழி: திருநீடூருக்கு (29) மேற்கே 5 கி.மீ.

சிறப்புக்கள்: வருணன் பூசித்த ஸ்தலம். பங்குனி (24-28) சூரிய பூஜை. இதற்கு மேற்கே 4 கி.மீ. திருவேள்விக்குடி இருக்கிறது.

31 திருவேள்விக்குடி

இறைவன் : கலியாண சுந்தரேசுரர்

இறைவி : பரிமளசுகந்த நாயகி

பதிகம் : சம் 1, சுந் 1

வழி : காவிரி தென்கரையிலிருக்கும் மாயூரத்தின் தென் மேற்கே 9 கி.மீ.

சிறப்புக்கள் : ஓர் ராசகுமாரனுக்கு மணம்புரிய நிச்சயத் திருந்த பெண்ணை, மணம் நிறைவேறுமுன் அவள் தாய் தந்தையர் இறக்கவே, அவள் சுற்றத்தார் கொடாதொழிய, இராசகுமாரன் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்யச் சிவபெருமான் அப்பெண்ணை ஒரு பூதத்தால் எடுப்பித்துக் கொண்டு வந்து அவனுக்குத் திருமணவேள்வி செய்தருளிய ஸ்தலம்.

32 எதிர்கொள்பாடி என்பது மேலைத் திருமணஞ்சேரி

இறைவன்: ஐராவதேசுரர்

இறைவி: மலர்க்குழல் மாதம்மை

பதிகம்: சுந் 1

வழி: திருவேள்விக்குடி (*31*) லிருந்து வடமேற்கே *3* கி.மீ.

சிறப்புக்கள் : ஐராவதம் பூசித்த ஸ்தலம். வேள்விக்குடியில் திருமணஞ் செய்துகொண்ட இராசகுமாரன் ஒருவன் மனைவியுடன் தன் நகர் செல்லும்பொழுது, சிவபெருமான் அவனுடைய அம்மானைப்போல இந்தத் தலத்திலிருந்து எதிர்கொண்டு அவனை அழைத்துக்கொண்டு போனதினாலே இதற்கு எதிர்கொள்பாடி என்னும் பெயர் வந்தது.

33 திருமணஞ்சேரி (கீழத் திருமணஞ்சேரி)

இறைவன்: அருள்வள்ளநாதர்

இறைவி: யாழின் மென்மொழியம்மை

தீர்த்தம்: சமுத்திர தீர்த்தம்

பதிகம்: சும் *1*, அப் *1*

வழி: எதிர்கொள்பாடி (*32*) க்கு கிழக்கே *1¼* கி.மீ. திருவேள்விக்குடி (*31*) லிருந்து *3* கி.மீ.

சிறப்புக்கள்: மன்மதன் பூசித்த ஸ்தலம். வைசிய குலத்திற் பிறந்த நங்கை நாத்திகளிருவர் ஒருங்கே கருப்பமுற்று, தமக்குப் பிறக்கும் குழந்தைகளை ஒருவர்க்கொருவர் சம்பந்தஞ் செய்து கொள்ளுகின்றதென்று உறுதி செய்து கொண்டார்கள். பின்பு ஒருத்தி பெற்றது ஆமையாயிருந்த படியால் மற்றவள் தன் பெண்ணைக் கொடேன் என்று சொன்னாள். அந்த ஆமை சிவபெருமானைப் பூசித்துத் தான் குறித்த பெண்ணை இத்தலத்தில் மணஞ்செய்யப் பெற்று, ஆமை யுருநீங்கி மானுட வுருவம் பெற்றது.

34 திருக்குறுக்கை

இறைவன்: வீரட்டேசுரர், யோகீசர்

இறைவி: ஞானாம்பிகை

மரம்: கடுக்காய் மரம்

தீர்த்தம்: சூல தீர்த்தம்

பதிகம்: அப் 2

வழி: அன்னியூரிலிருந்து (30) வடமேற்கே 6 கி.மீ. திருமணஞ்சேரி (33) இங்கிருந்து தெற்கே 5 கி.மீ.

சிறப்புக்கள்: தீர்க்கவாகு என்னும் முனிவர் அபிஷேகம் செய்யத் தம் நீண்ட கைகளை உயரத் தூக்க அவை இங்குக் குறுகின ஆதலால் இத்தலத்தின் பெயர் 'குறுக்கை' யாயிற்று.

அஷ்ட வீரத்தலங்களில் இது காமனையெரித்த ஸ்தலம். வேதாரணிய புராணம் சபைச் சருக்கத்திற் சொல்லப்பட்ட சபைகளுள் இத்தலத்துச் சபை 'காமாங்கநாசனி சபை' அல்லது 'சம்பு விநோத சபை' என்று கூறப்பட்டுள்ளது.

கோயில் எதிரில் திரிசூல தீர்த்தம். விநாயகரும் அவரருகில் முனிவரும் குறுங்கையர்களாய்த் தெற்குப் பிரகாரத்தில் இருக்கிறார்கள். எதிரில் கடுக்காய் மரம்.

35 திருப்பந்தணைநல்லூர்

இறைவன்: பசுபதீசுரர்

இறைவி: காம்பன தோளியம்மை

தீர்த்தம்: புட்கரிணி

மரம்: கொன்றை

பதிகம்: சம் 1, அப் 1

வழி: திருவிடை மருதூர் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே 9 கி.மீ. சென்று கஞ்சனூரை அடைந்து

அங்கிருந்து பின்னும் வடகிழக்கே 3 கி.மீ. சென்றால் இந்த ஸ்தலத்தை அடையலாம்.

சிறப்புக்கள் : திருப்பந்தணைநல்லூருக்கு வடக்கே 9 கி.மீ. கொள்ளிடம் அணைக்கரையும் அப்பால் சென்னைக்குப் போகும் வழியில் வடமேற்கு 3 கி.மீட்டரில் வாணாசுரனால் பூசிக்கப்பட்டுத் திருவிசைப்பா பெற்றுள்ள கங்கைகொண்ட சோளேச்சுரமும் இருக்கின்றன.

தேவகன்னிகளும் காமதேனுவும் பூசித்த ஸ்தலம்.

36 கஞ்சனூர்

இறைவன் : அக்கினீஸ்வரர்

இறைவி : கற்பக நாயகி

தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்

மரம் : புரசு

பதிகம் : அப் 1

வழி : நாரசிங்கன் பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து $1\frac{3}{4}$ கி மீ.

சிறப்புக்கள் : கஞ்சனூரில் நடராஜர் சிவகாமியம்மை இவர்கள் உருவங்கள் சிலாரூபமாக இருக்கின்றன. ஹரதத்த சிவாச்சாரியார் சைவத்தின் மேன்மையை ஸ்தாபித்த ஸ்தலம். அவருக்குத் தனி ஆலயம் இருக்கின்றது. அவர் பூசித்த லிங்கமும் பக்கத்திலிருக்கின்றது. அக்கினியும் பிரமனும் பூசித்த ஸ்தலம். கோயிலுக்குக் கிழக்கில் அக்கினி தீர்த்தமும் இருக்கின்றது.

37 திருக்கோடிகா

இறைவன் : திருக்கோடீசுரர்

இறைவி : வடிவாம்பிகையம்மை

தீர்த்தம் : அகத்திய தீர்த்தம், காவிரி

பதிகம் : சம் 1, அப் 3

வழி : திருவிடை மருதூர் புகைவணடி நிலையத்திலிருந்து 2½ கி.மீ. இடையிற் காவிரி ஆற்றைக் கடக்க வேண்டும். சஞ்சனூருக்கு (36) கிழக்கே 3 கி.மீ.

சிறப்புக்கள்: மூன்றுகோடி முனிவர்கள் பூசித்த ஸ்தலம். சிருங்க தீர்த்தம் என்னுந் திருக்குளம் கோயிலுக்கு வடக்கிலிருக்கின்றது.

38 திருமங்கலக்குடி

இறைவன்: பிராண வரதேசுரர்

இறைவி: மங்கள நாயகி

தீர்த்தம்: காவிரி நதி, அகத்திய தீர்த்தம்

பதிகம்: சம் 1, அப் 3

வழி: திருவிடைமருதூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து 5½ கி.மீ. தென் குரங்காடுதுறை புகைவண்டி நிலையத்தில் இருந்து 3 கி.மீ.

சிறப்புக்கள்: மாகாளி, சூரியன், விஷ்ணு, பிரமன், அகஸ்தியர் இவர்கள் பூசித்த ஸ்தலம்.

கோயிலுக் கெதிரில் திருக்குளமிருக்கின்றது.

அரசனது தண்டலாளர் ஒருவர், அரசனது பணத்தைக் கொண்டு ஆலயத் திருப்பணி செய்ததை அரசனறிந்து, அவரை அழைப்பிக்க, சிவபக்தரான அவர் அரசனது ஆக்னஞக்குப் பயந்து உயிர் துறந்தார்; அவருடைய சரீரத்தைத் திருமங்கலக் குடிக்கு அப்பாற் கொண்டு போகும்படி அரசன் கட்டளையிட்டான். அந்த சரீரம் திருவியலூருக்கு வர, அத்தண்டலாளருடைய மனைவியார் வேண்டிக் கொள்ளத் திருமங்கலக்குடியில் வீற்றிருந்தருளும் மங்கள நாயகியாரின் திருவருளால் அவர் உயிர்த்தெழுந்தார்.

39 திருப்பனந்தாள்

இறைவன்: சடையப்பர்

இறைவி: பெரியநாயகி

தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்

மரம் : பனை மரம்

பதிகம் : சம் 1

வழி: ஆடுதுறை புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கு 9 கி.மீ. கும்பகோணத்துக்கு வடகிழக்கே 16 கி.மீ. இங்கிருந்து திருவாய்ப்பாடி வட மேற்கே 1½ கி.மீ.

சிறப்புக்கள் : மேற்குப் பார்த்த சந்நிதி. மண்ணியாறு கோயிலுக்கு மேற்பால் வடக்கு நோக்கி ஓடுகின்றது. ஆலயத்துக்குத் தாடகேச்சுரம் என்று பெயர். தாடகை யென்னும் ஒரு மாதின் அன்புக்காகச் சாய்ந்திருந்த சிவலிங்கப் பெருமான் யானை, சேனை முதலியவைகள் கயிற்றைக் கட்டிக்கொண்டு இழுத்தும் நிமிராமற் குங்குலியக் கலய நாயனார் அக்கயிற்றைத் தம்முடைய கழுத்திற் கட்டியிழுத்த வுடனே அவருடைய அன்புக்காக நிமிர்ந்தருளிய ஸ்தலம். பிராகாரத்தில் இரண்டு ஆண் பனைகள் உள்ளன.

40 திருவாய்ப்பாடி என்ற திரு ஆப்பாடி

இறைவன்: பாலுகந்தநாதர்

இறைவி : பெரிய நாயகி

தீர்த்தம் : மண்ணியாறு, பால்குளம்

மரம் : ஆத்தி

பதிகம் : சம் 1

வழி : திருப்பனந்தாள் (39) தென்மேற்கு 1½ கி.மீ.

சிறப்புக்கள் : மண்ணி ஆறு கோயிலுக்கு வடக்கே சமீபத்தில் இருக்கின்றது. க்ஷீர புஷ்கரிணி தீர்த்தம். சண்டேசுர நாயனார் பூசை செய்த ஸ்தலம்.

இங்கிருந்த இடையன் ஒருவன் பாலைக் கறந்து வீட்டுக்குக் கொண்டு போகும் பொழுது, வழியில் தினந்தோறும் கால் தடுக்கிப் பால் கவிழ்ந்துகொண்டு வருதலையுணர்ந்து, கையிலிருந்த கொடுவாளால் அவ்விடத்திலோச்ச, அங்கிருந்து இரத்தம் வெளிப்படக் கண்டு மனமிரங்கிப் "பாலுகந்த நாதரோ" என்று தொழ, ஸ்வாமி அவனுக்கு அநுக்கிரகஞ் செய்த ஸ்தலம்.

41 திருச்சேய்ஞலூர் (திருச்சேய்நல்லூர்)

இறைவன் : சத்தியகிரீசுரர்

இறைவி : சகிதேவியம்மை

தீர்த்தம்: சத்த தீர்த்தம், மண்ணி ஆறு

பதிகம்: சம் 1

வழி: திருவாய்ப்பாடி (40) லிருந்து வடகிழக்கே $1\frac{1}{2}$ கி.மீ.

சிறப்புக்கள்: சேய் (குமாரக்கடவுள்) தாம் உறைதற்கு நல்ல ஊர் என்று உவந்தமை கண்டு, தேவர்கள் இதனைச் சேய்நலூர் என்றனர். குமாரக்கடவுள் சூரசம்ஹாரஞ்செய்ய எழுந்தருளிவந்த பொழுது சிவபெருமானைப் பூசித்துச் சர்வசங்கார படைக்கலத்தைப் பெற்ற ஸ்தலம். சண்டேசுர நாயனார் அவதரித்து முத்தி பெற்ற ஸ்தலம். திருக்கோயிலுக்கு எதிரில் விஷ்ணு கோயில் ஒன்றிருக்கின்றது.

XVI திருவெள்ளியங்குடி

மூலவர்: கோலவல்வில்லி ராமன், புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: ச்ருங்கார ஸௌந்தரன்

தாயார்: மரகதவல்லி

தீர்த்தம் : சுக்ர தீர்த்தம், ப்ரஹ்ம தீர்த்தம், இந்த்ர தீர்த்தம், பராசுர தீர்த்தம்

ஸ்தல வ்ருக்ஷம் : கதலீ (வாழை) மரம்.

விமானம் : புஷ்கலா வர்த்தக விமானம்

ப்ரத்யக்ஷம் : சுக்ரன், ப்ரஹ்மா, இந்த்ரன், பராசுரர், மயன், மார்க்கண்டேயர், பூமிதேவி.

வழி : கும்பகோணத்திலிருந்து அணைச்கரை செல்லும் பேருந்தில் சேங்கானூரில் இறங்கி $1\frac{1}{4}$ கி.மீ. நடந்து திருவெள்ளியங்குடி செல்ல வேண்டும். கும்பகோணத்திலிருந்து நகரப் பேருந்தில் நேராகத் திருவெள்ளியங்குடி சென்றுவிடலாம்.

சிறப்புக்கள் : இந்தக் கோவிலை வழிபடுவது 108 திவ்ய தேசங்களையும் வணங்கிய பலனைத் தரும் என்று நம்பப்படுகின்றது. இங்குள்ள கருடாழ்வார் சிலையின் கைகளில் சங்க சக்ரங்கள் உண்டு. சமீபத்தில் இந்தக் கோவில் ஸம்ப்ரோஷணம் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஆண்டவனால் நடைபெற்றது. வழியில் உள்ள சேங்கானூர்தான் பெரியவாச்சான் பிள்ளையினுடைய அவதார ஸ்தலம். வெள்ளியார் வணங்க அருள் செய்தவர் இப்பெருமாள்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 4-10 பதிகம்

42 திருந்துதேவன்குடி

இறைவன் : கர்க்கடகேசுரர்

இறைவி : அருமருந்தம்மை

தீர்த்தம் : பங்கய தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி: கும்பகோணத்திற்குக் கிழக்கு 6 கி.மீ. திருவியலூருக்கு (4ம்) வடக்கு 1½ கி.மீ.

சிறப்புக்கள் : கோயில் மாத்திரம் நன்செய் நிலங்களுக்கு மத்தியில் இருக்கின்றது. கோயிலைச் சுற்றி ஒரு பொய்கை மாலை போட்டது போலிருக்கின்றது.

நண்டு பூசித்து முக்தியடைந்த ஸ்தலம் நண்டு பூஜை செய்த பாவனை ஒரு கற்றூணிற் காட்டப்பட்டிருக்கின்றது. ஒரு நிறப் பசுக்களின் பால் பதின்கலம் அபிஷேகம் செய்தால் சிவலிங்கத்தின் முடிமீது ஒரு பொன்னிற நண்டு ஊர்தல் தரிசனமாகுமாம். ஸ்வாமியின் உருவம் முன் பக்கத்தில் வெட்டுண்டு பாதியாயிருக்கின்றது. ஓரரசன் வியாதியாற் பீடிக்கப்பட்டு எதனாலுந் தீர்வடையாது சிவ ஸ்மரணை செய்துகொண்டிருக்கையில், ஸ்வாமி ஒரு விருத்தர்போல அவன் முன் தோன்றி நோயைத் தீர்த்துப் பின்னும் உள்ள நோய்க்குப் மருந்து கண்டுபிடித்துக் கொடுப்பதாகச்சொல்லி அழைத்துக்கொண்டு வந்து, இப்பொழுது இலிங்கமூர்த்தி யமர்ந்துள்ள இடத்தில் வெட்டும்படி சொல்ல, அரசன் வெட்ட உதிரம் வெளிப்பட, விருத்தராய் வந்தவர் மறைந் தருளினராம். இக்காரணத்தால்தான் சிவலிங்கம் வெட் டுண்ட மாதிரியிருக்கின்றதாம். ''மருந்து வேண்டில் லிவை'' என்னும் தேவாரம் கவனிக்கற்பாலது. தேவி சந்நிதி இரண்டு உள்ளன.

43 திருவியலூர்

இறைவன்: யோகாநந்தர் (ஏகாந்த நாதேசுரர் என்பதும் உண்டு)

இறைவி: சௌந்தரநாயகி (சாந்த நாயகி)

தீர்த்தம்: சடாயு தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: கும்பகோணத்திற்குக் கிழக்கே 6 கி.மீ.

சிறப்புக்கள்: திருமங்கலக் குடியில் (38) திருப்பணி செய்து இறந்துபோன ஒரு அடியவரை, இந்த ஸ்தலத்துக்குக் கொண்டு வரும்பொழுது அவர் திருமங்கலக்குடி தேவியாருடைய திருவருளால் உயிர்த்தெழுந்தனர். கோயில் பெரிது. கோபுரம் இருக்கின்றது.

பிரமதேவர் விஷ்ணு சர்மா என்பவருக்குப் புத்திரனாகித் தவம் புரிந்து தம்முடன் பிறந்த எழுவருடன் சிவராத்திரியில் இலிங்கமூர்த்திக்குட் புகுந்தனர் அவ்வெண்மருடைய சடைகள் இன்றும் லிங்கமூர்த்தியின் திருமுடியிற் காணப்படுகின்றன. அகத்தியர் சிவராத்திரி தோறும் பூசிக்கின்றார்.

''விரிநீர் வியலூரே'' என்று திருஞான சம்பந்த ஸ்வாமிகள் அருளிச் செய்தாங்கு திருவியலூர் எங்கும் ஜலமயமாயிருக்கின்றது.

44 திருக்கொட்டையூர்

இறைவன் : கோடீசுரர்

இறைவி : பந்தாடு நாயகி

தீர்த்தம் : கோடி தீர்த்தம் (கிணறு)

பதிகம் : அப். 1

வழி : கும்பகோணத்திற்கு மேற்கே 3 கி.மீ. ஸ்வாமி மலைக்கும், கும்பகோணத்திற்கும் இடையில் இருக்கின்றது.

சிறப்புக்கள் : மார்க்கண்டேயர் முதலியோர் பூசித்த ஸ்தலம். கோயில் கீழைக் கொட்டையூரில் இருக்கின்றது. விநாயகர் கோடி விநாயகர். கோடி தீர்த்தம் என்ற கிணறு ஒன்றிருக்கின்றது. திருவலஞ்சுழியிற் காவிரியிலிறங்கின ஏரண்ட முனிவர் இங்கு வெளியே வந்ததாகச் சொல்லுகின்றார்கள்.

அவருடைய திருவுருவமும் கோயிலிலிருக்கின்றது. அப்பர் ஸ்வாமிகள் இத்தலத்துடன் வலஞ்சுழியையுஞ் சேர்த்துப் பாடியிருக்கின்றார். ஊரே முன்பு ஆமணக்கங் காடாக இருந்த தாம். ஸ்வாமி ஆமணக்குக் கொட்டைச் செடியின் கீழிருந்து தோன்றினமையின், ஊருக்குக் கொட்டையூர் என்ற பெயரும் சோழ மகாராஜனுக்கு ஓர் இரவில் கோடி லிங்கமாகத் தரிசனங் கொடுத்தமையால் ஆலயத்துக்குக் கோடீச்சுரம் என்ற பெயரும் போந்தன. இலிங்கத்தில் அநேக சிறிய லிங்கங்கள் இருக்கின்றன.

கொட்டையூருக்கு மேற்கே 3 கி.மீட்டரில் சுவாமி மலை இருக்கின்றது.

சுவாமி மலை : சுவாமிமலை புகைவண்டி நிலையம். மலை கட்டு மலை. காவிரிக்கு வடகரையில் இருக்கின்றது. இது திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய ஸ்வாமி ஸ்தலம். முருகன் ஆறுபடை வீட்டில் ஒன்று.

45 இன்னம்பர்

இறைவன்: எழுத்தறிநாதேசுரர் (அம்பர் தீர்த்நீசுரர்), எழுத்தறி நாயகர் என்றும் பெயர்

இறைவி: கொந்தார் பூங்குழலம்மை (பூங்கொம்பு நாயகி)

தீர்த்தம்: ஐராவத தீர்த்தம்

மரம்: பலாமரம், சண்பகமரம்

பதிகம்: சம் 1, அப் 4

வழி: கொட்டையூரிலிருந்து (44) வடமேற்கு 2½ கி.மீ.

சிறப்புக்கள்: அகஸ்தியர் பூசித்து இலக்கணம் உபதேசிக்கப் பெறற ஸ்தலம். சிவபெருமான் கணக்கராய்க் கோயிற் கணக்கை அரசனிடம் ஒப்புவித்த ஸ்தலம்.

கோயில் சிறிது. கோபுரம் இருக்கின்றது. ஐராவதம் பூஜை செய்த ஸ்தலம். கருப்பகிருஹத்தின் மேற்பாகம்

யானையின் உருவம் போலச் செய்யப்பட்டிருக்கின்றது. கோயிலுக்கெதிரில் ஐராவத தீர்த்தம் இருக்கின்றது. கோயிலுக்குள் பலாமரமும் சண்பகமரமும் இருக்கின்றன. நிர்த்தந விநாயகர் திருக்கோயில் கம்பத்திலிருக்கிறார். அம்மன் சந்நிதி யிரண்டு. சுகந்தகுந்தளாம்பா சந்நிதி வெளிப் பிராகாரத்தில் தனியாக இருக்கின்றது.

46 திருப்புறம்பயம்

இறைவன் : சாக்ஷிநாதேசுரர்

இறைவி: கரும்பன்ன சொல்லம்மை

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

மரம் : வன்னிமரம் (புன்னை என்றும் கூறுவர்)

பதிகம் : சம் 1, அப் 1, சுந் 1

வழி : திரு இன்னம்பருக்கு (45) வடக்கே சுமார் 3 கி.மீ. தெற்கே மண்ணியாறும், வடக்கே கொள்ளிடமும் இருக்கின்றன.

சிறப்புக்கள்: பிரளயத்துக்குப் புறம்பாய் இருந்தமையால் புறம்பயம் என்ற பெயர் வந்தது; ஒரு வணிக கன்னிகைக்குக் குறித்திருந்த புருஷன் பாம்பு கடித்து இறக்க, அவனைத் திருஞான சம்பந்த ஸ்வாமிகள் எழுப்பியருளிய ஸ்தலம். அவரது திருவாக்காலும், ''புறம்பய மதனி லறம்பல அருளியும்'' என்னுந் திருவாசகத்தாலும், சிவபிரான் இத்தலத்தில் நால்வர்க்கு அறத்தின் பயனை உணர்த்தினதாகத் தெரிகின்றது. செட்டிப் பெண்ணுக்குச் சாக்ஷி சொன்ன காரணத்தால் ஸ்வாமிக்குச் சாக்ஷிநாதர் என்றும் பெயர். புன்னை மரத்துக்கு மேற்பால் நான்கு இலிங்கங்களிருக்கின்றன. தக்ஷிணாமூர்த்திக்கு மேலிடத்தில் சட்டை நாதர் சந்நிதி யிருக்கின்றது. விநாயகர் வெண்மை நிறம். பிரளயங்காத்த பிள்ளையார் என்று பெயர். விநாயக சதுர்த்தியன்று ஒரு குடம் தேன் அபிஷேகம் செய்யப்படுகின்றது. மற்றை நாட்

களில் அபிஷேகம் கிடையாது. கோயிலுக்குக் கீழ் திருக்குளமிருக்கின்றது. அதன் கரை மேலும் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியொன்றிருக்கின்றது. கோயிலுக்கு விறகு கொண்டுவந்த ஒரு நீசனுக்கு ஸ்வாமி அந்த ரூபமாய் வெளிப்பட்டு அநுக்கிரகித்தனர்.

47 விசய மங்கை

இறைவன் : விஜயநாதர்

இறைவி : மங்கை நாயகி

தீர்த்தம் : அருச்சுன தீர்த்தம்

பதிகம் : சம் 1, அப் 1.

வழி: திருப்புறம்பயத்துக்கு (46) மேற்கே 4 கி.மீ.

சிறப்புக்கள் : இந்த விஜயமங்கை ஒரு சிறு கிராமம். கோயிலுஞ் சிறிது கொள்ளிடக்கரைக் கோவந்த. புத்தூருக்கடுத்துள்ளது. விஜய மங்கை என்பது தேவாரத்தால் தெரிகின்றது. விஜயனாகிய அருச்சுனன் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெற்ற ஸ்தலம்.

48 திருவைகாவூர்

இறைவன்: வில்வ வனேசுரர்

இறைவி: வளைக்கை நாயகியம்மை (பூவை வல்லி, பவளக்கை நாயகி என்றும் கூறுவர்)

மரம்; வில்வமரம்

பதிகம்: சம் 1

வழி: விஜய மங்கைக்கு (47) மேற்கே 2½ கி.மீ.

சிறப்புக்கள்: இது வில்வவன க்ஷேத்திரம். சிவராத்திரிக்கு முக்கியமான ஸ்தலம். சிவராத்திரி தினத்தில் ஒரு வேடன்

புலிக்குப் பயந்து வில்வமரத்தின் மேலேறிபிருந்து, இரவெல்லாம் வில்வபத்திரங்களைப் பறித்து போட்டுக்கொண்டிருக்க, காலையில் சிவபெருமான் வெளிப்பட்டு அநுக்கிரகஞ் செய்தருனார். ஓமாம்புலியூர் (5) என்னும் தலத்திலும் இந்த ஐதிஹம் உண்டு. இந்த ஐதிஹம் கோயிலிற் காட்டப் பட்டிருக்கின்றது. எதிரில் இமய தீர்த்தம் இருக்கின்றது. கோயிலில் துவாரபாலகர்கள் இல்லை. இயமனை நிக்ரஹிப் பதற்காக நந்தி திரும்பியிருக்கின்றாராம். எல்லா நந்திகளும் திரும்பியே உள்ளன. விக்கிரகங்கள் எல்லாம் நன்றாயிருக் கின்றன. ஆறுமுக ஸ்வாமி அதிசுந்தரமாயிருக்கின்றார்.

49 திருவடகுரங்காடுதுறை

இறைவன் : அழகு சடை முடிநாதர், குலைவணங்கீசுரர்.

இறைவி : அழகு சடைமுடியம்மை.

தீர்த்தம் : காவிரி ஆறு

பதிகம் : சம் 1.

வழி: கும்பகோணத்திற்குத் தெற்கே 21½ கி.மீட்டரிலுள்ள ஐயம்பேட்டை நிலையத்திலிருந்து 1 கி.மீட்டரிலுள்ள திருச் சக்கிரப் பள்ளியைச் சேர்ந்து, அங்கிருந்து வடக்கே 5கி.மீட் டர் சென்றாலும் இந்த ஸ்தலத்தை அடையலாம். இதற்கு மேற்கே 7கி.மீ. திருப்பழனம் (50)

சிறப்புக்கள் : வாலி பூசித்த ஸ்தலம். நடராஜர் - சிவகாமி யம்மை உருவங்கள் சிலையிலும் உள்ளன. கர்ப்பிணியாம் ஒருத்தியின் தாகத்தைத் தீர்க்கத் தென்னங் குலையை வளைத்துக் கொடுத்த காரணத்தால் சுவாமிக்குக் 'குலை வணங்கீசுரர்' என்று ஒரு பெயர்.

50. திருப்பழனம்

இறைவன் ; ஆபத்சகாயேசுரர்

இறைவி : பெரியநாயகி

தீர்த்தம் : மங்கள தீர்த்தம், காவிரி ஆறு

பதிகம் : சம் 1 , அப் 5.

வழி : திருவடகுரங்காடு துறைக்கு மேற்கே 7 கி.மீ.

சிறப்புக்கள் : இது சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் இரண்டாவது ஸ்தலம். கௌசிகாசிரமம்,

அப்பூதியடிகளின் அடிமைத் திறத்தினை அப்பர் ஸ்வாமிகளே வியந்தேத்தியுள்ள அருமைத் தேவாரப் பதிகத்தைக் கொண்டுள்ளது. விஷ்ணு (வேணுகோபால ஸ்வாமி) சந்நிதி ஒன்றிருக்கின்றது. இவ்வூரில் வாழை விசேஷம். தலத்துக்குக் கதலிவனம் என்றும் பெயர். இதற்குச் சமீபத்திலுள்ள திங்களூரில், அப்பூதி நாயனாருடைய பிள்ளை விஷந்தீண்டி இறக்க, அப்பர் ஸ்வாமிகள் "ஒன்று கொலாம்" என்னும் திருப்பதிகம் பாடி அப்பிள்ளையை எழுப்பியருளினார். திங்களூர் சந்திரன் பூஜித்த ஸ்தலம். சந்திரனுடைய கிரணங்கள் பங்குனி, புரட்டாசி இந்த 2 மாதங்களிற் பௌர்ணமியிலும் அதற்கு முன்பின் ஆகிய 2-தினங்களிலும் சுவாமி மேற்படுகின்றன.

51 திருவையாறு

இறைவன் : பஞ்சநதீசுரர் என்ற ஐயாறப்பர்,
செம்போற்சோதீஸ்வரர்

இறைவி : தரும சம்வர்த்தினி, அறம் வளர்த்த நாயகி

தீர்த்தம் : பஞ்சநத தீர்த்தம், சூரிய தீர்த்தம், காவிரி

பதிகம் : சம் 5, அப் 12, சுந் 1

வழி : திருப்பழனத்திலிருந்து (50) மேற்கே 3 கி.மீ.

சிறப்புக்கள் : சுவாமி திருநாவுக்கரசு நாயனாருக்குக் கைலாச தரிசனம் கொடுத்தருளிய ஸ்தலம். இந்த ஐதிகத்தைக்

காட்டும் உற்சவம் ஆடி அமாவாசையில் நடக்கின்றது. அங்ஙனம் தரிசனம் கொடுத்த மூர்த்தி தெற்குப் பிரகாரத்தி லிருக்கிறார். அவருக்குத் தனி சந்நிதி. அப்பர் ஸ்வாமி களும் அங்கிருக்கிறார். அப்பர் ஸ்வாமிகள் எழுந்து வந்த தாகச் சொல்லுங்குளம் (சமுத்திர தீர்த்தம்) கோயிலுக்கு வடமேற்கில் இருக்கின்றது.

சப்த ஸ்தானம் என்று வழங்கும் 7 ஸ்தலங்களில் முதன் மையான ஸ்தலம். சித்திரை பௌர்ணமி கழிந்ததும் பிரபல மான சப்தஸ்தாந உற்சவம். சுந்தரமூர்த்தி நாயனாருக்காக வும் சேரமான் பெருமாணாயனாருக்காகவும் ஸ்வாமி காவிரி யின் பெருக்கைத் தவிர்க்க, நாயன்மாரிருவரும் அடியார் கூட்டத்துடன் ஆற்றைக் கடந்து சென்று தரிசநஞ் செய்த ஸ்தலம். ஸ்தல விநாயகருக்கு ஆதி விநாயகர் என்று பெயர். காவிரியாற்றில் மிகுந்த வெள்ளமாயிருந்ததால், சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் அதன் தென் கரையிலிருந்து ''ஐயாறு டைய அடிகளோ'' என்றழைத்த பொழுது, ஓலமிட்ட விநாயகர் 'ஓலம் ஓலம்' என்று சொன்னதாகச் சொல்லு கிறார்கள். இவ்விநாயகருக்குப் பக்கத்தில் 'ஆட்கொண்டார் சந்நிதி' என்றொரு சந்நிதி இருக்கின்றது. சுசரிதன் என்ற ஒரு பிராமணப் பிள்ளையை யமன் தொடர்ந்து வந்ததாக வும், அப்பொழுது ஸ்வாமி வெளிப்பட்டு யமனை விலக்கி, அப்பிள்ளையைச் சோதி சொரூபமாய் ஆட்கொண்டதாக வும், ஆதலால் அவர் சந்நிதிக்கெதிரில் ஒரு சிறு குழி ஒன்றுண் டாக்கி அதிற் குங்கிலியம் போட்டுக்கொண்டு வருவதாகவும் சொல்லுகிறார்கள். பிரார்த்தனைக்காரர்கள் அநேகர் குங்கிலியம் போடுகிறார்கள்.

இந்திரன், வாலி முதலியோர் பூசித்த ஸ்தலம். தம்மை அர்ச்சிப்பவர் காசியிலிருந்து வரத் தவறியபொழுது ஸ்வாமி தம்மைத்தாமே பூசித்த ஸ்தலம்.

52 திருநெய்த்தானம் (தில்லை ஸ்தானம்)

இறைவன்: நெய்யாடியப்பர்

இறைவி: பாலாம்பிகை

தீர்த்தம்: காவிரி ஆறு

பதிகம்: சம் 1, அப் 5

'தில்லை ஸ்தானம்' என வழங்குகின்றது.

வழி: திருவையாற்றுக்கு (51) மேற்கே 1½ கி.மீட்டர்.

சிறப்புக்கள்: சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் ஏழாவது ஸ்தலம். சரஸ்வதி பூசித்த ஸ்தலம். தக்ஷிணாமூர்த்தி நின்ற திருக்கோலம்.

53 திருப்பெரும்புலியூர்

இறைவன்: வியாக்ரபுரீசுரர்

இறைவி: சௌந்தர நாயகி

தீர்த்தம்: கொள்ளிடம் (காவிரி என்பதும் உண்டு)

பதிகம்: சம் 1

வழி: திருநெய்த்தானம் (52) லிருந்து 1½ கி.மீ.

சிறப்புக்கள்: வியாக்கிரபாதர் பூசித்த ஸ்தலம். ஸ்வாமியிருக்கும் இடத்திலுள்ள கற்கள் தாமரைபோல் வட்டமாய்ப் போடப்பட்டிருக்கின்றன. கோயிலுக்கு மேற்கில் திருமழிசையாழ்வாரின் பெருமையை உலகினருக்கு அறிவித்த பெருமாள் சந்நிதி உள்ளது.

அபிமான விஷ்ணு ஸ்தலம்

பெரும்புலியூர் (தில்லை ஸ்தானம்)

வழி: திருச்சி-திருவையாறு கும்பகோணம் பேருந்து

பெருமாள்: சுந்தரராஜப் பெருமாள், கிழக்கே நின்ற திருக்கோலம்.

தாயார்: சுந்தரவல்லி நாச்சியார்

தீர்த்தம்: காவிரி நதி

விசேஷம்: திருமழிசை ஆழ்வார் இவ்வழியே சென்றபோது வேதம் ஓதிக் கொண்டிருந்த பிரம்மணர்கள் இவர் காதில் வேதம் விழக்கூடாது என்று நிறுத்த இவர் போனவுடன் விட்ட இடம் தெரியாமல் ஆழ்வாரை ஞானி என்று புரிந்து கொண்டு பிரார்த்திக்க ஆழ்வாரும் ஒரு நெல்லைக் கிள்ளிக் காண்பித்து விட்ட இடம் பிரம்மணர்களுக்கு ஞாபகம் வந்ததாக வரலாறு.

54 திருமழபாடி

இறைவன்: வஜ்ரஸ்தம்பேசுரர்

இறைவி: அழகம்மை

தீர்த்தம்: கொள்ளிடம்

மரம்: பனைமரம்

பதிகம்: சம் 3, அப் 2, சுந் 1

வழி: திருவையாற்றுக்கு (51) மேற்கே $1\frac{1}{2}$ கி.மீ.லுள்ள திருநெய்த்தானதுக்கு (52) வடமேற்கு 3 கி.மீ. இடையிற் கொள்ளிட நதி வடக்கு நோக்கி ஓடுகின்றது.

சிறப்புக்கள்: மறைகளும், திருமாலும், தேவேந்திரனும் பூசித்த ஸ்தலம். "மறை நான்கும் ஓலமிட்டு வரமேற்கும் மழபாடி வயிரத்தூணே" அப்பர் சுந்தரரை "மறந்தாயோ" எனக்கூறிச் சிவபிரான் அழைத்த தலம்.

பிரம்மலோகத்திருந்த சிவலிங்கத்தைப் புருஷாமிருகம் கொணர்ந்து பிரதிஷ்டை செய்யப் பிரமதேவர் அதைப் தெடுக்க இயலாது போக, ஸ்வாமியை வஜ்ரஸ்தம்பமூர்த்தி இவர் என்றார்.

இந்தத் தலத்திற்குப் பங்குனி மாதத்தில் திருவையாற்றிலிருந்து ஐயாற்றப்பரும், நந்திதேவரும் வருகின்றார்கள். நந்தி தேவருக்குத் திருக்கலியாணம் நடக்கின்றது. கணபதி-சுந்தர கணபதி. சோமாஸ்கந்தமூர்த்தியின் உருவம் சிலையிலிருக்கின்றது. நந்திகேசுரர் அவர் தேவி சுயசை இவர்தம் விக்ரகங்களும் சிலையில் இருக்கின்றன.

XVII விஷ்ணு ஸ்தலம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தலம்

திருப்பேர்நகர் (கோவிலடி. அப்பக்குடத்தான்)

மூலவர் : அப்பக்குடத்தான், அப்பாலா ரெங்கநாதன், புஜங்கசயனம், அருகில் அமர்ந்திருக்கும் உபமன்யு முனிவருக்கு ஆசி கூறும் பெருமாளின் வலது திருக்கரம் ஓர் அப்பக் குடத்தையும் அணைத்திருக்கிறது. மேற்கே திருமுக மண்டலம்.

தாயார்: 1. இந்திராதேவி, 2. கமலவல்லி

தீர்த்தம்: இந்திர தீர்த்தம், கொள்ளிடம்

விமானம்: இந்திர விமானம்

ப்ரத்யக்ஷம்: உபமண்யு, பராசரர்

வழி: அன்பிலில் (18) இருந்து கொள்ளிடத்திற்கு அக்கரையில் 5 கி.மீ தூரத்தில் உள்ளது. இடையிற் கொள்ளிடத்தைக் கடக்க வேண்டும். கும்பகோணத்தில் இருந்து திருவையாறு திருக்காட்டுப்பள்ளி வழியாகக் கல்லணை செல்லும் பஸ்ஸில் வரலாம். திருச்சியிலிருந்தும் பேருந்தில் வரலாம்.

சிறப்புக்கள்: இந்த இடத்தில் இருந்துதான் நம்மாழ்வார் மோட்சத்துக்குப் புறப்பட்டுச் சென்றதாக ஐதீஹம். ஆனால் நம்மாழ்வார் இந்த ஊரைக் கடைசியாகப் பாடியிருப்பதால் அவ்வித ஐதிஹம் ஏற்பட்டிருக்கக் கூடும். பெருமாளுக்குத்

தினந்தோறும் இரவில், ''அரவணை'' யாக அப்பம் அமுது செய்விக்கப்படுகிறது. இந்த ஊரில் சௌகர்யம் இல்லை, பக்கத்தில் உள்ள திருக்காட்டுப்பள்ளியில் தங்கலாம். அல்லது திருச்சியில் தங்கி அப்பக்குடத்தான் க்ஷேத்திரத்திற்குப் பேருந்தில் வந்து வணங்கி விட்டுத் திரும்பலாம்.

மங்களா சாஸனம்

பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார்	நான்முகன் திருவந்தாதி 36, திருவாய்மொழி 10-8பதிகம். பெரியாழ்வார் திருமொழி 2-9-4 பெரிய திருமொழி 5-9 பதிகம்

55 திருப்பழுவூர்

இறைவன்: வடமூலநாதர்

இறைவி: அருந்தவநாயகி

தீர்த்தம்: பிரமதீர்த்தம், கொள்ளிடம்

மரம்: ஆலமரம்

பதிகம்: சம் 1

வழி: திருவையாற்றுக்கு வடக்கே 16 கி.மீ. அரியலூருக்குப் போகும் வழி, வழியிற் கொள்ளிட நதியைக் கடக்கவேண்டும். அரியலூர் புகைவண்டி நிலையத்திலிருந்து கீழைப்பழுவூர் என்கிற பழுவூர் 11 கி.மீ.

சிறப்புக்கள்: பழுமரம்-ஆலமரம். ஆலமரம் தலவிருக்ஷம். ஆதலால் பழுவூர் எனப் பெயர் போந்தது.

பரசுராமர் தம் தாயைக் கொன்ற பழிநீங்கப் பூஜித்த ஸ்தலம். அவருடைய உருவம் முன் வாயிலின் மேல் இருக்கின்றது.

56 திருக்கானூர்

இறைவன்: செம்மேனி நாதேசுரர், கரும்பேசுரர்

இறைவி: சிவயோக நாயகி, சௌந்தர நாயகி

தீர்த்தம்: கொள்ளிடம் ஆறு, வேத தீர்த்தம்

பதிகம்: சம் 1, அப் 1.

வழி: பூதலூர் புகைவண்டி நிலையத்துக்கு வடக்கே 8கி. மீட்டரிலுள்ள திருக்காட்டுப் பள்ளிக்கு வடக்கே 3 கி.மீ. இங்கே கோயில் மாத்திரம் இருக்கின்றது. வீடுகள ஒன்று மில்லை. ஊர் மணல் மூடிப் போய்விட்டது. 150 வருஷங் களுக்கு முன் கோயில் மாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. கோயில் பூமி மட்டத்துக்குத் தாழ்ந்திருக்கின்றது. அருகிற் கொள்ளிட நதி ஓடுகின்றது.

உமாதேவியார் சிவயோகஞ் செய்துகொண்டிருக்கும் பொழுது சிவபெருமான் அக்னி ரூபமாய்த் தரிசனங் கொடுத் தருளிய ஸ்தலம்.

57 அன்பிலாலந்துறை (கீழன்பில்)

இறைவன்: சத்தியவாகீசுரர்

இறைவி: சௌந்தர நாயகி

தீர்த்தம்: காயத்திரி தீர்த்தம், கொள்ளிட நதி

பதிகம்: சம் 1, அப் 1.

வழி: லால்குடி புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே 5 கி.மீ.

சிறப்புக்கள்: பிரமன் முதலியோரும் வாகீச முனிவரும் பூசித்த ஸ்தலம். கொள்ளிடத்துக்குத் தென்கரையில் நின்ற சம்பந்தர்-அப்பர் இவர்களது பாடல்களைச் செவியேற்ற "செவி சாய்த்த விநாயகர்" திருவுருவம் கோயிலுள் பிரா

காரத்தில் தென்மேற்கில் இருக்கின்றது. அன்பிலாலந் துறைக்கு வடக்கே 3 கி.மீட்டரில்-ஆனாய நாயனாருடைய ஊராகிய 'மங்கலவூர்' என்ற திருமங்கலம் இருக்கின்றது.

XVIII ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தலம்

திருஅன்பில் (அன்பில்)

மூலவர்: வடிவழகிய நம்பி, புஜங்கசயனம் கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: சுந்தரராஜன்

தாயார்: அழகியவல்லி நாச்சியார்

தீர்த்தம்: மண்டுக புஷ்கரிணி, கொள்ளிடம்

விமானம்: தாரக விமானம்

ப்ரத்யக்ஷம்: பிரம்மா, வால்மீகி

வழி: திருச்சி-கல்லணை கும்பகோணம் பேருந்து மார்க்கத்தில் உள்ளது. திருச்சியிலிருந்து இவ்வூருக்குப் பேருந்து வசதி உண்டு. திருச்சி-விழுப்புரம் கார்டுலைனில் உள்ள லால்குடி நிலையத்தில் இறங்கி 8 கி,மீ.

சிறப்புக்கள்: இக்கோயிலில் கல்வெட்டுக்கள் பலவுள்ளன.

மங்களா சாஸனம்

திருமழிசையாழ்வார்: நான்முகன் திருவந்தாதி 36

58 திருமாந்துறை

இறைவன் : ஆம்பிரவனேசுரர்

இறைவி : அழகாலுயர்ந்த அம்மை

தீர்த்தம் : காயத்திரி தீர்த்தம்

மரம் : மாமரம்

பதிகம் - சம் 1

வழி : லால்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 5 கி.மீ.

சிறப்புக்கள் : சூரியன், சந்திரன், கண்ணுவ முனிவர் பூஜித்த ஸ்தலம்.

59 திருப்பாற்றுறை

இறைவன் : மூலநாதர்

இறைவி : மேகலாம்பிகை, மோக நாயகி

தீர்த்தம் : கொள்ளிடம்

பதிகம் : சம் 1.

வழி : ஸ்ரீரங்கம் புகைவண்டி நிலையத்திற்கு அடுத்த திரு ஆனைக்காவுக்குக் (60) கிழக்கே 8 கி.மீ. திருவெறும்பூர் புகைவண்டி நிலையத்திலிருந்து 6 கி.மீ.

சிறப்புக்கள்: மார்க்கண்டரிஷி பூஜிக்கும்பொழுது அபிஷேகத்துக்கும் பசும்பால் கிடையாமல் வருந்த, சிவபெருமான் பால் பெருகும்படி அநுக்கிரகித்த ஸ்தலம். "பாற்றுறை மேவிய பத்துநூறு பெயரன்" எனச் சம்பந்தப் பெருமான் கூறியுள்ளதால் இத்தலத்திற் சகஸ்ரநாம அருச்சனை செய்வது விசேடமாகும்.

60 திரு ஆனைக்கா என்பது ஜம்புகேஸ்வரம்

இறைவன்: ஜம்புகேசுவரர்

இறைவி: அகிலாண்ட நாயகி

தீர்த்தம்: காவிரியாறு

மரம்: வெள்ளை நாவல் மரம்

பதிகம்: சம் 3, அப் 3, சுந் 1

வழி: ஸ்ரீரங்கம் புகைவண்டி நிலையத்துக்குக் கிழக்கு 1கி.மீ.

சிறப்புக்கள்: சிலந்தியும், ஆனையும் பூசித்த ஸ்தலம்; வெள்ளையானை வழிபட்ட தலமாதலால் இதற்கு ''ஆனைக்கா'' (யானைவனம்) என்றும், ஸ்வாமி, ஜம்பு நாவல் (வெள்ளை நாவல்) மரத்தடியில் எழுந்தருளியிருப்ப தால் ''ஜம்பு கேஸ்வரம்'' என்றும் பெயர்கள் உண்டாயின. ஜம்பு நாவல் மரம் ஸ்வாமிக்குச் சமீபத்திற் கருப்ப கிரஹத் துக்கு வெளியிலிருக்கின்றது.

பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாகிய அப்பு ஸ்தலம். விராட்புருஷனுடைய சுவாதிஷ்டான தலம். கோயில் மிகப் பெரியது. கோயிலின் மூலஸ்தானத்தில் எப்பொழுதும் ஜலம் நிரம்பி இருக்கும். முன் ஜென்மத்தில் சிலந்தியா யிருந்து சிவபெருமானை வழிபட்டு, அப்பெரும் புண்ணியத் தினால் அரசராய்ப் பிறந்த கோச்செங்கட் சோழ நாயனா ராலே கட்டுவிக்கப்பட்ட ஆலயத்தையும், அவ்வாலயத்திலே சிவபெருமான் சித்தரா எழுந்தருளி வந்து வேலைக்குத் தகப் பொன்னாகுப்படித் திருநீற்றையே கூலியாகக் கொடுத்துக் கட்டுவித்த காரணத்தால் ''நீறிட்டான் மதில்'' என்று சொல்லப்படும் திருமதிலையும் உடைய விசேஷமான ஸ்தலம்.

ஸ்வாமியை அம்மன் பூஜித்த ஐதீகத்தைக் காட்ட, இன்றும் உச்சிகாலத்தில் அம்மன் கோயில் குருக்கள் அம் மனைப்போல வேஷந்தரித்து ஸ்வாமி கோயிலுக்கு வந்து அர்ச்சனை செய்கிறார்.

உறையூர்ச் சோழ மகாராஜா ஆரம் தரித்துக்கொண்டு காவிரியில் ஸ்நாநஞ் செய்தபொழுது ஆரம் நதியில் விழுந்து விட, அவர் ''சிவபெருமானே கொண்டருளும்'' என்று பிரார்த்திக்க, அந்த ஆரம் திருமஞ்சநக் குடத்திலே அகப் பட்டு அபிஷேகத்தின் பொழுது ஸ்வாமி மேல்விழ, அதனை ஸ்வாமி அணிந்து, அரசருக்குத் திருவருள் புரிந்த ஸ்தலம்.

இதனைச் சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத் தேவாரப் பதிகத்தில் ஏழாம் பாசுரத்திற் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார்.

ஆற்றில் மிதந்து வந்த நாவற்பழத்தைச் சம்பு முனிவர் உண்ண அது அவர் வயிற்றில் முளைத்துக் கபாலங் கிழித்து மரமாக வளர்ந்தோங்க அதன் பாரம் பொறாது அவர் சிவ பெருமானை வேண்ட, ஈசனும் அவரை அங்கிருக்கச் செய்து, அம்மர நிழலில் தாமும் வீற்றிருப்பதாக ஐதீஹம். கோயிற் சுவரிலும் வெளிக் கம்பத்திலும் இவ் உருவங்களைக் காணலாம்.

61 திருப்பைஞ்ஞீ

இறைவன் : நீலகண்டர்

இறைவி : விசாலாட்சியம்மை

தீர்த்தம் : விசாலாட்சி தீர்த்தம்

பதிகம் : சம் *1*, அப் *1*, சுந் *1*.

வழி : மண்ணச்ச நல்லூருக்கு மேற்கே 2 கி.மீ. திருச்சிக்கு வடக்கே 6 கி.மீ. சென்று, அப்பால் வடமேற்கே 11 கி.மீ. சென்றால் இந்தத் தலத்தை அடையலாம். பிக்ஷாண்டார் கோயில் புகைவண்டி நிலையத்திலிருந்து நொச்சியம் வழியாகப் போகலாம்.

சிறப்புக்கள் : பசியினால் வருத்தமுற்று வந்த அப்பர் ஸ்வாமிகளுக்குச் சிவபெருமான் கட்டமுது கொடுத்தருளிய தடாகமுந் தோட்டமும் இந்தத் தலத்துக்குத் தெற்கே 1 கி. மீட்டரிலிருக்கின்றன.

பாரிடம் (பூதங்கள்) பூசித்த ஸ்தலம். தேவி சந்நிதிகள் இரண்டு: ஒன்று பழைய அம்பிகையின் சந்நிதி.

பைஞ்ஞீலி என்றாற் பசிய வாழை என்று பொருள். இவ் வாழை கோயிலிலிருக்கின்றது. இதை ஸ்வாமிக்குத்தான் உப

யோகிக்கின்றார்கள். பைஞ்ஞலி-நீலிவானம். நீலிச் செடி இத் தலத்துக்கு உரியது. அரம்பை (வாழை) வனம் எனவும் இத் தலம் கூறப்படும். யமனுக்கு பிரத்யேக சந்நிதி. இத்தலததில் நவக்ரகங்கள்-விக்ரகங்களுக்குப் பதிலாகத் தீபங்களால் வழி படடப்படுகின்றன.

62 திருப்பாச்சிலாச்சிராமம்
இதனைத் திருவாசி யென்பர்

இறைவன் ; மாற்றறி வரதர்

இறைவி : பால சௌந்தரி

மரம் : வன்னிமரம்

தீர்த்தம்: பிரமதீர்த்தம், அன்னமாம் பொய்கை

பதிகம்: சப் 1, சுந் 1

வழி: பிக்ஷாண்டார் கோயில் புகைவண்டி நிலையத்தி லிருந்து 5 கி மீ.

சிறப்புக்கள்: திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் கொல்லி மழவன் என்னும் அரசனுடைய குமாரத்திக்கு முயலகன் என்னும் வியாதியைத் தீர்த்தருளிய ஸ்தலம்.

இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொன்பெற்ற ஸ்தலங் களுள் ஒன்று.

தேவி கோயிலுக் கெதிரில் தாமிரபரணி எனப்படும் தீர்த்தமும், அதன் கரையில் வன்னி விருக்ஷமும் இருக்கின்றன. நடராஜர் சர்ப்ப நடனமூர்த்தி பாதத்தின் கீழ் சர்ப்பத்தின் உருவம் இருக்கின்றது.

XIX விஷ்ணு ஸ்தலங்கள்: ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தலம்
திருக்கரம்பனூர் (உத்தமர் கோவில்)

மூலவர்: புருஷோத்தமன், புஜங்கசயனம் கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : பூர்வா தேவி, பூர்ணவல்லி

தீர்த்தம் : கதம்ப தீர்த்தம்

ஸ்தல வ்ருக்ஷம் : கதலீ வ்ருக்ஷம் (வாழை மரம்)

விமானம் : உத்யோக விமானம்

வழி : இது திருச்சி-விழுப்புரம் கார்டுலைனில் ஒரு சிறிய புகைவண்டி நிலையம். திருச்சியிலிருந்தும் ஸ்ரீரங்கத்திலிருந்தும் திருவெள்ளறை போகும் பேருந்து வழியில் இங்கு இறங்கலாம்.

சிறப்புக்கள் : தன்னைப் போலவே பிரம்ம தேவருக்கும் தலைகள் உள்ளதைச் சகியாமல் சிவன் பிரம்மனுடைய ஒரு தலையைக் கிள்ளி எறிந்தபடியால் ப்ருஹ்மஹத்தி தோஷம் வந்து, சிவபெருமான் கையில் கபாலம் ஒட்டிக்கொண்டது. சிவன் கையில் ஒட்டிக்கொண்ட கபாலத்தில் மஹாலக்ஷ்மியைக் கொண்டு பிச்சையிடச் செய்து சாபந்தீர்த்துக் கொண்டதாக வரலாறு. சிவன், பார்வதி, பிரம்மா, ஸரஸ்வதி மற்ற தெய்வங்களுக்கும் பல சந்நிதிகள் இங்கே உள்ளன. இந்த க்ஷேத்திரத்தில் சிவபெருமான் பிக்ஷாடன மூர்த்தியாகத் தம் குடும்பத்தோடு இருக்கிறார். ஆகவே, இந்த ஸ்தலத்திற் குபிக்ஷாண்டார் கோவில் என்றும் பெயர் வழங்கி வருகிறது. சத்திரங்கள், கல்யாண கூடங்கள் எல்லாம் இருக்கின்றன.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 5- -2

XX திருவெள்ளறை (வேதகிரி க்ஷேத்திரம்)

மூலவர் : புண்டரீகாக்ஷன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : செண்பகவல்லி, பங்கயச் செல்வி, தனிக்கோவில் நாச்சியார் சந்நிதி உண்டு. உத்ஸவத் தாயாருக்கு பங்கஜவல்லி என்று திருநாமம்.

தீர்த்தம் : மதிலுக்குள்ளேயே 7 தீர்த்தங்கள் உள்ளன. திவ்ய, கந்த க்ஷீரபுஷ்கரிணிகள், குச, சக்ர, புஷ்கல, பத்ம, வராஹ மணிகர்ணிகா.

விமானம் : விமலாக்ருதி விமானம்

ப்ரத்யக்ஷம் : பெரிய திருவடி, சிபி, பூதேவி, மார்க்கண்டேயர், லக்ஷ்மி, ப்ருஹ்மருத்ரர்கள்.

வழி : திருச்சியிலிருந்து துறையூர் போகும் பேருந்து வழித்தடத்தில் உள்ளது. திருச்சியிலேயே தங்கி வணங்கிவிட்டுத் திரும்பிப் போகலாம். பெரிய மதில்களுடன் கூடிய விசாலமான இக்கோயில், பேருந்து பாதையிலிருந்து சுமார் ¼ கி. மீ. தூரத்தில் உள்ளன.

சிறப்புக்கள்: உத்தராயண வாசல், தக்ஷிணாயண வாசல் என்று இரண்டு வாசல்கள். தை முதல் ஆனி வரை உத்தராயண வாசல் வழியாகவும், ஆனிமுதல்மார்கழி வரை தக்ஷிணாயண வாசல் வழியாகவும் பெருமாளை வணங்க வேண்டும். இரவில் நேரங்கழித்து வந்த பெருமாளைத் தாயார் ''ஏன் இவ்வளவு நேரம்'' என்று கேட்டதைக் குறிக்கும் வகையில் ''நாழி கேட்டான் வாசல்'' என்று ஒரு வாசலுமுண்டு ஸ்ரீதேவி, பூதேவி, ஸூர்ய சந்திரர்கள், ஆதிசேஷன்-இவர்கள் மனித உருவில், பக்கத்தில் நின்று கைங்கர்யம் செய்வது இந்த சந்நிதியின் சிறப்பு. இந்த க்ஷேத்திரத்தின் ஸகல ஆகித்யமும் பங்கயச் செல்வியினுடையது. உய்யக் கொண்டார் அவதாரஸ்தலம் இதுவே. நடாதூரம்மாளுக்கு ''ஒப்பாரும் மிக்காரும் இல்லை'' எனும் புகழ்மாலையைச் சூட்டும்படி கிருபை பண்ணிய மகானுபாவரான எங்களாழ்வான் அவதரித்த ஸ்தலம். உடையவர் வைஷ்ணவத்தை வளர்க்க வாஸம் செய்த ஸ்தலம்.

மங்களா சாஸனம்

பெரியாழ்வார் பெரியாழ்வார் திருமொழி 2-8 பதிகம்.

XXI ஸ்ரீரங்கம் (திருவரங்கம்)

மூலவர்: ஸ்ரீ ரங்கநாதன் (பெரிய பெருமாள், நம்பெருமாள், அழகிய மணவாளன்) புஜங்க சயனம் (ஆதிசேஷ சயனத் திருக்கோலம்) தெற்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: நம்பெருமாள் என்ற சிறப்புப் பெயருடன் நின்ற திருக்கோலம்

தாயார்: ஸ்ரீ ரங்கநாயகி (ரங்க நாச்சியார்)

தீர்த்தங்கள்: சந்த்ர புஷ்கரிணி, காவேரி, கொள்ளிடம், வேதச்ருங்கம்

ஸ்தல வ்ருக்ஷம்: புன்னை

விமானம்: ப்ரணவாக்ருதி

ப்ரத்யக்ஷம்: தர்மவர்மா, ரவிதர்மன், சந்த்ரன், விபீஷணன்

வழி: ஸ்ரீ வைஷ்ணவத் தலங்களில் முதன்மையானதாக, "கோயில்" என்ற சிறப்புப் பெயருடன் விளங்குவதும், காவிரி-கொள்ளிட நதிகளின் நடுவே அமைந்திருப்பதுமான இவ்வூர், திருச்சி, விழுப்புரம் புகைவண்டி வழித்தடத்தில் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளது. திருச்சியிலிருந்து நகரப் பேருந்து மூலம் சென்றால் கோவில் தெற்குக் கோபுர வாசலிலேயே இறங்கலாம்.

சிறப்புக்கள்: பட்டர், வடக்குத் திருவீதிப்பிள்ளை-பிள்ளை லோகாசார்யர், பெரிய நம்பி இவர்கள் தோன்றிய பூமி. இது, தொண்டரடிப்பொடி ஆழ்வார் நந்தவனப் பணியும் திருமங்கை ஆழ்வார் திருமதில் பணியும் செய்த இடம். ஸ்ரீ மந்நாதமுனிகளால் திவ்யப் பிரபந்தத்தை ராகதாளங்களுடன் பாடும்முறை "அரையர் சேவை" என்ற பெயரில் இங்கு நடந்து வருகிறது. ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுக்குப் பெரிய பெருமாள் "கவிதார்க்கிக ஸிம்ஹம்" என்றும், தாயார் "ஸர்வதந்த்ரஸ்வதந்ரர்" என்றும், பிருதங்கள் வழங்கிய ஸ்தலம். நம்பெருமாளின் ஆணைப்படி ஸ்ரீ மணவாள

மாமுனிகள் இந்த சந்நிதியில் திருவாய்மொழி காலக்ஷேபம் செய்தார். நம்பெருமாள், பகவத் விஷயசாற்றுமறையன்று குழந்தையாக வந்து நின்று ஸ்ரீசைலேச த்யாபாத்ரதனியனை அருளிச்செய்து மணவாளமாமுனிவருக்குப் பஹுமானமாக அளித்தார். இது ஒரு தனிச்சிறப்பு. இந்த ஸ்தலத்தை பூலோக வைகுண்டம் என்றும் அழைப்பார்கள்.

சமீபத்தில் ஸ்ரீ அஹோபிலஜீயர் தீவிர முயற்சியால் தெற்கு வாசலில் பெரிய ராஜகோபுரம் கட்டப்பட்டு ஏராளமான பொருட்செலவில் கட்டப்பட்ட இந்தக் கோபுரம் இந்தியாவிலேயே மிகப் பெரிய கோபுரமாகத் திகழ்கிறது. வடக்குப் பக்க பரமபத வாசலில் வரஜாநதி இருப்பதாக வரலாறு. கம்பராமாயண அரங்கேற்றத்தின் போது சிரக்கம்பம் செய்து ஆமோதித்த ''மேட்டு அழகிய சிங்கர்'' என்னும் ஸ்ரீ நரஸிம்மமூர்த்தி இங்குக் கோவில் கொண்டுள்ளார். இது தாயார் சந்நிதி நுழைவாசலில் உள்ளது. வேறெங்கும் காணப்படாத ஸ்ரீதன்வந்தரி பகவானின் சந்நிதி இங்குள்ளது. இது பரமபத வாசலுக்கு வடக்கிலும், சந்த்ர புஷ்கரிணிக்கு மேற்கிலும் உள்ளது. மூலவர் ரங்கநாதர் கர்ப்பக்ருஹத்தின் மேல் தங்க விமானத்தில் தென்பக்கம் பரவாஸுதேவர் தங்க விக்ரஹம் உள்ளது. ஸ்ரீரங்கநாதரை தரிசித்துவிட்டு வெளியே வரும்பொழுது தங்க விமானத்தை யும் பரவாஸதேவரையும் வணங்கும் வழக்கம் உள்ளது.

மங்களா சாஸனம்

பெரியாழ்வார் ஆண்டாள்	முதல் திருவந்தாதி (6), இரண்டாம் திருவந்தாதி (70) மூன்றாந்
குலசேகராழ்வார் திருமழிசையாழ்வார்	திருவந்தாதி (62), திருச்சந்த் விருத்தம் (51), திருவாய்மொழி
தொண்டரடி யாழ்வார் திருப்பாணாழ்வார் திருமங்கையாழ்வார்	(7-2) பதிகம், பெருமாள் திருமொழி (1-1 பதிகம், முதலியன) பெரியாழ்வார் திருமொழி (4-8) பதிகம் முதலியன. நாச்சியார்
பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார்	திருமொழி 11 பதிகம், திருமாலை அமலனாதிபிரான் பெரிய திருமொழி, 5-4 பதிகம் முதலியன.

அபிமான ஸ்தலம்

குணசேகரம்

பெருமாள் : ஸ்ரீநிவாஸன், கிழக்கே நின்ற திருக்கோலம்

தாயார் : அலர்மேல் மங்காத் தாயார். தனித் தாயார் சந்நிதி கிடையாது.

வழி : திருச்சி-முசிறி-நாமக்கல் பேருந்து வழியில்

சிறப்புக்கள் : மனநோய் உடையவர்கள், பில்லி சூன்யம் உள்ளவர்கள் இங்கே 1 மண்டலம் தங்கி, பெருமாளை வழி பட்டால் குணம் காணலாம் என்பது பிரசித்தம். திருப்பதி செல்ல இயலாதவர்கள், அவர்கள் பிரார்த்தனையை இவ் விடமே செலுத்தலாம்.

63 திருஈங்கோய் மலை

இறைவன் : மரகதாசலேசுரர்

இறைவி : மரகதவல்லியம்மை

தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்

பதிகம் : சம் 1.

வழி : திருச்சிராப்பள்ளிக்கு மேற்கிலுள்ள குழித்தலை நிலையத்திலிறங்கி, வடமேற்கே 1½ கி.மீ. சென்று திருக் கடம்பந் துறையைச் சேர்ந்து, அங்கே 1½ கி.மீ. அகன்ற காவிரியைக் கடந்து சென்றால் அக்கரையில் இத் தலம் உள்ளது. முசிறியிலிருந்து மேற்கே 5 கி.மீ.

சிறப்புக்கள் : அகஸ்திய முனிவர் ஈ ரூபமாகச் சென்று ஸ்வாமியைத் தரிசித்த ஸ்தலம். கோயில் குன்றின் மேல் உள்ளது. 500 படிக்கட்டுகள் உள்ளன.

ஒரே தினத்திற் காலையிற் கடம்பர் கோயிலையும் மத்தியானத்தில இரத்தினகிரியையும் மாலையில் திருஈங்

கோய் மலையையுந் தரிசித்தால் விசேஷபலன் உண்டென்றும், கார்த்திகை சோமவாரத்தில் இந்தப்படி தரிசிப்பது அதிக விசேஷமென்றுங் கொள்ளப்படுகின்றது. 'காலைக்கடம்பர் மத்தியானச் சொக்கர், அந்தித் திருவீங்கோய் நாதர்' என வழங்குகின்றது'

காவிரியின் தென்கரையிலுள்ள தலங்கள்

1 வாட்போக்கி என்ற இரத்தினகிரி

இறைவன்: ரத்நகிரீசுரர்

இறைவி: சுரும்பார் குழலம்மை

தீர்த்தம்: கௌரி தீர்த்தம், காவிரி

பதிகம்: அப்பர் 1

வழி: குழித்தலை புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கே மணப்பாறை போகும் வழியில் 10 கி.மீ.

சிறப்புக்கள்: அரதனாசலம், சிவாயம் எனவும் பெயர்கள் உள்ளன. ஆதிசேஷனுக்கும் வாயு தேவனுக்கும் உண்டான போரில் வாயுதேவன் மேருமலையில் இருந்து வெளிப்படுத்த வந்ததொரு முடியாதலின் இப்பெயர் போந்ததென்பர். கோயில் உயரிய மலைமேலிருக்கின்றது. 952 படிகள். இந்திரன், சயந்தன், வாயு, ஆதித்தன், ஆதிசேடன், அகத்தியர், சப்த கன்னியர் முதலியோர் பூசித்த ஸ்தலம். ஆரிய தேசத்தரசன் மாணிக்கம் வேண்டி ஸ்தலங்கள் தோறும்சென்றுங் கிடையாமல் இங்குவர, சிவபெருமான் ஒரு நீர்த்தொட்டியைக் காட்டி, அதைக் காவிரி ஜலத்தினால் நிரப்பும்படி சொல்ல, அரசன் அவ்வாறு செய்தும் அத் தொட்டி நிறையாமலிருக்கக் கோபங்கொண்டு உடைவாளை யுருவி ஓங்க நினைக்க, சிவபெருமான் அவ்வாளைப் போக்கி விட்டு இரத்தினத்தைக் காண்பித்தருளவும், அரசன் அதை விரும்பாது விட்டுச் சிவபணிவிடை ஒன்றையே செய்து முத்தி

பெற்ற ஸ்தலம். இத்தலத்தில் அகஸ்தியர் மத்தியான தரிசனம் பெற்றபடியால் இங்கு மத்தியான தரிசனம் விசேஷம் ஸ்வாமிக்கு மத்தியான சுந்தரர் என்றும் பெயர். இங்கு இந்திரனாலுண்டாக்கப்பட்ட வேப்ப விருக்ஷத்தையும், இரத்தின கிரீசரைத் தரிசித்துத் திரும்பும் பொழுது வயிர வீரப்பெருமாளென்னும் வீரவாகுவையுந் தரிசித்தல் வேண்டும்.

மேற்குப் பார்த்த சந்நிதி. ஆரியராஜனால் வெட்டுப் பட்ட வாட்குறி இலிங்கத்தில் இருக்கின்றது. ஸ்வாமிக்கு 'முடித்தழும்பர்' என்னும் ஒரு திருநாமம் உண்டு. பன்னிரு வருடத்துக்கு ஒரு முறை இடி பூஜை உண்டாம். இடையன் கொணர்ந்த பாலைக் கவிழ்த்த காகம் எரிபட்டது. இம்மலை "காகம் அணுக முடியாத மலை" என்பர்.

2 திருக்கடம்பந்துறை என்பது கடம்பர் கோயில்

இறைவன்: கடம்பவன நாதேசுரர்

இறைவி: முற்றிலா முலையம்மை

தீர்த்தம்: ஞான தீர்த்தம், காவிரியாறு

மரம்: கடம்பமரம்

பதிகம்: அப் 1

வழி: குழித்தலை புகைவண்டி நிலையத்திற்கு வடமேற்கு 1½ கி.மீ.

சிறப்புக்கள்: கண்ணுவ முனிவருக்கும் தேவர்களுக்கும் சிவபெருமான் கடம்ப விருக்ஷத்தில் தோன்றிக் காட்சி கொடுத்த ஸ்தலம்.

3 திருப்பராய்த்துறை

இறைவன்: பராய்த்துறை நாதர்

இறைவி: பொன்மயிலம்மை

தீர்த்தம்: காவிரி

மரம்: பராய்மரம்

பதிகம்: சம் 1, அப் 1

வழி: எலமனூர் புகைவண்டி நிலையத்துக்கு வட மேற்கு 2 கி மீ.

சிறப்புக்கள்: இந்திரனும், குபேரனும், சப்தருஷிகளும் பூசித்த ஸ்தலம்.

4 திருக்கற்குடி (உய்யக்கொண்டான்)

இறைவன்: உஜ்ஜீவனேஸ்வரர்

இறைவி: அஞ்சனாட்சியம்மை

தீர்த்தம்: பொன்னொளி ஓடை, குடமருட்டி, ஞானவாவி, எண்கோணக் கிணறு, நாற்கோணக் கிணறு என்பன

பதிகம்: சம் 1, அப் 1, சுந் 1

வழி: திருச்சிராப்பள்ளிக்கு (6) தென்மேற்கு 4 கி மீ.

சிறப்புக்கள்: கோயில் ஒரு சிறிய மலைமேல் இருக்கின்றது. மேற்குப் பார்த்த சந்நிதி. தேவி சந்நிதி இரண்டு.

ஈழநாட்டரசன் உச்சிக்காலத்தில் வந்து பூசித்து முத்தி பெற்ற ஸ்தலம். இத்தலத்திற் பிரார்த்தனைக்காக பானக பூஜை நடப்பதுண்டாம். இது கரன் பூஜித்த தலம். திரிசிரன் பூசித்தது திருச்சிராப்பள்ளி; தூஷணன் பூசித்தது திருவெறும்பியூர் (7) இத்தலத்திலிருந்து பின்னும் 5½ கி.மீ. சென்றால் ''வயலூர்'' என்னும் சுப்ரமண்ய க்ஷேத்திரம் இருக்கின்றது.

5 திருமுக்கீச்சுரம் என்பது உறையூர்

இறைவன்: பஞ்சவர்ண நாதர்

இறைவி: காந்திமதியம்மை

தீர்த்தம்: பஞ்சவர்ண தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: திருச்சி (6) க்கு மேற்கு $1\frac{1}{2}$ கி.மீ.

சிறப்புக்கள்: பிரமன் வந்து பூசிக்கும்பொழுது சிவபெருமான் வேளைக்கொரு வர்ணமாக வீற்றிருக்கக் கண்டு அவருக்குப் பஞ்சவர்ண நாதேசுரர் என்று பெயர் கொடுத்த ஸ்தலம். புகழ்ச் சோழநாயனாருடைய ஸ்தலம். மூவேந்தருஞ் சேர்ந்து தொழுத திருப்பதி. இங்கு உதங்க முனிவருக்கு ஐந்து காலங்களில் ஐந்து வர்ணமாகச் சிவபெருமான் காட்சி கொடுத்தருளினராம். யானையைக் கோழி வென்றமையால் இத்தலத்துக்குக் கோழியூர் என்றும் ஒரு பெயருண்டு. சூரவாதித்தன் என்னுஞ் சோழனால் சீர்திருத்தப்பட்டு ஆலயம் முதலிய அமைக்கப்பெற்றனவாம். கருடன், காசிபர் மனைவி கத்துரு. (கத்துரு மகன்) கார்க்கோடகன் பூசித்த தலம்.

மீநாக்ஷிசுந்தரப்பிள்ளை யவர்கள் பாடிய ஸ்தலம்.

6 திருச்சிராப்பள்ளி

இறைவன்: தாயுமானேசுரர்

இறைவி: மட்டுவார் குழலம்மை

தீர்த்தம்: காவிரி.

பதிகம்: சம் 1, அப் 1.

வழி: புகைவண்டி நிலையம் உள்ளது.

சிறப்புக்கள்: மூன்று சிரங்களிருந்த 'திரிசிரன்' என்னும் அரக்கன் பூஜித்தமையின், இந்த ஸ்தலத்துக்குத் 'திரிசிராப் பள்ளி' என்னும் பெயரெய்தியது. திருக்காளத்தி, திருக்கோண மலை இவைகளைப் போல, இதுவும் 'தக்ஷிண, கைலாசம்' எனப்படும்.

கோயில் மலைமேலிருக்கின்றது. ஸ்வாமியிடத்தில் அன்பு மிகுந்திருந்த ஒரு மாது, கருப்பமாயிருந்து, பிரசவ காலத்திற்

காவிரி பெருகினதால், தன் தாய் வந்து உதவப்பெறாமற் சங்கடப்படும் பொழுது, ஸ்வாமியே அவள் தாயைப் போல வந்து மருத்துவம் பார்த்து ஆதரித்த அருமையான ஸ்தலம். இதனால் ஸ்வாமிக்குத் தாயும் ஆனவர் என்னும் பெயர் வந்தது. மேற்கு நோக்கிய சந்நிதி.

அதிமதுரமான தமிழ்ப் பாடல்களாற் கடவுளைப் பாடித் துதித்த தாயுமான ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்த ஸ்தலம்

மலை உச்சியில் உச்சிப்பிள்ளையார் கோயில் இருக்கின்றது. அங்கிருந்து பார்த்தால் திருவனைக்கா, ஸ்ரீரங்கம் ஆகிய தலங்களின் கோபுரங்களும், காவிரியாறும், கொள்ளிட நதியும், திருச்சிரரப்பள்ளி நகரும் தெரிகின்றன.

இந்திரன், பிரமன், இராமன், நாககன்னியர், ஹநுமார் முதலியோர் பூசித்தனர். அநுமார் பூசித்ததற்கு அறிகுறியாக அநுமக் கொடியும், அநும முத்திரையும் இக்கோயிலுக்கு உரியவைவாக வழங்கி வருகின்றன. நன்றுடையான் தீய திலான் என்று தீர்த்தங்கள் உள்ளன.

விஷ்ணு ஸ்தலம் ஸ்ரீவைஷ்ணவ ஸ்தலம்

I திருக்கோழி

மூலவர் : அழகிய மணவாளப் பெருமாள், நின்ற திருக்கோலம், ப்ரயோக சக்கரம், வடக்கே திருமுக மண்டலம்.

தாயார் : பெருமாள் பக்கத்திலேயே கமலவல்லி நாச்சியார்-வாசலெட்சுமி, உறையூர்வல்லி, வீற்றிருந்த திருக்கோலம் (தாயாருக்குத் தனி சந்நிதி இல்லை.) வடக்கே திருமுக மண்டலம். திருமணத் தருண திருக்கோலம்.

தீர்த்தம் : கல்யாண தீர்த்தம், சூரியபுஷ்கரிணி, குடமுருட்டி நதி.

விமானம் : கல்யாண விமானம்

பிரத்யட்சம் : ரவிதர்மா, 33 கோடி தேவர்கள்

வழி : இது திருச்சி முனிஸிபாலிடிலேயே ஒரு பகுதி. திருச்சி ஜங்ஷனிலிருந்து 3 கி. மீ.

சிறப்புக்கள் : சோழமன்னனின் திருமகளான கமலவல்லி நாச்சியார் ஸ்ரீ ரங்கநாதன் மீது காதல் கொண்டு, விரதம் இருக்க, அழகிய மணவாளன் இங்கு வந்து திருமணம் செய்து கொண்டதாக வரலாறு. திருப்பாணாழ்வாரின் அவதார ஸ்தலம், அவருக்குத் தனி சந்நிதி இருக்கிறது, பங்குனி உத்திரத்திற்கு முதல் நாள் ஸ்ரீ ரங்கத்திலிருந்து ஸ்ரீரங்கநாதர் உத்ஸவர் எழுந்தருளி கல்யாண உத்ஸவம் வருடம் தோறும் நடைபெறுகிறது.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 9-2-5

7 திருஎறும்பியூர் என்பது திருவெறும்பூர்

இறைவன் : எறும்பீசுரர்.

இறைவி : நறுங்குழல் நாயகி

பதிகம் : அப் 2.

வழி : புகைவண்டி நிலையம். திரிசிரபுரத்துக்குக் கிழக்கே 10 கி.மீ.

சிறப்புக்கள் : தேவர்கள் எறும்பு ரூபம் எடுத்து வந்து பூசித்த ஸ்தலம். அசுரன் துாஷணன் பூசித்தது. கோயில் குன்றின் மேலிருக்கின்றது. இலிங்கமூர்த்தி வடபுறஞ் சாய்ந்திருக்கின்றார். விஷ்ணுவும் பிரமனும் நைமிச முனிவர்களும் பூஜித்த

ஸ்தலம். "மேவிவையம் அளந்தவனை நான்முகனை அல்லல் தீர்க்கும் அருமருந்தை" "முனிக் கணங்க ளேத்துஞ் சீரெறும் பியூர்" என்பன தேவாரம்.

8. திருநெடுங்களம் (திருநாட்டங்குளம்)

இறைவன் : நித்திய சுந்தரேசுரர்

இறைவி : ஒப்பிலா நாயகி

தீர்த்தம் : சூரிய தீர்த்தம்

பதிகம் : சம் 1.

வழி : திருஎறும்பியூர் (7) புகைவண்டி நிலையத்தில் இருந்து கிழக்கே 11 கி. மீ. சோழகம்பட்டி புகைவண்டி நிலையத்தி லிருந்து 3 கி. மீ.

சிறப்புக்கள் : வங்கிய சோழராஜனுக்கு அநுக்கிரகஞ் செய்த ஸ்தலம்.

9. மேலைத்திருக்காட்டுப்பள்ளி

இறைவன் : தியாடியப்பர்

இறைவி : வார்கொண்ட முலையம்மை

தீர்த்தம் : காவிரியாறு

பதிகம் : சம் 1, அப் 1.

வழி : பூதலூர் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 8 கி.மீ. குடமுருட்டியாற்றின் தென்கரையிலிருக்கின்றது.

சிறப்புக்கள் : உறையூர் நந்தவனத்தில் திருடிய செவ்வந்தி மலரை அரசன் தன் பத்தினிகளுக்குக் கொடுப்ப, அவர்களில் மூத்தாள் மாத்திரம் அதை யரண்மனையிலிருந்த சிவபெரு

மானுக்கு அணிந்து வந்தாள். உறையூரில் மண்மாரி பெய்ய. மூத்தாள் மாத்திரம் அதற்குத் தப்பி, மேலைத் திருக்காட்டுப் பள்ளிக்குவர, அவளுக்காக இரங்கி ஸ்வாமி கானல் வெப் பம் தணித்தருளினார்.

கணங்கள் பூசித்த தலம். இங்கிருந்து காவேரி வடகரை வைஷ்ணவ ஸ்தலம் (17, 18,) அன்பில, திருப்பேர்நகர் இரண் டிற்கும் செல்லலாம்.

10. திருஆலம்பொழில்

இறைவன் : ஆத்மநாதேசுரர்

இறைவி : ஞாநாம்பிகை

தீர்த்தம் : திருப்பாற்குளம், குடமுருட்டி

மரம் : ஆலமரம்

பதிகம் : அப் 1.

வழி: தஞ்சாவூரிலிருந்து வடக்கே திருவையாற்றுக்குப் போகும் வழியில் 9½ கி.மீ. சென்று திருக்கண்டியூரை (12) யடைந்து, அங்கிருந்து மேற்கே 3கி.மீ. சென்று திருப்பூந் துருத்தியை (11) யடைந்து, பின்னும் 1½ கி.மீ. சென்றால் இந்த ஸ்தலத்தை அடையலாம்.

சிறப்புக்கள்: அஷ்டவசுக்கள் பூசித்த ஸ்தலம், மேற்குப் பார்த்த சந்நிதி. கோயிலுக்கெதிரிற் பெரிய தாமரைத் தடாகம் இருக்கின்றது.

11 திருப்பூந்துருத்தி

இறைவன்: புஷ்பவன நாதர்

இறைவி: அழகார்ந்த நாயகி, சௌந்தராம்பிகை.

தீர்த்தம்: காசிப தீர்த்தம் (கிணறு) காசி கங்கை எனவும் கூறுவர்.

பதிகம்: அப் 3

வழி; திருக்கண்டியூருக்கு (12) மேற்கே 3 கி.மீ. திருவாலம் பொழிலுக்கு (10) கிழக்கே 1½ கி.மீ.

சிறப்புக்கள்: சோழராஜா துருத்தியை வைத்துப் பூஜிக்கச் செய்ததனால் திருப்பூந்துருத்தி என்று பெயர் வந்ததெனபர். பட்டீச்சுரத்திற்போல நந்திகள் விலகியிருக்கின்றன. திருஞான சம்பந்தருக்காக விலகினவாம். அப்பர் ஸ்வாமிகள் ஒரு திருமடங் கட்டுவித்துப் பலவகைத் திருத்தாண்டங்களும் திரு அங்கமாலை முதலிய திருப்பதிகங்களும் பாடிக்கொண் டிருந்த ஸ்தலம். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், பாண்டி நாடு சென்று சமணரை வென்று திரும்பிவரும் பொழுது, அப்பர் ஸ்வாமி இங்கிருத்தலைக் கேள்வியுற்று, அவருடன் சிலகாலம் இருந்தருளிய திருப்பதி. அப்பர் சுவாமிகள் மடம் புதுட்பிக்சப்பட்டிருக்கின்றது. தேவேந்திரனும் காசிபரும் பூசித்த ஸ்தலம். காசிப தீர்த்தம் (கிணறு) திருக்கோயிலில் அக்கினி மூலையில் இருக்கின்றது. சப்த ஸ்தானங்களில் ஆறாவது ஸ்தானம்.

12. திருக்கண்டியூர்

இறைவன்: வீரட்டேசர், வீரட்டான நாதர்

இறைவி: மங்கள நாயகி

தீர்த்தம் : காவிரியாறு

பதிகம் : சம் 1. அப் 1.

வழி : காவேரி வடகரை திருவையாற்றுக்குத் தெற்கே 2 கி.மீ.

சிறப்புக்கள் : மாசி மீ 13-15 தேதிகளிற் சூரியபூஜை. மேற்குப் பார்த்த சந்நிதி அஷ்டவீரத் தலங்களில் ஒன்று.

பிமராவின் சிரஸைக் கொய்த ஸ்தலம். சப்த ஸ்தானங்களில் ஐந்தாவது. சாதாதபர் பூசித்த தலம். அவருடைய திருவுருவமும், பிரமா, சரசுவதி இவர்கள் திருவுருவங்களும் கோயிலுளிருக்கின்றன.

11. விஷ்ணு ஸ்தலம் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தலம்
திருக்கண்டியூர் (த்ரிமூர்த்தி க்ஷேத்திரம்)

மூலவர் : ஹரசாப விமோசனப் பெருமாள், நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : கமலநாதன்

தாயார் : கமலவல்லி

தீர்த்தம் : கபால மோக்ஷபுஷ்கரிணி, பத்ம தீர்த்தம், கபால தீர்த்தம், குடமுருட்டி நதி.

விமானம்: கமலாக்ருதி விமானம்

ப்ரத்யக்ஷம்: அகஸ்த்யர்.

வழி: திருவையாற்றுக்குத் தெற்கே 2½ கி.மீ.

சிறப்புக்கள்: பரமசிவன் ப்ரஹ்மனின் ஒரு தலையைக் கிள்ளியதால் அவர் கபாலம் கையில் ஒட்டிக்கொள்ள அந்த சாபத்தை இந்தப் பெருமாள் விமோசனம் செய்து வைத்ததாக ஐதீஹம். (திருக்கரம்பனூரிலும் இதே ஐதீகம்தான்) ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் மூவருக்கும் கோபுரங்களுடன் கூடிய தனிக்கோவில்கள், ¼ கி.மீ. தூரத்திற்குள் உள்ளன.

பெருமாள் கோவிலில் ஒரு ஸந்நிதியில் முன்புறம் சக்கரத்தாழ்வாரும் பின்புறம் நரஸிம்ஹனும் உள்ளனர். ஆனால் சுவரின் ஓரமாக ஸ்தாப்பித்திருப்பதால் பின்புறம் சென்று நரஸிம்ஹனை வணங்க முடியாது.

13. திருச்சோற்றுத்துறை

இறைவன் : தொலையாச் செல்வர்

இறைவி : ஒப்பிலாவம்மை

தீர்த்தம் : காவிரிஆறு, பகலோன் தீர்த்தம்

பதிகம் : சம் 1. அப் 4, சுந் 1. திருப்பதிகக் கோவையிலுள்ள படி ஏழுபதிகம்.

வழி : திருக்கண்டியூருக்குக் கிழக்கே 2½ கி. மீ.

சிறப்புக்கள் : இது சப்த ஸ்தானங்களில் மூன்றாவது ஸ்தலம். இந்திரன், சூரியன், கௌதமர் முதலியோர் பூசித்தது. சிவ பக்தனான அருளாளன் என்னும் மறையவன் பசியால் வருந்தும் பொழுது ஸ்வாமி. அவனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத சோறு அளித்தருளிய ஸ்தலம். ஊருக்குத் தெற்கே "சோறுடையான வாய்க்கால்" என்று ஒரு வாய்க்கால் இருக்கின்றது. கௌதமர் உருவம் திருவாயிலின் தென்கீழ்பால் கோயிலுக்குள் இருக்கின்றது.

14. திருவேதிகுடி

இறைவன் : வேதபுரீசுரர்

இறைவி : மங்கையர்க்கரசி

தீர்த்தம் : சுந்தர தீர்த்தம்

பதிகம் : சம் 1, அப் 1.

வழி : திருக்கண்டியூரிலிருந்து (12) தென் கிழக்கே 3 கி.மீ.

சிறப்புக்கள் : சப்தஸ்தானங்களில் நான்காவது ஸ்தலம். வேதங்கள் பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி வாழை மடுவில் உற்பத்தியானவர் வாழை மடுநாதர் என்ற பெயரும் உண்டு.

பிள்ளையாருக்கு வேதப்பிள்ளையார் என்று பெயர். வேதங் கேட்கச் சாய்ந்திருக்கின்றார். பங்குனி 13-15 தேதிகளில் உதயத்தில் சூரிய பூஜை.

III. விஷ்ணு ஸ்தலம்

திருத்தஞ்சை மாமணிக் கோவில்.

1. தஞ்சை மாமணிக் கோவில்.

மூலவர் : நீலமேகப் பெருமாள், வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : செங்கமலவல்லி.

தீர்த்தம் : அம்ருத தீர்த்தம், கன்னிகாபுஷ்கரிணி, வெண்ணாறு.

விமானம் : ஸௌந்தர்ய விமானம்

ப்ரத்யக்ஷம் : பராசரமுனி.

2. மணிக்குன்றம்.

மூலவர் : மணிக்குன்றப் பெருமாள், வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : அம்புஜவல்லி.

தீர்த்தம் : ஸ்ரீ ராம தீர்த்தம்

விமானம் : மணிக்கூட விமானம்

ப்ரத்யக்ஷம் : மார்க்கண்டேயர்

குறிப்பு : திவ்யப் பிரபந்தம் வணங்கப்படாத அனத்யயன காலத்தில், தேசிகப் பிரபந்தத்தை எல்லா திவ்ய தேசங்களிலும் வணங்க வேண்டும் என்று நயினாராசாரியர் ஸ்வாமி நியமித்த திவ்யதேசம்.

3. தஞ்சையாளி நகர்

மூலவர் : நரஸிம்மன், வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : தஞ்சை நாயகி.

தீர்த்தம் : ஸீர்ய புஷ்கரிணி, ஸ்ரீ ராம தீர்த்தம்.

விமானம் : வேதஸுந்தர விமானம்

ப்ரத்யக்ஷம் : மார்க்கண்டேயர்

மூன்று கோவில்களிலும் உத்ஸவர் பெயர் ஸ்ரீமந்நாராயணன் தான்.

வழி : தஞ்சாவூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ள வெண்ணாங்கற்றரையில் இத்திருக்கோயில்கள் உள்ளன.

சிறப்புக்கள் : பகவான் தஞ்சக யானையைப் பிளக்க நரஸிம்மாவதாரம் எடுத்துநகங்களால் குத்திக்கிழித்தபோது, தஞ்சகன் வேண்டிக்கொண்டபடி நரஸிம்ம உருவத்தோடு ஸேவை ஸாதிப்பதால் தஞ்சாபுரி அல்லது தஞ்சை என்ற பெயர் உண்டாயிற்று.

குறிப்பு : மூன்று ஸந்நிதிகளுக்கும் ஒரே அர்ச்சகர். ஆனதால் வெண்ணாற்றங்கரையில் உள்ள அவர்க்ருஹத்தில் அவரை ஸந்நித்து தரிசிக்க வேண்டும்

அபிமான ஸ்தலம்

வடுவூர்

பெருமாள் : சக்கரவர்த்தித் திருமகன். ஸீதா. லக்ஷ்மணர், ஹநுமார் ஸமேதராக கிழக்கே நின்ற திருக்கோலம்.

தீர்த்தம் : புது ஆறு

வழி : தஞ்சை-மன்னார்-வடுவூர் பேருந்து வழித்தடம்.

சிறப்புக்கள் : மூர்த்தி மிகவும் அழகு வாய்ந்தது. மிகுந்த வரப்ரஸாதி. தக்ஷிண அயோத்தி என்ற பெயர் உண்டு.

15. திருத்தென்குடித்திட்டை என்பது திட்டை

இறைவன் : பசுபதீசுரர்

இறைவி : உலகநாயகியம்மை

தீர்த்தம் : சக்கர தீர்த்தம்

பதிகம் : சம் 1.

வழி : தஞ்சாவூருக்கு வடகிழக்கே 9 கி. மீ.

சிறப்புக்கள் : கௌதமர், ஆதிசேஷன். காமதேனு இவர்கள் பூசித்த ஸ்தலம். வெட்டாற்றுக்கும் வெண்ணாற்றுக்கும் இடையில் திட்டாயிருப்பதால் 'திட்டை' எனப் பெயர் எய்தியது.

16. திருப்புள்ள மங்கை என்பது பசுபதிகோவில்

இறைவன் : ஆலந்தரித்த ஈசுரர், பசுபதி நாதர்

இறைவி : அல்லியங்கோதை, பால்வளை நாயகி

தீர்த்தம் : சிவதீர்த்தம். காவிரியாறு

பதிகம் : சம் 1.

வழி : சக்கிரப்பள்ளிக்கு (17) மேற்கே 2½ கி. மீ. பசுபதி கோயில் புகைவண்டி நிலையத்திற்கு வடமேற்கே 2½ கி. மீ.

சிறப்புக்கள் : தேவர்கள் அமுதம் கடைந்த பொழுது உண்டான விஷத்தைச் சிவபெருமான் உண்டு திருமிடற்றில் அடக்கியருளிய ஸ்தலம்.

17. திருச்சக்கிரப்பள்ளி

இறைவன் : ஆலந்துறையீசுரர், சக்ரவாகேசுரர்.

இறைவி : அல்லியங்கோதை, தேவநாயகி.

தீர்த்தம் காவிரியாறு

பதிகம் : சம் 1.

வழி : ஐயம்பேட்டை புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே 5 கி, மீ.

சிறப்புக்கள் : இந்திர குமாரனான சயந்தனும் தேவர்களும் பூசித்த ஸ்தலம் விஷ்ணு பூஜித்துச் சக்கிரம் பெற்றபடியரற் சக்கிரப்பள்ளி எனப்பெயர் வந்தது. ''வண்சக்கிர மாலுறைப் பா வடிபோற்றக் கொடுத்த பள்ளி'' என்பது தேவாரம். விநாயகர் முதலிய விக்கிரகங்கள் அதி அற்புதமாயிருக்கின் றன. கோயிலுக்கெதிரில் மகமதியர் வீடு. சப்த ஸ்தலங்களுள் முதன்மையானது. அவை சக்கிரப்பள்ளி, அரிமங்கை, சூல மங்கை, நந்திமங்கை, பசுபதிமங்கை, தாழைமங்கை, புள்ள மங்கை என்பன. இவை முறையே பிராமி, மாஹேசுரி, கௌ மாரி, வைஷ்ணவி, வாராஹி, மாஹேந்திரி, சாமுண்டி இவர் களாற் பூசிக்கப்பெற்றன.

18. திருக்கருகாவூர் என்பது திருக்களாவூர்

இறைவன் : முல்லைவனேசுரர்

இறைவி : கரும்பனையாளம்மை, கரும்பன வல்லியம்மை

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பதிகம் : சம் 1. அப் 1.

வழி : ஐயம்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து தென் கிழக்கே 6 கி. மீ. பாபநாசம் புகைவண்டி நிலையத்துக்குத் தெற்கே 6 கி, மீ.

சிறப்புக்கள் : விநாயகர்-கற்பகவிநாயகர். ஆறுமுகசுவாமி உருவம் மிகவும் அழகாயிருக்கின்றது. ஆதரவற்ற ஒருத்திக்குத் தேவியால் மருத்துவம் பார்த்துக் கருவைக் காத்தபடியால் இத்தலத்துக்குத் திருக்கருகாவூர் என்னும் பெயரும், தேவி யாருக்குக் 'கர்ப்பரட்சகி' என்னும் பெயரும் வந்தன. கணபதி, நந்தி, லிங்கம் மூன்றும் சுயம்புவாம். லிங்கம் முல்லைக்கொடி சுற்றிய அடையாளத்துடன் விளங்குகின்றது பிருதிவிலிங்கம். சந்திரன் பூசித்தது.

IV விஷ்ணு ஸ்தலம்

திருக்கவித்தலம் (கபிஸ்தலம், கிருஷ்ணாரண்ய க்ஷேத்ரம்)

மூலவர் : கஜேந்த்ர வரதன், புஜங்கசயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : ரமாமணிவல்லி (பொற்றாமரையாள்)

தீர்த்தம் : கஜேந்த்ர புஷ்கரிணி, கபில தீர்த்தம்

விமானம் : ககநாக்கருதி விமானம்

ப்ரத்யக்ஷம் : சிறிய திருவடி, கஜேந்திரன்

வழி : பாபநாசம் புகைவண்டி நிலையத்திலிருந்து 3 கி.மீ. கும்பகோணத்திலிருந்து பேருந்தில் வரலாம்.

சிறப்புக்கள் : ஆதிமூலமே என்று அழைத்த போது கஜேந்திரனுக்கு அபயம் அளித்த ஸ்தலம். ''ஆற்றங்கரை கிடக்கும் கண்ணன்'' இப்பெருமாள்.

மங்களாசாஸனம்.

திருமழிசையாழ்வார். நான்முகன் திருவற்தாதி 50

19. திருப்பாலைத்துறை

இறைவன் : பாலைவனநாதர்

இறைவி : தவனவெண்ணகையம்மை

தீர்த்தம் : காவிரி ஆறு

பதிகம் : அப் 1.

வழி : பாபநாசம் புகைவண்டி நிலையத்துக்கு வடகிழக்கு 1 கி.மீ.

சிறப்புக்கள் : தாருகாவன ரிஷிகள் ஏவிய புலியைச் சிவ பெருமான் உரித்து அதன் தோலைத் தரித்தருளிய ஸ்தலம். அம்மையார் சந்நிதி தனியாகத் தெற்கிலிருக்கின்றது. வசிஷ்டர், ஸ்ரீராமர், சீதை, லக்ஷ்மணர், தௌமியர், அருச்சுனன் முதலியோர் வணங்கிய ஸ்தலம். பாபநாசத்துக்கு மேற்கு ¾ கி.மீட்டரில் நூற்றெட்டுச் சிவாலயம் என்னும் ஸ்தலம் இருக்கின்றது.

விஷ்ணு ஸ்தலம்

V திருக்கூடலூர் (ஆடுதுறைப் பெருமாள் கோவில் ஸங்கம க்ஷேத்திரம்)

மூலவர் : வையங்காத்த பெருமாள் (ஜகத்ரக்ஷகன்), உய்ய வந்தார், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : அதே பெயருடன் கையில் செங்கோல் தாங்கி நிற்கிறார்.

தாயார் : பத்மாஸனி, புஷ்பவல்லி

தீர்த்தம் : சக்ர தீர்த்தம், காவிரி நதி

விமானம் : சுத்த ஸத்வ விமானம்

ப்ரத்யக்ஷம் : நந்தகமுனி

வழி : தஞ்சாவூரிலிருந்து பேருந்து மார்க்கமாய் திருவையாறு சென்று அங்கிருந்து கும்பகோணம் செல்லும் பேருந்தில் 11 கி.மீ. தூரம் சென்று இவ்வூரை அடையலாம். ஐயம்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ.

சிறப்புக்கள் : இங்கே தேவர்கள் நந்தக முனிவரோடு கூடி பெருமாளை வணங்க வந்தபடியால் இந்த ஊருக்குக் கூடலூர் என்ற பெயர் உண்டாயிற்று. காவிரி இந்த ஸ்தலத்திற்கு வந்து இழந்த ஒளியை மீண்டும் பெற்ற இடம். இந்தக் கோவில் காவேரி வெள்ளத்தில் மூழ்கி மண்மேடாகிவிட்ட போது, சொப்பனத்தில் ராணி மங்கம்மாள் முன் தோன்றிக் கோயிலைப் புதுப்பிக்கச் சொன்னபடி, அரசி புதுப்பித்த கோயில்தான் இன்றைக்கு நாம் காண்கிறோம்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி 6, 2 பதிகம்

20. திருநல்லூர்

இறைவன் : கலியாண சுந்தரேசுரர், பெரிய யாண்டவர்

இறைவி : கலியாண சுந்தரி, திரிபுர சுந்தரி

தீர்த்தம் : சப்தசாகர தீர்த்தம்

பதிகம் : சம் 3, அப் 2

வழி : சுந்தர பெருமாள் கோயில் புகைவண்டி நிலையத்திலிருந்து 3 கி.மீ.

சிறப்புக்கள் : சிவபிரான் அப்பர் ஸ்வாமிகளுக்குத் திருவடி சூட்டியருளிய ஸ்தலம். திருநாவுக்கரசு ஸ்வாமிகளால் பாராட்டப்பெற்ற ஸ்தலம். சிவனடியார்களுக்குக் 'கந்தை சீருடை கோவணம்' இவைகளைக் கொடுத்து வந்த அமர்நீதி

நாயனாரைச் சிவபெருமான் ஆட்கொண்டு அவருக்கும் அவர் மனைவியருக்கும் மைந்தனுக்கும் முத்தியளித்தருளிய ஸ்தலம்.

மாடக்கோயில். சுவாமி சந்நிதானம் மலை போலுயர்ந்த இடத்தில் இருக்கின்றது. "திருநல்லூர் மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே" (சம்பந்தர் தேவாரம்.) கோயிலுக் கெதிரிற் பெரிய தீர்த்தமொன்றிருக்கின்றது. அதற்குச் சப்த சாகர தீர்த்தம் என்று பெயர். சுவாமி பொன் வர்ணமா யிருக்கின்றார் ஒரு நாளைக்கு ஐந்து வர்ணமாகத் தோன்று கின்றாராம். இலிங்கத்திற் சில துவாரங்களுங் காணப்படு கின்றன வண்டு (பிருங்கி) பூசித்ததாலெனபர். அகஸ்தி யருக்குக் கலியாண காக்ஷி கொடுத்த ஸ்தலம். அகஸ்திய லிங்கம் சுவாமி பக்கத்திலிருக்கின்றது. கோயிலிற் சாலிக் கிராமச் சிலையினாற் செய்த மிக அழகிய விநாயகர் விக்கிர கம் ஒன்றிருக்குன்றது. இந்தத் தலத்தில் வைகாசி மாதததிற் சப்தஸ்தான உற்சவம் நடந்து வருகின்றது. அமர்நீதி நாய னார், இடுப்பிற் குழந்தையுடன் அவருடைய மனைவி இவர் களுடைய விக்கிரகங்கள் சிலையிலும் உற்சவ மூர்த்திகளாகவு மூல்லன.

21. திருஆவூர் (பசுபதீச்சுரம்)

இறைவன்: பசுபதீசுரர்

இறைவி: மங்கள நாயகி

தீர்த்தம்: பிரம்ம தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: கும்பகோணத்துக்குத் தென்மேற்கே 6 கி. மீட்டரிலுள்ள பட்டீசுரததுக்கு (22) தென் மேற்கே 7 கி.மீ.

சிறப்புக்கள்: இந்தத் தலத்திலுள்ள ஆலயத்துக்குப் பசுப தீச்சுரம் என்று பெயர். இது பசுக்கள் பூசித்த ஸ்தலம்.

கோயில் மலைக் கோயில். இரண்டு தேவிமார்—(1) மங்கள நாயகி. (2) பங்கய வல்லி. தக்ஷிணாமூர்த்தி விக்கிரகம் வெகு நன்றாயிருக்கின்றது.

22. பட்டீச்சுரம்

இறைவன்: பட்டீச்சுரர்

இறைவி: பல்வளை நாயகி

தீர்த்தம்: ஞான தீர்த்தம்

மரம்: வன்னிமரம்

பதிகம்: சம் 1

வழி: கும்பகோணத்திற்கு (26) தென் மேற்கே 6 கி.மீ. இத்தலத்திற்கு கிழக்கு 1½ கி. மீட்டரில் வைப்புத்தலம் முழையூர் இருக்கின்றது.

சிறப்புக்கள்: காமதேனுவின் புத்திரிகள் நால்வரிற் பட்டி என்பவள் பூசித்த ஸ்தலம்.

சிவபெருமான் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கு வெயில் வெப்பற் தணிக்கும் பொருட்டு ஒரு பூதத்தைக் கொண்டு முத்துப் பந்தர் நிழற்றுவித்த ஸ்தலம். கோயிலுக்குள் ஞானதீர்த்தமும் அதன் தென்கரையில் ஸ்தல விருஷமாகிய வன்னியும் இருக்கின்றன. ஸ்ரீ ராமருக்குச் சாயை ஹத்தி தோஷம் தீர்ந்த ஸ்தலம். மார்கழி அமாவாசை தினம் இந்த ஐதீகம் நடத்தப்படுகின்றது. கோவிலில் நந்திகளெல்லாம் சற்று விலகியிருக்கின்றன. சம்பந்த சுவாமிகள் வெளியிலிருந்து தரிசனஞ் செய்தற் பொருட்டு அப்படி விலகினதாகச் சொல்லுகிறார்கள். முதலில் இருக்கும் நந்தி பெரியது. நல்ல வேலைப்பாடுள்ளது. கோவிந்த தீக்ஷிதர் என்னும் மந்திரி அதிக திருப்பணி செய்தாராம். அவருடைய உருவமும் அவர் மனைவியாருடைய உருவமும் தேவி சந்நிதியி

லிருக்கின்றன. பட்டீசுரத்துக்குத் தெற்கு ¼ கி. மீ. தூரத்தில் திருமலைராயன் ஆறு என்னும் சிற்றாறு ஓடுகின்றது.

இத்தலத்திற்கு வடக்கில் வேறொரு வீதியில் திருச்சத்தி முத்தம் என்னுந் தலம் இருக்கின்றது.

23 திருச்சத்திமுத்தம்

இறைவன் : சிவக்கொழுந்தீசுரர்

இறைவி : பெரிய நாயகியம்மை

தீர்த்தம் : சூல தீர்த்தம்

பதிகம் : அப் 1

வழி : கும்பகோணத்திற்குத் தென்மேற்கு 6 கி.மீ. தாரேசுரம் புகைவண்டி நிலையத்திற்குத் தென்மேற்கு 3 கி.மீ. பட்டீச்சுரம் (22) இதனுடன் சேர்த்து தெற்கிலிருக்கின்றது.

சிறப்புக்கள் : பராசக்தி ஸ்வாமியைத் தழுவ் முத்தங் கொடுத்த ஸ்தலம். அந்த வுருவமுங் கோயிலில் இருக்கின்றது. "பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துனவ"—, "இம்மையுன் தாளென்றன் நெஞ்சத் தெழுதிவை"—, என அப்பர் ஸ்வாமிகள் வேண்டித்துதித்த ஸ்தலம்.

24 பழையாறை வடதளி (ஆறை வடதளி)

இறைவன் : சோமேசுரர்

இறைவி : சோமகலா நாயகி

தீர்த்தம் ; சோம தீர்த்தம்

பதிகம் : அப் 1.

வழி : பட்டீசுரத்துக்கு (22) கிழக்கே ½ கி.மீ. சென்று வடதளி என்னும் ஸ்தலத்தை அடைந்து அங்கிருந்து 1 கி. மீ. சென்று பம்பைப்படை என்னும் ஊரைச் சேர்ந்து, தெற்கே திரும்பி திருமலைராயன் ஆற்றைக் கடந்து ½ கி. மீ. சென்றால் பழையாறை அடையலாம்.

சிறப்புக்கள் : மாடக்கோயில். வடதளியில் ஸ்வாமி பெயர் தர்மபுரீசுரர் தேவியார்-விமலநாயகி. ஸ்வாமி அம்மை தவிர வேறு விக்கிரகம் ஒன்றும் இல்லை. ஆலயம் ஒரு மேட்டின் மேலிருக்கின்றது. இதற்குச் சமீபத்தில் துறையூர்-சிவப்பிரகாச ஸ்வாமிகளுடைய சமாதிக் கோயில் இருக்கின்றது.

பழையாறை-சந்திரன் பூசித்த ஸ்தலம். அமர்நீதி நாயனார் வாழ்ந்திருந்த பதி.

காமதேனுவின் புத்திரிகளுட் பட்டி பூசித்தது-பட்டீச்சுரம், விமலி பூசித்தது பழையாறை வடதளி. சபரிபூசித்தது. திருமேற்றளி. நந்தினி பூசித்தது-முழையூர்.

விஷ்ணு ஸ்தலம்

VI திருநந்திபுர விண்ணகரம் (நாதன் கோவில், தக்ஷண ஜகந்நாதம்)

மூலவர் : ஜகந்நாதன், நாதநாதன், விண்ணகரப்] பெருமாள், வீற்றிருந்த திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம்

தாயார் : செண்பகவல்லி

தீர்த்தம் : நந்தி தீர்த்த புஷ்கரிணி

விமானம் : மந்தார விமானம்

ப்ரத்யக்ஷம்: நந்தி, சிபி

வழி: இது திருச்சத்தி முத்தம் (23) க்கு அடுத்து உள்ளது. கும்பகோணத்திலிருந்து பேருந்தில் கொடுக்கை என்ற ஊருக்கு வந்து அங்கிருந்து 2¼ கி.மீ. தூரம் செல்ல வேண்டும. வழியில் ஒரு வாய்க்காலைக் கடக்கவேண்டும்.

சிறப்புக்கள்: ஸந்நிதியின் இடது பக்கச் சுவரில் அதிகார நந்தி இருக்கிறார். நந்தி இவ்விடத்தில் தவம் செய்து சாப விமோசனம் பெற்ற பூமியாதலால் 'நந்திபுரம்' என்றும் பகவானுக்கு 'நந்திநாதன்' என்றும் பெயர் உண்டாயிற்று. நந்திவர்மன் ஏற்படுத்திய ஊர் என்றும் அவன் கட்டிய கோயில் என்றும் இதனைக் கூறுவர். 'நந்தி பணிசெய்த நகர்' என்றார் திருமங்கையாழ்வார். சிபிச் சக்கரவர்த்தி தன் உயிரைத் துறந்து புறாவின் உயிரைக் காப்பாற்ற திராசுத் தட்டில் தன் மாமிசத்தை வைத்துச் சமமாகாமல் இருக்க, தானே, புறாவின் எடைக்குச் சமமாக எதிர்த்தட்டில் உட்கார்ந்த அதிசயத்தைக் காண, கிழக்கே இருந்த பெருமாள் மேற்கு முகமாக ஆனார்.

இந்த ஸந்நிதி வானமாமலை மடத்து ஆதீனத்தில் உள்ளது.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 5-10 பதிகம்

25. திருவலஞ்சுழி

இறைவன் : கற்பக நாதேசுரர்

இறைவி : பெரியநாயகி

தீர்த்தம் : காவிரியாறு. அறுபத்தாறுகோடி

பதிகம் ; சம் 3, அப் 2.

வழி : கும்பகோணத்திற்கு (26) மேற்கே 6 கி. மீ. ஸ்வாமி மலை புகைவண்டி நிலையம். ஆற்றைக் கடந்தால் இதனை அடையலாம்.

சிறப்புக்கள் : தேவேந்திரன் பூஜித்த ஸ்தலம். தலத்துக்கு வடக்கில் அரிசிலாறு ஒடுகின்றது. விநாயகர்-வெள்ளை விநாயகர். அவர் வீற்றிருக்கும் மண்டபம் மிக்க வேலைப் பாடுடையது இவ்விநாயகரைப் பூஜித்ததால் அமுதம் திரண்டதெனவும், தேவேந்திரன் இந்த விநாயகரைப் பூஜித் தனனெனவும், அவன் திருவலஞ்சுழிக்கு வந்த காலத்தில் இவ் விநாயகர் இந்தத்தலத்தில் நின்றுவிட்டாரெனவும் சொல்லு கின்றார்கள். பிரமோற்சவம் முதலிய விநாயகருத்தான் நடக் கின்றன. விநாயகரைத் தீண்டக்கூடாதாம். பிலத்திற் சென்றுவிட்ட காவிரி வெளிப்படு நிமித்தம் ஏரண்டமுனிவர் தம்மைப் பலி கொடுத்த பின், அது மேலே வந்து வலமாகச் சுழித்துக்கொண்டு சென்ற காரணத்தால், ஊருக்குத் திரு வலஞ்சுழி என்று பெயர் வந்ததென்று சொல்லுகின்றார்கள். அம முனிவருடைய உருவமும் கோயிலிலிருக்கின்றது. அவருக் குப் பக்கத்தில் வலஞ்சுழி நாதர் அல்லது த்ரிணாவர்த்தர் என் னும் சிவலிங்கப்பெருமான் வீற்றிருக்கின்றார்.

சுவாமிமலை

இறைவன் : சுப்பிரமணியன்

இறைவி : வள்ளி, தெய்வானை

சுப்பிரமணியனுடைய ஆறுபடை வீட்டில் இது ஒன் றாகும்.

விஷ்ணு ஸ்தலம்

VII திரு ஆதனூர்

மூலவர்: ஆண்டளக்குமையன், புஜங்க சயனம், தலையின் கீழ் மரக்காலும் இடது கையில் ஒலை எழுத்தாணி யும் காண்கின்றன. கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: ரங்கநாயகி

தீர்த்தம்: சூர்ய புஷ்கரிணி

விமானம்: ப்ரணவ விமானம்

ப்ரத்யக்ஷம்: திருமங்கையாழ்வார், காமதேனு

வழி: சுவாமிமலை புகைவண்டி நிலையத்தில் இருந்து சுமார் 5 கி.மீ.

சிறப்புக்கள்: பெருமாளுடைய பாதார விந்தங்களில் திருமங்கையாழ்வாரும், காமதேனுவும் உள்ளனர்.

இப்பெருமாளை 'ஆதனூர் ஆண்டளக்கும் ஐயன்' என்பர்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமடல் 129ம் அடி

VIII திருப்புள்ளம் பூதங்குடி

மூலவர்: வல்வில் ராமன், புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : பொற்றாமலரயாள் (ஹேமாம்புஜவல்லி)

தீர்த்தம் : ஜடாயு தீர்த்தம், க்ருத்ர தீர்த்தம்.

விமானம் : சோபன விமானம்

ப்ரத்யக்ஷம் : சக்ரவர்த்தித்திருமகன், க்ருத்ரராஜன்

வழி : கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை வழியாகத் திருவைகாவூர் செல்லும் நகரப்பேருந்து வழித்தடத்தில் சுவாமிமலைக்கப்பால் 5 கி. மீ. தூரத்தில் உள்ளது.

சிறப்புக்கள் : இராமன், ஜடாயுவுக்கு மோக்ஷமளித்த பின் சிரமப்பரிகாரம் செய்துகொள்ளும் நிலையில் கோயில் கொண்டதாகக் கூறப்படுகிறது. சீதையைப் பிரிந்த நிலையா

கையால் பக்கத்தில் சீதை இல்லை. பூமிப்பிராட்டி மட்டுமே அமர்ந்திருக்கிறார். தனிக்கோவில் நாச்சியாருக்கே பொற்றா மரையாள் என்று பெயர். உற்சவ மூர்த்தியான ராமனுக்கு சதுர்புஜங்கள் உள்ளன.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி 5-1 பதிகம்.

அபிமான ஸ்தலம்

திருமண்டங்குடி

பெருமாள் : ஸ்ரீ ரெங்கநாதர். கிழக்கே சயனத் திருக் கோலம்,

தாயார் : ஸ்ரீ ரெங்க நாயகி

தீர்த்தம் : குடமுருட்டி நதி

வழி : திருவையாறு-கும்பகோணம் பேருந்து வழித்தடம், புள்ளம்பூதக்குடி அடுத்துள்ளது.

சிறப்புக்கள் : தொண்டரடிப் பொடியாழ்வார் அவதார ஸ்தலம்.

26. திருக்குடமுக்கு என்பது கும்பகோணம்

இறைவன் : கும்பேசுரர்

இறைவி : மங்கள நாயகி

தீர்த்தம் : காவேரியாறு, மகாமகக்குளம்

பதிகம் : சம் 1. அப் 1.

வழி : புகைவண்டி நிலையம் உள்ளது.

சிறப்புக்கள்: ஏமரிஷி முதலியோர் பூசித்த ஸ்தலம். பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு முறை மாசி மகத்தின் பொழுது காசி கங்கை வரும் ஐதீகத்தால் அதிக சிறப்படைந்திருக்கும் மகாமகத்தீர்த்தத்தையுடைய ஸ்தலம்.

கோயில் மிகவும் பெரியது. காலையில் முதலில் சூரியனுக்கும், மாலையில் முதலிற் சந்திரனுக்கும். தீபாராதனை ஆகின்றது. ஸ்வாமி கும்பம் போன்றவர். ஸ்ரீ மங்களேஸ்வரி சந்நிதி மிக விசேடமானது. கும்பேஸ்வருடைய சப்தஸ்தான உற்சவஸ்தலங்களாவன 1. கும்பகோணம் 2. கலயநல்லூர் 3. வலஞ்சுழி 4. தாராசுரம் 5. சுவாமிமலை 6. கொட்டையூர் 7. மேலைக் காவிரி.

IX பெருமாள் சந்நிதி

திருக்குடந்தை

மூலவர்: இவருக்கு சாரங்கபாணி, ஆராவமுதன், அபர்யாப்தாம்ருதன், என்று பல பெயர்கள். ஆதிசேஷ சயனம் (உத்தியோக சயனம்)

கிழக்கே திருமுக மண்டலம், திருமழிசை யாழ்வாருக்காகக் 'கிடந்தவாறெழுந்'திருக்க முயலும் நிலையிலிருப்பதால் 'உத்தா நசாயீ' என்றும் அழைக்கப்படுகிறார்.

தாயார்: கோமளவல்லி (படிதாண்டாப்பத்தினி)

தீர்த்தம்: ஹேம புஷ்கரிணி (பொற்றாமரை) காவிரிநதி, அரசலாறு

விமானம்: வைதிக விமானம் (வேதவேத விமானம்)

ப்ரத்யக்ஷம்: ஹேமமஹரிஷி

வழி: கும்பகோணம் புகைவண்டி நிலையத்தில் இருந்து இக்கோவில் சுமார் 2½ கி. மீ. தூரம்.

சிறப்புக்கள் : பெருமாளுக்கெதிரே நதிதேவதைகள் வணங்குகின்றனர். இங்கேதான், ஸ்ரீமந்நாதமுனிகள் ''ஆராவமுதே'' என்று தொடங்கும் திருவாய் மொழிகளைக்கேட்டு திவ்யப்ரபந்தத்தையே தெகுத்க்க ஆரம்பிதார்.

ஹேமனஷியின் புத்ரியாகத் தோன்றித் தவம்புரிந்த கோமளவல்லித் தாயாரை மணந்ததாக வரலாறு.

பெருமாளின், அழகிய, பெரிய சித்திரைத் தேர் உலகப் பெருமை பெற்றது. பெருமாள் ஸந்நிதியே தேர்ச் சக்கரங்களுடன் கருங்கல்லால் கட்ட ப்பட்டிருக்கிறது.

ராமஸ்வாமி கோவிலும் சக்ரபாணி கோவிலும் இவ்வூரில் உள்ளன. சக்ரபாணி அஷ்ட புஜங்களுடன் விளங்குகின்றார். இவருக்கும் இவரது தமையனாரெனக் கருதப்படும் சாரங்கபாணிக்கும் சேர்ந்து பல உத்ஸவங்கள் நடக்கின்றன. ராமஸ்வாமி கோவிலில் ராமன் பட்டாபிஷேக காட்சியில் பரத சத்ருக்ன லக்ஷமணன் சீதை எல்லோரும் சாமரகுடையின் கீழ் வெண்சாமரம் வீசிக்கொண்டிருப்பதைக் காணலாம். ஆஞ்சநேயர் வீணாகானம் செய்துகொண்டு ராமாயண பாராயண புஸ்தகத்துடனும் காணப்படுகிறார். கோவில் பிராகாரத்தில் சித்திர ராமாயணத்தை வண்ணத்தால் வரைந்திருக்கிறார்கள். சிருஷ்டிக்கு வேண்டிய மூலப்பொருள்கள் அமைந்துள்ள (அமிர்த கும்பம்) குடம் இங்கு தங்கியமையால் திருக்குடந்தை என்ற பெயர் பெற்றது.

மங்களா சாஸனம்

பெரியாழ்வார் ஆண்டாள் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார்	இரண்டாந்திருவந்தாதி 97, மூன்றாந்திருவந்தாதி 30, திருச்சந்த விருத்தம் 61, திருவாய்மொழி 5.8 பதிகம். பெரியாழ்வார் திருமொழி 2.6.6. நாச்யார் திருமொழி 13,2. பெரிய திருமொழி 1,1,2.

27. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் என்பது கும்பகோணத்திலுள்ள நாகேசுரஸ்வாமி கோவில் ஊர்மத்தியிலிருக்கின்றது.

இறைவன் : நாகேஸ்வர ஸ்வாமி, மடந்தைபாகர்

இறைவி : பெரிய நாயகியம்மை

தீர்த்தம் : மகாமகக் குளம்

பதிகம் : அப் 1.

சிறப்புக்கள் : கோயில் பெரிது. ஆதிசேடனும், சூரியனும் பூசித்த ஸ்தலம். இங்கே வருஷந்தோறும் சித்திரை மாதம் 11, 12, 13 ஆகிய தேதிகளிற் காலையிற் சூரியகிரகணம் ஸ்வாமி மேற் படுகின்றது. கங்கைக் கணபதியார் விக்கிரஹம் மிக நன்றாயிருக்கின்றது. அர்த்த நாரீசுரர் விக்கிரஹமும் பிரளய கால ருத்திரர் விக்கிரஹமும் இவ்வாலயத்தில் இருக்கின்றன. நடராஜர் சந்நதி விசேடம்.

28. திருக்குடந்தைக் காரோணம் என்பது கும்பகோணத்திலுள்ள காசிவிசுவநாதர் கோயில்

இறைவன் : காசி விசுவநாதர். சோம நாதர்

இறைவி : காசி விசாலாட்சி, தேனார்மொழி

தீர்த்தம் : காசிபதி, இது மகாமகக்குளத்துக்கு வடகரையில் இருக்கின்றது.

பதிகம் ; சம் 1.

சிறப்புக்கள் : இவ்வாலயம் மகாமகக்குளத்தின் வடகரையிலுருக்கின்றது. நவநதிகளும் நவ கன்னிகைகளாய்ப் பூசித்த ஸ்தலம். அவர்கள் உருவங்கள் கோயிலுள் இருக்கின்றன. உமையவள், மாந்தாதா முதலியோர் பூசித்த ஸ்தலம்.

29. திருநாகேச்சுரம்

இறைவன் : சண்பகாரணியேசுரர்

இறைவி ; குள்றமுலை நாயகி

தீர்த்தம் : நாகதீர்த்தம், சூரிய புட்கரிணி.

பதிகம் : சம் 2. அப் 3. சுந் 1.

வழி : புகைவண்டி நிலையம், கும்பகோணத்திற்கு (26 கிழக்கே 6 கி. மீ. திருவிடைமருதூருக்கு (30) தென்மேற்கு 4 கி.மீ.

சிறப்புக்கள் : சண்பகாரணிய க்ஷேத்திரம். பெரிய புராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனார் மிகுந்த அன்பு வைத் திருந்த ஸ்தலம். அதற்குத் திருஷ்டாற்தமாக அவர் தம் முடைய ஊராகிய குன்றத்தூரிலே திருக்கோயில் ஒன்று கட்டு வித்து அதற்குத் திருநாகேச்சுரம் என்று பெயரிட்டிருக்கின் றார். சேக்கிழார் விக்கிரகமும் கோயிலில் இருக்கின்றது. கோயில் பெரிது. நான்கு புறமும் கோபுரங்கள் இருக்கின்றன. சூரிய புஷ்கரிணி தீர்த்தம். சங்மநிதி, பதுமநிதி, மகாசாத்தா இவர்கள் விக்கிரகங்களும் இருக்கின்றன. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பக்கத்திற் பரவையார் விக்கிரகம் இருக்கின்றது.

சந்திரன், சூரியன், ஐந்தலை நாகம் இவர்கள் பூசித்த ஸ்தலம்.

X திருவிண்ணகர்

(ஒப்பிலியப்பன் கோவில், மார்க்கண்டேய க்ஷேத்திரம்)

மூலவர் : ஒப்பிலியப்பன் (ஒப்பற்றவன்) ஸ்ரீநிவாஸன், என்று பெயர். வெங்கடாசலபதியைப் போன்ற அதே தோற்றத்துடன் நின்ற திருக்கோலம். "மாம் ஏகம் சரணம் வ்ரஜ்" என்ற சரமச் லோகப் பகுதி,

எம்பெருமானின் வலக்கையில் வைரங்களால் பொறிக்கப்பட்டுள்ளது. கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: பூமிதேவி (பூமி நாச்சியார் என்ற திரு நாமத்துடன்) பெருமாளுக்கு வலதுபுறம் கீழே மண்டியிட்டு வணங்கும் திருக்கல்யாண கோலம்.

தீர்த்தம் : அஹோராத்ர புஷ்கரிணி, ஆர்த்தி புஷ்கரிணி

விமானம் : விஷ்ணு விமானம், சுத்தானந்த விமானம்

ப்ரத்யக்ஷம்: மார்க்கண்டேயர், பெரிய திருவடி, காவேரி, தர்ம தேவதை.

வழி: சிவாலயம் திருநாக்கேச்வரம் (29) க்குத் தென்புறம் $1\frac{1}{2}$ கி. மீட்டரில் உள்ளது.

சிறப்புக்கள்: திருப்பதி போக இயலாதவர்கள், வேங்கடேசருக்குச் செய்துகொண்ட வழிபாடுகளை இங்கேயே செலுத்துகிறார்கள். மிருகண்டு மஹரிஷியின் பத்னி விருப்பப்படி உப்பில்லாத பிரசாதம் நிவேதனம். எனவே இக் கோவில் தளிகையில் உப்பு சேர்ப்பதில்லை. அதனால் பெருமாள் ''உப்பிலியப்பன்'' என்றும் அழைக்கப்படுகின்றார். இங்கே பெருமாளை வணங்க வருகிறவர்கள் யாராயினும் சரி, கோவிலுக்குள் உப்பையோ, உப்பு சம்பந்தப்பட்ட உணவையோ எடுத்துச் செல்லுகிறவர்கள், நரகத்திற்கு ஆளாவார்கள் என்று புராணம் கூறுகிறது.

மங்களா சாஸனம்

திங்மங்கையாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார்	மூன்றாம் திருவந்தாதி 61, திருவாய்மொழி 6,3 பதிகம். பெரிய திருமொழி 6-1 பதிகம்.

30. திருவிடைமருதூர்

இறைவன் : மகாலிங்கேசுரர், மருதப்ப ஈசுரர்

இறைவி : பெருநலமாமுலை நாயகி

தீர்த்தம் : கருணாநதி, காவிரி

மரம் : மருது

பதிகம் : சம் 6, அப் 5, சுந் 1.

வழி : புகைவண்டி நிலையம். கும்பகோணத்திற்கு (26) வடக்கே 8 கி.மீ. திருநாகேச்சுரத்திலிருந்து (29) 4 கி. மீ. வட நூலார் இதனை மத்தியார்ஜுனம் என்பர். வடக்கே மல்லிகார் ஜுனம் (ஸ்ரீசைலம்), தெற்கே திருப்புடார் ஜுனம் (திருநெல்வேலி ஜில்லா ஆம்பா சமுத்திரத்திலிருந்து 5 கி.மீ.

சிறப்புக்கள்: இங்கு தைப்பூசத்தில் காவிரிக்கரையில் ஸ்நாநஞ் செய்வது மிகவும் விசேஷம். இதனை திருஞான சம்பந்த மூர்த்தியும், திருநாவுக்கரசரும் சிறப்பித்துப் பாடியிருக்கின்றனர். வரகுண பாண்டியருடைய பிரமஹத்தியைப் போக்கியருளிய ஸ்தலம். அவர் அநேகத் தொண்டுகள் செய்து முத்தி பெற்ற முதுநகர். உருத்திரர், உமையம்மை, விநாயகர், முருகர், பிரமா, விஷ்ணு முதலியோர் பூசித்த ஸ்தலம். 'திருவிடை மருதூர்த் தெரு அழகு' என உலக வழக்கு ஒன்றுள்ளது. கோயில் பெரிது. நாலுபக்கமுங் கோபுரங்களிருக்கின்றன.

படித்துறை விநாயகர் பெரிய இடபமூர்த்திக்குக் கிழக்கே வீற்றிருக்கின்றார். ஸ்வாமி சந்நிதானம் மிக நீளமாயும் அழகாகவும் அமைந்துள்ளது. கிழக்குக் கோபுர வாயிலிற் பட்டினத்தார் உருவமும் மேற்குக் கோபுர வாயிலிற் பத்திர கிரியார் உருவமும் உள்ளன.

மூகாம்பிகையம்மன் சந்நிதி அம்மன் கோயிலுக்குப் போகும் வழியில் தனியாயிருக்கின்றது. அம்மையார் மவுன மாயிருந்து தபசு செய்தபடியால் இப்பெயருண்டாயிற்று.

31. திருத்தென்குரங்காடுதுறை என்பது ஆடுதுறை

இறைவன் : ஆபத்சகாயேசுரர்.

இறைவி : பவளக் கொடியம்மை

தீர்த்தம் : சகாய தீர்த்தம், காவிரியாறு.

பதிகம் : சம் 1. அப் 1.

வழி : புகைவண்டி நிலையம். திருவிடைமருதூருக்கு (30) கிழக்கே 4 கி. மீ.

சிறப்புக்கள் : சுக்கிரீவன் பூசித்த ஸ்தலம். ஹநுமாரும் பூசித்தார். இவ்வூரில் வாழை விசேஷம்,

32. திருநீலக்குடி என்ற தென்னல்குடி

இறைவன் : நீலகண்டேசுரர் (நல்ல நாயகேசுரர்)

இறைவி : உமையம்மை. (அழகம்மை)

தீர்த்தம் : வன்னீலம்

பதிக்ம் : அப் 1.

வழி: ஆடுதுறையிலிருந்து (31) 4 கி.மீ.

சிறப்புக்கள்: வருணனும், தேவ கன்னிகைகளும் பூசித்த ஸ்தலம். தேவி சந்நிதிகள் இரண்டு உள்ளன. நல்ல எண்ணெய் அபிஷேகம் செய்தால் பாதி இலிங்கத்திற் சுவறுமாம்.

33 வைகன் மாடக்கோயில் வைகல் என்னும் இடத்தில்

இறைவன்: வைகல் நாதேசுரர்

இறைவி: வைகல் அம்மை

மாடக் கோயில்

இறைவன்: கோமளேசுரர்

இறைவி: இளங்கோதையம்மை

பதிகம்: இவ்விரண்டும் சேர்த்து சம் 1

வழி: திருநீலக்குடி (32)க்குத் தென்கிழக்கே 5கி.மீ. 'வைகல்' என்னுமிடத்திற்குத் தென்மேற்கே ½ கி.மீ. 'மாடக் கோயில்' இருக்கின்றது. இரண்டிடங்களிலும் கோயில்கள் உள்ளன.

சிறப்புக்கள்: கோச்செங்கட் சோழரால் கட்டப்பட்ட மாடக் கோயில்கருள் ஒன்று

34 திருநல்லம் (கோனேரி ராஜபுரம)

இறைவன்: உமாமஹேசுரர், மாமணீசுரர்

இறைவி: மங்கள நாயகி

தீர்த்தம: கங்கை

பதிகம்: சம் 1, அப் 1.

வழி: திருவிடை மருதூருக்கு (30) தென்கிழக்கே 9½ கி.மீ. திருநீலக்குடியிலிருந்து (32) கிழக்கே 3 கி.மீ. உள்ள பழியஞ்சிய நல்லூர் மார்க்கமாய்க் கிழக்கே ¾ கி.மீ பிரியும் புதூர் மார்க்கமாய் நாட்டார் வாய்க்காலைக் கடந்து தென்கிழக்கில் 5 கி.மீ.

சிறப்புக்கள்: எதிரில் திருக்குளம். மேற்கு பார்த்த சந்நிதி. இந்த ஸ்தலத்தில் நடேசருடைய விக்கிரகம் பிரபலமானது.

35 திருக்கோழம்பம்

இறைவன் : கோகிலேசுரர்

இறைவி: சௌந்தர நாயகி

தீர்த்தம்: மது தீர்த்தம்

பதிகம்: சம் 1 அப் 1

வழி: திருஆவடுதுறையிலிருந்து (36) தெற்கே 2 கி மீ. நாரசிங்கன் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கு 3 கி.மீ.

சிறப்புக்கள்: சந்தன் என்னும் வித்தியாதரன் தேவேந்திரனாற் குயிலாய்ப் போம்படி சாபம் பெற்று, அநேக நாள் கழித்து, இங்கு வந்து பூசித்து அவ்வுரு மாறிப் பழைய ரூபம் பெற்ற ஸ்தலம். சுயம்பு லிங்கம்.

லிங்கம் பசுவின் குளம்பின் அடியில் அகப்பட்டதால், மாட்டின் குளம்பு லிங்கத்தின் உச்சியில் வடுவாகக் காணலாம்.

36 திருஆவடுதுறை

இறைவன் : மாசிலாமணீசுரர்

இறைவி : ஒப்பிலா முலையம்மை

தீர்த்தம் : கோமுத்தி தீர்த்தம்

மரம் : படர் அரசு

பதிகம் : சம் 1, அப் 5, சுந் 2.

வழி : நாரசிங்கன் பேட்டை புகைவண்டி நிலையத்துக்குக் கிழக்கே 2 கி. மீ.

சிறப்புக்கள் : திருமூல நாயனார் வருஷத்துக்கு ஒவ்வொரு பாடலாக மூவாயிரந் திருப்பாடல்களால் 'திருமந்திரம்' என்னும் அருமையான நூலைச் செங்தருளிய ஸ்தலம். கோயில் மேற்கு பிராகாரத்தில் அவர் சந்நிதியிருக்கின்றது. திருவிசைப்பா பாடிய திருமாளிகைத் தேவர் வாழ்ந்த பதி.

சிவபிரான் "சொர்ணத் தியாகர்," திருஞாந சம்பந்த மூர்த்தி நாயனார். தம்முடைய பிதா யாகஞ் செய்யும் பொருட்டு "இதுவோ வெமையாளுமாற்றிவதொன் நெமக் கில்லையேல், லதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே"- எனவரும் பதிகம் பாடிப் பொற்கிழி பெற்ற ஸ்தலம். இவ் விஷயத்தை அப்பர் ஸ்வாமிகள் திருவாவடுதுறை திருநேரிசைப் பதிகத்திற் பாராட்டியுள்ளார் விநாயகருக்கு அழகிய விநாயகர் என்று பெயர். பசு வடிவுடன் உமாதேவியார் பூசித்த காரணத்தால் 'ஆவடுதுறை' என்ற பெயர் வந்தது.

37 திருத்துருத்தி என்பது குற்றாலம்

இறைவன்: வேதேசுரர், உத்தர வேதேசுரர்

இறைவி: முகிழாம்பிகை

தீர்த்தம்: காவிரியாறு, சுந்தர தீர்த்தம்

மரம்: குற்றால்

பதிகம்: சம் 1, அப் 1, சுந் 1

வழி: புகைவண்டி நிலையம் மாயூரத்துக்கு (39) தென் மேற்கு 9 கி.மீ. குற்றாலம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கு 1 கி.மீ.

சிறப்புக்கள்: சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள், சங்கிலி நாச்சியார் பொருட்டுச்செய்த சத்தியம்தவறித் திருவொற்றியூரினின்றும் திருவாரூருக்குச் செல்ல எத்தனித்த பொழுது, அவருடைய இரண்டு கண்களுக்கும் அபாயம் நேரிட்டதுமன்றி, தேகத்தி

லுங் கொடிய பிணி உண்டாயிற்று. ஒரு கண்ணின் பார்வையைக் காஞ்சிபுரத்திலும், மற்றொரு கண்ணின் பார்வையைத் திருவாரூரிலும் பெற்று, உடற்பிணி திருத்துருத்தியாகிய இந்த க்ஷேத்திரத்திற் சந்நிதிக்கு வடபாலுள்ள தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்தலும் நீங்கப்பெற்றார். மேற்கு பார்த்த சந்நிதி சிவபிரான் பிரமசரியாய் வேதம் ஓதினமையால் உக்த வேதேசுரர் என்றும், தாம் அருளிய வேதத்தைத் தாமே சொன்னமையால் 'சொன்னவாறறிவார்' என்றும் பெயர் பெற்றனர். தீர்த்தத்துக்கு வடமேற்கே கரையில் சுந்தரர் ஆலயம் இருக்கின்றது.

38. திருவழுந்தூர் என்பது தேரழுந்தூர்

இறைவன் : வேதபுரீசுரர்

இறைவி : சௌந்தராம்பிகை

தீர்த்தம் : வேத தீர்த்தம், சித்தாமிர்தம்.

பதிகம் : சம் *1*.

வழி : குற்றாலம் புகைவண்டி நிலையத்துக்குத் தென் கிழக்கே 5 கி. மீ.

சிறப்புக்கள் : ஊர்த்வரதன் என்னும் அரசன் தேர் இங்கு மேலே செல்லாது அழுந்தினமையால் ''தேரழுந்தூர்'' எனப் பெயர் வந்தது. இங்கு 'மாடக் கோயில்'; கோயிலில் ''மகா மடேசுரர்'' என்ற மூர்த்தி இருக்கின்றது.

வேதங்களும், விண்ணவர்களும், அஷ்டதிக்குப் பாலகர் களும் பூசித்த ஸ்தலம். அழுந்தை மறையவரின் பெருமையைத் திருஞான சம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள் ''அழுந்தை மறையோர் வழிபாடு செய் மாமட மன்னினையே'' என விசேடித்துக் கூறியிருத்தல் காண்க.

மேற்கு பார்த்த சந்நிதி, மேற்புறம் பெரிய கோபுரம். கோயிலுக்கு வெளியில் மேற்புரத்தில் வேத தீர்த்தம் இருக்கிறது. பாடல் பெற்ற விஷ்ணு கோயில் மேற்கே 1 கி. மீ.-ல் இருக்கின்றது. பெருமாள் நின்ற திருக்கோலம்.

XI. விஷ்ணு ஸ்தலம்.

திருவழுந்தூர் (தேரழுந்தூர்)

மூலவர் : தேவாதிராஜன், நின்ற திருக் கோலம், கிழக்கே திருமுக மண்டலம். இடதுபுறம் கருடாழ்வாரும் வலதுபுறம் பிரஹ்லாதாழ்வானும் இருக்கிறார்கள். இடது கையில் ஊன்றிய கதை. இடதுபுறம் காவேரித்தாய் மண்டியிட்டு வணங்குகிறார்கள்.

உத்ஸவர் : உபய நாச்சியாருடன் ஆமருவியப்பன், அருகில் பசுங்கன்று எல்லையற்ற அழகு.

தாயார் : செங்கமலவல்லி

தீர்த்தம் : தர்சனபுஷ்கரிணி, காவேரி

விமானம் : கருட விமானம்

ப்ரத்யக்ஷம் : தர்மதேவதை, உபரிசரவஸீ, காவேரி, கருடன், அகஸ்தியர்.

வழி : சிவஸ்தலம் திருவழுந்தூர் (38) க்கு மேற்கே 1 கி. மீ.

சிறப்புக்கள் : கோபுரத்தின் உட்புறம் கம்பனும் அவர் மனைவியும் சிலை வடிவில் நிற்கின்றனர் தெளிந்த நீருடன் பெரிய புஷ்கரிணி இது கம்பன் அவதார ஸ்தலம். கோவிலுக்கு ½ கி. மீ. தென்மேற்கே 'கம்பன் மேடு' என்ற இடத்தில் கவிச் சக்ரவர்த்தி கம்பன் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. வருடம் தோறும் கம்பன் விழா நடைபெறுகிறது. மணவாளமாமுனிகள் மங்களா சாஸனம் செய்த பெருமாள் இவர்.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி 7-5 பதிகம்

39. திருமயிலாடுதுறை என்பது மாயூரம்

இறைவன் : மாயூரநாதேசுரர். வள்ளலார்.

இறைவி : அபயாம்பிகை, அஞ்சொல் நாயகி.

தீர்த்தம் : காவிரி, இடபதீர்த்தம்

மரம் : மா

பதிகம் : சம் 2. அப் 1.

வழி : புகைவண்டி நிலையம்.

சிறப்புக்கள் : பார்வதி தேவியார் மயிலாயிருந்து சிவபெருமானைப் பூஜித்த ஸ்தலம். இதனால் "கௌரி மாயூரம்" எனப்படும். இந்த க்ஷேத்திரத்திற் காவிரி நதியில் துலாமாசமாகிய ஐப்பசி மாதத்தில் இடப தீர்த்தத் துறையிற் செய்யும் ஸ்நாநம் விசேஷம்.

ஸ்தல விநாயகர் முக்குறுணிப் பிள்ளையார். கோயிலுக்குட் கோபுரத்தருகில் திருக்குளமும், வடவண்டை பிராகாரத்திற் 'பழைய கோயில்' எனப்படும் பிரமபுரீசர் சந்நிதியுமிருக்கின்றன.

மாயூரத்துக்கு மேற்கே 5 கி. மீ "மூவலூர்" என்னும் வைப்புத்தலமும், வழியில் மூன்றாவது கி.மீ.-ல் 'சித்தர் காடு' என்னுந் தலத்தில் திருச்செந்தூர் அகவல் பாடிய "திருச்சிற்றம்பல அடிகள்" சாமதியுமிருக்கின்றன. மாயூரங் கோயிலுக்கு நேர் வடக்சே 1 கி. மீ.-ல் காவிரிக்கு வடபுறத்துள்ள "வள்ளலார் கோயில்" ஆலயத்திலுள்ள "தக்ஷிணாமூர்த்தி" சந்நிதி ஐப்பசி அமாவாசைகளிலும் குருவாரங்களிலும் மிகவும் கொண்டாடப்படுகின்றது.

XII திருச்சிறுபுலியூர்

மூலவர் : அருள் மாகடல், சலசயனப் பெருமாள், புஜங்க சயனம், தெற்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: க்ருபா ஸமுத்ரப் பெருமாள் (அருள் மாகடல்)

தாயார்: திருமாமகள் நாச்சியார், **உத்ஸவர்:** தயாநாயகி.

தீர்த்தம்: மானஸ புஷ்கரிணி, அனந்த ஸரஸ்

விமானம்: நந்தவர்த்தன விமானம்

ப்ரத்யக்ஷம்: வியாஸர், வியாக்ரபாதர்

வழி: மாயவரம் அறந்தாங்கி புகைவண்டி வழித்தடத்தில் உள்ள கொல்லுமாங்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து 3 கி.மீ. மாயவரத்திலிருந்து நகரப்பேருந்தில் கொல்லுமாங் குடி போகலாம்.

சிறப்புக்கள்: புஜங்கசயனத்திலேயே மிகச்சிறிய திருவுருவம் இது. இதைப்பற்றி ஆழ்வார் குறைபட ''உமது குறைதீர'' நமது மிகப்பெரிய திருவுருவைத் திருக்கண்ண மங்கையில் காணும்'' என்று பெருமாள் அருளிச் செய்ததாக ஒரு வரலாறு கூறுகிறது. அனந்தனுக்குக் கருடனிடமிருந்து அபயமளித்த ஸ்தலம்.

வியாக்ரபாதர் புலிக்கால்களையும், கைகளையும், கண் களையும் சிவபெருமானைத் தவம் செய்து பெற்று, சிவன் ஆணைப்படி இவ்விடத்தில் பெருமாளைப் பூஜித்து வைகுண் டம் அடைந்த படியால், இந்த ஸ்தலத்திற்கு ''சிறுபுலியூர்'' என்று பெயர் வந்தது. அவருடைய பிம்பத்தைப் பெருமாளின் திருவடிக்கீழ் பிரதிஷ்டை செய்து பூஜிக்கும் வழக்கம் இங்கே உள்ளது. ஸந்நிதியில் சொல்லி வைத்தால் ப்ரஸாதம் கிடைக் கும்.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி 7,9 பதிகம்.

40. திருவிளநகர்

இறைவன் : துறை காட்டு வள்ளலார்.

இறைவி : வேயுறு தோளியம்மை

தீர்த்தம் : காவிரியாறு

பதிகம் : சம் 1.

வழி : மாயூரத்திலிருந்து கிழக்கு 7 கி.மீ. மண்ணப்பந்தல் புகைவண்டி நிலையத்திலிருந்து 1½ கி.மீ.

சிறப்புக்கள் : அருள்வித்தன் என்னும் அந்தணர் ஸ்வாமிக்காகப் புஷ்பக் கூடையை யெடுத்துக்கொண்டு ஆற்றில் வரும்பொழுது, வெள்ளம் வந்து அடித்துச் செல்ல, அவர் பூக்கூடையை விடாது சிவபெருமானையே தியானிக்க, அவ்வன்புக்கிரங்கிச் சிவபிரான் அவருக்குத் துறைகாட்டி அவரைக் கரையேறவிட்டு ஞானோபதேசஞ் செய்தருளிய ஸ்தலம். இக்காரணத்தால் ஸ்வாமிக்குத் துறைகாட்டு வள்ளல் என்னும் பெயர் உண்டாயிற்று. ஊருக்கு விழல் நகரென்றும் ஸ்வாமிக்கு உசீரவனேசுரர் என்றும் பெயர் உசீரம்-விழல்.

ஆறுமுகக் கடவுளுடைய விக்கிரகம் சிறிதாயும் வெகு அழகாயு மிருக்கின்றது.

41 திருப்பறியலூர் (பரசலூர்)

இறைவன் : வீரட்டேசுரர்

இறைவி : இளங்கொடியம்மை

தீர்த்தம் : சந்திர புஷ்கரிணி

பதிகம் : சம் 1

வழி : மாயூரத்திற்கு அருகிலுள்ள செம்பொன் பள்ளி (42) என்னும் ஸ்தலத்திலிருந்து தென்மேற்கே 2 கி.மீ.

சிறப்புக்கள் : அஷ்டவீரத் தலங்களில் ஒன்று. தக்ஷ யாகத்துக்கு வந்திருந்த மாயன் முதலிய விண்ணவர்களின் தீமையைப் பறித்த ஸ்தலம். மேற்கு நோக்கிய சந்நிதி. வீரபத்திரர் தெற்கு நோக்கி வீற்றிருக்கின்றார். அவர் காலடியில் தக்ஷன்.

42 திருச்செம்பொன்பள்ளி (செம்பனார் கோவில்)

இறைவன் : சொர்ணபுரீசுரர், சொன்னபுரீசுவரர்

இறைவி : மருவார் குழலியம்மை, சுகந்தவன நாயகி

தீர்த்தம் : வீரபத்திர தீர்த்தம்

பதிகம் : சம் 1, அப் 2

வழி : விளநகர் (40) லிருந்து $1\frac{1}{2}$ கி.மீ. செம்பொன்னார் கோவில் புகைவண்டி நிலையம்.

சிறப்புக்கள் : இந்திரனும், குபேரனும் பூசித்த ஸ்தலம்.

43 திருநனிபள்ளி என்பது புஞ்சை

இறைவன்: நற்றுணையப்பர்

இறைவி: மலையான் மடந்தை (பர்வதராஜ புத்திரி)

தீர்த்தம்: சொன்ன தீர்த்தம்

பதிகம்: சம் 1, அப் 1, சுந் 1

வழி: திருச்செம்பொன் பள்ளி (42) யிலிருந்து திருவெண்காட்டுக்குப் போகும் வழியில் 5 கி.மீ.

சிறப்புக்கள்: திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய தாயார் பிறந்த ஸ்தலம். தந்தையார் தோள் மேலிருந்து சம்பந்தர் பதிகம் பாடிய ஸ்தலம். அடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, பாலையாய் இருந்த இத்தலத்தைச் சம்பந்தர் நெய்தலாகப் பாடினார். ''பாலை நெய்தல் பாடியதும்''-திருக்களிற்றுப்படியார். கோயில் நல்ல வேலைப்

பாடுள்ள கட்டிடம். ஆவுடையார் கோயில் கொடுங்கையும், திருநனிபள்ளி கோடிவட்டமும், திருவீழிமிழலை வௌ வானத்தி மண்டபமும் வேலைப்பாடு சிறந்தன என்பர்.

44. திருவலம்புரம் என்பது பெரும்பள்ளம்

இறைவன் : வலம்புரி நாதர்

இறைவி : வடுவகிர்க் கண்ணம்மை

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பதிகம் : சம் 1, அப் 2, சுந் 1.

வழி : தலைச்சங்காடு (45) இருந்து 2கி. மீ.

சிறப்புக்கள் : விஷ்ணு பூஜித்து வலம்புரிச் சங்குபெற்ற ஸ்தலம். பிக்ஷாடன மூர்த்தி உருவம் வெகு அழகாயுள்ளது. திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கின ஏரண்ட முனிவர் இங்குக் கரையேறினர். அவர் முடியில் உண்டான பள்ளம் போல சுவாமி முடியிலும் பள்டிம் உள்ளது.

திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடன் அப்பர் ஸ்வாமிகள் தலங்கள் தோறுந் தரிசித்துச் சென்றபொழுது சிவபெருமான் அப்பர் ஸ்வாமிகளைத் தாமே இத்தலத்துக்கு வரவழைத்து, தரிசனந்தந்தனர்.

45 திருத்தலைச்சங்காடு

இறைவன் : சங்கருணாடீதசுரர்

இறைவி : சௌந்தர நாயகி

தீர்த்தம் : காவிரியாறு

மரம் : வல்லம்

பதிகம் : சம் 1

வழி : ஆக்கூர் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே 2 கி.மீ. இதற்கு வடகிழக்கே 2 கி.மீ. திருவலம்புரம் (44) உள்ளது.

சிறப்புக்கள் : மகாவிஷ்ணு சிவபெருமானைப் பூசித்துப் பாஞ்ச சந்யம் என்னுஞ் சங்கத்தைப் பெற்ற ஸ்தலம். மாடக் கோயில், கோயில் கட்டு மலைமேல் இருக்கின்றது. தீர்த்தம் கோயிலுக்கு எதிரில் உள்ளது.

விஷ்ணு ஸ்தலம்

XIII திருத்தலைச்சங்க நாண்மதியம் (தலைச்சங்காடு)

மூலவர் : நாண்மதியப் பெருமாள், வெண்சுடர்ப் பெருமாள், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: வியோம ஜோதிப்பிரான், வெஞ்சுடர் பிரான், லோக நாதன்

தாயார்: தலைச்சங்க நாச்சியார். உத்ஸவர்—செங்கமல வல்லித்தாயார்.

தீர்த்தம்: சந்திர புஷ்கரிணி

விமானம்: சந்திர விமானம்

ப்ரத்யக்ஷம்: சந்திரன், தேவப்ருந்தகர், தேவர்கள், நித்ய ஸீரிகள்

வழி: சிவஸ்தலம் திருத்தலைச்சங்காடு (45) பார்வையிடவும்.

சிறப்புக்கள்: ராமானுஜ தாஸர் என்பவரின் முயற்சியால் இக்கோவில் புதுப்பிக்கப்பட்டுத் தாயார் ஸந்நிதியும் கட்டப் பட்டுள்ளது. இங்குள்ள ஆண்டாளின் விக்ரஹம் சிறிய திருமேனியுடையதாயினும் மற்ற ஆண்டாள் திருவுருவங் களைவிட தலைசிறந்த அழகு வாய்ந்தது. பெருமாளுக்குச் மாக விலைமதிப்பற்ற சங்கு ஒன்று இருக்கிறது.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி 8, 9, 9.

46. ஆக்கூர் (தான் தோன்றி மாடம்)

இறைவன் : தான்தோன்றி நாதர், சுயம்புநாதர்

இறைவி : வாணெடுங்கண்ணியம்மை, கட்கநேத்ரி

தீர்த்தம் : குமுத தீர்த்தம்

பதிகம் : சம் 1, அப் 1.

வழி : புகைவண்டி நிலையம்.

சிறப்புக்கள் : மாடக் கோயில்; ஆலயத்துக்குத் தான் தோன்றி மாடம் என்று பெயர். அறுபத்து மூன்று நாயன் மார்களில் ஒருவராகிய சிறப்புலிநாயனாருடைய ஸ்தலம். இத்தலத்து வேளாளர்களைத் திருஞான சம்பந்தமுக்தி ஸ்வாமிகள் சிறப்பித்துக் கூறியிருக்கின்றார்.

ஓரரசன் ஸ்வாமியின் கட்டளைப்படி ஆயிரம் பிராமணர் களுக்குச் சந்தர்ப்பனை செய்வித்ததாகவும் அவர்களில் ஸ்வாமியும் ஒருவராய் வந்து புசித்ததாகவும், அது பின்பு அரசனுக்கு வெளிப்பட்டதாகவும் சொல்லுகிறார்கள். ஒரு தனிச் சந்நிதியில் 'ஆயிரத்திலொருவ' ருடைய உற்சவ விக்கிர கம் இருக்கின்றது.

47 திருக்கடவூர்

இறைவன் : அமிர்தகடேசுரர், கால சங்கரர்

இறைவி : அபிராமியம்மை

தீர்த்தம் : சிவகங்கை, அமிர்த தீர்த்தம்

மரம் : வில்வம்

பதிகம் : சம் 1, அப் 3, சுந் 1

வழி : புகைவண்டி நிலையம். மாயூரத்திற்குக் கிழக்கே தரங்கம் பாடிக்குப் போகும் வழியில் 28 கி.மீ. ஆக்கூருக்கு அடுத்த புகைவண்டி நிலையம்.

சிறப்புக்கள் : கோயில் பெரிது. மேற்கு பார்த்த சந்நிதி. வீரட்டத் தலங்களில் ஒன்று. மார்க்கண்டருக்காக யமனை உதைத்தருளிய ஸ்தலம்.

காலசம்ஹார மூர்த்தி சந்நிதி யொன்றிருக்கிறது. குங்குலியக் கலய நாயனாரும், காரி நாயனாரும் வசித்திருந்து முத்தி பெற்ற ஸ்தலம். பிள்ளையார்-கள்ளவாரணப் பிள்ளையார். கோயிலில் வில்வராணியேசுரர், பாபஹரேசுரர், புண்ணியவர்த்தனேசுரர் என்னும் இலிங்கங்கள் உள்ளன. தேவியார் அபிராமியம்மை சந்நிதி விசேடமானது. அபிராமிப் பட்டர் பாடின 'அபிராமி அந்தாதி' மிக அருமையான நூல்.

திருக்கடவூருக்குக் கிழக்கே $1\frac{1}{2}$ கி.மீட்டரில் திருக்கடவூர் மயானமும், (48) மேற்கு 5 கி.மீட்டரில் ஆக்கூரும் (46), வடமேற்கு 5 கி.மீட்டரில் திருத்தலைச்சங்காடும் (45) தென்மேற்கு 6 கி.மீட்டரில் திருவிசைப்பா, திருப்புகழ் பெற்ற முருகர் தலம் திருவிடைக்கழியும் இருக்கின்றன.

48 திருக்கடவூர் மயானம் (திருமெய்ஞ்ஞானம்)

இறைவன் : பிரமபுரீசுரர்

இறைவி : மலர்க்குழல் மின்னம்மை

தீர்த்தம் : காசித் தீர்த்தம்

பதிகம் : சம் 1, அப் 1, சுந் 1

வழி : திருக்கடவூருக்கு (47) கிழக்கே $1\frac{1}{2}$ கி.மீ.

சிறப்புக்கள்: மேற்குபார்த்த சந்நிதி. இந்தத் தலத்துக்குத் தெற்கு ¾ கி. மீட்டரில் ஒரு கிணறு இருக்கின்றது. அது மிகவும் விசேஷமானது. அதிலிருந்துதான் திருக்கடவூர் அமிர்தகடேசுரருக்குத் தினந்தோறும் திருமஞ்சனம் கொண்டு வரப்படுகின்றது. பங்குனிமீ சுக்கிலபக்ஷம் அசுவினி நட்சத்திரத்தில் இவ்விடத்தில் ஸ்நானஞ் செய்வது பிரபலமாயிருக்கின்றது. மற்றைக் காலத்தில் திருமஞ்சனந் தவிர வேறெதற்கும் இந்த ஜலத்தை உபயோகிப்பதில்லை. சிவபெருமான் பிரமதேவரை நீறாக்கி அவரை மறுபடி உயிர்ப்பித்து, அவருக்குச் சிருஷ்டித் தொழிலைக் கொடுத்தருளிய ஸ்தலம்.

49 திருவேட்டக்குடி

இறைவன்: திருமேனியழகர்

இறைவி: சாந்த நாயகி

தீர்த்தம்: சந்திர புஷ்கரிணி

பதிகம்: சம் 1

வழி: காரைக்காலுக்கு வடகிழக்கு 11 கி.மீ.

சிறப்புக்கள்: அருச்சுனன் தபசு செய்து கொண்டிருக்கும் பொழுது சிவபெருமான் வேடரூபமாக வெளிப்பட்ட ஸ்தலம்.

50. திருத்தருமபுரம்

இறைவன் : யாழ்மூரிநாதேசுரர்

இறைவி : தேனமிர்தவல்லி. மதுரமின்னம்மை.

தீர்த்தம் : விண்டு தீர்த்தம், பிரம்ம தீர்த்தம்

பதிகம் : சம் 1. (யாழ்மூரிப்பதிகம்)

வழி : காரைக்கால் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே ¾ கி. மீ.

சிறப்புக்கள் : திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் ''மாதர் மடப்பிடி'' என்னும் யாழ்முரிப்பதிகம் பாடியருளிய ஸ்தலம். பிரமா, தருமராஜா முதலியோர் பூஜித்த ஸ்தலம். தருமபுரத்திலிருந்து மேற்கே திருநள்ளாற்றுக்குப் போகும் வழியில் ''தக்களூர்'' என்னும் வைப்புத் தலம் இருக்கின்றது.

51. திருத்தெளிச்சேரி என்பது கோயிற்பத்து

இறைவன் : பார்வதீசுரர்

இறைவி : சத்தியம்மை

தீர்த்தம் : சத்தி தீர்த்தம்

பதிகம் : சம் 1.

வழி: காரைக்கால் புகைவண்டி நிலையத்திற்கு வடமேற்கே 1 கி.மீ.

சிறப்புக்கள்: திருஞானசம்பந்த சுவாமிகள் அடியார் திருக்கூட்டத்துடன் செல்லுகையிற், ''பர சமய கோளரி வந்தார்'' என்று முத்துச் சின்னங்கள் ஊத, அதனைப் பொறாத பௌத்தர்கள் வந்து தடுக்க, தேவாரத் திருமுறையெழுதும் அடியவர் பஞ்சாக்ஷரப் பதிகத் திருப்பாட்டை ஓதிப் பௌத்தர்களின் தலைவனாக வந்த புத்தநந்தியின் தலைமேல் இடி விழுப்படி செய்த ஸ்தலம். பௌத்தர்கள் மீண்டும் சாரிபுத்தனைத் தலைவனாகக் கொண்டு அவ்வடியவருடன் தருக்கஞ் செய்து தோல்வியுற்றுப் பிள்ளையாரின் அனுக்கிரகத்தாற் சைவர்களாகி உய்ந்த தலம். மேற்கு பார்த்த சந்நிதி. எதிரிற் குளமிருக்கின்றது. பங்குனிமீ 13 உ முதல் 10 நாளைக்குச் சூரிய கிரணங்கள் ஸ்வாமிமேல் விழுகின்றன. தீர்த்த விசேஷம் கொண்ட தலம்.

52 திருநள்ளாறு

இறைவன் : தர்ப்பாரண்யேசுரர்

இறைவி : போகமார்த்த பூண்முலையம்மை

தீர்த்தம் : நள தீர்த்தம்

பதிகம் : சம் 4, அப் 1, சுந் 2

வழி : புகைவண்டி நிலையம். காரைக்காலுக்கு மேற்கே 5 கி.மீ.

சிறப்புக்கள் : சப்த விடங்க ஸ்தலங்களில் ஒன்று. "நாகம் பூண்டு கூத்தாடு நள்ளாறனே; நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே"—என்பன தேவாரம். நகர விடங்கத் தியாகர்—உன்மத்த நடனம். இலிங்கமூர்த்தியின் உருவம் தர்ப்பைக் கொழுந்துகள் சேர்ந்தனபோல் இருக்கின்றது. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மதுரையிற் சமண ருடன் வாது செய்கையில் அக்கினியிலிட்டும் வேகாமலிருந் தெடுத்த பச்சைத் திருப்பதிகம் ஆகிய "போகமார்த்த பூண் முலையாள்" என்னும் அருமைத் திருப்பதிகத்தைப் பெற்றிருக்கும் ஸ்தலம். சனிபகவான் சந்நிதி விசேஷம். அதையே பகவான் கோயில் என்கிறார்கள். பகவான் என்றாற் சனி.

நளச்சக்கரவர்த்தி பூஜித்துக் கலிதோஷம் நீங்கப்பெற்ற ஸ்தலம். விநாயகருக்குச் சொர்ண விநாயகர் என்றும் பெயர். பிரகாரத்தில் வைரவர் விக்கிரகம் இருக்கின்றது. ஊருக்கு வடமேற்கில் நளதீர்த்தம் இருக்கின்றது. திரு நள்ளாற்றுக்குக் கிழக்கே 1½ கி.மீட்டரில் 'தக்களூர்' என்னும் வைப்புத்தலம் இருக்கின்றது.

53 திருககோட்டாறு (திருக்கொட்டாரம்)

இறைவன் : ஐராவதேசுரர்

இறைவி : வண்டமர் பூங்குழலம்மை

தீர்த்தம் : சூரிய தீர்த்தம்

பதிகம் : சம் 2

வழி : திருநள்ளாறு (52) புகைவண்டி நிலையத்திற்கு வடமேற்கில் 5 கி.மீ. அம்பகரத்தூர் புகைவண்டி நிலையத் திற்கு வடகிழக்கே 2 கி.மீ.

சிறப்புக்கள்: திருக்கோட்டாற்றுக்குக் கிழக்கே 3 கி. மீட்டரில் இளையான் குடிமாற நாயனார் ஊராகிய இளையான்குடி இருக்கின்றது. ராமநாதபுரம் ஜில்லா பரமக்குடிக்கு 11 கி. மீட்டரில் உள்ள இளையான்குடிதான் அந்த நாயனார் ஊர் என்றும் கூறுவர். வெள்ளையானை பூசித்த ஸ்தலம்.

54 அம்பர் என்ற பெருந்திருக்கோயில்

இறைவன்: பிரமபுரீசுரர்

இறைவி: பூங்குழலம்மை

தீர்த்தம்: பிரமதீர்த்தம், அன்னமாம் பொய்கை

மரம்: புன்னை மரம்

பதிகம்: சம் 1

வழி: பேரளம் சந்திப்புக் கடுத்த பூந்தோட்டம் புகை வண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே 3 கி.மீ. அம்பர் மாகாளத் துக்கு (55) கிழக்கே 1 கி.மீ.

சிறப்புக்கள்: சோமாசி மாற நாயனார் முக்தியடைந்த ஸ்தலம். ஸ்வாமி சந்நிதி கட்டுமலைமேல் இருக்கின்றது. ஸ்வாமிக்குப் பின்புறத்தில் பார்வதி பரமேசுரர்களுடைய உருவங்கள் இருக்கின்றன. இங்குள்ள ஆலயத்துக்குப் பெருந் திருக்கோயில் என்று பெயர். 'அம்பர் நகர் பெருங்கோயிலமர் கின்றான்காண்'' என்பது தேவாரம். இத்தலத்திலுள்ள ஆலயம் கோச்செங்கட்சோழ ராஜாவால் கட்டப்பட்டது. இவர் திருவானைக்கா முதல் அம்பர்ப் பெருந்திருக்கோயி லருகுள்ள 64 மாடக்கோயில்கள் கட்டுவித்தார்

'மாடக்கேயில்' என்பது கட்டுமலையையும், யானைகள் செல்லக் கூடாதிருக்குஞ் சந்நிதியையும் உடையது. அன்ன வடிவம் கொண்ட பிரமதேவன் உண்டாக்கிய தீர்த்தம் 'அன்னமாம் பொய்கை'.

55. திருஅம்பர் மாகாளம் (கோயில் திருமாகாளம்)

இலைவன் : மாகாளநாதர், காளகண்டேசுரர்

இறைவி : பயக்ஷய நாயகி, பட்சிநாயகி

தீர்த்தம் : மாகாள தீர்த்தம், தேவ தீர்த்தம்

பதிகம் : சம் 3.

வழி : அம்பர் (54) என்னும் தலத்திற்கு மேற்கு 1கி.மீ. பேரளம் புகைவண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கு 6கி. மீ.

சிறப்புக்கள் : அரிசொல் ஆறு அருகில் உள்ளது. அம்பருக்கும், அம்பர் மாகாளத்துக்கும் இடையிற் சோமாசிமாற நாயனார் யாகம் செய்த மண்டபம் இருக்கின்றது. யாக உற்சவம் வைகாசி ஆயில்யத்தில் நடக்கிறது. வெகு நன்றாயிருக்கும்.

அம்பன், அம்பாசூரன் என்னும் ராட்சதர்களைக் கொன்ற பாவந்தீரக் காளி பூஜை செய்த ஸ்தலம். பாண லிங்கம். இலிங்கமூர்த்திக்கு எதிரில் சற்று வடக்கே நாகராஜனும் அவர் பூசித்த லிங்கமும் அம்மையும் உள்ளன.

வெளிப்பிரகாரத்தில் தென்பக்கம் காளிகோயில் இருக்கிறது. மஹாகாள ரிஷி பூஜை செய்த ஸ்தலம்.

சோமாசிமாற நாயனார், அவர் பத்தினி, சுந்தரமூர்த்தி நாயனார், பரவை நாச்சியார் இவர்களுடைய உருவங்கள் இருக்கின்றன. இவற்றுக்கெதிரில் தியாகராஜருடைய விக்கிரகமும், தேவியாருடைய விக்கிரகமும் இருக்கின்றன.

56. திருமீயச்சூர்

இறைவன்: முயற்சி நாதேசுரர்

இறைவி: சௌந்தர நாயகி

மரம்: வில்வ மரம்

தீர்த்தம்: சூரிய கட்புரிணி

பதிகம்: சம் 1

வழி: பேரளம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே $1\frac{1}{2}$ கி.மீ. இங்கிருந்து திருட்பாம்புரம் (59) போகலாம்.

சிறப்புக்கள்: ஸ்வாமியையும் தேவியாரையும் யானைமேல் வைத்துச் சூரியன் பூஜை செய்த ஸ்தலம். திருக்கோயிலின் விமானம் யானையிருப்பது போலிருக்கின்றது. தேவியாரும் இருந்த திருக்கோலம்.

57 திருமீயச்சூர் இளங்கோவில்

இறைவன் : சகலபுவனேசுரர்

இறைவி : மேகலாம்பிகை

தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்

பதிகம் : அப் 1

வழி : திருமீயச்சூர் (56) ஸ்வாமி சந்நிதிக்கு வடபுறமிருக்கின்றது.

சிறப்புக்கள் : திருமீயச்சூர் சுவாமி பாலாலியமாயிருந்த காலத்துப் ப்ாடப்பெற்ற சந்நிதி. காளி பூஜித்த ஸ்தலம்.

58. திருத்திலதைப்பதி என்பது திலதர்ப்பணபுரி

இறைவன் : முத்தீசுரர்

இறைவி : பொற்கொடியம்மை

தீர்த்தம் : சந்திர தீர்த்தம்

பதிகம் : சம் 1.

வழி: பேரளம் நிலையத்திற்குத் தென்மேற்கு 5 கி.மீ. பூந்தோட்டம் நிலையத்திற்கு மேற்கே 1½ கி.மீ. சிதலைப்பதி என வழங்கும் ஊருக்கு 1 கி. மீட்டரில் திருக்கோயிலிருக்கிறது.

சிறப்புக்கள் : சந்திரன் பூஜித்த ஸ்தலம். தசரத சக்கரவர்த்திக்கும், சடாயுவுக்கும் ராம லக்ஷ்மணர்கள் திலதர்ப்பணம் செய்த ஸ்தலம். காசி சித்தோஜி ராஜா தர்ப்பணம் செய்த தலம். அவர் உருவம் ஆலயத்திலிருக்கின்றது. இங்குத் தர்ப்பணம், சிரார்த்தம் இவை செய்வது விசேஷம். யானை வழிபட்ட தலம.

59 திருப்பாம்புரம்

இறைவன்: பாம்புரேசுரர்

இறைவி: வண்டார் பூங்குழலியம்மை

மரம்: வன்னி மரம்

பதிகம்: சம் 1

வழி: பேரளம் நிலையத்துக்கு மேற்கே 7 கி.மீ. வழியில் 1½ கி. மீட்டரில் திருமீயச்சூர் (56) உள்ளது.

சிறப்புக்கள்: நாகராஜன் பூஜை செய்த ஸ்தலம். நாகராஜாவின் மூல விக்கிரகமும் உற்சவ விக்கிரகமும் இருக்கின்றன.

60 திருச்சிறுகுடி

இறைவன்: மங்களேசுரர்

இறைவி: மங்கள நாயகி

தீர்த்தம்: சூரிய தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி : பேரளம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே $1\frac{1}{2}$ கி.மீ. திருமீயச்ஞருக்கு (56) மேற்கே $7\frac{1}{2}$ கி. மீ. திருப்பாம்புரம் (59)க்கு மேற்கே $1\frac{1}{2}$ கி. மீ-

சிறப்புக்கள் ; செவ்வாயும், கருடனும், கந்தருவர்களும் பூசித்த ஸ்தலம்.

61. திருவீழிமிழலை

இறைவன் : நேத்திரார்ப்பணேசுரர், வீழியழகீசர்

இறைவி : சுந்தர குஜாம்பிகை. சுந்தராம்பிகை

தீர்த்தம் : விஷ்ணு தீர்த்தம்

மரம் : வீழிச்செடிகள்

பதிகம் : சம் 15, அப் 8, சுந் 1.

வழி : பேரளம் நிலையத்திற்குத் தென்மேற்கு $12\frac{3}{4}$ கி.மீ. குற்றாலம் புகைவண்டி நிலையத்தில் இருந்து தெற்கு 9கி.மீ.

சிறப்புக்கள் : வீழிச் செடிகள், நிறைந்திருப்பதால் இவ்வூருக்குத் திருவீழிமிழலை என்று பெயர் வந்தது. கோயிலுக்கெதிரில் ஒரு பெரிய குளம் இருக்கின்றது. அரிசிலாறு பக்கத்தில் ஓடுகின்றது. மூலலிங்கத்துக்குப் பின் பார்வதி பரமேசுரர் திருவுருவங்கள் இருக்கின்றன. சக்கரம் வேண்டித் திருமால் பூஜை செய்யும் பொழுது ஒரு நாள் ஒரு பூ குறைபடத் தமது கண்ணையே யிடந்து சாத்திச் சக்கரம் பெற்ற ஸ்தலம்.

ஊர் சிறிது; கோயில் பெரிது. முதற் பிராகாரத்தில் நூற்றுக் கால் மண்டபத்தின் கற்றூண்கள் மேலே வளைவு வளைத்துக் கட்டியிருக்கும் வேலை அருமையாயிருக்கின்றது. வடக்கு வீதி கீழைக்கோடியில் சம்பந்த ஸ்வாமி கோயிலும், மேலைக் கோடியில் அப்பர் ஸ்வாமி கோயிலும் இருக்கின்றன. ஆவுடையார் கோயில் (திருப்பெருந்துறை) கொடுங்கையும்,

திருநனிபள்ளி கோடி வட்டமும், திரு வீழிமிழலை வௌவா னெற்றி மண்டபமும் பிரசித்தமானவை.

'மாப்பிள்ளைச்சாமி' என வழங்கும் கலியாண கோலமா யுள்ள மூர்த்தியின் பாதத்தில் விஷ்ணு தமது கண்ணைப் பறித்து அருச்சித்த குறியிருக்கின்றது. உற்சவ மூர்த்தியின் வலப் பாதத்தின் மேலே திருமாலுடைய கண்ணும் கீழே சக்கரமும் இருக்கின்றன.

ஸ்வாமி வீற்றிருக்கும் இடம் விண்ணிழி விமானம் என்று சொல்லப்படுகின்றது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் இந்தத் தலத்தில் எழுந்தருளி யிருந்த பொழுது பஞ்சமுண்டாக, அவ் விருவர்களுக்கும் சிவபிரான் படிக்காசு கொடுத்தருளி, அவர்கள் மூலமாய் அடியார்களுக் கமுதளித்த அரும்பதி. அங்ஙனம் படிக்காசு வைத்த பலிபீடங்கள் கிழக்கிலும் மேற்கிலும் இருக்கின்றன. மேற்கே இருக்கும் பலிபீடத் தருகிற் படிக்காசுப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். அவருக்கருகில் அப்பர், சம்பந்தர் களுடைய விக்கிரகங்கள் இருக்கின்றன. ஸ்வாமி தாம் ஸ்ரீ காழியிலிருக்குந் திருக்கோலத்தைத் திருஞான சம்பந்த ருக்கு இங்குள்ள விண்ணிழிந்த விமானத்திலே காட்டியருளி னார். தேவாரத்திலும் பாராட்டப்பட்டுள்ள அந்தணர் கள் வாழும் அரும்பதி "தில்லை மூவாயிரர் போல வீழி ஐந் நூற்றந்தணர்" என்பர்.

62 திருவன்னியூர் (அன்னூர்)

இறைவன்: அக்கினீசுரர்

இறைவி: பார்வதியம்மை

தீர்த்தம்: அக்கினி தீர்த்தம்

பதிகம்: அப் 1

வழி: திருவீழிமிழலைக்கு (61) வடமேற்கு 3 கி.மீ., இங்கிருந்து 4 கி. மீட்டரில் திருக்கருவிலி (63) இருக்கிறது.

சிறப்புக்கள்: அக்கினி பூசித்த ஸ்தலம்.

63 திருக்கருவிலி (கொட்டிட்டை)

இறைவன்: சற்குண நாதேசுரர்

இறைவி: சர்வாங்க நாயகி

பதிகம்: அப் 1

வழி: திருவன்னியூரிலிருந்து (62) தென்மேற்கே கரை மார்க்கமாய் 4 கி.மீ. இதற்கு வடகிழக்கில் 2 கி.மீ. கோனேரி ராஜபுரம் (34) என்னும் திருநல்லம் உள்ளது.

சிறப்புக்கள் : இந்திரனும் தேவர்களும் பூசித்த ஸ்தலம். சற்குணன் என்னும் அரசன் பூசித்துப் பிறவிக் கடலைக் கடந்த ஸ்தலம். உருத்திர கணங்கள் பூசித்ததாகத் தேவாரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆலயத்துக்குக் 'கொட்டிட்டை' என்று பெயர்.

திருப்புகழ் பெற்ற கூந்தலூர் அரிசிலாற்றின் தென் கரையிலும், கருவிலி அரிசிலின் வடகரையிலும் ½ கி.மீ.-ல் இருக்கின்றன.

64. திருப்பேணு பெருந்துறை (திருப்பந்துறை)

இறைவன் : சிவாநந்தேசுரர்

இறைவி : மலையரசியம்மை

தீர்த்தம் ; மங்கள தீர்த்தம். சின்மயானந்த தீர்த்தம்

மரம் : வன்னிமரம்

பதிகம் : சம் 1.

வழி : கும்பகோணத்திற்கு (26) தென்கிழக்கே சுமார் 11 கி, மீ. திருநறையூருக்கு (65) கிழக்கே 1½ கி; மீ,

சிறப்புக்கள் : சிவசத்தி, பிரமன் முதலியோர் பூஜித்த ஸ்தலம். சுப்பிரமணிய ஸ்வாமி மூகைத்தன்மை நீங்கப் பெற்ற ஸ்தலம். திருச்சடப்பந்துறையிலும் இந்த ஐதீகம் உண்டு. மங்கள தீர்த்தமும் வன்னி விருக்ஷமும் கோயிலுக்கெதிரில் இருக்கின்றன.

65. திருநறையூர்ச் சித்தீச்சுரம்

இறைவன் : சித்தநாதேசுரர்

இறைவி : அழகாம்பிகை

தீர்த்தம் : பிரமதீர்த்தம்

பதிகம் : சம் 3. சுந் 1.

வழி - திருநறையூருக்குக் கிழக்கே 1½ கி.மீ. பேணுப்பெருந் துறையும் (64), தெற்கே ¾ கி.மீ. நாச்சியார் கோவில் என்ற விஷ்ணு தலமும் உள்ள .

சிறப்புக்கள் : பிள்ளையார்- ஆண்டபிள்ளையார். கோயிலுக்கு வடக்கிற் பிரமதீர்த்தம் இருக்கின்றது. கோயில் சற்றுப் பெரிது. சித்தர்கள் பூசித்ததாகச் சொல்வர்.

XIV விஷ்ணு ஸ்தலம்

திருநறையூர் (நாச்சியார் கோவில்)

மூலவர்; திருநறையூர் நம்பி, ஸ்ரீநிவாஸன், வாஸுதேவன் என்ற பெயர்களுடன் நின்ற திருக்கோலத்தில் தாயாரை மணம்புரிந்து கொள்ளும் நிலை; கிழக்கே திருமுக மண்டலம்

தாயார்: வஞ்ஜுளவல்லி, (நம்பிக்கை நாச்சியார்) பெருமாள் பக்கத்தில் திருமணக் கோலத்தில் நிற்கிறார்.

தீர்த்தம: மணிமுக்தா புஷ்கரிணி, ஸர்கர்ஷண தீர்த்தம், ப்ரத்யும்ன தீர்த்தம், அநிருத்த தீர்த்தம், ஸாம்ப தீர்த்தம்

விமானம்: ஸ்ரீநிவாஸ விமானம், ஹேம விமானம்

ப்ரத்யக்ஷம்: மேதாவி முனிவர், ப்ரஹ்மா

வழி: கும்பகோணத்திலிருந்து 9½ கி.மீ. உப்பிலியப்பன் கோவிலிலிருந்தும் நகரப் பேருந்தில் செல்லலாம்.

சிறப்புக்கள்: மேதாவி ரிஷியின் வளர்ப்புப் பெண்ணான வஞ்ஜுளவல்லியை பகவான் தனது நிலையில் (ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன், புருஷோத்தமன், வாஸுதேவன் என்ற 5 உருவங்களில்) மணந்து கொள்கிறார்.

பெருமாளுடைய கருட வாஹன சேவை பெயர் பெற்றது. கல்லாலான கருடவாஹனத்தை முதலில் ஸந்நிதியில் 4 பேர்களும், முடிவில் கோவில் வாசலில் 64 பேர்களும் எழுந்தருளப்பண்ணும் வகையில் வாஹனம் சிறுகச் சிறுகக் கனத்துவிடுமாம். கல் கருடனுக்கு தனித் ஸந்நிதி உள்ளது. இவ்வூரில் நாச்சியாருக்கே முதல் ஸ்தானம். வீதி உத்ஸவத்தில் அவர்தாம் முதலில் எழுந்தருள்வார். கருடஸேவையின் போது பெருமாள் கல்கருடன் மீதும் தாயார் அன்ன வாஹனத்திலும் எழுந்தருள்வார். இங்கு திருமங்கையாழ்வாருக்குப் பெருமாள் ஸமாச்சரயணம் செய்தார். மார்கழி மாதம் ப்ருஹ்மோத்ஸவம் மிக விமரிசையாக நடைபெறுகிறது. இருபெருமாளைத் திருநரையூர் நம்பி என்பர்.

மங்களாசாஸனம் :

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி 6.4 பதிகம் முதல் நூற்றுக்கணக்கான பாடல்கள்.

66. திரு அரிசிற் கரைப்புத்தூர் (அழகார் புத்தூர்)

இறைவன் : படிக்காசளித்த ஈசுரர்

இறைவி : அழகாம்பிகை

தீர்த்தம் : அரிசிலாறு, வாணாசுர தீர்த்தம்

பதிகம் : சம் 1, அப் 1. சுந் 1.

வழி : கும்பகோணத்திற்குத் தென்கிழக்கு 7 கி.மீ. இன்னும் 1½ கி.மீ. சென்றால் திருநறைபூர்ச் சித்தீச்சுரம் (65) உள்ளது.

சிறப்புக்கள் : உண்மையானந்த முநிவர் பூசித்த ஸ்தலம் புகழ்த்துணை நாயனார் சிவபெருமனைப் பூசித்து முத்தி யடைந்த க்ஷேத்திரம். கிறிய கோபுரம்.

67. திருச்சிவபுரம்

இறைவன் : சிவபுரநாதர், பிரமபுரிநாதர்

இறைவி: சிங்காரவவ்ளி, பெரிய நாயகி

தீர்த்தம்: சூரிய தீர்த்தம்

மரம்: சண்பக மரம்

பதிகம : சம் 3, அப் 1

வழி: கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 5 கி.மீ.

சிறப்புக்கள்: விஷ்ணு வராகமாய்ப் பூசித்த ஸ்தலம். இந்த ஐதீகம் கோயில் மதிற்சுவரில் காட்டப்பட்டிருக்கின்றது.

68 திருக்கலயநல்லூர் (சாக்கோட்டை)

இறைவன்: அமிர்தகலேசுரர்

இறைவி: அமிர்தவல்லி

தீர்த்தம்: நால் வேத தீர்த்தம்

பதிகம் : சுந் 1

வழி: கும்பகோணத்திற்குத் தென்கிழக்கு நீடா மங்கலம் போகும் வழியில் 4 கி.மீ.-ல் அரிசில் நதியின் தென்கரையில் உள்ளது,

சிறப்புக்கள் : அரிசொல்லி வந்தபடியால் ''அரிசொல்நதி'' என்று பெயர். ''அரிசொல்'' என்பது ''அரிசில்'' என மருவியது. கோயில் சிறிது. அதைச் சுற்றி ஒரு தாமரைப் பொய்கை இருக்கின்றது. இதற்குத் தென் கிழக்கு $1\frac{1}{2}$ கி. மீட்டரில் திருக்கருக்குடி (69) இருக்கின்றது.

உயிர்களைச் சேமித்த கலயம் பிரளயத்தில் தங்கிய இடம் இத்தலம் என்பர்.

69 திருக்கருக்குடி (மருதாந்த நல்லூர்)

இறைவன் : சற்குணலிங்கேசுரர்

இறைவி : சர்வாலங்கிருத மின்னம்மை

தீர்த்தம்: ஏம தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: திருக்கலைய நல்லூருக்கு (68) தென் கிழக்கே $1\frac{1}{2}$ கி. மீ. இதற்குக் கிழக்கே 2 கி. மீட்டரில் ஏனாதி நாயனார் தலமாகிய எயினனூர் இருக்கின்றது.

சிறப்புக்கள்: பிரமனும் சற்குணன் என்னும் அரசனும் பூசித்த ஸ்தலம். இராமர் பூசித்ததாகவுஞ் சொல்லுகிறார்கள். மணல் இலிங்கம். ஸ்வாமி உருவமும் அம்மன் உருவமும் சிறியன. ஒரு செட்டி தன் தாயுடன் அறியாது புணர்ந்த தோஷம் இந்தத் தலத்தில் நீங்கிற்றாம். அவன் உருவம் தேவி சந்நிதிக்கெதிரில் இருக்கின்றது.

70. திருவாஞ்சியம்

இறைவன் : வாஞ்சிலிங்கேசுரர்

இறைவி : மங்களநாயகி வாழவந்தாயகி

தீர்த்தம் : குப்தகங்கை தீர்த்தம், கிணறு

மரம் : சந்தனமரம்.

பதிகம் : சம் 1. அப் 1. சுந் 1.

வழி : நன்னிலம் புகைவண்டி நிலையத்துக்கு மேற்கே 9½ கி.மீ திருவாரூர் நிலையத்தில் இறங்கி வடமேற்கே கும்பகோணம் போகிற வழியில் 17 கி. மீ.

சிறப்புக்கள் : இது புத்தாறு என்னும் நதியின் வட கரையிலிருக்கின்றது. விஷ்ணுமூர்த்தி சிவபெருமானை பூஜித்துத் தம்மைவிட்டுப் பிரிந்து போன லக்ஷ்மியையடையப் பெற்ற ஸ்தலம். அவர் திருவை வாஞ்சித்த இடம் திருவாஞ்சியம். கோயில் பெரிது. சந்தன விருக்ஷம் பிராகாரத்தில் இருக்கின்றது. குப்தகங்கை தீர்த்தம் கோயிலுக்கு வடக்கில் இருக்கின்றது. இதிற் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக் கிழமைகளில் ஸநானஞ் செய்வது விசேஷம். இத்தலத்தில் இறப்பவர்களுக்கு இயமவாதனை இல்லை. கோயிலில் இயமனுக்கு ஒரு சந்நிதியும் ஸ்வாமிக்கு இயமவாகனமும் இருக்கின்றன. பிரமன், பராசரர், அத்திரி-பூஜித்த தலம். இத்தலம் காசிக்குச் சமமாகச் சொல்லப்படும் தென்னாட்டுத்தலங்கள் ஆறனுள் ஒன்று. முத்தியளிக்குந் தலங்களுள் ஒன்று.

71 நன்னிலம் என்பது மதுவனம்

இறைவன் : மதுவனேசுரர், பிரகாச நாதர்

இறைவி : மதுவனநாயகி, பிரகாச நாயகி

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பதிகம் : சுந் 1

வழி : புகைவண்டி நிலையம். ஊர் நிலையத்துக்கு மேற்கு 5 கி.மீ. வழியில் 2 கி.மீட்டரில் திருக்கொண்டீச்சுரம் (72) இருக்கின்றது.

சிறப்புக்கள் : ஸ்தலத்துக்கு 'மதுவனம்' என்றும் பெயர். சுவாமி சந்நிதி கட்டுமலைமேல் இருக்கின்றது. இக்கோயில் பெருங் கோயில்களுள் ஒன்று. கோச்செங்கட்சோழர் திருப்பணி செய்த ஸ்தலம். சூரியன் பூஜித்த ஸ்தலம்.

தேவியார் சந்நிதியும். அகத்தீசுரர் சந்நிதியும் கீழே இருக்கின்றன. கோயிலுக்கு வடக்கிற் பிரம தீர்த்தம் இருக்கின்றது. "கோச்செங்கணான் செய்கோயில், நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில்" என்பது தேவாரம்.

72 திருக்கொண்டீச்சுரம்

இறைவன் : பசுபதீசுரர்

இறைவி : சாந்த நாயகி

பதிகம் : அப் 2

வழி : நன்னிலம் புகைவண்டி நிலையத்துக்கு மேற்கு 2 கி.மீ. நன்னிலத்துக்கு (71) கிழக்கே 2 கி.மீ.

சிறப்புக்கள் : வில்வாரணிய க்ஷேத்திரம். காமதேனு பூசித்த ஸ்தலம். முடிகொண்டான் ஆற்றுக்குத் தெற்கு. கோயிலைச் சுற்றிலும் மாலை போட்டாற்போல அகழி யொன்றிருக்கின்றது. அதற்கு க்ஷீர புஷ்கருணித் தீர்த்தம் என்று பெயர், ஒரு காரணத்தால் அம்மை பசுவாகி சுவாமியை தேடி, இவ் வில்வவனத்தில் வந்து, கொம்பினால் உழுது வருகையில், ஸ்வாமியின் சிரசிற் கொம்புபட்டு இரத்தம் வரத், தன் பாலையே விட்டுக் காயத்தை ஆற்றி வழிபட்டதாகச் சொல்லுகின்றார்கள். இலிங்கத்தின் உச்சியில் வடு இருக்கின்றது.

73 திருப்பனையூர்

இறைவன் : சௌந்தரிய நாதர்

இறைவி : பெரிய நாயகி

தீர்த்தம்: அமிர்த தீர்த்தம்

பதிகம்: சம் *1*, சுந் *1*

வழி: திருவாரூருக்கு (87) வடக்கே *10* கி. மீட்டரிலுள்ள ஆண்டிப் பந்தல் கிராமத்துக்குக் கிழக்கு *1* கி.மீ. நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 6 கி.மீ.

சிறப்புக்கள்: சிவபெருமான் திருக்கூத்தோடு சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் காட்சி கொடுத்தருள, அவர் 'மாட மாளிகை' என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்த ஸ்தலம். அமிர்த புஷ்கருணித் தீர்த்தம் கோயிலுக்கு எதிரில் இருக்கின்றது. கோயிலுக்குள் பிராகாரத்திற் பனைவிருக்ஷம் இரண்டு இருக்கின்றன. பராசர முனிவர் பூஜை செய்த ஸ்தலம். இங்கு வளர்ந்த கரிகால் சோழனுக்குப் பிள்ளையார் துணையிருந்தாராம், அதனாற் பிள்ளையாருக்குத் ''துணையிருந்த பிள்ளையார்'' என்று பெயர். திருப்பனையூருக்கு வடக்கே 5 கி. மீட்டரில் திருப்புகலூர் (77) இருக்கின்றது.

74 திருவிற்குடி (பிருந்தை மயானம்)

இறைவன்: வீரட்டானேசுரர்

இறைவி: ஏலவார் குழலி

பதிகம்: சம் *1*

வழி: திருவாரூருக்கு (87) வடக்கிலுள்ள விற்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ.

சிறப்புக்கள்: அட்டவீரத்தலங்களில் ஒன்று. கசலந்தராசுரனைத் சங்கரித்த ஸ்தலம். உற்சவ மூர்த்தியின் திருக்கரத்திற் சக்கரம் அமைந்துள்ளது. கோயிலுக்குப் பின்புறத்

தில் மெய்ஞ்ஞானேசுரரது சிறு கோயிலும், எதிரில் சக்கர தீர்த்தமும், பக்கத்தில் பிருந்தையும் (துளசி மாடமும்) உள்ளன. இதை பிருந்தை மயானம என்பர்.

75 திருப்பயற்றூர் (திருப்பயற்றங்குடி)

இறைவன்: திருப்பயற்றீசுரர்

இறைவி: காவியங் கண்ணியம்மை

பதிகம்: அப் 1

வழி: திருவிற்குடி (74) லிருந்து கிழக்கே 5 கி.மீ.

சிறப்புக்கள்: பைரவ ரிஷி பூசித்த ஸ்தலம்

76 திருப்பள்ளியின் முக்கூடல்

இறைவன்: முக்கோண நாதேசுரர்

இறைவி: மைம் மேவு கண்ணியம்மை

பதிகம்: அப் 1

வழி: திருவாரூருக்கு (87) வடகிழக்கே 5 கி.மீ. விற்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து 1½ கி.மீ. வழியில் கயாகரையுள்ளது.

சிறப்புக்கள்: கயாகரையை. தேகரை என்று சொல்லுகின்றார்கள். கயா தீர்த்தப் பெருமையைத் திருவாரூர்ப் புராணம் கயா தீர்த்தச் சருக்கத்திற் காண்க. இராமர் பூஜித்த இலிங்கம். பளபளப்பாயிருக்கின்றது. இவ்வாலயத்துக்கு மேற்பக்கத்தில் இராமசாமி கோயில் இருக்கின்றது.

77 திருப்புகலூர்

இறைவன் : அக்னீசுரர் (கோணற்பிரான்)

இறைவி : கருந்தாழ்குழலியம்மை

தீர்த்தம் ; அக்கினி தீர்த்தம்

மரம் : புன்னை மரம்

பதிகம் : சப் 2, அப் 5, சுந் 1

வழி : நன்னிலம் புகைவண்டி நிலையத்துக்குக் கிழக்கே 6 கி.மீ. திருப்பனையூர் (73) லிருந்து வடக்கே 5 கி.மீ.

சிறப்புக்கள் : அக்கினி பூஜித்த ஸ்தலம். கோயிலும் கோபுரமும் பெரியன. தென்பக்கந் தவிர மற்றெல்லாப் பக்கங்களிலுங் கருங்கல்லினாற் கட்டிய அகழியொன்றிருக்கின்றது. ஸ்வாமியின் (கோணப்பிரானுடைய) உருவம் சற்றுச் சாய்ந்து இருக்கின்றது. சந்திரசேகரர் சந்நிதி விசேஷம். அதற்கு நேராக அக்கினி பகவான் உருவம் இருக்கின்றது.

திருநாவுக்கரசு நாயனார் முத்தி பெற்ற ஸ்தலம். வாதாபி கணபதி பக்கத்தில் அப்பர் ஸ்வாமிகள் திருவுருவம் இருக்கின்றது. முன் பிராகாரத்திற் கீழ்ப்பக்கத்தில் ஸ்வாமி சிங்கரூபமாய் அப்பரை விழுங்குகிற பாவனை சிலையிற் காட்டப்பட்டிருக்கின்றது. திருப்புகலூர் வர்த்தமானேச்சுரம் இவ்வாலயத்துக்குள் இருக்கின்றது. ஸ்வாமிக்குப் பலவித புஷ்ப மாலை கட்டிக்கொடுக்குந் திருத்தொண்டு செய்து வந்த முருகநாயனாருடைய ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் நித்திரை செய்யும் பொழுது தம் தலையின் கீழ் வைத்துக் கொண்டிருந்த செங்கற்களெல்லாம் செம்பொற் கற்களாயிருக்கக் கண்டு, "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்" என்னுந் திருப்பதிகம் பாடி ஸ்வாமியைத் துதி செய்த ஸ்தலம்

இத்தலத்துத் தேவாரத்திற், "புன்னைப் பொழிற் புகலூரண்ணல் செய்வன கேண்மின்களோ" 'புன்னைத் தாது பொழிற்புக லூரரை'-என்பதனால் ஸ்தல விருக்ஷம் புன்னை என்பதும், 'கரநாலைந்துடைத், தோணற்பிரானை வலி தொலைத் தோன்றெரல்லை நீர்ப் புகலூர்க், சோணற் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே' என்பதனால் ஸ்வாமி பெயர் கோணப்பிரான் என்பதும், "பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை சூடிக், கருந்தாழ் குழலியுந் தாமுங் கலந்து" என்பதனால் தேவியார் பெயர் கருந்தாழ்குழலி

என்பதும், வர்த்தமானீச்சுரத்துப் பதிகத்தில் "தொண்டர் தண்கய மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையுங், கொண்டு கொண்டடி பரவிக்குறிப்பறி முருகன் செய் கோலம்," என்பதனால் முருக நாயனாருடைய திருப்பணி யின் சிறப்பு இத்தன்மைத்து என்பதும் புலப்படுகின்றன.

78 திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்

இறைவன் : வர்த்தமானேசுரர்

இறைவி: கருந்தாழ் குழலியம்மை

தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : இது திருப்புகலூர் (77) ஆலயத்துக்குள் வடபுற முள்ளது.

சிறப்புக்கள் : அக்கினீசுரருக்கு அடுத்த வடபக்கத்தில் வர்த்த மானேசுரர் சந்நிதியும் முருக நாயனார் திருவுருவமும் இருக்கின்றன.

79 இராமனதீச்சுரம்

இறைவன் : இராமநாதேசுரர், இராமலிங்கேசுரர்

இறைவி ; கருவார் குழலியம்மை

தீர்த்தம் : இராமதீர்த்தம், மணிகங்கை

பதிகம் : சம் 1

வழி : திருப்புகலூரிலிருந்து (77) முடிகொண்டான் ஆற் றைக் கடந்து 1½ கி.மீ.

சிறப்புக்கள் : இராமனதீச்சுரத்துக்கு மேற்கே திருக்கண்ண புரம் என்னும் விஷ்ணு ஸ்தலம் இருக்கிறது. இராமனதீச்சுர மும் கண்ணபுரமும் சேர்ந்திருக்கின்றன இராமர் பூசித்த ஸ்தலம்.

XV. விஷ்ணு ஸ்தலம்

திருக்கண்ணபுரம் (கிருஷ்ணாரண்ய க்ஷேத்ரம், பஞ்ச கிருஷ்ண க்ஷேத்ரம், ஸப்த புண்ணிய க்ஷேத்ரம்)

மூலவர் : நீலமேகப் பெருமாள், சௌரிராஜன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : சௌரிராஜப் பெருமாள்

தாயார் : கண்ணபுர நாயகி (ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள், பத்மினி) தனிக்கோயில் நாச்சியார்

தீர்த்தம் : நித்ய புஷ்கரிணி

விமானம் : உத்பலாவதக விமானம்

ப்ரத்யக்ஷம் : கன்வமுனிவர், கருடன், தண்டக மஹரிஷி

வழி : நாகப்பட்டினத்திலிருந்து நன்னிலம் போகும் பேருகதில் திருப்புகலூர் என்ற இடத்தில் இறங்கி $1\frac{1}{2}$ கி.மீ. போந் வேண்டும். நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து 6 கி.மீ.

சிறப்புக்கள் : அபயஹஸ்தத்துக்குப் பதிலாக வரதஹஸ்தம் விளங்குகின்றது. ப்ரயோக சக்ரம், உபய நாச்சிமாருக்கு அப்பால், இடதுபுறம் கிரீடத்துடன் ஆண்டாளும், வலதுபுறம் பெருமாள் மணந்துகொண்ட பத்மாவதித் தாயார் என்ற (செம்படவ அரசகுமாரியும்) உள்ளனர். உத்ஸவப் பெருமாள் கன்னிகாதானம் வாங்கக் கையேந்திய நிலையில் காட்சி தருகிறார். ஸ்ரீமந் நாராயணன் எல்லா அக்ஷரங்களிலும் இந்த க்ஷேத்திரத்தில் ஸாந்நித் செய்கிறபடியால்யம் இது ஸ்ரீமதஷ்டாக்ஷர மஹாமந்த்ரசித்தி க்ஷேத்ரம்'' என்ற பெயர் பெற்றது. திருமங்கையாழ்வாருக்குத் திருமந்திர உபதேசம் செய்யப்பட்ட ஸ்தலம். ரங்கப்பட்டர் என்கிற அர்ச்சகர் சோழ அரசனுக்கு, பெருமாளுக்குக் கேசம் வளர்ந்ததைக் காட்டுவதாக வாக்களித்ததைக்காப்பாற்ற பெருமாள் திருமுடியில் திருக்குழற்கற்றையை வளர்த்து, கேசத்தைக் காட்டியருளியதால் சௌரிராஜன் என்ற பெயர் உண்டா

யிற்று. விபீஷண ஆழ்வாருக்கு ஸ்ரீ ரெங்கநாதர் அருளியபடி அமாவாசை தினத்தன்று பகவான் நடை அழகைக் சேவை ஸாதித்த ஸ்தலம். பெருமாள் தன் சக்ராயுதத்தால் வீகடாக்ஷன் என்ற துஷ்ட அசுரனை நிக்ரஹம் செய்து மஹரிஷிகள் பிரார்த்தனைப்படி சக்ரப்பிரயோக அவசரமாக சேவை ஸாதிக்கும் ஸ்தலம். முனையதரையர் என்ற மஹா பக்திமான் அவருடைய பத்தினி சமைத்த பொங்கலை அர்த்த ஜாமத்திற்குப் பிறகு கோவிலுக்குள் போக முடியாமல் மானஸீகமாக பக்தியுடன் சமாப்பித்ததை பகவான் திருவுள்ளம் பற்றியதால், மூடிய கோவிலில் மணி ஓசை கேட்டு வெண்பொங்கல் வாசனை நிரம்பியதால், அதுமுதல் அர்த்தஜாமப் பொங்கல் நிவேதனத்திற்கு "முனியோதரம் பொங்கல்" என்ற பெயர் வரலாயிற்று. இவ்விடத்தில் இன்றைக்கும் தினந்தோறும் வெண்ணெய் உருக்கிப் பொங்கல் பெருமாளுக்கு நிவேதனம் செய்வது விசேஷம்.

மங்களா சாஸனம்

பெரியாழ்வார் ஆண்டாள் குலசேகராழ்வார் திருமங்கையாழ்வார்	திருவாய்மொழி 9, 10 பதிகம் பெருமாள் திருமொழி 8 ம் பதிகம், பெரியாழ்வார் திருமொழி 1,5,8, நாச்சியார் திருமொழி 4-2, பெரிய திருமொழி ௫ம் பத்து முழுதும் முதலியன.
நம்மாழ்வார்	பெரிய திருமொழி 7,10 பதிகம்.

80. திருச்செங்காட்டங்குடி

இறைவன் ; கணபதீச்சுரர்

இறைவி : திருக்குழல் நாயகியம்மை

தீர்த்தம் : சத்தி தர்த்தம், சூரிய தீர்த்தம்

மரம் : ஆத்திமரம்

பதிகம் : சம் 2. அப் 1.

வழி : இராமனதீச்சுரத்திலிருந்து (79) கிழக்கே 1½ கி. மீ.

சிறப்புக்கள் : கஜமுகாசுரனைக் கொன்ற பழி நீங்கும் பொருட்டு விநாயகமூர்த்தி பரமசிவனைப் பூசித்த ஸ்தலம். அசுரனது இரத்தம் பெருகிச் செங்காடாய் இருந்தமை பற்றி இந்த ஸ்தலத்துக்குத் திருச்செங்காட்டங்குடி என்னும் பெயரும், கணபதி பூஜித்ததனால் ஆலயத்துக்குக் கணபதீச்சுரம் என்னும் பெயரும் உண்டாயின. சிறுத்தொண்ட நாயனார் தமது ஒரே குழந்தையாகிய சீராளன் என்னும் சிறுவனை பைரவ வேடம் பூண்டு வந்த பரமசிவனுக்குக் கறியாக்கி அளித்த பின்னர், அவருடைய திருவருளால் அக்குழந்தை உயிர்த் தெழுந்தோடி வந்த ஸ்தலம்.

பழைய திருவாத்தி விருக்ஷம் உற்சவர் சந்நிதிக் கெதிரிலும், சிறுத்தொண்டர், அவர் மனைவி, பிள்ளை, சந்தன நங்கை இவர்களுடைய சிலா விக்கிரகங்கள் பிராகாரத்திற் கீழ்ப்பக்கத்தில் உற்சவர் சந்நிதிக் கெதிரிலும், கோயிலுக்குத் தெற்கே சூரிய தீர்த்தமும் இருக்கின்றன. ஊரின் தெற்கு வீதி மேலைக் கோடியிற் சிறுத்தொண்டர், அமுது கேட்க வந்த உத்தராபதீசுரர் முதலானவர்களுடைய விக்கிரகங்கள் உள்ள சிறுத்தொண்ட நாயனார் மடம் இருக்கின்றது.

81 திருமருகல்

இறைவன்: மாணிக்க வண்ணர்

இறைவி: வண்டுவார் குழலம்மை

தீர்த்தம்: சிவ கங்கை

மரம்: வன்னிமரம்

பதிகம்: சம் 2, அப் 1

வழி: திருப்புகலூருக்கு (77) தென்கிழக்கே 7 கி.மீ.

சிறப்புக்கள்: விஷந்தீண்டி யிறந்த செட்டிப் பிள்ளையைத் திருஞான சம்பந்த ஸ்வாமிகள் உயிர்ப்பித்தருளிய ஸ்தலம். தேவி சந்நிதிக்கு நேரே, வீதியில், ''விஷந்தீர்த்த பிள்ளையார்'' சந்நிதியும், பிராகாரத்தில் ''மருகலுடையார்'' ''சௌந்தர நாயகி'' சந்நிதியும் உள்ளன.

82 திருச்சாத்த மங்கை (அயவந்தி)

இறைவன்: அயவந்தீசுரர், மாதீசுவரர்

இறைவி: மலர்க்கண்ணம்மை, தையலம்பிகையார்

தீர்த்தம்: பிரம தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: திருமருகல் (81) லிருந்து தென்மேற்கே 1½ கி.மீ. திருநள்ளாற்றுக்கு (52) தென் மேற்கே 8 கி.மீ.

சிறப்புக்கள் : சாத்தமங்கையிலுள்ள ஆலயத்துக்கு அயவந்தி என்று பெயர். திருநீலநக்க நாயனாருடைய ஸ்தலம். இந் நாயனார் ஸ்வாமி தரிசனத்துக்காக மனைவியுடன், ஆலயத் துக்குச் சென்ற போது, ஒரு சிலந்திப் பூச்சி சிவலிங்கத்தின் மேல்விழ, மனைவியார் அன்பு மிகுதியினால் அதை வாயால் ஊதி அகற்ற. நாயனார் அப்படிச் செய்தது அநுசிதமென் றெண்ணி மனைவியாரை நிராகரித்துவிட, சிவபெருமான் அவருடைய கனவிற்றோன்றி, அவர் மனைவியார் ஊதின இடந்தவிர மற்றையிடம் சிலந்தியின் கொப்புளமாயிருப் பதைக் காட்டி, மனைவியாருடைய அன்பை வெளிப்படுத்தி, அவரை மறுபடி நாயனாருடன் சேர்த்தருளிய ஸ்தலம். இவர் கள் இருவர் உருவமும் தேவி சந்நிதியில் உள்ளன.

83. திருநாகைக்காரோணம் (நாகபட்டினம்)

இறைவன் : காயாரோகணேசுரர், ஆதிபுராணேசுரர்

இறைவி : நீலாயதாட்சியம்மை

தீர்த்தம் : தேவதீர்த்தம், சர்வதீர்த்தம். புண்டரீக தீர்த்தம், அக்கினி தீர்த்தமாகிய காக தீர்த்தம், பிரம தீர்த் தம், வச்சிர தீர்த்தம் முதலியன

மரம்: மாமரம்

பதிகம்: சம் 2, அப் 4, சுந் 1

வழி: புகைவண்டி நிலையம்

சிறப்புக்கள்: ஸப்த விடங்க ஸ்தலங்களில் ஒன்று. சுந்தர விடங்கர்-பாராவார தரங்க நடனம். அதிபத்த நாயனாருடைய ஸ்தலம். சிவபெருமான் புண்டரீக மகா ரிஷியைக் காயத்தோடு ஆரோகணஞ் செய்துகொண்ட ஸ்தலம்.

கோயிலில் முதலிலிருக்கும் விநாயகருக்கு நாகாபரண விநாயகர் என்றும், உள்ளே இருக்கும் விநாயகருக்கு மாவடிப் பிள்ளையார் என்றும் பெயர். தேவ தீர்த்தம் கோயிலுக்குத் தெற்கிலும், புண்டரீக தீர்த்தம் கோயிலுக்கு மேற்கிலும் இருக்கின்றன. தியாகராஜருக் கெதிரிற் சுந்தரமூர்த்தி பரவை நாச்சியாருடனிருக்கின்றார். நீலாய தாட்சியம்மை சந்நிதி விசேடமானது. ''காஞ்சி-காமாட்சி, மதுரை-மீனாட்சி. காசி-விசாலாட்சி, நாகை – நீலாயதாட்சி'' என்பன பழமொழி,

XVI விஷ்ணு ஸ்தலம்

திருநாகை (நாகப்பட்டினம்)

மூலவர் : நீலமேகப் பெருமாள் கதையுடன் நின்ற திருக்கோலம், கிழந்கே திருமுக மண்டலம்

உத்ஸவர் : சௌந்தர்யராஜன்

தாயார் : சௌந்தர்யவல்லி, உத்ஸவத் தாயார்-கஜலக்ஷ்மீயாகக் காட்சியளிக்கிறார்.

தீர்த்தம் : ஸாரபுஷ்கரிணி

விமானம் : சௌந்தர்ய விமானம்

ப்ரத்யக்ஷம் : நாகராஜன், திருமங்கையாழ்வார், கலியன், ப்ரஹ்மாதிகள்

வழி : நாகைப்பட்டினம் புகைவண்டி நிலையத்தில் இருந்து 1½ கி.மீ.

சிறப்புக்கள் : வீற்றிருந்த பெருமாளாகக் கோவிந்தராஜனுக்கும், சயனத் திருக்கோலத்தில் ரங்கநாதனுக்கும் இரு ஸந்நிதிகள் வேறு பல ஸந்நிதிகளும் உண்டு. ரங்கநாதன் ஸந்நிதியில் மிக அபூர்வமான அஷ்ட-புஜ நரசிம்மரின் வெண் சலச்சிலை உள்ளது. ஒரு கை பிரகலாதன் தலையைத் தொட்டும் மற்றொரு கை அபயஹஸ்தமாகவும் விளங்குகின்றன. மற்றக் கைகள் ஹிரண்யவதம் செய்கின்றன. இந்த க்ஷேத்ரம் துருவனுக்குச் சேவை தந்த அவசரத்தில் தோன்றியதாகக் கூறப்படுகிறது. பக்கத்தில் இன்னும் சில சிறு அழகிய கோவில்கள் உள்ளன.

மங்களா சாஸனம

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 9-2 பதிகம்

84 திருச்சிக்கல்

இறைவன் : வெண்ணெயிலிங்கேசுரர்

இறைவி : வேனெடுங் கண்ணியம்மை

தீர்த்தம் : பாற்குளம்

மரம் : குடக மல்லிகை

பதிகம் : சப் 1

வழி : புகைவண்டி நிலையம், நாகை (83) லிருந்து மேற்சே 5 கி.மீ.

சிறப்புக்கள்: ஸ்வாமி சந்நிதி கட்டுமலை மேல் இருக்கின்றது. தீர்த்தம் க்ஷீர புஷ்கரிணி, மல்லிகை விசேஷம். வசிஷ்டர் தம்முடைய காமதேனுவைப் பெறும்பொருட்டுப் பூசித்த ஸ்தலம். இங்க சிங்கார வேலவராகிய சுப்பிரமணிய ஸ்வாமி சந்நிதியுங் கட்டுமலை மேல்தான் இருக்கின்றது. அவருக்கு

ஆட்டுக் கடா வாகனம் ஒன்றிருக்கின்றது. அது வெகு நன்றாயிருக்கின்றது காமதேனும் இங்கிருந்தபடியால் அதன் பால் பெருகி யெங்கும் வெண்ணெயா யுறைந்திருந்தது. வசிஷ்டர் அவ்வெண்ணெயை எடுத்துச் சிவலிங்கமாக்கிப் பூசித்தார். அதனால் ஸ்வாமிக்கு 'வெண்ணெயிலிங்கேசுரர்' என்று பெயருண்டாயிற்று. அந்த இலிங்கத்தை வேறிடத்தில் வைக்க எடுக்கும் பொழுது, அது வராமற் சிக்கிக்கொண்ட படியால் ஊருக்குச் சிக்கல் என்னும் பெயர் உண்டாயிற்று. இந்த ஸ்தலத்தில் சூரசம்ஹார உற்சவம் விசேஷம். கோயிலுக்குள் வடபக்கத்தில் கோலவாமனப் பெருமாளு டைய சந்நிதி இருக்கின்றது.

அபிமான ஸ்தலம்

சிக்கல்

பெருமாள் : கோலவாமணர், கிழக்கே நின்ற திருக்கோலம்.

தாயார் : கோமளவல்லி

வழி : திருவாரூர்-நாகை பேருந்து வழித்தடம்

சிறப்புக்கள் : சிக்கல் சிங்கார வேலவன் கோயில் பிராகாரத்தில் ஸந்நிதி உள்ளது. திருக்கண்ணங்குடி செல்பவர்கள் இத்தலத்தைத் தரிசித்து செல்வது வழக்கம்.

85. திருக்கீழ்வேளூர்

இறைவன் : கேடிலியப்பர், அட்சயலிங்கேசுரர்

இறைவி : வனமுலைநாயகியம்மை

தீர்த்தம் : சிவஞான தீர்த்தம், சரவணப்பொய்கை

மரம் : இலந்தை

பதிகம் : சம் 1, அப்

வழி : புகைவண்டி நிலையம். சிக்கலிலிருந்து (84) மேற்கே 5 கி.மீ. திருவாரூர் (87)க்குக் கிழக்கே 11 கி.மீ.

சிறப்புக்கள் : சந்நிதி கட்டுமலைமேல் இருக்கின்றது. எல்லாம் கருங்கல் வேலை. ஸ்தூபி முழுமையும் கருங்கற் கட்டிடம். கோயில் பெரிது சுப்பிரமணிய ஸ்வாமி பூசித்த ஸ்தலம். அவர் சந்நிதி விசேஷமாயிருக்கின்றது. அவருடைய பூஜைக்கும் தவத்துக்கும் தீங்கு நேரிடா வண்ணம் அஞ்சு திக்கிலும் காவல் பூண்டிருந்த அம்மைக்கு அஞ்சுபட்ட அம்மை என்று பெயர். இந்த அம்மை சந்நிதி முதற் பிரகாரத்தில் வடபாகத்தில் இருக்கின்றது. இது விசேஷ சந்நிதியா யிருக்கின்றது.

தீர்த்தம்-சரவணப் பொய்கை. குளக்கரையின் மேற்பாகத்தில் ஒரு சிவாலயம் இருக்கின்றது. இரண்டாம் பிரகாரத்தில் இலந்தை விருக்ஷம் இருக்கின்றது. இதற்கு வடக்கில் அகஸ்தியர் பூசித்த இலிங்கம் இருக்கின்றது. இந்த ஸ்தல நடராஜமூர்த்தி, அகஸ்தியருக்கு வலது பாத தரிசனங் கொடுத்தவர். கோயிலிற் குபேரனுடைய சந்நிதியும், சுந்தர கணபதியின் சந்நிதியும், தேவேந்திரன், குபேரன் இவர்கள் விக்கிரகங்களும் உள்ளன.

XVII விஷ்ணு ஸ்தலம்

திருக்கண்ணங்குடி (க்ருஷ்ணாரண்ய க்ஷேத்திரம்)

மூலவர் : லோகநாதன், ச்யாமள மேனிப் பெருமாள் நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : தாமோதர நாராயணன்

தாயார் : லோகநாயகி, உத்ஸவர், அரவிந்தவல்லி

தீர்த்தம் : ராவண புஷ்கருணி

ஸ்தல வ்ருஷம் : மகிழ மரம் (வகுளம்)

விமானம் ; உத்பல விமானம்

ப்ரத்யக்ஷம் : ப்ருகு, பிரம்மா உபரி சரவஸு, கௌதமர், திரு மங்கையாழ்வார்

வழி : சிவஸ்தலம் கீவளூர் (85) புகைவண்டி நிலையத்தி லிருந்து 3 கி மீ.

சிறப்புக்கள் : இவ்வூரின் முக்கிய அடையாளங்களான ஊராக் கிணறும், உறங்காப்புளியும் இப்போது இல்லை. காயாமகிழ் (காய்ந்து பட்டுப் போகாத வரம் பெற்ற ஸ்தல வ்ருக்ஷம்) ஸந்நிதியின் பின்புரம் இருக்கிறது.

தாயார் ஸந்நிதியில் மூலவரும் உத்ஸவரும் ஒரே முக ஜாடையுடனிருப்பது வேறெங்கும் காண முடியாத அதிசயம். வஸிஷ்டர் தம் பக்தியால் வெண்ணை மயமான கிருஷ்ணனை இளகி, திரவமாகாமல் கட்டி, திவ்யமங்கள விக்ரஹம் செய்து தியானம் செய்வார். இப்படி வெகுகாலம் கடந்தபின், ஒரு நாள் பகவான் கோபாலன் உருவம் கொண்டு வசிட்டர் ஆராதனை செய்யும் வெண்ணைக் கண்ணனை அமுது செய் ததைப் பபர்த்து கோபாலனைப் பிடிக்க ஓட, கோபாலனும் மேற்கு திசை நோக்கி ஓட, மகிழ மரத்தடியில் தவம் செய்து கொண்டிருந்த மஹரிஷிகள் பக்தியாகிய பாசக் கயிற்றால் கட்டியதால், கட்டுண்டு கோயில் கொண்டு கண்ணன் எழுந் தருளியதால், திருக்கண்ணங்குடி என்ற பெயர் உண்டாயிற்று.

திருமங்கையாழ்வார், நாகப்பட்டினத்திலிருந்து தங்கமய மான புத்த வ்க்ரஹத்தை, ரங்கநாதன் கோபுர பிராகாரங் கள் முதலிய திருப்பணிகளைச் செய்ய கொண்டு வந்து புதைத்து, பகவான் அருளால் எடுத்துச் சென்ற ஸ்தலம் இது.

''காயாமகிழ்' ஹங்காப்புளி, தோலா வழக்கு, ஊறாக் கிணறு திருக்கண்ணங்குடி'' என்பது பழமொழி.

மங்களா சாஸனம்:

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 9, 1 பதிகம்

86 திருத்தேவூர்

இறைவன் : தேவபுரீசுரர்

இறைவி : மதுரபாஷிணியம்மை

தீர்த்தம் : தேவ தீர்த்தம்

மரம்: வாழைமரம்

பதிகம்: சம் 2

வழி: கீழ்வேளூரிலிருந்து (85) தெற்கு 3 கி.மீ.

சிறப்புக்கள்: கௌதமர், பிரகஸ்பதி, இந்திரன், குபேரன், சூரியன் முதலியோர் பூசித்த ஸ்தலம். கௌதம இலிங்கம் கட்டு மலையில் வடபக்கத்தில் இருக்கின்றது. கோயிலுக்குத் தென் கிழக்கில் தேவதீர்த்தம் இருக்கின்றது.

87 திருஆரூர் என்ற திருவாரூர்

இறைவன்: வன்மீக நாதர்

இறைவி: அல்லியங்கோதை, நீலோற்பலாம்பாள்

தீர்த்தம்: கமலாயம், சங்கு தீர்த்தம்

மரம்: பாதிரிமரம்

பதிகம் : சம் 5, அப் 21, சுந் 8.

வழி : புகைவண்டி நிலையம்

சிறப்புக்கள் : பஞ்சபூதத் தலங்களில் இது பிருதிவித்தலம். விராட்புருடனுடைய மூலாதார ஸ்தலம். ''நிறை செல்வத் திருவாரூர்'' எனப்படும் இவ்வூர் ஆலயத்துக்குத் திருமூலட்டானம் என்றும், பூங்கோயில் என்றும் பெயர். இலக்குமி பூசித்த ஸ்தலம். பிறக்க முக்தி அளிக்கும் பெரும்பதி. சோழ ராஜதானிகள் ஐந்தினுள் ஒன்று. மநுநீதிகண்ட சோழ

ருடைய ராஜதானி. சிதம்பரத்தில் இருந்து தேவாரப் பதிகங்களைக் கண்டெடுத்து அவைகளை ஏழு திருமுறை களாக்கி அவற்றையும், எட்டாந் திருமுறையாகிய திரு வாசகம். திருக்கோவையாரையும், ஒன்பதாந் திருமுறை யாகிய திருவிசைப்பா - திருப்பல்லாண்டையும், பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்தையும், திரு ஆலவாயுடை யார், காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் நாய னார், நக்கீரர், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண் டார் முதலிரு பன்னிருவர் செய்த பிரபந்தங்களாகிய பதி னோராந் திருமுறையையும், செப்பேடு செய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்த அபய குலசேகர சோழ மகாராஜரும், அதற்குப்பின் சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த பெரிய புராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறையென வகுத்து அதனையும் செப்பேடு செய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்று வித்த அநபாய சோழ மகாராஜரும் அரசாட்சி செய்த அருப்பதி. சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை அருளிச்செய்த ''தேவாசிரியன்'' என்னும் ஆயிரக் கால் மண்டபத்தையும், அவர் விருத்தாசலத்தில் மணிமுத்த நதியில் இட்ட பொன்னைப் பரவையாருக்கு எடுத்துக் கொடுத்த 'கமலாலயம்' என்னும் திருக்குளத்தையும் உடைய ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டு தியாகேசர் நள்ளிருளிற் பரவையாரிடம் தூது சென்ற பழம் பதி. "அடியேற் கெளிவந்த தூதனை'' என்பர் அந் நாயனாரும்.

காஞ்சிபுரத்தில் ஒரு கண் பார்வை பெற்ற அவர், ''மீளா அடிமை'' என்னுந் திருப்பதிகம் பாடி மற்றொரு கண் பார்வையையும் பெற்ற ஸ்தலம். அவரிடம் சேரமான் பெருமாள் நாயனார் வந்து சிநேகமான திருப்பதி.

விறன்மிண்ட நாயனார், நமிநந்தியடிகள் நாயனார், செருத் துணை நாயனார், தண்டியடிகள் நாயனார், கழற்சிங்க நாயனார் முதலிய அடியார்கள் முக்திபெற்ற ஸ்தலம்.

சப்தவிடங்கத் தலங்களுள் (தியாகேசர் ஸ்தலங்களுள்) முதன்மையான ஸ்தலம். வீதிவிடங்கத் தியாகர்-அசபா நடனம். முசுகுந்த சக்ரவர்த்தி தேவலோகத்திலிருந்து கொணர்ந்த தியாகேசப் பெருமானுக்குத் திரு அந்திக்காப்பு (சாயங்கால பூஜை) தொன்று தொட்டுச் செய்யப்பெற்றதால் 'திரு அந்திக் காப்பழகர்' என்னும் பெயர் போந்தது. இவர் 'ஆடவரக் கிண்கிணிக்கால்' ஐயன் எனப்படுவர்.

'திருவாரூர்த் தேரழகு' என ஓர் உலகவழக்குள்ளது. திருவாருரிற் கோயில், குளம் செங்கழு நீரோடை இவை ஒவ்வொன்றும் அவ்வைந்து வேலிகளென்பர். 'அஞ்சனை வேலியாரூர் ஆதரித் திடங்கொண்டாரே' என்பது தேவாரம். கோயில் மிகவும் பெரிது. நாற்புரமும் கோபுரங்கள் உள்ளன. கோயிலுள் வெளிப் பிராகாரத்தில் அநேக இலிங்கங்கள் சிறு ஆலயங்களில் இருக்கின்றன.

ஆடகேச்சுரம் என்னும் ஆலயமும் கோயிலுக்குள் இருக்கின்றது அதிற் பிலம் ஒன்று கல்லினால்மூடப்பட்டிருக்கிறது. இது புற்றிடங் கொண்டார் கோயிலுக்கு தென்கீழ்த் திசையில் இருக்கின்றது. இதற்கு நாகபிலம் என்று பெயர். அதில் எழுந்தருளியுள்ள ஆடகேசரைத் தரிசித்துப் பூமியிலுள்ளார் எல்லோரும் சுவர்க்க லோகத்தை அடைந்தமையால், அவ்வுலகத்தில் இடமில்லாமற் போனதையுணர்ந்த இந்திரன் அரதனசிருங்கம் என்கிற மலையொன்றாற் பிலத்தை அடைத்தனன் என்பர். இதனைத் திருவாரூர்ப் புராணத்தாலறியலாகும்.

நீலோற்பலாம்பாள் அல்லது அல்லியங்கோதை என்பது அம்மையின் பெயர். கமலாம்பாள் சந்நிதி தனியாக மேற்குக் கோபுரத்துக்குச் சமீபத்திலிருககின்றது. கமலாலயம் எனப்படும் திருக்குளத்தின் ஈசான மூலையிற் மாற்றுரைத்த பிள்ளையார் ஆலயம் இருக்கின்றது. தெற்குக் கோபுரத்

துக்கு அருகில் பரவை நாச்சியார் கோயில் இருக்கின்றது. மனுநீதிச் சோழன் மகன் தேர் ஏறிச் சென்றதும், பசுவின் கன்று இறந்ததும், தன் மகன் மீது சோழன் தேரை ஊர்ந்ததும் ஆன ஐதீகங்களைக் காட்டக் கல்லினால் தேர் முதலிய செய்யப்பட்டிருப்பதைக் கிழக்குத் கோபுத்துக்கப்பாற் காணலாம்.

கமலாலய தீர்த்தம் கோயிலுக்கு மேற்கில் உள்ளது, கமலாலயத்தின் மத்தியில் ஒரு சிறு கோயிலிருக்கின்றது

தேவாசிரிய மண்டபம் இப்போது ஆயிரக்கால் மண்டபம் எனப்படுகிறது.

சம்பந்த முனிவரியற்றிய திருவாரூர்ப் புராணமும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய தியாகராஜ லீலையும், அந்தகக்கவி வீரராகவ முதலியார் செய்த திருவாரூர் உலாவும் அச்சிடப்பட்டுள்ளன.

88. திரு ஆரூர் அரநெறி

இறைவன் : அரநெறியப்பர், அகலேசுரர்

இறைவி : வண்டார் குழலி

பதிகம் : அப் 2.

வழி : திருவாரூர் ஆலயத்தில் இரண்டாம் பிராகாரத்தில் மேற்கு முகமாயிருக்கின்றது.

சிறப்புக்கள் : நமிநந்தியடிகணாயனார் தண்ணீரால் திருவிளக்கேற்றி வைத்த ஸ்தலம். இதனைத் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் தாமருளிச்செய்த திருவாரூரரநெறித் திருத்தாண்டகத்தில் சிறப்பித்துப் பாராட்டிக் கூறியுள்ளார்.

89. திருஆரூர்ப் பரவையுண்மண்டளி துலாநயினார் கோயில்

இறைவன் : தூவாய நாதர், மண்டலேசுரர்

இறைவி : பஞ்சின் மெல்லடியம்மை

பதிகம் : சுந் 1.

வழி : திருவாரூர்க் கோயிலின் மஹாரத நிலைக்கு அருகில் தென் மேற்கிலுள்ளது.

சிறப்புக்கள் : ஒரு காலத்து வருணன் இந்நகர மீது அனுப்பிய கடலை உண்டமை பற்றி இத்தலத்துக்குப் பரவையுண் மண்டளி என்னும் பெயரெய்தியது.

துர்வாசமாமுனி பூசித்த ஸ்தலம். ஸ்வாமியின் உருவம் கண்ணாடிபோலப் பளபளப்பாயிருக்கின்றது. துர்வாசருடைய உருவம் விநாயகர் பக்கத்திலிருக்கின்றது. சிறிய குளம் ஒன்று கோயிலுக்குள் இருக்கின்றது அதில் முழுகித் தான் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஒரு கண்பார்வை பெற்றனர்.

90 திருவிளமர்

இறைவன்: பதஞ்சலி மனோகரர்

இறைவி: யாழினு மென்மொழியம்மை

தீர்த்தம்: அக்கினி தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி; திருவாருருக்கு (87) தென்மேற்கு 3 கி.மீ. ஓடம்போக்கியாற்றின் தென்கரையிலிருக்கின்றது.

சிறப்புக்கள்: கோயிலுக்கெதிரில் அக்கினி தீர்த்தம் உள்ளது. பதஞ்சலி முனிவர் பூசித்த ஸ்தலம். பதஞ்சலி, வியாக்கிர பாதர்களுடைய விக்கிரகங்கள் கோயிலில் இருக்கின்றன.

91 திருக்கரவீரம் என்பது கரையபுரம்

இறைவன்: கரவீரேசுரர்

இறைவி: பிரத்யக்ஷமின்னம்மை

தீர்த்தம்: பிரம தீர்த்தம்

மரம்: அலரி (செடி)

பதிகம்: சம் 1

வழி: திருவாரூருக்கு (87) மேற்கே 11 கி.மீ. இதற்கு வட மேற்கு 2 கி.மீட்டரில் பெருவேளூர் உள்ளது.

சிறப்புக்கள்: கௌதம ரிஷி பூசித்த ஸ்தலம்.

92 திருப்பெருவேளூர் (காட்டூர் ஐயன்பேட்டை)

இறைவன்: பிரியா ஈசுரர்

இறைவி: மின்னனையாளம்மை, ஏலவார் குழலியம்மை

தீர்த்தம்: மூடக தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: திருக்கரவீரம் (91) இருந்து வடமேற்கே 2 கி.மீ. இங்கிருந்து 5 கி.மீ. தலையாலங்காடு உள்ளது.

சிறப்புக்கள்: கௌதம ரிஷி பூசித்த ஸ்தலம்.

93 திருத்தலையாலங்காடு

இறைவன்: ஆடவல்ல ஈசுரர்

இறைவி: திருமடந்தையம்மை

தீர்த்தம்: சங்க தீர்த்தம்

பதிகம்: அப் 1

வழி: திருப்பெரு வேளூரிலிருந்து மேற்கே 5 கி.மீ. இங்கிருந்து மேற்கே 8 கி. மீட்டரில் திருக்குட வாயில் (94) இருக்கிறது.

சிறப்புக்கள்: கபிலரிஷி பூசித்த ஸ்தலம். தாருகாவன ரிஷிகள் அனுப்பின முயலகன் முதுகின் மீது சிவபெருமான் நடித்தருளிய ஸ்தலம்.

விஷ்ணு ஸ்தலம்
XVIII கிருஷ்ண மங்கள க்ஷேத்ரம்
திருக்கண்ண மங்கை

மூலவர்: பக்த வத்ஸலப் பெருமாள், பத்தராவிப் பெருமாள், நின்ற திருக்கோலம், மிகப் பெரிய திருவுருவம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார்: அபிஷேகவல்லி

தீர்த்தம்: தர்சனபுஷ்கருணி

விமானம்: உத்பல விமானம்

ப்ரத்யக்ஷம்: வருணன், ரோமசமுனி

வழி: திருச்சேறையிலிருந்து சுமார் (24) கி.மீ. திருவாரூர் (87) புகைவண்டி நிலையத்திலிருந்து வட மேற்கில் 6 கி.மீ.

திறப்புக்கள் : கோவிலுக்கு வேண்டிய விமானம், மண்டபம், அரண்யம், ஸரஸ்ஸு, க்ஷேத்ரம், ஆறு, நகரம் ஆகிய ஏழு அம்சங்களும் அமுதமயமாக இருப்பதால் இதற்கு ஸப்தாம்ருத க்ஷேத்ரம் என்றும் பெயருண்டு மந்திர ஜெபம் இல்லாவிட்டா லும் ஓர் இரவு இந்தக் கோயிலில் வாஸம் செய்தாலும் மேலு லகம் கிடைக்கும் என்கிற ஐதீஹம், தாயார் ஸந்நிதியில் ஒரு தேன் கூடு போன்ற அமைப்புக்குத் தினந் தோறும் பூஜை நடக்கிறது. இங்குள்ள அருமையான சிற்பங் களில் வைகுண்ட நாதன் சிலையும், கருடன் மேல் எழுந் தருளி இருக்கும் மகாவிஷ்ணுவின் சிலையும் மிக அழகானவை.

நாதமுனிகளின் சீடரான திருக்கண்ண மங்கையாண் டான் இவ்வூரில் தான் ஆனித் திருவோணத்தன்று அவதரித்து, துளசி புஷ்பாதி ஸமர்ப்பணத் தொண்டு செய்தார். ஸ்ரீயின் மூன்று திருநாமங்களோடு கூடிய இந்த மந்திரம் இந்த க்ஷேத்திரத்தில் ஸித்தியைச் சீக்கிரத்தில் கொடுக்கும் எனபது புராண வரலாறு. லக்ஷ்மீ தவம் செய்ததால் லக்ஷ்மீவனம் என்ற பெயர் உண்டு. சிவபெருமான் இந்த க்ஷேத்திரத்தில் நான்கு உருவங்கள் எடுத்துக்கொண்டு நான்கு பக்கங்களை யும் காத்து வருகிறார்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 7, 10 பதிகம்

94 திருக்குடவாயில்

இறைவன் : கோணேசுரர்

இறைவி : பெரிய நாயகியம்மை

தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்

பதிகம் : சம் 2

வழி : திருத்தலையாலங்காட்டிற்கு (93) மேற்கே 8 கி மீ. இதற்கு வடக்கே 3 கி.மீ. திருநாலூர் மயானம் (97) உள்ளது.

அதற்கு வடமேற்கே 1½ கி.மீ. திருச்சேறை (96)யும் உள்ளது.

சிறப்புக்கள் : திருணபிந்து முனிவர் பூஜிக்க ஸ்வாமி திருக் குடத்திலிருந்து வெளிப்பட்டு அவருடைய குட்ட நோயைத் தீர்த்தருளிய ஸ்தலம்.

95 திருக்கொள்ளம்பூதூர்

(செல்லூர் அல்லது திருக்களம்பூர்)

இறைவன் : வில்வவனேசுரர்

இறைவி : சௌந்தராம்பிகை

தீர்த்தம்: பிரம தீர்த்தம்

மரம் : வில்வ மரம்

பதிகம் : சம் 1

வழி : குடவாயில் (94) க்குத் தென் கிழக்கே 5 கி.மீ. செல்லூர் வழி. குறடாச் சேரிக்கு 5 கி.மீ.

சிறப்புக்கள் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் இங்கே வரும்பொழுது, ஆறு (முள்ளியாறு) மிகப் பெருகினதால், ஓடக்காரர்கள் ஓடத்தைக் கரையிலே நிறுத்திவிட்டுப் போயிருந்ததைக் கண்டு தாமும், தம்முடன் வந்த அடியார் களுமாக ஓடத்தில் ஏறி, ஆற்றுக்கெதிரே தோன்றிய இந்தத் திருப்பதியின் மேலே, ''கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்'' என்னுந் திருப்பதிகம் பாடவும், பரமசிவனுடைய திருவருளால் ஓடஞ்சென்று அக்கரையை யடைய, நாயனார் அடியார்களுடன் இறங்கிச் சென்று தரிசனஞ் செய்த ஸ்தலம். இந்த ஐதிகம் ஐப்பசி மாதம் அமாவாசையில் நடத்தப்படு கின்றது. வலம்புரி விநாயகர். கூவிளம்பூதூர்-கொள்ளம் புதூர் ஆயிற்று என்பர். கூவிளம்-வில்வம். முள்ளியாறானது அகத்திய காவேரி, வெட்டாறு எனவும்படும்.

96 திருச்சேறை (உடையார் கோவில்)

இறைவன்: செந்நெறியப்பர்

இறைவி: ஞானவல்லியம்மை

தீர்த்தம்: மார்க்கண்ட தீர்த்தம்

பதிகம்: சம் 1, அப் 2

வழி: கும்பகோணத்துக்குத் தென்கிழக்கே 11 கி.மீ. வழியில் அரிசிற்கரைப்புத்தூரும் (66) 7 கி.மீ. உள்ளது. அதற்கு 1½ கி.மீ. திருநறையூர் (65) அதற்கு அப்பால் 5½ கி.மீ. இத்தலம் உள்ளது. குடவாசலிலிருந்து (94) வடக்கே 4½ கி.மீ.

சிறப்புக்கள் : தௌமியரிஷி பூசித்த ஸ்தலம்.

விஷ்ணு ஸ்தலம்

XIX திருச்சேறை (பஞ்சஸார க்ஷேத்ரம்)

மூலவர்: ஸாரநாதன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார்: ஸார நாயகி

தீர்த்தம்: ஸார புஷ்கரிணி

விமானம்: ஸார விமானம்

ப்ரத்யக்ஷம்: காவேரி, மார்க்கண்டேயன்

வழி: சிவஸ்தலம் திருச்சேறை (96) ஐப் பார்க்கவும்

சிறப்புக்கள் : பெருமாள் காவேரியம்மனுக்கு ப்ரத்யக்ஷம். குளக்கரையில் காவேரியம்மனுக்கு ஒரு சிறு ஸந்நிதி உள்ளது.

ராஜகோபால ஸ்வாமி ஸந்நிதியும் உள்ளது. இந்த ஊரில் தைப்பூசத்தன்று தேரில் பெருமாள் 5 தாயார்களுடன் காட்சி கொடுப்பது சிறந்த விசேஷம். (ஸ்ரீ தேவி, பூதேவி, நீலா தேவி, மஹாலக்ஷ்மி, ஸார நாயகி) ப்ரளய காலத்தில் இவ் வூரின் கெட்டியான மண்ணைக் கொண்டு ஒரு கடம் செய்து அதில் வேதங்களை வைத்துக் காப்பாற்றப்பட்டதாகப் புராண வரலாறு. புஷ்கரிணி மேற்குக் கரையில் ஒரு ஹநுமார் கோவில் உள்ளது. இவர் மிகவும் வரப்ரஸாதி என்றும் ஸ்தல வரலாறு. ஸார புஷ்கரிணியின் நீராடி பெருமாள் தாயாரை வழிபட்டால் எல்லா ஆசைகளும் நிறைவேறும் என்பதாக வரலாறு. இத்தலத்தில் பெருமாள், தாயார், விமானம், தீர்த்தம், நிலம் என ஐந்தும் ஸாரமுள்ளவையாய் இருத்தலின் இதற்கு பஞ்சஸார க்ஷேத்ரம் என்று பெயர் கூறுவர்.

மங்களா சாஸனம் :

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி 7-4 பதிகம்.

97 திருநாலூர் மயானம்

இறைவன் : பலாசவனேசுரர், ஞானபரமேசுரர்

இறைவி ; பெரிய நாயகி, ஞானாம்பிகை

தீர்த்தம்: சந்திர தீர்த்தம்

பதிகம்: சம் 1 (நாலூர் மயானம் இரண்டுக்கும் சேர்த்துப் பாடப்பெற்றது)

வழி: திருக்குடவாயிலுக்கு (94) வடக்கிழக்கே 5 கி.மீ. கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 8 கி.மீ.

சிறப்புக்கள்: ஆபஸ்தம்பரிஷி பூசித்த ஸ்தலம். "பாலூரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும், மேலூரும் செஞ்சடையான்" எனச் சம்பந்தர் கூறிதனதற் கேற்ப பெரும்பாம்

ஒன்று லிங்கமூர்த்தியின் சிரசிற் சிற்சில சமயங்களிற் காணப் படுகின்றதாம்.

திருநாலூர் மயானத்துக்குத் தென்மேற்கு 1½ கி. மீட்டரில் திருநாலூர் என்னும் ஊர் இருக்கின்றது. இங்கும் ஓர் ஆலயம் இருக்கின்றது.

98 திருக்கடுவாய்க் கரைப்புத்தூர்

இறைவன் : சொர்ணபுரீசுரர், சொன்ன புரீசுரர்

இறைவி : சிவாம்பிகை, சொர்ணபுரி நாயகி

பதிகம் : அப் 1

வழி: திருக்குடவாயிலுக்கு (94) மேற்கே 5½ கி.மீ. நீடாமங்கலம் புகைவண்டி நிலையத்திலிருந்து வலங்கைமான் போகும் வழியில் 17 கி.மீ.

சிறப்புக்கள் : கடுவாய் என்ற ஆறு இப்போது குடமுருட்டி என வழங்குகின்றது. காசிப ரிஷி பூசித்த தலம்.

99 திருஇரும்பூளை என்பது ஆலங்குடி

இறைவன் : காசி ஆரணியேசுரர்

இறைவி : ஏலவார் குழலியம்மை, உமையம்மை

தீர்த்தம் : அமிர்தப் பொய்கை

பதிகம் : சம் 1

வழி: நீடாமங்கலம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கு கும்பகோணம் போகும் வழியில் 6 கி.மீ.

சிறப்புக்கள்: தக்ஷிணாமூர்த்திதான் உற்சவமூர்த்தி. பிள்ளையார் "கலங்காமற் காத்த பிள்ளையார்." விசுவாமித்திரர் பூசித்த ஸ்தலம். ஸ்ரீ காசி ஆரண்ய மஹாத்மியம்.

100. திருவெண்ணியூர் (கோயில் வெண்ணி)

இறைவன் : வெண்ணிக்கரும்பர். வெண்ணி நாதர்.

இறைவி : அழகிய நாயகி

பதிகம் : சம் 1. அப் 2.

வழி : நீடாமங்கலத்திற்கு மேற்கே 6 கி. மீ, அம்மாப் பேட்டை புகைவண்டி நிலையத்துக்கு மேற்கே 5 கி. மீ.

சிறப்புக்கள் : கற்கோயில் அழகு வாய்ந்தது. நல்ல அமைப்பு. ஸ்வாமி கருப்பங்கழிகளை ஒன்று சேர்த்து வைத்தாற்போன்ற உருவத்தினர். சுயம்பு மூர்த்தி. விக்கிரகங்கள் எல்லாம் வெகு அழகாயுள்ளன.

101. திருப்பூவனூர் (புஷ்பவனம்)

இறைவன் : புட்பவன நாதர்

இறைவி : கற்பகவல்லி

தீர்த்தம் : கருங்குழி தீர்த்தம்

மரம் : பலாமரம்

பதிகம் : அப் 1.

வழி : நீடாமங்கலம் புகைவண்டி நிலையத்துக்குத் தென் மேற்கே 3 கி. மீ,

சிறப்புக்கள்: ''பாமணி ஆற்றின் மேல்கரை'' 'வெண்ணியின் தென்கரைப் பூவனூர்' அப்பர் சுகமுனி புஷ்பவனம் வைத்து ஸ்வாமியைப் பூசித்து முத்தி பெற்ற ஸ்தலம்.

102 திருப்பாதாளீச்சுரம்

பாம்பணி, பாமணி

இறைவன்: சர்ப்பபுரீசுரர், நாகநாதர்

இறைவி: அமிர்த நாயகி

தீர்த்தம்: நாக தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: மன்னார்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே 2 கி.மீ.

சிறப்புக்கள்: ஸ்வாமிக்கு இரண்டு திருமுகங்கள் தோன்றுகின்றன. பதஞ்சலி போன்றப் பாம்புருவுள்ள தனஞ்சயரிஷி பூசித்த ஸ்தலம். அம் முனிவருடைய உருவம் கோயிலில் இருக்கின்றது.

புராண ஸ்தலங்கள்

ராஜ மன்னார்குடி (செம்பகாரண்ய க்ஷேத்ரம்)

மூலவர்: வாசுதேவர், கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்

உத்ஸவர்: ராஜகோபாலன் - ருக்மணி ஸத்ய பாமா ஸமேதராக

தாயார்: செண்பகலக்ஷ்மீ (மூலவர்); செங்கமலத் தாயார் (உத்ஸவர்), ஹேமாப்ஜ நாயகி, ரக்தாப்ஜ நாயகி. (தனிக்கோயில் நாச்சியார்)

தீர்த்தம்: பாம்பணி நதி, ஹரித்ரா நதி, புஷ்கரிணி, கிருஷ்ண தீர்த்தம்,

ஸ்தல வ்ருக்ஷம்: செண்பகம்

விமானம் : சுயம்பு விமானம்

ப்ரத்யக்ஷம் : பிரம்மா, பிருகு, அக்னி, கோபிலகோப்ரளய ரிஷிகள்.

வழி : மன்னார் குடி புகைவண்டி நிலையம்

சிறப்புக்கள் : கோப்பிரளய மஹரிஷிக்கு கிருஷ்ண லீலை களை இவ்விடத்தில் காட்டி அருளியதால் தக்ஷிணத் துவாரகை என்ற பெயரும் உண்டு. பங்குனி மாதம் பிரம்றோற்சவம் 18 நாட்களிலும், ஆனி மாதம் தெப்போற்சவம் 10 நாட் களிலும் நடக்கின்றது.

103 திரு அரதைப் பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்)

இறைவன்: பாதாளேசுரர்

இறைவி: அலங்கார நாயகி

தீர்த்தம்: பிரம தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: தஞ்சாவூருக்குக் கிழக்கு 14 கி. மீட்டரிலுள்ள சாலிய மங்கலம் புகைவண்டி நிலையத்திலிறங்கி, வடக்கே 4 கி.மீ. சென்று, கிழக்கே திரும்பி ० கி.மீ. சென்று அவளிவணல் லூரைச் (104) சேர்ந்து, பின்னும் 1½ கி.மீ. கிழக்கே சென் றால் இந்த ஸ்தலத்தை அடையலாம். இவ்வூரைச் சமீவனம் என்பர்.

சிறப்புக்கள்: சிவபெருமான் வராக அவதாரங்கொண்ட விஷ்ணுவினுடைய கொம்பை முறித்துத் தம்முடைய மார்பி லணிந்தருளிய ஸ்தலம். சந்நிதானத்திற் பிலம் ஒன்று கல்லால் மூடப்பட்டிருக்கின்றது. இது விஷ்ணு வராகமாகத் தோண்டிய இடமாம. ஐயனாருக்கு ஊருள் ஒரு கோயில் உள்ளது.

104 திருஅவளிவணல்லூர்

இறைவன்: சாக்ஷிநாயகேசுரர்

இறைவி: சௌந்தர நாயகி

தீர்த்தம்: சந்திர புஷ்கரிணி

பதிகம்: சம் 1, அப் 1

வழி: சாலியமங்கலம் புகைவண்டி நிலையத்திற்கு வடகிழக்கே 10 கி.மீ.

சிறப்புக்கள்: வராக அவதாரத்திற் சிவபெருமானாற் கொம்பு முறியப்பெற்ற விஷ்ணுமூர்த்தி பூசித்த ஸ்தலம். காசிபரிஷி பூசித்த திருப்பதி. பூசைக் குருக்களின் மூத்த குமாரியை மணஞ் செய்தவர் தீர்த்த யாத்திரையினின்று திரும்பி வந்து, தாம் போயிருந்தபோது வைசூரியினாற் கண்ணிழந்து குரூபியாயிருந்த தம் மனைவியின் தங்கைதான் தம் மனைவியென்று நினைக்க, சுவாமி மூத்தவள் தான் அவர் மனைவியென்று சாக்ஷி சொல்லி 'அவள் இவள்' எனக் காட்டினதால் இத்தலத்துக்கு 'அவளிவணல்லூர்' எனப் பெயர் வந்தது. மூத்தவளைத் தீர்த்தத்தில் முழுகச்செய்து கண்ணைக் கொடுத்து அருள்புரிந்தனர் இறைவர். சாக்ஷி சொன்ன இடபாரூட மூர்த்தியின் உருவமும் இருக்கின்றது.

'தம்பரிசறிவார்' என, சுவாமிக்குறத் திருநாமம் உண்டு. "தம்பரிசினோடு சுடுநீறு தடவந் திடபமேறி" எனச் சம்பந்தர் தேவாரத்திலும் இப்பெயரைக் காணலாம். இத்தலத்திற்கு மேற்கு பூளைவனம் (திருஇரும்பூளை) கிழக்கு பாடலிவனம். இதற்குக் கிழக்கு சமீவனம், அதற்குக் கிழக்கே வில்வவனம் (கொள்ளம் பூதூர்)

105. திருப்பரிதி நியமம்

இதனைப் பரித்தியப்பர் கோயில் என்பர்.

இறைவன் : பரிதியப்பர்

இறைவி : மங்கள நாயகி

தீர்த்தம் : சூரிய தீர்த்தம்

பதிகம் : சம் 1.

வழி : சாலிய மங்களம் புகைவண்டி நிலையத்திற்குத் தென் மேற்கே 13 கி. மீ. தஞ்சாவூர் புகைவண்டி நிலையத்திற்குத் தென் கிழக்கே உரைத்த நாட்டு சத்திரம் போகும் வழியில் 13 கி. மீ உழூவூருக்குக் கிழக்கே 1கி. மீ.

சிறப்புக்கள்: பரிதி (சூரியன்) பூசித்த தலம். பங்குனி 19ம் நாள் சூரியன் பூசித்த தினமாம்.

106 திருக்களர் (பாரிஜாத வனம்)

இறைவன்: களர்முளை நாதேசுரர்; அடைந்தார்க் கருள் செய்யாநின்ற நாயனார்

இறைவி: அழகேசுரியம்மை, அமுதவல்லி

தீர்த்தம்: துருவாச தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: திருத்துறைப்பூண்டியிலிருந்து மேற்கே மன்னார்குடி போகும் வழியில் 10 கி.மீ. சென்று, தெற்கே திரும்பி, தீவட்டிக்கரைக்குப் போகும் வழியில் 5 கி.மீ. இதற்கு வடக்கே 6 கி. மீ. திருக்கோட்டூர் (107) உள்ளது. திருத் தருப்பூண்டியிலிருந்து மன்னார்க்குடிக்குப் போகும் வழியில் 3½ கி மீ. சென்று பள்ளன் கோயில் என்னும் ஊரைச் சேர்ந்து, அங்குத் தெற்கே திரும்பி 4 கி மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம்.

சிறப்புக்கள் : பராசர முனிவரும் காளவ முனிவரும் பூசித்த ஸ்தலம். துருவாச மூனிவருக்கு நடனதரிசனங் கொடுத்தவர் இத்தலத்திலுள்ள நடராஜ மூர்த்தி. துருவாசருடைய விக்கிரகம் நடேசமூர்த்திக்கெதிரில் இருக்கின்றது. வலம்புரி விநாயகர் முருகர் சந்நிதி விசேடமானது. இக்கோயிலிலுள்ள சிலா சாசனங்களில் சிவபெருமான் திருநாமம் வரையப்பட்டுள்ளது.

10. திருக்கோட்டூர்

இறைவன் : கொழுந்தீசுரர்

இறைவி : மதுரவசனாம்பிகை

தீர்த்தம் ; அமிர்த தீர்த்தம்

மரம் : வன்னி

பதிகம் : சம் 1.

வழி : திருக்களர் (106) வடக்கே 6 கி. மீ.

சிறப்புக்கள்: திருக்கோட்டூரில் மேற்கே உள்ள திருக்கோயில் தேவாரம் பெற்றது. கிழக்கே உள்ள திருக்கோயில் திருவிசைப்பா பெற்றது. இது கீழ்க்கோட்டூர் மணி அம்பலம் என்று திருவிசைப்பா கூறும். தேவர்களும் குச்சரரிஷியும் பூசித்த ஸ்தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. சமீபத்தில் திருக்குளம் இருக்கின்றது. தேவியார் சந்நிதி கிழக்குப் பார்த்தது.

108 திருவெண்டுறை

இறைவன்: வெண்டுறை நாதர்

இறைவி: வேனெடுங் கண்ணியம்மை

பதிகம்: சம் 1

வழி: இது திருக்கோட்டூரிலிருந்து (107) வடமேற்கே 9 கி.மீ.

சிறப்புக்கள்: இங்கு பிருங்கிரிஷி வண்டு ரூபமாய் அர்த்த நாரீசுரருடைய உருவத்தைத் தொளைத்துச் சென்று ஸ்வாமியை மட்டும் பிரதக்ஷணம் செய்தனரென்பர். இன்றும் வண்டின் ஓசை கர்ப்ப கிரஹத்துக்கு அருகில் கேட்கக் கூடும். வித்தியாதரர் பூசித்த ஸ்தலம். இதிலிருந்து பொன்னிரை புகைவண்டி நிலையம் 6½ கி.மீ.

109 திருக்கொள்ளிக் காடு

இறைவன் : அக்கினீசுரர்

இறைவி : பஞ்சினு மெல்லடியம்மை

பதிகம் : சம் 1

வழி: பொன்னிரை புகைவண்டி நிலையத்தில் இருந்து 5½ கி.மீ. அரிச்சந்திர நதியின் வடகரையிலுள்ளது. இங்கிருந்து திருநெல்லிக்கா (111) திருத்தெங்கூர் (110) வழியாக 4 கி.மீ.

சிறப்புக்கள்: அக்கினி பூசித்த ஸ்தலம். திருநள்ளாற்றில் இருப்பதுபோலச் சநிபகவான் சந்நிதி பிரபலமாயிருக்கின்றது. மேற்குப் பார்த்த சந்நிதி.

110. திருத்தெங்கூர்

இறைவன்: வெள்ளிமலை நாதர்

இறைவி : பெரிய நாயகி

தீர்த்தம் : சிவகங்கை

பதிகம் : சம் 1

வழி : திருக்கொள்க்காட்டிலிருந்து (109) 3 கி.மீ. திருநெல்லிக்காவுக்குத் தென்மேற்கு 1 கி.மீ.

சிறப்புக்கள்: 'திருத் தேங்கூர்' என்பது சரியான பெயர். லக்ஷ்மியும் நவக்கிரகங்களும் பூசித்த ஸ்தலம். பிராகாரத்தில் 9 இலிங்கங்கள் இருக்கின்றன. இலக்குமி பூசித்த லிங்கம் இலக்குமிக்கு எதிரில் இருக்கின்றது. கோயிலுக்கு வடக்கே திருக்குளமிருக்கின்றது.

111 திருநெல்லிக்கா

இறைவன்: நெல்லிவன நாதேசுரர்

இறைவி: மங்கள நாயகி

தீர்த்தம் : பிரம தீர்த்தம், சூரிய தீர்த்தம்

மரம்: நெல்லிமரம்

பதிகம் : சம் 1

வழி: திருவாரூருக்கு (87) தெற்கு 12½ கி.மீ. திருத்தெங்கூரிலிருந்து (110) 1 கி.மீ.

சிறப்புக்கள்: சூரியனும் பிரமனும் பூசித்த ஸ்தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. ஐப்பசி மீ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி முதல் 7-நாளும், மாசி மீ 18 உ முதல் 7-நாளும், அஸ்தமன சமயத்திற் சூரியனுடைய கிரணங்கள் சுவாமிமேல் விழுகின்றன. நெல்லி விருக்ஷம் பிராகாரத்திலிருக்கின்றது. இதன் காய்கள் ஸ்வாமிக்கு மட்டும் உபயோகப்படுகின்றன. கோயிலுக்குத் தெற்கே பிரமதீர்த்தமும், வடக்கே சூரிய தீர்த்தமும் இருக்கின்றன.

112. திருச்சிற்றேமம்
சிற்றாம்பூர் அல்லது சிற்றாய்மூர்

இறைவன் : பொன் வைத்த நாதேசுரர்

இறைவி : அகிலாண்ட நாயகி

தீர்த்தம் : சொர்ணதீர்த்தம், வேததீர்த்தம்

மரம்: ஆத்தி

பதிகம் : சம் 1.

வழி : திருநெல்லிக்காவிலிருந்து (111) கிழக்கே 3 கி. மீ. உள்ள திருக்கைச் சினத்தையும் (113) கிழக்கே 5 கி. மீ. திருக்கோளிலி (114) ஐயும், தென்கிழக்கே 5 கி.மீ. திருவாய்மூரை (115) யும் கடந்து மேற்கே 2 கி.மீ. உள்ளது. பொன்னிரை நிலையத்திலிருந்து அரிச்சந்திர நதியைக்கடந்து 6 கி. மீ.

சிறப்புக்கள் : ஆத்தி விருக்ஷம் மிகவும் பழமையாயிருக்கின்றது. வேத தீர்த்தம் கோயிலுக்கு மேற்கிலிருக்கின்றது. அகஸ்தியரும், தேவேந்திரனும், நாகராஜனும், பிரமனும். வேதங்களும் பூசித்த ஸ்தலம். ஸ்வாமிக்குப் பொன் வைத்த நாதர், பாலாட்டுகந்தவர், ஆத்திவன நாதர், இந்திரபுரீசுரர், சர்ப்பபுரீசுரர், மதுபுரீசுரர் சித்தபுரீசுரர், பிரமபுரீசுரர், வேதபுரீசுரர் எனத் திருநாமங்கள் உண்டு.

ஸ்வாமி சந்நிதியில் தென்பக்கத்தில் ஒரு தேன்கூடு இருக்கின்றது. சித்தர்கள் தேன் ஈக்கள் போல உருவெடுத்து வந்து பூசித்ததாகச் சொல்லுகின்றார்கள். இந்தத் தேன் கூட்டுக்கும் தினம் பூஜை நடக்கின்றது. கோயிலுக்கு வடக்கே சொர்ண புஷ்கரிணி என்னும் திருக்குளம் இருக்கின்றது.

இவ்வூரிலிருந்த வணிகன் ஒருவன், கர்ப்பிணியாயிருந்த தம் மனைவியை யிங்குவிட்டு, வர்த்தகம் செய்யும் பொருட்டு வேறு தேசம் சென்றான். திரும்பிவர 4-5 வருஷமாயிற்று. அவன் மனைவி தினந்தோறும் கோயிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனஞ்செய்து வருபவள். வயிற்றுக்கில்லாமற் கஷ்டப் படுவதை ஸ்வாமி யறிந்து, அவளுக்குச் சொப்பனத்தில் தோன்றி, 'உனக்குத் தினம் ஒரு பொன் கோயில் சந்நிதியில் வைப்போபம். அதை நீ எடுத்து மாற்றிப் பணமாக்கி அதைக் கொண்டு ஜீவி' என்று சொல்லியருளினார். பொன்னிறை யென்னும் அடுத்த கிராமத்தில் வசித்த வணிகனுக்குங் கனவிற்றோன்றி, அம்மாது கொண்டு வரும் பொன்னை யெடுத்துக் கொண்டு அதற்குண்டான பணத்தைக் கொடுத்து

வரும்படி சொல்லியருளினார். அவன் அப்படியே பொன்னை நிறுத்துப் பார்த்து ஸ்வாமி சொன்ன நிறைப்படியிருக்கக் கண்டு, பணம் கொடுத்து வந்தான். அச்காரணத்தால் அவனிருந்த ஊருக்குப் 'பொன்னிறை' என்னும் பெயர் வந்தது. திருச்சிற்றேமத்திலிருந்து போன வர்த்தகன் திரும்பி வந்தபொழுது, அவன் பிள்ளைக்கு 4-5 வயதாயிற்று. ஊரார் உண்மையை உணராமல் அவன் மனைவியின் மேற் சந்தேகப்பட்டு அவள் புருஷனிடஞ் சொன்னார்கள். அவனுடைய திருப்திக்காக அப் பதிவிரதையின், பிரார்த்தனைப்படி, கோயிலிற் சந்நிதிக்குப் பின்னிருந்த ஆத்தி விருக்ஷம் சோயிலுக்கு முன்னும், பலிபீடத்துக்கு முன்னிருந்த நந்தி அதற்குப் பின்னுமாக இடம் மாறியிருக்கும்படி சிவ பெருமான் செய்தருளினார்.

113. திருக்கைச்சினம்

இறைவன் : கைச்சின நாதர்

இறைவி : வெள்வளையம்மை. வெள்ளை நாயகி

தீர்த்தம் : இந்திரதீர்த்தம், வச்சிர தீர்த்தம்

மரம் : கோங்கு இலவமரம்

பதிகம் : சம் 1.

வழி : திருவாரூருக்குத் (87) தெற்கிலுள்ள திருநெல்லிக்கா புகைவண்டி நிலையதிற்கு கிழக்கே 3 கி. மீ. திருத்தருப் பூண்டிக்கு வடக்கே 10 கி. மீ திருவாரூர் போகும் வழியில் உள்ளது.

சிறப்புக்கள்: திருணபிந்து முனிவர் பூசித்த ஸ்தலம். தேவேந்திரன பூசை செய்த திருநகர், மணலினால் இலிங்கம் ஸ்தாபித்துப் பூசை செய்து பின்பு அதைக் கையினாலெடுத்து அப்புறம் வைக்கும் பொழுது இந்திரனுடைய கைச் சின்னம்,

அஃதாவது கைக் குறி, அதிற் பொருந்தியது. அக்காரணத்தால் ஸ்வாமிக்குக் கைச்சின்ன நாதரென்றும், ஸ்தலத்துக்குக் கைச் சின்னம் என்றும் பெயர் வந்தன. கைச்சின்னம் என்பது கைச்சினம் என்றாயிற்று விரல்கள் பட்ட குறி ஸ்வாமி மேல் இருக்கின்றது. தக்ஷிணாமூர்த்தி விக்கிரகம் நன்றாக இருக்கிறது. இந்திர தீர்த்தம் என்றும், வஜ்ர தீர்த்தம் என்றும், 2-குளங்கள் கோயிலுக்கு வடக்கிலும், தெற்கிலும் இருக்கின்றன. ஸ்தல விருக்ஷம்-கோங்கிலவ மரம். சில மரங்கள் கோயிலிலிருக்கின்றன. அவற்றின் பக்கத்தில் கர்ணிகாவனேசுரர் (கோங்கிலவு வன நாதேசுரர்) இருக்கின்றார். தியாகராஜஸ்வாமி உற்சவ மூர்த்தி மூர்த்தமாகத்தான் இந்திரனுக்குக் காக்ஷி கொடுத்தனராம்.

114. திருக்கோளிலி என்ற திருக்குவளை

இறைவன் : கோளிலி நாதர்

இறைவி : வண்டமர் பூங்குழலம்மை

தீர்த்தம் : பிரமதீர்த்தம்

பதிகம் : சம் 1. அப் 2. சுந் 1.

வழி : திருக்கைச் சினத்துக்கு (113) கிழக்கே 6 கி. மீ.

சிறப்புக்கள் : இது சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. அவனி விடங்கத் தியாகர்; பிருங்க (வண்டு) நடனம். சுந்தரமூர்த்தி நாயனார் “நீளநினைந்தடியேன்” என்னும் திருப்பதிகம் பாடி, இதற்குச் சமீபத்திலுள்ள குண்டையூரிலிருந்த நெல்மலையைத் திருவாரூருக்குப் பூதகணங்களா லெடுப்பித்துக் கொண்டு போன ஊர். பிரமன் பூசித்த ஸ்தலம். பிரமதீர்த்தம் கோயிலுக்கெதிரில் இருக்கின்றது. அகஸ்தியர் பூஜித்த இலிங்கம் பிராகாரத்திலிருக்கின்றது. பீமன் பகாசூரனைச் சம்ஹரித்ததனாலுண்டான ஹத்தியை இந்தத்

தலத்திற் போக்கிக் கொண்டான். பகாசூரனுடைய உருவமும் ஹத்தியின் உருவமும் மூன் கோபுரத்தில் இருக்கின்றன.

குண்டையூருக்கும் கோளிலிக்கும் 1 கி.மீ. மத்தியிற் சந்திரநதி ஓடுகின்றது. குண்டையூரில் ஸ்வாமி பெயர் சுந்தரேசுரர்; தேவியார்-மீனாக்ஷிடம்மை. மதுரை மாநகரைத் தரிசிக்க விரும்பின குண்டையூர்க் கிழவருக்கு மீனாக்ஷி சுந்தரேசுரர் இத்தலத்தில் தமது தரிசனந் தந்தருளினார். குண்டையூர்-ரிஷபபுரி

திருக்கோளிலிக்கு 2 கி.மீட்டரில் எட்டிகுடி என்னும் திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய க்ஷேத்திரமிருக்கின்றது. இங்கு சித்திரா பௌணர்மி அன்று எண்ணிறந்த காவடிகள் வருகின்றன.

115 திருவாய்மூர்

இறைவன் : வாய்மூர் நாதர்

இறைவி : மாலினு நன்மொழியம்மை

தீர்த்தம் : சூரிய தீர்த்தம்

பதிகம் : சம் 1, அப் 2

வழி : திருக்கோளிலிக்குத் (114) தென்கிழக்கே 3 கி மீ. வழியில் எட்டிகுடி சுப்பிரமணிய ஸ்தலம் இருக்கின்றது.

சிறப்புக்கள் : இது சப்தவிடங்க ஸ்தலங்களுள் ஒன்று. நீல விடங்கர்-கமல நடனம், சூரியன் பூஜித்தது. கோயிலுக்கு எதிரில் சூரிய தீர்த்தம் இருக்கின்றது.

எட்டு வைரவ மூர்த்திகள் இந்தத் தலத்தில் இருந்தனவாம். இப்பொழுது ஏழு இருக்கின்றன.

திருநாவுக்கரசு நாயனார் வேதாரணியத்தில் இருந்தபொழுது சிவபெருமான் அவருக்குத் தோன்றியருளித் திரு

வாய்மூருக்கு வரும்படி கட்டளையிட அவர் பாட்டுப் பாடிக் கொண்டு செல்லும் பொழுது, அவருக்குப் பின் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் வர, இருவருங் கூடிக் கொண்டு சென்று தரிசித்த ஸ்தலம்.

116 திருநாட்டியத்தான்குடி

இறைவன் : மாணிக்கவண்ணர்

இறைவி : மலைமங்கையம்மை

தீர்த்தம் : சூரிய தீர்த்தம்

பதிகம் : சம் 1.

வழி: மாவூர் ரோட் புகைவண்டி நிலையத்தில் இருந்து $5\frac{1}{2}$ கி. மீ. திருநெல்லிக்காவிற்கு அடுத்த நிலையம் மாவூர் ரோடு. இங்கிருந்து வடமேற்கு 9 கி. மீ. பேரெயில் உள்ளது.

சிறப்புக்கள் : கோட்புலி நாயனாருடைய ஸ்தலம். அவருடைய உருவம் கோயிலில் இருக்கின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் கோயிலுக்கு வந்து சுவாமியைக் காணாமல் விநாயக மூர்த்தியைக் கேட்கச் சுவாமி இருந்த இடத்தை விநாயகர் சுட்டிக் காட்டிய காரணத்தால் அவருக்குக் கைகாட்டி மூர்த்தி என்று பெயர் வந்தது.

117. திருப்பேரெயில் (ஓகைப் பேரையூர்)

இறைவன் : ஜகதீசுரர், செகதீசுரர்.

இறைவி : ஜகந்நாயகி, பெண்ணமிழ்த நாயகி

தீர்த்தம் : அக்கினிதீர்த்தம்

பதிகம்: அப் 1

வழி: திருநாட்டியத்தான் குடி (116) யிலிருந்து 5 கி.மீ. மாவூர் ரோட் புகைவண்டி நிலையத்திலிருந்து தென் மேற்கே மட்சாலை வழியில் 6 கி.மீ.

சிறப்புக்கள்: ஊருக்குத் தெற்கே ½ கி. மீட்டரில் வெள்ளை யாறு ஓடுகின்றது. கோயிலுக் கெதிரிற் கீழ்ப்பக்கத்தில் அக்கினி தீர்த்தம் இருக்கின்றது. சபாபதி விக்கிரகம் வெகு அழகாயிருக்கின்றது.

118 திருக்காறாயில் (திருக்காறை வாசல்)

இறைவன்: கண்ணாயிர நாதர்

இறைவி: கைலாய நாயகி

தீர்த்தம்: இந்திர தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: திருநாட்டியத்தான் குடி (116) மாவூர் ரோட் புகை வண்டி நிலையத்துக்குத் தென்கிழக்கே 6 கி.மீ.

சிறப்புக்கள்: இது சப்த விடங்க ஸ்தலங்களில் ஒன்று. ஆதி விடங்கர் குக்குட நடனம். தேவேந்திரன் முசுகுந்த சக்கர வர்த்தி முதலியோர் பூசித்த ஸ்தலம். புரட்டாசி பௌர்ணமி யில் தேவேந்திரன் பூசித்ததாக ஐதீகம். கோயிலுக்கு வட புறத்தில் இந்திர தீர்த்தம் இருக்கின்றது. குளத்தின் வட கரையிற் கடுக்காய்ப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். ஒரு வர்த்தகன் ஜாதிக்காய் மூட்டைகளைக் கடுக்காய் மூட்டை கள் என்று சொல்ல, இவ் விநாயகருடைய திருவிளையாட லால் அவை அவ்வாறே ஆகப் பின்பு வர்த்தகன் பணிந்து கேட்டுக்கொள்ள, அவை முன்போல ஜாதிக்காய்களான காரணத்தால் விநாயகருக்கு இப்பெயர் போந்ததாம்.

119. திருக்கன்றாப்பூர்

இறைவன்: நடுதறியப்பர்

இறைவி: மாதுமையம்மை

தீர்த்தம்: ஞான தீர்த்தம்

பதிகம் : அப் 1.

வழி : திருநாட்டியத்தான்குடி (116) யிலிருந்து கிழக்கே 3 கி. மீ. திருவாரூர், திருத்துறைப்பூண்டி ரஸ்தா சந்திப்பில் உட்புறத்திலுள்ள குன்னூரிலிருந்து கிழக்கே 4 கி.மீ. ஆதி மங்கலத்தையடைந்து வடக்கே 4 கி. மீ.

சிறப்புக்கள் : கோயில் நாட்டியத்தான்குடி கோயிலைப் போலிருக்கின்றது. ஸ்வாமி, கன்றுக்குட்டி கட்டும் ஆப்பு அல்லது குச்சிலிருந்து உற்பத்தியானவர். சைவப் பெண் ஒருத்தி வைணவனுக்கு வாழ்க்கைப்பட்டு, மாமியார் வீட்டார் காணாதபடி கன்றுக்குட்டி கட்டியிருந்த ஆப்பையே சிவமாகப் பாவித்துப் பூஜை செய்து வர, ஒரு நாள் புருஷன் அதைக் கண்டு அந்த ஆப்பைக் கோடரியால் வெட்ட, சிவபிரான் அவ்வாப்பிலிருந்து வெளிப்பட்டார். அக்காரணத்தால் ஊருக்குக் கன்றாப்பூர் என்றும், ஸ்வாமிக்கு நடுதறி நாதர் என்றும் பெயர் வந்தன. கோடரியால் வெட்டினது போன்ற குறி ஸ்வாமி மேல் இருக்கின்றது. இடும்பன் என்னும் அரசன் பூசித்த ஸ்தலம்.

120. திருவலிவலம்

இறைவன் : மனத்துணைநாதர்

இறைவி : வாளையங் கண்ணியம்மை

தீர்த்தம் : சங்கர தீர்த்தம், காரணர் கங்கை

மரம் : புன்னை

பதிகம் : சம் 2, அப் 1. சுந் 1.

வழி : கன்றாப்பூர் (119) க்கு தெற்கே 3 கி.மீ, வடகிழக்கில் திருவிசைப்பா பெற்ற சாட்டியக்குடி இருக்கின்றது.

சிறப்புக்கள் : சூரியனும், காரண ரிஷியும், (வலியன்) கரிக்குருவியும் பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி சந்நிதி கட்டுமலைமேல்

இருக்கின்றது. கோயிலைச் சுற்றிக் கிழக்குப் பக்கத்தவிர மற்றெல்லாப் பக்கங்களிலும் மாலையிட்டது போல ஓடையொன்றிருக்கின்றது. பிராகாரத்தில் பலா விருக்ஷம் இருக்கின்றது.

121. தண்டலை நீணெறி (தண்டலைச் சேரி)

இறைவன் : நீணெறி நாதர்

இறைவி : ஞானாம்பிகை

தீர்த்தம் : ஓமக தீர்த்தம்

மரம் : குருந்து

வழி : இது மணலி புகைவண்டி நிலையத்துக்குச் சமீபம். திருத்தருப்பூண்டி புகைவண்டி நிலையத்துக்கு வடக்கு 4கி.மீ.

சிறப்புக்கள் : கூர்மாவதாரங் கொண்ட விஷ்ணு அகங்கரித்துக் கடலைக் கலக்கச், சிவபெருமான் அக் கூர்மத்தின் அகத்தை யடக்கி அதன் ஓட்டையணிருந்தருளிய ஸ்தலம். அரிவாட்டாய நாயனார் செந்நெலரிசி, மாவடு, செங்கீரை முதலிய நிவேதித்து வந்து முக்தியடைந்த ஸ்தலம். அவர் ஊராகிய கணமங்கலம் கிழக்கே 1 கி. மீட்டரிலிருக்கின்றது. விருக்ஷம், குருந்தம் இலைகளில் ஒரே இதழ் உள்ளது. கோச் செங்கட் சோழன் வழிபட்ட தலம்.

122 திரு உசாத்தானம் (கோயிலூர்)

இறைவன் : மந்திரபுரீசுரர்

இறைவி : பெரிய நாயகியம்மை

தீர்த்தம் : நின்மல தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி : முத்துப் பேட்டை புகைவண்டி நிலையத்துக்கு வடக்கே 3 கி.மீ.

சிறப்புக்கள்: ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஜாம்புவான், சுக்கிரீவன், ஹனுமார் முதலியோர் பூசித்த ஸ்தலம்.

இராமர் இலங்கைக்குப் போவதன்முன் இங்கு உபதேசம் பெற்றமையால் ஸ்வாமிக்கு 'மந்திர புரீசுரர்' என்று பெயர். இலிங்கமூர்த்தி வெண்மை நிறச்சுயம்பு. காட்சி கொடுத்த நாதரும் இருக்கிறார். கோபுரவாசலில் அதிகார நந்தி இருக்கிறார். இந்த இடம் முன் மாமரக்காடாக இருந்ததால் தலத்துக்குச் சூதவனம் என்று பெயர். விநாயகருக்குச் சூதவனப் பிள்ளையார் என்று பெயர்.

123 திரு இடும்பாவனம்

இறைவன்: சற்குணநாதேசுரர்

இறைவி: மங்கள நாயகி

தீர்த்தம்: குசும தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: திருத்துறைப்பூண்டி நிலையத்துக்குத் தென்மேற்கு 17 கி,மீ. கடிக்குளம், நெரும்பலம், பாண்டி, தில்லை விளாகம் முதலிய நிலையங்களிலிருந்தும் போகலாம்.

சிறப்புக்கள்: இடும்பன் பூசித்த ஸ்தலம். இடும்பனது தலை நகர் அண்மையில் உள்ள 'குன்றளூர்'. விநாயகர் வெள்ளை விநாயகர்; நிறம் வெண்மை. வேதாரணியத்திலிருப்பது போல் இங்கும் ஸ்வாமிக்குப் பின் புறத்தில் பார்வதி பரமேசுரர்கள் மணவாள கோலமாயிருக்கின்றார்கள். கோயிலுக்குக் கிழக்கிற் சீத புஷ்கரிணி என்ற திருக்குளமிருக்கின்றது.

அபிமான ஸ்தலம்

தில்லைவிளாகம் (திருத்துறைப்பூண்டி பட்டுக்கோட்டை பேருந்து வழி)

பெருமாள் : இராமன், ஸீதை, லக்ஷ்மணன், ஆஞ்சநேயர் ஸஹிதமாக சேவை கிழக்கே நின்ற திருக் கோலம்.

சிறப்புக்கள் : மூலவர் விக்ரஹம் கிடையாது. உத்ஸவர் விக்ரஹங்கள் மாத்திரம் இருக்கின்றன. மனிதர்களுக்கு நரம்பு கள் தெரிவது போல், பெருமாள் காலில், முழங்காலில் கை பின்பக்கங்களில் நரம்புகள் தெரிகின்றன. வரப்ரஸாதி. இங்கு சிவன் கோயிலும் இருக்கின்றது, சிதம்பரத்தில் இருப்பது போல் சிவனையும், விஷ்ணுவையும் தரிசிக்கலாம்.

124. திருக்கடிக்குளம் (கற்பகனார் கோயில்)

இறைவன் : கற்பகேசுரர்

இறைவி : சௌந்தர நாயகி

தீர்த்தம் : விநாயக தீர்த்தம்

பதிகம் : சம் 1.

வழி : இடும்பாவனம் (123) க்குக் கிழக்கே 1½ கி. மீ.

சிறப்புக்கள் : கற்பகப் பிள்ளையார் சிவபெருமானைப் பூசித்து மாம்பழம் பெற்ற ஸ்தலம். கோயிலுக்கு வெளியில் தென்பக்கத்தில் மேலண்டை கோடியிற் கற்பகப் பிள்ளையார் இருக்கின்றார். கோயிலுக்கு வடகீழ்ப் பக்கத்தில் விநாயக தீர்த்தம் இருக்கின்றது.

125. திருமறைக்காடு (வேதாரணியம்)

இறைவன் : மறைக் காட்டீசர். வேதாரணியேசுரர்

இறைவி : யாழைப் பழித்த மொழியம்மை

தீர்த்தம் : வேதாமிர்தம், வேதநதி (கடல்)

மரம் : வன்னி

பதிகம் : சம் 4. அப் 5. சுந் 1.

வழி : புகைவண்டி நிலையம். திருத்துறைப் பூண்டி சந்திப் புக்குத் தென்கிழக்கே 35 கி.மீ.

சிறப்புக்கள் : சப்த விடங்க ஸ்தலங்களில் ஒன்று. புவனி விடங்கர் ஹம்ஸபாத நடனம். தியாகராஜருக்கெதிரில் சுந்தரர் பரவையாருடன் இருக்கின்றார். வேதங்கள் பூஜித்துத் திருக்காப்புச் செய்த கதவைத் திருநாவுக்கரசு ஸ்வாமிகளும் திருஞான சம்பந்த மூர்த்தி ஸ்வாமிகளும் முறையே திறக்கவும் அடைக்கவும் பாடியருளிய ஸ்தலம்.

சேரமான் பெருமாணாயனார் சுந்தரமூர்த்தி நாயனாருடன் சென்று தரிசனஞ் செய்த ஸ்தலம். ஸ்வாமியும் அம்மையும் கலியாண கோலமாய் நின்றருளுகின்றார்கள்.

ஸ்தல விநாயகர் சிந்தாமணி கணபதி. வெளிப் பிராகாரத்தில் மேல்பால் வீரஹத்தி விநாயகர் மேற்கு நோக்கி வீற்றிருக்கின்றார். ''வேதாரணிய விளக்கழகு'' என ஓர் உலக வழக்குள்ளது. இந்தத் தலத்தில் துர்க்கையம்மை சந்நிதியும் விசேஷம்.

மேற்குப் பிராகாரத்தில் 'காக்ஷி கொடுத்த நாயகர்' அல்லது ''மோக்ஷ துவாரேசுரர்'' என்ற செப்பு விக்கிரக மூர்த்திக்கு நீண்ட சட்டையும் தலைக்குக் குட்டையும் தரித்திருக்கின்றது. கோயில் பெரியது. சந்நிதிக் கெதிரிலிருக்குங் கடலுக்கு வேத தீர்த்தம் என்று பெயர். ஆலயத்துள்ள தீப

நெய்யை ஓர் எலி வந்து உண்ணும் பொழுது சுடர் தன் மூக்கிற்படக் கனன்று தூண்டத் தீபம் பிரகாசமாக எரிந்தது. தீபம் மங்குஞ் சமயத்து எலியிப்படிச் செய்ததால், ஸ்வாமி அது மூவுலகும் ஆளும்படி பேரருள் புரிந்தார். அவ்வெலி மறுப்பிறப்பில் மாவலிச் சக்கிரவர்த்தியாகி அரசாண்டது. இதனை அப்பர் ஸ்வாமிகள் திருக்குறுக்கைக்கு அருளிச்செய்த திருநேரிசையில் எட்டாவது செய்யுளில் சிறப்பித்திருக்கின்றார்.

126 திரு அகத்தியான்பள்ளி

இறைவன் : அகத்தீசுரர்

இறைவி : பாகம் பிரியா நாயகி, மங்கை நாயகி

தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்

பதிகம்: *சம் 1*

வழி: வேதாரணியத்திலிருந்து (125) தெற்கே 1½ கி.மீ. புகைவண்டி நிலையம் உள்ளது.

சிறப்புக்கள்: ஸ்வாமியின் திருக்கலியாண கோலத்தைத் தரிசிக்கும் பொருட்டு அகஸ்தியர் தங்கியிருந்து வழிபட்ட ஸ்தலம். அகஸ்தியர் விக்கிரகம் கோயிலில் இருக்கின்றது. கோயிலுக்கு எதிரில் அக்கினி தீர்த்தம் இருக்கின்றது.

127. கோடி என்பது குழகர் கோயில்

இறைவன் : அமிர்த கடேசுரர்

இறைவி : மையார் தடங்கண்ணியம்மை

தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்

பதிகம் : *சுந் 1*

வழி : வேதாரணியத்திற்கு (125) தெற்கே 9 கி. மீ. வழியில் அகத்தியான்பள்ளி (12) இருக்கிறது. இதற்குத் தெற்கே 1½ கி.மீ கோடிக்கரை என்னும் கடற்றுறையிருக்கின்றது.

சிறப்புக்கள் : அமுத தீர்த்தம் என்கிற கிணறு பிராகாரத்திலிருக்கின்றது. சுப்பிரமணிய ஸ்வாமிக்கு ஒரு முகமும் ஆறு திருக்கரங்களும் இருக்கின்றன.

அபிமான ஸ்தலம்

கோடிக்கரை

வழி : திருத்துறைப்பூண்டி வேதாரண்யம்: ஆடி, தை அமாவாசை காலங்களில் சமுத்திர ஸ்நானம் செய்வது விசேஷம்.

ஈழ நாடு

1. திருக்கோணமலை

இறைவன் : கோணேசுரர்

இறைவி : மாதுமையாளம்மை

வழி : புகைவண்டி நிலையம். இஃது இலங்கைத் தீவில் கிழக்கே கடற்கரையில் உள்ளது.

சிறப்புக்கள் : தேவேந்திரன் முதலியோர் பூசித்த ஸ்தலம். இந்த ஸ்தலத்துக்கும் 'தக்ஷிண கைலாசம்' என்னும் பெயர் உண்டு.

2. திருக்கேதீச்சரம்

இறைவன் : கேதீசுரர்

இறைவி : கௌரியம்பிகை

தீர்த்தம் : பாலாவி

வழி : தலைமன்னார் புகைவண்டி நிலையத்திலிருந்து 8 கி.மீ. பாலாவி என்ற நதியின் கரையில் மாதோட்டம் இருக்கின்றது. அதில் திருக்கேதீசுரர் கோயிலில் இருக்கின்றது.

சிறப்புக்கள்: சேதுவில ஸமுத்திர ஸநானம் செய்ய வசதி இல்லாதவர்கள் இத்தலத்தில் ஆடி-தை அமாவாசைக் காலங்களிலும்-அர்தோதய மஹோதய புண்ய காலங்களிலும் ஸமுத்திர ஸ்நானம் செய்யும் ஸ்தலம். பிருகு முனிவர் முதலியோர் பூசித்த ஸ்தலம். மாலியவான் என்னும் அசுரன் பூசித்துப் பேறு பெற்ற ஸ்தலம்.

பாண்டியநாடு

சோழ நாடு ஸ்தலங்களைத் தரிசனஞ் செய்து விட்டுப் பாண்டிய நாடு வந்து தரிசிக்க வேண்டிய ஸ்தலங்கள். பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வழியாக வந்து சேவிக்கலாம்.

1 இராமேசுரம்

இறைவன்: ராம நாதேஸ்வரர்

இறைவி: மலைவளர் காதலி, பர்வத வர்த்தினி

தீர்த்தம்: தனுக்கோடி முதலிய பல தீர்த்தங்கள்.

பதிகம் : சம் 2, அப் 1

வழி: புகைவண்டி நிலையம் மதுரைக்குத் தென்கிழக்கே 160 கி மீ.

சிறப்புக்கள்: இராவணன் முதலியோரைக் கொன்றதால் உண்டான பிரமஹத்தி தோஷம் நீங்கும் பொருட்டு ஸ்ரீராமர் சிவலிங்க பிரதிஷ்டை செய்து பூசித்த ஸ்தலம்.

கோயில் மிகவும் பெரியது. கடல் (அக்கினி தீர்த்தம்) கிழக்குக் கோபுரத்துக்கு நேராக இருக்கின்றது. பிராகாரங்கள் அழகாயும் ஒழுங்காயும் இருக்கின்றன. சேதுமாதவர் சந்நிதி தனியாய் இருக்கின்றது. ஹனுமார் கொண்டுவந்த இலிங்கத்துக்குக் 'காசி விசுவநாதர்' என்று பெயர். இங்குத் தான் முதலில் பூஜை ஆகின்றது. சீதை ஸ்தாபித்து இராமர் பூசித்த லிங்கம் 'இராமலிங்கம்' வடக்கே 5 கி.மீ. கந்தமாதனம் ராம தீர்த்தம், லக்ஷ்மண தீர்த்தம், சுக்ரீவ தீர்த்தம், ஹனுமத் தீர்த்தம், தரும, வீம, அர்ச்சுன, நகுல, சகாதேவ தீர்த்தங்கள் முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன. கோயில் வடக்குப் பிராகாரத்திற் கோடி தீர்த்தம் உள்ளது. மேற்குப் பிராகாரத்தில் லவன் லிங்கமும், வடக்குப் பிராகாரத்தில் விபீஷண லிங்கமும், கற்பூர ஜோதியில் ஸ்படிக ரூபமாய் விளங்குகின்றன.

இராமேசுரத்திலிருந்து தெற்கே 19கி.மீசென்றால் தனுக்கோடி என்று சொல்லப்படும் ஸ்நாந கட்டம இருக்கின்றது. அங்கேதான் (சேது) ஸ்நாநஞ் செய்ய வேண்டும். தனுக்கோடி புகைவண்டி நியைத்தில் இருந்து ஸ்ாாந கட்டம் 3 கி. மீ.

புராண ஸ்தலம்
தநுஷ்கோடி

பெருமாள் : இராமன். நின்ற திருக்கோலம்

தாயார் : ஸீதாபிராட்டியார்.

தீர்த்தம் : மூன்று சமுத்திரங்கள் சங்கமம்

ப்ரத்யக்ஷம் : விபீஷணன்

சிறப்புக்கள் : விபீஷண சரணாகதி பண்ணிய இடம். இராவண ஸம்ஹாரம் ஆன பிறகு, விபீஷணன் பிரார்த்தனைக்கிணங்க ராமன் வில்லினால் தான் கட்டிய சேதுவை அழித்த

படியினால், தனுஷ்கோடி என்ற பெயர் உண்டானதாக வரலாறு.

இராமேச்வரம்

பெருமாள்: சேது மாதவன், ராமநாதன், நின்ற திருக் கோலம்

தாயார்: மஹாலக்ஷ்மி

தீர்த்தம்: அக்னி தீர்த்தம், ஸமுத்ர ஸ்நானம், ஸேது மாதவ தீர்த்தம்

சிறப்புக்கள் : ராமேச்வர தேவஸ்தானத்தில் இரண்டாவது மூன்றாவது பிராகாரத்தின் நடுவில் உள்ளது. பாண்டிய அரசனான புண்யநிதி ராமேச்வரத்தில் விஷ்ணுவுக்கு ப்ரீதி யான யாகம் செய்ததால், அவனிடத்துக்கு பகவான் லக்ஷ்மி தேவியை அனுப்பினார். 8 வயது கன்னிகையாக வந்தாள். பாண்டிய அரசன் அவளை 'யார்' என்று கேட்க; தான் அனாதை என்றும் தன்னைப் பலாத்காரம் செய்பவர்களை சிக்ஷிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். இதற்கு பாண்டிய அரசன் ஒப்புக்கொண்டான் ஒருநாள் மகா விஷ்ணு சைவ வேடம் பூண்டு பூந்தோட்டத்தில் பூ பறிக்கும் லக்ஷ்மியான கன்னிகையைக் கைப்பிடிக்க, அவளும் தோழி களும் கூக்குரலிட, அரசன் அவ்விடம் வந்து விஷ்ணுவை அறியாமல் கட்டிப்பிடித்து, விலங்கிட்டு, ஒரு மண்டபத்தில் அடைத்தான். இரவில் அரசன் கனவில் சைவ வேடம் பூண்டவன் மஹாவிஷ்ணுவாகவும் கன்னிகை மஹாலக்ஷ்மி யாகவும் காட்சிதர, காலையில் மண்டபத்தில் வந்து பார்க்க அப்படியே ஸேவை ஸாதிக்க, மன்னன் மன்னிக்க வேண்டி திவ்ய தம்பதிகளுக்கு விசேஷமாக கல்யாண மஹோத்ஸவம் செய்வித்ததாக வரலாறு.

I விஷ்ணு ஸ்தலம்

திருப்புல்லாணி (ராமநாதபுரம் - தர்ப்ப சயனம்)

மூலவர் : கல்யாண ஜகந்நாதன் (தைவ சிலையார்). நின்ற திருக்கோலம். சக்ரவர்த்தித் திருமகன். தர்ப்ப சயனம், கிழக்கே திருமுக மண்டலம்,

தாயார் : கல்யாணவல்லி, பத்மாஸநி என்று இரண்டு தாயார்கள்

தீர்த்தம் ; ஹேம தீர்த்தம், சக்ர தீர்த்தம், ரத்னாகர ஸமுத்ரம்

ஸ்தல வ்ருக்ஷம் : அச்வத்த வ்ருக்ஷம்

விமானம் : கல்யாண விமானம்

ப்ரத்யக்ஷம்; அச்வத்த நாராயணன், புல்லாரண்ய முனி, ஸமுத்ர ராஜன்

வழி : இராமநாதபுரம் புகைவண்டி நிலையத்தில் இருந்து 8 கி.மீ. தெற்கே, இதற்குத் தெற்கே சேதுக்கரை 5 கி.மீ

சிறப்புக்கள் : இந்த ஸந்நிதி தவிர வேறு சந்நிதிகள் உள்ளன.

(1) தர்ப்பசயன ராமனின் சந்நிதியில் லக்ஷ்மணன் ஆதிசேஷனாக நின்று கைங்கர்யம் செய்கிறார்.

(2) பட்டாபிஷேக ராமனின் ஸந்நிதி ஸம்ப்ரதாய முறையில் உள்ளது. இதற்குப் பக்கத்தில்தான் இராமேச்வரமும், தனுஷ்கோடியுமுள்ளன.

இராமன் அணைக்கட்ட இங்கே வந்தபொழுது, இங்கே தவம் செய்த கண்வருக்கு திவ்யமான வில்லைக் கொடுத்தபடியால் 'தெய்வச்சிலையார்' என்ற நாமம் உண்டானதாக ஐதீகம். ஆதிசேது என்று வைஷ்ணவர்கள் கொண்டாடும் சமுத்திரஸ்நான கட்டம் இங்கிருந்து 2 கி.மீ. தூரத்தில்

உள்ளது. குழந்தை இல்லாதவர்கள் திருப்புல்லாணியில் தங்கி தேவிப் பட்டினத்திலுள்ள நவக்ரஹ சாந்தி செய்து ஸர்ப்ப சாந்தி செய்து தர்பசயனரை ஸேவித்துக்கொண்டு பால் பாயஸம் சாப்பிட்டுச் சிலகாலம் வசித்து வந்தால் புத்திரப் பேறு ஏற்படும் என்று வரலாறு கூறுகிறது. புல்லர் என்ற மகரிஷியின் அஷ்டாக்ஷர ஜபத்தினால் பகவான் அச்வத்த மரத்தடியில் ஆவிர்பவித்ததாகவும், புல்லருக்கு ப்ரத்யக்ஷ மானதால், ''புல்லாரண்யம்'' என்று பெயர் வந்ததாகவும் புராண வரலாறு. ஸேதுவைக் கண்ட மாத்திரத்திலேயே பாவம் அனைத்தும் தொலையும் என நம்பப்படுகின்றது.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி 9-3 பதிகம் முதலியன.

அபிமான ஸ்தலம்

நவபாஷாணம்

வழி : இராமநாதபுரம் நிலையத்திலிருந்து பேருந்து வசதி உண்டு

சிறப்புக்கள் : இராமன் ஆராதித்ததாகச் சொல்லப்படும் நவக்ரஹங்கள் ஸமுத்திரத்தில் இருக்கின்றன. காலை வேளை யில் பிரதக்ஷிணம் செய்து பூஜை செய்யலாம். நவக்ரஹங்கள் பிறகு ஸமுத்திரத்தில் மூழ்கி இருக்கும். சக்ர தீர்த்தம், ஸமுத் திர ஸ்நானம். நவக்ரஹத்துக்காக நவ பாஷாணங்கள் ஸமுத் திரத்தில் முழங்கால் ஆழத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப் பதால், நவபாஷாணம் என்ற பெயர் ஏற்பட்டதாக வரலாறு.

2. திருக்கானப் பேர் (காளையார் கோயில்)

இறைவன் : காளையீசுரர், காளையப்பர்

இறைவி : சொர்ணவல்லி

தீர்த்தம் : புட்பவன தீர்த்தம், யானை மடு

பதிகம் : சம் 1. சுந் 1.

வழி : நாட்டரசன் கோட்டை புகைவண்டி நிலையத்தில் இருந்து 9½ கி.மீ.

சிறப்புக்கள் : ஸ்வாமி, காளை வடிவங்கொண்டு, திருக் கரத்திற் பொற்செண்டும் திருமுடிமேற் சுழியமும் உடையவ ராய்ச் சுந்தர மூர்த்தி நாயனாருக்குத் தோன்றி ''நம்முடைய வாசஸ்தானம் கானப்பேர்'' என்று சொல்லி, அவரையும் அவருடனிருந்த சேரமான் பெருமாணாயனாரையும் திருச்சுழி யல் என்னும் ஸ்தலத்திற்கு அழைத்துக் கொண்டு போய்த் தரிசனங் கொடுத்தருளிய ஸ்தலம்.

சாபத்தினாற் காட்டானையாய்ச் சமைந்த ஐராவதம் பூசித்த ஸ்தலம்.

கோயில் பெரியது. மூன்று சந்நிதிகள் உள்ளன. சோமேசர் சௌந்தர நாயகி, காளீசர், சொர்ணவல்லி, சுந்த ரேசுரர்-மீநாக்ஷி ''காளை தேட-சொக்கர் சுகிக்க-சோமர் அழிக்க'' என்று ஒரு பழமொழி வழங்குகின்றது மருது பாண்டியன் கட்டிய கோபுரம் சோமேசர் சந்நிதிக்கு நேரே இருக்கின்றது.

3 திருவாடானை

இறைவன்: ஆடானை நாதர்; ஆதிரத்நேசர்

இறைவி: அன்பாயியம்மை, சிநேகவல்லி

தீர்த்தம் : சூரிய வருண தீர்த்தம்

பதிகம் : சம் 1

வழி: காளையார் கோயில் (2)க்குக் கிழக்கே 34 கி.மீ.

சிறப்புக்கள் : கோயில் பெரியது. கோயிலுக்குட் சூரிய தீர்த் தமும் வெளியிற் கீழ்புறத்தில் வருண தீர்த்தமும் உள்ளன.

நீலரத்தினத்தாற் சிவலிங்கஞ் செய்து சூரியன் பூசித்த ஸ்தலம் அதனால் ஸ்வாமிக்கு ஆதிரத்னேஸ்வரர் என்று பெயர். வருணனுடைய புதல்வர் (வாருணி) துருவாசமுனிவருக்கு மரியாதை செய்யாமையால், அவரால் ஆட்டுத்தலையும் ஆனையின் உடலும் உள்ள உருவெய்தும்படி சபிக்கப் பெற்றார். அந்தச் சாபம் இந்தத் தலத்தில் நிவாரணமாயிற்று. தலத்துக்கு ஆடானை என்றும, ஸ்வாமிக்கு ஆடானை நாதர் (அஜகஜேஸ்வரர்) என்றும் பெயருண்டாயிற்று.

4. திருப்புனவாயில்

இறைவன் : பழம்பதி நாதர்

இறைவி : கருணை நாயகி, பரங்கருணை நாயகி

தீர்த்தம் : கருணா நதி

பதிகம் : சம் 1. சுந் 1.

வழி : திருஆடானை (3) க்கு வடக்கே 19 கி.மீ.

சிறப்புக்கள் : இத்தலத்திற்குப் பழம்பதி, விருத்தபுரி எனவும் பெயர் உண்டு. நந்தியும் மூலலிங்கமும் ஆவுடையாரும் மிகப் பெரியன. [ஸ்வாமிச்கு 3-முழ உடை வேண்டும்; ஆவுடையாருக்கு 30-முழ உடைவேண்டும்; "மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று" என்று சொல்வது இந்தத் தலத்து ஸ்வாமியைப் பற்றித்தான். லக்ஷ்மி தீர்த்தமும் பிரம தீர்த்தமுங் கோயிலுக்கெதிரில் இருக்கின்றன. பாண்டி 14-தலமும் திருப்புனவாயிலிலேயே இருப்பதாக ஐதிகம். பதினான்கு இலிங்கங்களும் உள்ளன, ஊருக்குத் தெற்கில் பாம்பாறு (சர்ப்பநதி) ஓடுகின்றது.

புராண ஸ்தலம்
(ஆவுடையார் கோயில்)

இறைவன் : ஆப்த நாதர்

இறைவி : லோக நாயகி

வழி: திருப்புனவாயில் (4)-லிருந்து 5 கி.மீ.

சிறப்புக்கள்: மூர்த்தி: சுயம்பு, சிற்பி வேலை (கற்சிலை வேலை) பிரமாதமாயிருக்கும். மாணிக்கவாசகர் கட்டியிருக்கும் கோயில். மாணிக்க வாசகருக்குச் சிவபெருமான் குருந்த மரத்தடியின் கீழ் ஞான உபதேசம் அருளிய இடம்.

5 திருப்புத்தூர்

இறைவன்: ஸ்ரீ தளிநாதர், புத்தூர் ஈசர்

இறைவி: சிவகாமியம்மை

தீர்த்தம்: கருட தீர்த்தம், திருத்தளி தீர்த்தம்

மரம்: கொன்றை

பதிகம்: சம் 1, அப் 1

வழி: திருப்புன வாயிலிலிருந்து (4)தேவகோட்டை வழியாகக் காரைக்குடி வந்து 19 கி.மீ. காரைக்குடியில் இருந்து திருப்புத்தூர் போகும் வழியில் 11 கி.மீ. குன்றக்குடி என்னும் சுப்பிரமணிய க்ஷேத்திரமும், வடமேற்கே 24 கி.மீ. பிரான் மலை (6) என்று வழங்கும் கொடுங்குன்றமும் இருக்கின்றது.

சிறப்புக்கள்: லக்ஷ்மி பூஜை செய்த ஸ்தலம். வயிரவர் சந்நிதி விசேஷம். சபாபதி விக்கிரகமும் சிவகாமியம்மன் விக்கிரகமும் சிலையிலிருக்கின்றன. கொன்றை மரமாகிப் பிரணவம் பூசித்த ஸ்தலம். 'வேதம் யாவையும் பிரணவப் பொருளெனல் விளக்கப் போத நாயகன் மதலையை உவந்தமர் புத்தூர்'—திருப்பெருந்துறைப்புராணம். தாண்டவம்

ஏழனுள் ''கௌரீ தாண்டவத்தை'' இத்தலத்தில் சிற்சபை யில் அம்பிகைக்குக் காட்டியருளினர். விஷ்ணுவுக்கும் ஒரு சந்நிதி இருக்கின்றது. கோயிலுக்கு வடமேற்கே ஸ்ரீ தளி தீர்த்தமும் கிழக்கே சிவகங்கையும் இருக்கின்றன.

II விஷ்ணு ஸ்தலம்

திருக்கோட்டியூர் (கோஷ்டி க்ஷேத்ரம்)

மூலவர்; உரகமெல்லணையான், புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: சௌமிய நாராயணன், நின்ற திருக்கோலம்

தாயார்: திருமாமகள் நாச்சியார் (தனிக்கோயில் உண்டு).

தீர்த்தம்: தேவ புஷ்கரிணி (திருப்பாற்கடல்)

விமானம்: அஷ்டாங்க விமானம்

ப்ரத்யக்ஷம்: இந்திரன், கதம்பமுனி

வழி: சிவஸ்தலம் திருப்புத்தூர் (5) லிருந்து சுமார் 11 கி.மீ.

சிறப்புக்கள் : இந்தக் கோவில் 4 மாடிகளாக உள்ளது. கதம்ப மஹரிஷி பிரார்த்தனைக் கிணங்க முதல் மாடியில் உரக மெல்லணையானின் (முக்யமான பெருமாளின்) சயனத் திருக்கோலம். தக்ஷிணேச்வர நரசிம்மன், உத்தரேச்வர நரசிம்மன், க்ஷீராப்தி நாதன், ஸ்தித நாராயணன், ஸந்நிதிகளில் நின்ற இருந்த, கிடந்த, நடந்த, கூத் தாடிய திருக்கோலத்தில் காட்சி அளித்துள்ளதைக் காண லாம் பெருமாள் சயனத்திலேயே வதுகையால் ஆதிசேஷ னுக்கு அபயமளிக்கிறார். இரண்டாவது மூன்றாவது மாடி களில் நின்ற திருக்கோலமும் இருந்த திருக்கோலமும் உள்ளன. நான்காவது மாடியிலிருந்துதான் உடையவர் திரு

மந்திரார்த்தத்தை வெளிப்படையாக எல்லோருக்கும் உபதேசித்தாராம். அஷ்டாங்க விமானம் மயனாலும் விச்வகர்மாவினாலும் கட்டப்பட்டவை. இங்கு திருக்கோட்டியூர் நம்பி, உடையவர் சிலைகள் உள்ளன. பக்கத்திலுள்ள ப்ராகாரத்தில் இரண்டு நரஸிம்ம சிலைகள் உள்ளன. தரைமட்டத்தின் கீழ் நடனக்ருஷ்ணன் சேவை ஸாதிக்கின்றார். திருக்கோட்டியூர் நம்பிகளிடம் திருமந்திர ரஹஸ்ய அர்த்தத்தை உபதேசமாகப் பெற்று, குருவின் ஆணையை மீறி, கோபுரத்தின் மீது ஏறி உலக ஜனங்கள் அனைவரும் முக்தியடைய இந்த இரகசியத்தை எம்பெருமானார் வெளியிட்ட ஸ்தலம். எம்பெருமானார் திருஉருவ விக்ரஹம் கோபுரத்தின் உச்சியில் ஊரைப் பார்த்த மாதிரி இருக்கிறது. தேவர்கள் பிறருக்குத் தெரியாமல் கோஷ்டியாக இவ்விடம் வந்ததால் கோஷ்டீபுரம் என்ற பெயர் உண்டாயிற்று. "த்வயம் விளைந்த திருப்பதி" என்று எம்பெருமானார் காலத்திலிருந்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் அழைக்கிறார்கள்.

மங்களா சாஸனம்

பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	2-ம் திருவந்தாதி 87, 3ம் திருவந்தாதி 62, நான்முகன் திருவந்தாதி 34, பெரியாழ்வார் திரு
பேயாழ்வார் திருமழிசையாழ்வார்	மொழி 1-ம் பதிகம், பெரிய திருமொழி 9, 10-ம் பதிகம்.

III திருமெய்யம்

மூலவர்: ஸத்யகிரி நாதன், ஸத்யமூர்த்தி, நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: மெய்யப்பன்

தாயார்: உய்யவந்த நாச்சியார்

தீர்த்தம் : கதம்ப புஷ்கரிணி, ஸத்திய தீர்த்தம்

ஸ்தல விருக்ஷம்: பலா விருக்ஷம்

விமானம்: ஸத்யகிரி விமானம்

ப்ரத்யக்ஷம்: ஸத்யதேவதைகள்

வழி: புதுக்கோட்டைக்கும், காரைக்குடிக்கும் மத்தியிற் புகை வண்டி நிலையம். சிவஸ்தலம் திருப்பத்தூர் (5) விருந்து பேருந்து வழியில் சுமார் 16 கி.மீ.

சிறப்புக்கள்: இது ஓர் அழகிய வேலைப்பாடுள்ள குடைவரைக் கோவில். இந்தப் பெருமாள் ஸ்ரீரங்கம் ரங்க நாதனை விடப் பெரிய திருமேனியுடன் சயனித்திருக்கிறார். சுவரில் பிரம்மா முதலிய சகல தேவர்களும் செதுக்கப்பட்டுள்ளனர். இங்கு வேறு பல ஸந்நிதிகளும் உள்ளன. ஆதிசேஷன் இந்த ஸ்தலத்தை பாதுகாப்பதாக ஐதீகம்.

ஆதிசேஷன் பாதுகாப்பிலிருந்த பெருமாளைத் திருட்டுத் தனமாக அசுரர்கள் தாக்க வந்ததாகவும், ஆதிசேஷன் விஷக்காற்றை விட்டு அசுரர்களைக் கொன்றதாகவும் ஸ்தல வரலாறு. பாஞ்சாலங்குறிச்சி ஊமையன் இம் மலைக் கோயிலில் ஒளிந்திருந்தான்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்: பெரிய திருமொழி 3-6-9

6 திருக்கொடுங்குன்றம் (பிரான் மலை)

இறைவன்: கொடுங்குன்றீசுரர்

இறைவி: குயிலமிர்த நாயகி

தீர்த்தம்: சுந்தர தீர்த்தம்

பதிகம்: சம் 1

வழி: திருப்பத்தூரிலிருந்து (5) வடமேற்கு 24 கி. மீ.

சிறப்புக்கள்: மகோதரரிஷி, நாகராஜன் முதலியோர் பூசித்த ஸ்தலம். பாடல் பெற்ற ஸ்தலம் அடிவாரத்திலிருக்கின்றது. மலைமேல் ஏறிச் சென்றால் வைரவர் சந்நிதி ஒன்றும், அப்பாலும் ஏறிச் சென்றால் சிவ சந்நிதி ஒன்றும் இருக்கின்றன. சிவ சந்நிதியில் ஸ்வாமி கல்யாண கோலமாய் இருக்கின்றார். தேவ சபை என்றொரு மண்டபம் இருக்கின்றது இத்தலத்துச் சுப்பிரமணிய சுவாமி சந்நிதியும் விசேஷம்; அது திருப்புகழ் பெற்றது.

7 திருஆலவாய் என்பது மதுரை

இறைவன்: சொக்கநாதர்

இறைவி: மீனாட்சியம்மை

தீர்த்தம்: பொற்றாமரைக் குளம், வையையாறு முதலியன

மரம்: கடம்பு

பதிகம்: சம் 9, அப் 1

வழி: புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கு 1 கி.மீ.

சிறப்புக்கள்: பாண்டி நாட்டின் தலைநகரம். சோமசுந்தரக் கடவுள் 64-திருவிளையாடல்களைச் செய்தருளிய ஸ்தலம். கபிலர், பரணர், நக்கீரர் முதலிய பொய்யடிமை இல்லாத புலவர்களாகிய சங்கத்தார் இருந்த இடம். விபூதி, ருத்திராக்ஷம், சடைமுடி என்னும் மூன்றையுந் தரித்து மூர்த்தி நாயனார் அரசாட்சி செய்த க்ஷேத்திரம். அரிமர்த்தன பாண்டியராஜன் காலத்தில் மாணிக்க வாசக சுவாமிகள் 'தென்னவன் பிரமராயன்' என்னும் பெயருடன் மந்திரியாயிருந்த பட்டணம். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், சமண சமயத்திற் பிரவேசித்திருந்த கூன்பாண்டியருடைய சுரநோயை 'மந்திர மாவது நீறு'' என்னுந்

திருநீற்றுப் பதிகம் ஓதித் தீர்த்தருளியும், "போக மார்த்த பூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் எழுதியிருந்த ஏட்டைக் கனலிலிட்டு வேகாமலெடுத்தும், "வாழ்க அந்தணர்" என்னுந் திருப்பாசுரம் எழுதிய ஏட்டை வைகையாற்றிலே விட்டு நீரை யெதிர்த்துக்கொண்டு செல்லும்படியாகச் செய்தும், இவ்வாறு சமணர்களை வென்று, பாண்டியருடைய கூனை நீக்கி, அவரை நெடுமாறனாக்கிச் சைவருமாக்கிப் பாண்டியநாடு முழுவதும் பரவியிருந்த சமண் இருளைப் போக்கிச் சைவ ஒளியைப் பரப்பிய திருப்பதி. அரசருடைய மனைவியாரும் சைவ சிரோமணியுமாகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாராலே "மங்கையர்க்கரசி" என்னும் தேவாரத் திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்படும்படியான பெரும்பாக்கியத்தைப் பெற்று வாழ்ந்திருந்த வளநகர். கோயில் மிகப் பெரிது. பெரிய பிராகாரம். ஆடிவீதி யெனப்பெறும் பஞ்ச சபைகளில் ஒன்றாகிய ரஜந சபையை (வெள்ளியம்பலத்தை) உடைய ஸ்தானம்.

எல்லாம்வல்ல சித்தருதிருவுருவமுடைய சுவாமி கோயிலில் வாயுதிக்கில் இருக்கின்றது. மீனாட்சியம்மன் சந்நிதிக்கெதிரிலுள்ள கிளி மண்டபத்தில் ஸ்தல விநாயகராகிய சித்தி விநாயகர், சுப்ரமண்ய ஸ்வாமி இவர்கள் சந்நிதானங்கள் இருக்கின்றன. கோயிலுக்குள் அம்மன் சந்நிதிக்குத் தென் கீழ்பால் பொற்றாமரைத் தடாகம் இருக்கின்றது.

நாகமுமிழ்ந்த விஷத்தைச் சிவபெருமான் நீக்கி அமுதத்தால் மதுரமாக்கின காரணத்தால் 'மதுரை' என்னும் பெயர் போந்தது.

IV விஷ்ணு ஸ்தலம்

திருமோகூர்

மூலவர் : காளமேகப் பெருமாள். நின்ற திருக்கோலம். வலது கையில் வரதஹஸ்தம், இடது கையில் கதை, கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர் : திருமோகூர் ஆப்தன் (பஞ்சாயுதங்களுடன்)

தாயார் : மோகூர்வல்லி (மோஹனவல்லி, மேகவல்லி) தனிக் கோவில் நாச்சியார்

தீர்த்தம் : க்ஷீராப்தி புஷ்கரிணி

விமானம் : கேதகி விமானம்

ப்ரத்யக்ஷம் : ப்ரஹ்மா, இந்த்ரன், அஜருத்ரர்

வழி : மதுரையிலிருந்து மேலூர் போகும் பேருந்தில் ஒத்தக் கடை என்னும் ஊரின் வழியாகச் சுமார் 11 கி. மீ. போக வேண்டும்.

சிறப்புக்கள் : பள்ளிகொண்ட பெருமாள் ஸந்நிதி ஒன்றும் உண்டு. ஆதி சேஷனுக்கும் தங்க கவசங்கள் சாத்தப்பட்டுள் ளன. திருப்பதி ஜீயர் அவர்கள் கல்யாண மண்டபம் இப் போது கட்டியிருக்கிறார்கள். சக்கரத்தாழ்வார்க்கு இப்போது புகழ் ஏற்பட்டு சதா நூற்றுக்கணக்காண மக்கள் வந்து தரி சனம் செய்து போகிறார்கள்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்	திருவாய்மொழி 10-1 பதிகம்
நம்மாழ்வார்	சிறிய திருமடல்

அபிமான தலம்

திருவாதவூர்

இறைவன்: திருமறைநாதர்

இறைவி: வேத நாயகி அம்மாள்

வழி: விஷ்ணு ஸ்தலம் திருமோகூரிலிருந்து 3 கி.மீ.

சிறப்புக்கள்: மாணிக்க வாசகர் ஜெனன ஸ்தலம்

V திருமாலிருஞ் சோலை (அழகர் கோவில்)

மூலவர்: அழகர், கள்ளழகர், மாலாங்காரர், மாலிருஞ் சோலை நம்பி என்ற பெயர்களுண்டு. நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார்: சுந்தரவல்லி என்றும் ஸ்ரீதேவி என்றும் பெயர். (தனிக்கோயில் நாச்சியார்)

தீர்த்தம்: நூபுரகங்கை, சிலம்பு ஆறு

ஸ்தல விருக்ஷம்: வ்ருக்ஷபகிரி, சந்தண விருக்ஷம்

விமானம்: சோமசுந்தர விமானம்

ப்ரத்யக்ஷம்: மலயத்வஜ பாண்டியன், தர்மதேவதை

வழி: மதுரையிலிருந்து 19 கி.மீ.

சிறப்புக்கள்: மூலவர், உற்ஸவர் இருவரும் பஞ்சாயுதங்களுடன் விளங்குகின்றனர். உற்ஸவர் முழுவதும் தங்கத்தால் ஆனவர் என்று சொல்லப்படுகிறது. பதினெட்டாம் படி கறுப்பு என்ற தேவதை காக்கும் கோபுரவாசல் இப்போது திறக்கப்படுவதில்லை. வடபுறமுள்ள பெரிய கதவு வழியாகவே உள்ளே போகவேண்டும். 4 கி.மீ. தூரம் மலை ஏறிச் சென்றால், அங்கு சிலம்பாறு (நூபுரகங்கை) என்ற சிறிய அருவியில் தீர்த்தமாடலாம். இப்போது இங்கு கார்களும் போகும்படி தார் போட்ட பாதை அமைக்கப்

பட்டுள்ளது. இந்த மலைக்குச் சுற்றுப்புறமுள்ள மலைகள் பசுப்போலவும் இந்த மலை ரிஷபம் போலவும் காட்சியளிப்ப தால் 'வ்ருஷபாத்ரி' என்ற பெயர் உண்டாயிற்று. 'வனகிரி' என்ற பெயரும் உண்டு. திரிவிக்ரமா வதாரத்தின் பொழுது, பிரம்மா பகவான் பாதத்தில் கமண்டலத்தினால் தீர்த்தம் சேர்த்து, பகவான் தண்டை சலங்கையில் பட்ட நீர் தெரித்து இங்கே விழுந்து நதியாகப் பிரவகித்தபடியால், சிலம்பாறு என்று பெயர் உண்டாயிற்று. இங்கே க்ஷேத்ர பாலருக்கு ஒரு ஸந்நிதி உண்டு. அர்ச்சகர்கள் கோவில் சாவியை இரவில் இவரிடம் ஒப்படைத்துப் போவதாக ஐதீகம். ராமாநுஜர், ஸ்ரீமணவாள மாமுனிகள் மங்களா சாஸனம் செய்த ஸ்தலம். பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் இடம்பெற்ற பண்டைய ஸ்தலங்கள் இவை.

மங்களா சாஸனம்

பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் பேயாழ்வார்	இரண்டாந் திருவந்தாதி 54, திருவாய்மொழி 2-10 பதிகம் முதலிசன பெரியாழ்வார் திருமொழி 4 2 பதிகம் முதலியன நாச்சியார்
பூதத்தாழ்வார் நம்மாழ்வார்	திருமொழி 9ம் பதிகம், பெரிய திருமொழி 9-8 பதிகம் முதலியன.

8. திருஆப்பனூர்

திருஆப்புடையார் கோயில்

இறைவன் : திருவாப்புடையார், ஆப்பனூரப்பர்

இறைவி : குரவங்கமழ் குழலம்மை, அம்பிகையம்மன்

தீர்த்தம் : இடபதீர்த்தம்

பதிகம் : சம் 1.

வழி: மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மை கோயிலுக்கு வடக்கே $1\frac{3}{4}$ கி.மீ. மத்தியில் வைகையாறு ஓடுகின்றது.

சிறப்புக்கள்: சோழாந்தகன் என்னும் பாண்டியராஜன் நிமித்தம் சிவபெருமான் ஓர் ஆப்பினிடத்தில் தோன்றி அருளிய ஸ்தலம். ஸ்வாமிக்கு 'இடபபுரேசர்' என்னும் பெயருண்டு. அருச்சகராகிய சைவ வேதியருக்காக அவர் உலையிலிட்ட வைகையாற்று மணலை அன்னமாக்குவித்த மையால் 'அன்னவிநோதன்' என்ற பெயருண்டு. நடேசர் விக்கிரகமும், சிவகாமியம்மை விக்கிரகமும் சிலையிலும் செப்பிலும் நன்றாயமைந்திருக்கின்றன.

9. திருப்பரங்குன்றம் (பரங்கிரி)

இறைவன்: பரங்கிரி நாதர்

இறைவி: ஆவுடை நாயகி

தீர்த்தம்: சரவணப் பொய்கை

பதிகம்: சம் 1, சுந் 1

வழி: புகைவண்டி நிலையம். மதுரை (7) லிருந்து தென் மேற்கே 6 கி.மீ.

சிறப்புக்கள்: முருகக் கடவுளுடைய ஆறுபடை வீடுகளிலும் மூதன்மையானது. அவர் தெய்வானையம்மையை மணந்த ஸ்தலமும் இதுவே. முருகவேளுக்கு அருகில் தேவசேனையும் நாரதரும் உள்ளனர். சரவணப் பொய்கை கோயிலுக்குக் கிழக்கிலுள்ளது. மலையைச் சுற்றிவர அரைமணி நேரம் ஆகும். மலைமேற் 'காசி தீர்த்தம்' என்றொரு தீர்த்தம் இருக்கின்றது. அதனுள் மீன்கள் ஊதா வர்ணமாயும் பொன்னிறமாயும் இருக்கின்றன். அவல் போட்டாற் சாப்பிடுகின்றன.

10. திரு ஏடகம்

இறைவன்: ஏடக நாதர்

இறைவி: ஏலவார் குழலி, உமாதேவி

தீர்த்தம் : வைகை நதி

பதிகம் : சம் 1

வழி: மதுரை (7) விருந்து வடமேற்கே 20 கி.மீ.

சிறப்புக்கள்: திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் சமணர்களுடன் வாது செய்தபொழுது, "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பாசுரம் எழுதிவிட்ட ஏடு வைகையாற்றின் நீரை யெதிர்த்துச் செல்ல, நாயனார் "வன்னியுமத்தமும்" என்னுந் திருப்பதிகம் பாடினவுடன் அவ்வேடு தனக்கருகில் ஒதுங்கி நிற்கப்பெற்ற ஸ்தலம். இதனால் ஸ்வாமிக்கு "ஏடகநாதேசுரர்" என்றும், தலத்துக்கு "ஏடகம்" என்றும் பெயர் போந்தன. திருமால், கருடன், சேடன் (ஆதி சேடன்), சாத்தனார் இவர்கள் பூசித்த ஸ்தலம். கோயில் பெரிது. கோயிலுக்குப் பின்பக்கம் வைகை ஆறு தெற்கு நோக்கி ஓடுகின்றது.

விஷ்ணு ஸ்தலம்

VI திருக்கூடல் (கூடலழகர் ஸந்நிதி - மதுரை)

மூலவர் : கூடலழகர், வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : மதுரவல்லி, (தனிக்கோவில்) நாச்சியார், இவருக்கு வகுளவல்லி, வரகுணவல்லி. மரகதவல்லி என்ற பெயர்களும் உண்டு.

தீர்த்தம் : ஹேம புஷ்கரிணி, சக்ர தீர்த்தம், க்ருதமாலாநதி, வைகைநதி

விமானம் : அஷ்டாங்க விமானம்

ப்ரத்யக்ஷம்: பிருகு, ஸௌநகாதிகள், பெரியாழ்வார்

வழி: மதுரை ஊரில் திருவள்ளுவர் பேருந்து நிலையம் அருகில் கூடலழகர் ஸந்நிதி உள்ளது.

சிறப்புக்கள்: பெரியாழ்வார் பல்லாண்டு பாடிய இடம் இது. மேல் தளத்துக்குச் சென்றால் அஷ்டாங்க விமானத்தைப் பார்க்கலாம். இதில் ஒரு தட்டில் பள்ளிகொண்ட பெருமாள் சயன திருக்கோலத்திலும், மற்றொரு தட்டில் ஸ்ரீ நாராயணன் நின்ற திருக்கோலத்திலும் உள்ளனர். இவர்களுடைய திருமேனிகள் வர்ணம் பூசப் பெற்றவை. மிகவும் அழகான மூர்த்திகள். வைஷ்ணவ ஆலயங்களில் இங்கு மட்டுமே நவக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஒரு சமயம் வையகமெங்கும் அதிகமாக மழை பெய்த பொழுது பக்தர்களின் பிரார்த்தனைக்குக் கட்டுப்பட்டு, பகவான் நான்கு மேகங்களை ஏவ, அவைகள் இத்தலத்தில் மாடங்கள் போல் ஒன்றுகூடி மழையைத் தடுத்துவிட்டன. மேகங்கள் ஒன்று கூடியதால் இத்தலத்திற்குத் திருக்கூடல் என்ற பெயர் ஏற்பட்டதாக ஐதீகம்.

மங்களா சாஸனம்

திருமங்கையாழ்வார்	}	திருப்பல்லாண்டு 1.
பெரியாழ்வார்		பெரிய திருமொழி 9-2-5.

11 திருப்பூவணம்

இறைவன் : பூவண நாதர்

இறைவி : மின்னனையாளம்மை

தீர்த்தம் : வைகை

மரம் : பலா

பதிகம் : சம் 2, அப் 1, சுந் 1.

வழி : புகைவண்டி நிலையம். மதுரைக்குக் கிழக்கே 19 கி.மீ.

சிறப்புக்கள் : பொன்னனையாள் என்னும் நாட்டிய நங்கைக்காக ஸ்வாமி சித்திராயெழுந்தருளி வந்து, இரசவாதஞ் செய்து கொடுத்த பொன்னைக்கொண்டு, அவள் ஸ்வாமியின் திருவுருவஞ் செய்வித்து மகிழ்ந்த ஸ்தலம்.

'தென்னர், சேரர், சோழர் ஆகிய தமிழ் நாட்டு மூவேந்தர்கள் பூஜித்து வணங்கின ஸ்தலம். 'புஷ்பவன காசி' எனப்படும். பிரமன் பூஜித்த ஸ்தலம்.

கோயிலிற் கொடுங்கைகள் திருப்பெருந்துறையிற்போலச் செய்யப்பட்டிருக்கின்றன. நடராஜர்-சிலா விக்ரகம்.

திருப்பூவணத்துக்கு வடகிழக்கு 16 கி.மீட்டரில் திருவாதவூர் இருக்கின்றது. அது மதுரையில் இருந்து 22 கி.ட.

12. திருச்சுழியல்

இறைவன்: திருமேனிநாதர்

இறைவி: துணை மாலையம்மை

தீர்த்தம்: பிரளய தீர்த்தம்

பதிகம்: சுந் 1

வழி: திருப்பூவணத்திலிருந்து (11) கிழக்கே 24 கி.மீ.

சிறப்புக்கள்: பார்வதி தேவியார் தம்மைச் சிவபெருமான் பணம்புரியும்படி பூஜித்த ஸ்தலம். சதானந்த முனிவர் முதலியோரும் பூசித்த ஸ்தலம். கோயிலுக்கு எதிரில் உள்ள தீர்த்தத்துக்குக் "கௌவைக்கடல்" என்னும் பெயர் தேவாரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

VII திருத்தண்கால் (திருத்தண் காலூர்)

மூலவர்: நின்ற நாராயணன், கிழக்கே திருமுக மண்டலம்

உத்ஸவர்: திருத்தண்காலப்பன்,

தாயார்: செங்கமலத்தாயார் (தனிக்கோவில் நாச்சியார்) அன்னநாயகி, அனந்த நாயகி, ஜாம்பவதி, என்ற திருநாமங்களும் உண்டு

தீர்த்தம்: பாபவிநாச தீர்த்தம்

விமானம்: தேவசந்த்ர விமானம்

ப்ரத்யக்ஷம்: சல்ய பாண்டியன், புலி, ஸ்ரீ வல்லவன், ஸ்ரீதேவி

வழி: புகைவண்டி நிலையம் விருது நகர்-தென்காசி புகை வண்டிப் பாதையில் உள்ளது.

சிறப்புக்கள்: கோவில் குன்றின்மேல் உள்ளது. நின்ற நாரயணன் ஸந்நிதியில் வலதுபுறம் ஸ்ரீதேவி (அன்ன நாயகி), நீளாதேவி (அனந்த நாயகி) இடதுபுறம் பூதேவி (அம்ருத நாயகி) ஜாம்பவதி, உள்ளனர். எல்லாத் திருமேனிகளும் வர்ணம் பூசப்பெற்ற ஸீதையால் ஆனவை. எனவே திரு மஞ்சனம் கிடையாது. கீழே, கிடந்த திருக்கோலப் பெருமாளும் அப்படியே. செங்கமலவல்லித் தாயாருக்கு மட்டும் தினந்தோறும் எண்ணெய்க் காப்பு திருமஞ்சனம் உண்டு. இங்கு, கருடாழ்வார் ஸர்ப்பத்துடனும் அம்ருத கலசத்துடனும் காணப்படுகிறார். முருகன் இங்கு தங்கிய தால் இவ்வூருக்குத் "திருத்தங்கல்" என்ற பெயர் ஏற்பட்ட தாம். ஸ்ரீ கிருஷ்ணனின் பௌத்ரன் அநிருத்தன் உஷையை மணந்த ஸ்தலம். சந்த்ரகேது என்ற மன்னன் ஏகாதசி உபவாஸம் இருந்து துவாதசி பாரணைக்குமுன் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தபடியால் புலியாகப் பிறந்து இந்த க்ஷேத்ரம் வந்து பூர்வஜன்ப ஞாபகம் ஏற்பட்டு, பகவானைப் பூஜை செய்து மோக்ஷம் அடைந்த ஸ்தலம்.

ஸ்ரீ தேவி இத்தலத்தில் தவம் செய்து பகவான் உகந்து "எல்லா மஹஷிகளையும் விட எனக்கு நீயே மிகவும் பிரிய மானவள். இந்த நகரத்திற்கு ஸ்ரீ புரம் என்ற பெயர் உண் டாக வேண்டியது" என்று வரம் கொடுத்ததாக வரலாறு.

மங்களாசாஸனம் :

திருமங்கையாழ்வார்	இரண்டாம் திருவந்தாதி 70,
பூதத்தாழ்வார்	பெரிய திருமொழி 5-6-2.

VIII திருவில்லிபுத்தூர் (ஸ்ரீ வில்லிபுத்தூர்)

மூலவர்: வடபத்ரசாயீ (ரங்கமன்னார்) புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: ஆண்டாள் (கோதா நாச்சியார்)

தீர்த்தம்: திருமுக்குளம்

விமானம்: ஸம்சன விமானம்

ப்ரத்யக்ஷம்: மண்டுகமுனி, பெரியாழ்வார்

வழி: புகைவண்டி நிலையம். தென்காசி - விருது நகர் புகைவண்டிப் பாதையில் உள்ளது. திருத்தங்கலிலிருந்து சுமார் 19 கி,மீ

சிறப்புக்கள்: ஆண்டாளும், பெரியாழ்வாரும் அவதரித்த ஸ்தலம். ஆண்டாள் ரெங்கநாதரை மணந்த ஸ்தலம். ரங்க மன்னாருக்கு வலதுபுறம் ஆண்டாளும் இடதுபுறம் கருடாழ் வாரும்உள்ளனர் பெருமாளுடன் கருடாழ்வார் நிற்பது இந்தஸ்தலத்தின் விசேஷம். பெருமாள் வடபத்ரசாயீயாயிருந் தாலும் ஆதிசேஷன் உண்டு. வழக்கம்போல் பெருமாளின் நாபிக்கமலத்திலிருந்து பிரம்மா ஸ்ரீதேவி பூதேவியுடன் பக்தர்களான வில்லி, புத்தன் என்ற இரு வேடுவ அரசர் களுடனும் உள்ளனர். இவ்வேடுவர்களால் இந்நகர் கட்டப் பட்டபடியால் வில்லிபுத்தூர் என்று பெயர் வந்துள்ளது. பெரியாழ்வார் ஸந்நிதி ஒன்றும், ஆண்டாள் கண்டெடுக்கப் பட்ட நந்தவனத்தில் துளசிச் செடி பக்கத்தில் ஆண்டாள் ஸந்நிதி ஒன்றும் உள்ளன. ஸ்ரீ ரங்கத்தைப் போல இங்கும் ''அரையர் சேவை'' உண்டு.

பெரியாழ்வார் நந்தவன கைங்கர்யம் செய்துகொண்டு, மாலை பெருமாளுக்குச் சமர்ப்பித்து வருகையில் ஆண்டாள், ஆழ்வாருக்குத் தெரியாமல் பெருமாளுக்குச் சமர்ப்பிக்கும் மாலையைத் தான் அணிந்துகொண்டு கண்ணாடியில் அழகு

பார்க்க, இதனைக் கண்ட ஆழ்வார் ஆண்டாளை கோபிக்க, 'ஆண்டாள்' சூடிக் கொடுத்த மாலையே தமக்கு உகந்தது என்று பெருமாள் கனவில் சொல்ல, அது முதல் கோதை நாச்சியாருக்கு சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்று பெயர் உண்டாயிற்று.

மங்களா சாஸனம்

பெரியாழ்வார்	}	பெரியாழ்வார் திருமொழி 2,2
ஆண்டாள்		நாச்சியார் திருமொழி 5,5

புராண ஸ்தலம்

சங்கரன் கோவில்

இறைவன்: சங்கரலிங்கம்

இறைவி: கோமதி

வழி: திருவில்லிப்புத்தூரிலிருந்து குற்றாலம் போகும் வழியில் உள்ளது.

சிறப்புக்கள்: இது ஒரு பிரார்த்தனை ஸ்தலம். பேய், சூனியம், பைத்தியம் இவைகள் பிரார்த்தனையில் குணமடைகிறது. தேவிக்குச் சங்கரனும் நாராயணனும் தரிசனம் கொடுக்கிறார்கள். ஆடித்தவசுத் திருவிழாவில் மேல்படி வைபவத்தைக் காட்டி நடக்கிறது.

13 திருக்குற்றாலம்

இறைவன்: குறும்பலா ஈசர்

இறைவி: குழல்வாய் மொழியம்மை

தீர்த்தம்: சித்ரா நதி

மரம் : குறும்பலா மரம்

பதிகம் : சம் 2.

வழி : ஸ்ரீ வில்லிப்புத்தூரிலிருந்து (VIII) 83 கி.மீ. தென்காசி புகைவண்டி நிலையத்துக்கு மேற்கே 5½ கி.மீ.

சிறப்புக்கள் : இத்தலத்திற் குறும்பலா விருக்ஷம் இருத்தலால் இதற்குக் குறும்பலா என்று பெயருண்டு. 'திரிகூடாசலம்' என்றும் குற்றாலத்திற்குப் பெயர். விஷ்ணு ரூபமாயிருந்த மூர்த்தி அகஸ்திய முனிவரால் சிவலிங்க ரூபமான ஸ்தலம்.

பஞ்ச சபைகளில் ஒன்றாகிய சித்திர சபையையுடையது. இத்தலத்துத் தேவியார் திருநாமம் 'குழல்வாய்மொழி மங்கை.'

மலையடிவாரத்திற் கோயிலும், பிரபலமான மலை வீழ் அருவிவுமிருக்கின்றன- பிராகாரத்தின் ஓரிடத்தில் ''பஞ்சதரிசனம்'' (விநாயகர், இலிங்கம், கோபுரம், மலை, மலை வீழருவி) கிடைக்கின்றது. கோயிலுக்கு வடக்கு சற்றுத் தூரத்தில் சித்திரசபை இருக்கின்றது. இதனை வலம் வரலாம். இங்கு நடராஜமூர்த்தி சுவரிற் சித்திர ரூபமாக இருக்கின்றார். இதற்குச் சமீபத்தில் ''கூத்தர் கோயில்'' இருக்கின்றது.

மேலகரம்-திரிகூடராசப்ப கவிராயர் இயற்றிய திருக்குற்றாலத் தலபுராணத்தில் தலப்பெருமையைக் காட்டும் பாடல்கள் இடம்பெறுகின்றன. இதற்கு 2 கி.மீட்டரில் திருப்புகழ் பெற்ற இலஞ்சி என்னும் சுப்ரமண்ய ஸ்தலத்திற் பார்வதி பந்மேசுரர் சந்நிதிகளும் உள்ளன.

தென்காசிக்கு 12 கி.மீட்டரில் திருமலை என்னும் சுப்பிரமணிய க்ஷேத்திரம் இருக்கின்றது. மலை உயரமானது. ஸ்தல விருக்ஷம்-புளிய மரம். மலைமேற் சுனைக்கரையில் கன்னியர்கள் சந்நிதானமும், உயர்நிலையில் உச்சிப் பிள்ளையார் கோயிலும் இருக்கின்றன.

புராண ஸ்தலங்கள்

பாபநாசம் (பொதியமலை)

இறைவன்: பாபநாசர்

இறைவி: உலகநாயகி

தீர்த்தம்: தாம்பரபரணி

வழி: அம்பா சமுத்திரம் புகைவண்டி நிலையத்தில் இருந்து 11 கி.மீ.

சிறப்புக்கள்: ஸ்நான விசேஷம். ஆடி அமாவாசை, தை அமாவாசை முக்கியம். சித்திரை முதல் தேதி திருமண உற்சவம். அகத்தியருக்கு. கல்யாண காட்சி. நீர்வீழ்ச்சி உள்ள இடம்.

மன்னார்கோயில்

இறைவன்: மன்னார் பெருமாள்

வழி: அம்பாசமுத்திரத்திலிருந்து 4 கி.மீ.

சிறப்புக்கள்: திருமழிசையாழ்வார் முக்திபெற்ற இடம்.

14 திருநெல்வேலி

இறைவன்: நெல்லையப்பர், வேணுவனநாதர்

இறைவி: காந்திமதியம்மை, வடிவுடைமங்கை

மரம்: மூங்கில்

தீர்த்தம்: தாம்பரவருணி

பதிகம்: சம் 1

வழி: புகைவண்டி நிலையம். குற்றாலத்திலிருந்து 76½ கி.மீ.

சிறப்புக்கள்: பஞ்ச சபைகளில் ஒன்றாகிய தாம்பிர சபையை உடைய ஸ்தலம். சிவபெருமான் தம்முடைய நைவேத்தியத் துக்காகத் தேவ சருமா என்னும் பிராமணர் யாசித்துக் கொண்டுவந்து உலர்த்தி வைத்திருந்த நெல்லை வெள்ள மடித்துப் போகா வண்ணம் வேலி கட்டிக் காத்தருளிய படியால் இந்தத் தலத்துச்குத் திருநெல்வேலி யெனப் பெயர் வந்தது. மிகப்பெரிய கோயில். திருமால், பிரம்மா, அகத்தியர் பூசித்தது. நெல்லையப்பர், வேணுவன நாதர் என இரண்டி சந்நிதிகளுள்ளன. இறைவன் மூங்கிலிற் றோன்றிய காரணத்தால் 'வேய்முத்த நாதர்' என்னும் திருப்பெயர் கொண்டனர்.

தாருகாவன விசேஷங்கள் இங்கு நடந்தன என்பர். ஸ்ரீ காந்திமதியம்மை சந்நிதி தனியாக இருக்கின்றது. ஆறுமுக நாதர் (நயினார்) சந்நிதானம் பிரகாரத்திலிருக் கின்றது. இராவணன் கயிலையை எடுப்பது போன்ற விமான மண்டபம் ஒன்றும் பிரகாரத்தில் உள்ளது. தேவி கோயிலுக்கருகில் திருக்குளம் (பொற்றாமரை) இருக்கின்றது.

அகஸ்தியர், பிரம்மா, விஷ்ணு, முதலியோர் பூசித்த ஸ்தலம்.

VIV விஷ்ணு ஸ்தலம்

திருவைகுண்டம் (ஆழ்வார் நவ திருப்பதிகளில் ஒன்று)

மூலவர்: ஸ்ரீ வைகுண்ட நாதன், கள்ளப்பிரான், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: வைகுந்த்வல்லி, பூதேவி (இரண்டும் தனிக்கோவில் நாச்சியார்கள்)

தீர்த்தம்: பிருகு தீர்த்தம், தாமிரவருணி நதி.

விமானம்: சந்திர விமானம்

ப்ரத்யக்ஷம் : பிருகு சக்ரவர்த்தி, இந்திரன்

வழி : இது திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில் சென்றால் வழியில் ஸ்ரீ வைகுண்டம் நிலையத்தில் இருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருநெல்வேலியிருந்தும் பேருந்து மூலம் வரலாம்.

சிறப்புக்கள் : ஆதிசேஷன் குடைபிடிக்க, பெருமாள் நின்ற திருக்கோலத்தில் இருப்பது தனிச்சிறப்பு. கால தூஷகன் என்ற சோரன் (திருடன்) தான் திருடிய பொருளில் பாதி வைகுண்டநாதனுக்குச் சமர்ப்பித்ததாகவும், ஒரு சமயம் அரண்மனையில் திருடுகையில் பிடிபட்டு வைகுண்டநாதனைத் தியானம் செய்ய, பகவான் திருடன் வேடம் பூண்டு அரசனுக்குத் தத்துவங்களை உபதேசித்து, காலதூஷகன் திருடன் அல்ல யோகி என்று அரசன் நினைக்க, பகவான் ப்ரத்யக்ஷமாகித் திருடனுக்கும் அரசனுக்கும் நட்பு உண்டாக்கி அரசன் பிரார்த்தனைப்படி பகவான் "கள்ளப்பிரான்" என்ற திருநாமம் பெற்றார். ஸோமகன் என்னும் அசுரன் சதுர்முகனுடைய ஞானத்தை அபஹரித்ததாகவும், பிரம்மா இவ்விடத்தில் தவம் செய்து, பகவான் ப்ரத்யக்ஷமாகி, அசுரன் அபஹரித்த சிருஷ்டி சாமர்த்திய ஞானத்தைக் கொடுத்ததாக வரலாறு.

மங்களா சஸானம்

நம்மாழ்வார்: திருவாய்மொழி 9,2,4

X திருவரகுணமங்கை

(ஆழ்வார் நவதிருப்பதிகளில் ஒன்று)

மூலவர்: விஜயாஸனப் பெருமாள், ஆதிசேஷன் குடைபிடிக்க வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: வரகுணவல்லித் தாயார், வரகுணமங்கைத் தாயார், உபயநாச்சிமார்

தீர்த்தம்: அக்னி தீர்த்தம், தேவ புஷ்கரிணி

விமானம்: விஜயகோடி விமானம்

ப்ரத்யக்ஷம்: அக்னி, ரோமசமுனிவர், சத்தியவான்

வழி: திருநெல்வேல-ஸ்ரீ வைகுண்டம் புகைவண்டிப் பாதையில் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து, கிழக்கே 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. நத்தம் என்றால்தான் பலருக்குத் தெரியும்.

சிறப்புக்கள்: வேதவித் என்னும் பிராமணன் இத்தலத்தில் விஷ்ணுவைக் குறித்துத் தவமிருந்து பகவான் பிரத்யக்ஷமான போது அவர் பிரார்த்தித்தபடி ''விஜயாஸனர்'' என்ற திருநாமம் பகவானுக்கு ஏற்பட்டதாக ஐதீஹம்.

மங்களா சாஸனம்

நம்மாழ்வார்: திருவாய்மொழி 9, 2, 4 பதிகம்

XI திருப்புளிங்குடி (ஆழ்வார் நவதிருப்பதி)

மூலவர்: காய்சின வேந்தன், புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: மலர்மகள் நாச்சியார், பூமகள் நாச்சியார், (பெரிய திருவுருவங்கள்), புளிங்குடிவல்லி என்ற சிறிய உத்ஸவத் தாயாரும் உண்டு.

தீர்த்தம்: வருண, நீர்ருதி தீர்த்தம்

விமானம் : வேதஸார விமானம்

ப்ரத்யக்ஷம்: வருணன், நிர்ருதி, தர்மராஜன் நரர்

வழி: வரகுணமங்கையிலிருந்து (X) சுமார் 1 கி.மீ. தூரம் அதே சாலையில் சென்று அடையலாம். ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து வந்தால் 3 கி.மீ. அதிகம்.

சிறப்புக்கள்: பெருமாள் திருவயிற்றிலிருந்து தாமரைக் கொடி தனியாகக் கிளம்பிச் சென்று சுவரிலுள்ள பிரம்மா வின் தாமரை மலருடன் சேர்ந்துகொள்கிறது. பாதங்களை வெளிப் பிரகாரத்திலிருந்து ஒரு ஜன்னல் வழியாகப் பார்க்க வேண்டும். உள்ளேயே ஊன்றிப் பார்த்தால் ஒரு பாதம் சேவையாகிறது. இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஷம் விடு பட்ட ஸ்தலம். வசிட்ட புத்திரர்களால் ராட்சசனாகச் சபிக்கப்பட்ட யக்ஞசர்மா என்ற பிராமணன் பகவான் அடி பட்டு, சாபவிமோசனம் ஆனதாக ஸ்தல வரலாறு. பெருமாள் தாயார் திருநாமங்கள் ஆழ்வார் குறித்தவை. "காய்சின வேந்து" என்பதைச் சிலர் "காசினிவேந்து" எனக் கொண்டு அதற்கேற்ற வடமொழிப் பெயர் "பூமிபாலர்" என்பது என மயங்குகின்றனர். "பூமிபாலர்" என்பது "வேந்து" என் பதன் மொழிபெயர்ப்பு மாத்திரமே என உணர்க.

மங்களா சாஸனம்

நம்மாழ்வார்: திருவாய்மொழி 9, 2 பதிகம்

XII திருக்குளந்தை

(பெருங்குளம், ஆழ்வார் நவதிருப்பதி)

மூலவர்: ஸ்ரீ நிவாஸன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: மாயக்கூத்தன்

தாயார்: அலாமேலு மங்கைத் தாயார், குழந்தைவல்லி என்று இரண்டு உபயநாச்சியார்கள்.

தீர்த்தம்: பெருங்குளம்

விமானம்: ஆனந்த நிலய விமானம்

ப்ரத்யக்ஷம்: பிரகஸ்பதி

வழி : திருப்புளிங்குடியிலிருந்து (XI) அதே சாலையில் இன்னும் 9½ கி.மீ. சென்று அடைய வேண்டும். ஸ்ரீவைகுண்டத்திலிருந்து வடகிழக்கே 11 கி.மீ. 'ஏரல்' பேருந்திலும் வரலாம்.

சிறப்புக்கள் : கருடனும், உத்ஸவராகப் பெருமாள் பக்கத்தில் எழுந்தருளியிருக்கிறார். வேத சாரன் என்ற அந்தணனுக்குக் கமலாவதி என்று ஒரு கன்னிகை பிறந்து, அவள் கடவுளையே கணவனாக அடையத் தவம் புரிந்து, மஹாவிஷ்ணு பிரத்தியக்ஷமாகி தம் கௌஸ்துவ மணியுடன் அவளைச் சேர்த்து ஆலிங்கனம் செய்து, விவாஹம் செய்துகொண்டதாகவும், பாலிகை தவம் செய்த இடமாதலால், "பாலிகை வனம்" என்ற பெயரை அடைந்ததாகவும் புராண வரலாறு.

இத்தலத்தில் அச்மஸாரன் என்ற அசுரனைப் பாலிகா வனத்தில் மாயாயுத்தம் செய்து அவன் காலைப் பிடித்து ஸம்ஹரித்துத் தேவர்கள் பிரார்த்தனைப்படி மாயக்கூத்தன் என்ற திருநாமம் பெற்றதாக வரலாறு.

மங்களா சாஸனம் :

நம்மாழ்வார் : திருவாய்மொழி 8, 2, 4.

XIII திருத்தொலைவில்லி மங்கலம்
(ஆழ்வார் நவதிருப்பதிகளில் இரண்டு)

முதல்கோவில்

மூலவர் : ஸ்ரீநிவாஸன் (தேவப்பிரான்), நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : உபய நாச்சியார்கள்

இரண்டாவது கோவில்

மூலவர் : அரவிந்தலோசனன், செந்தாமரைக் கண்ணன். வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : கருந்தடங்கண்ணி நாச்சியார்

தீர்த்தம் : வருண தீர்த்தம், தாமிரபரணி ஆறு

விமானம் : குமுத விமானம்

ப்ரத்யக்ஷம் : இந்திரன், வாயு, வருணன்

வழி : திருக்குளந்தை (XII) லிருந்து 1½ கி.மீ. மங்கலக் குறிச்சி என்ற ஊர் வந்து அங்கிருந்து வாய்க்கால் கரை மேலேஉள்ள கப்பிப் பாதையில் 3 கி.மீ. வந்து வாய்க்காலைக் கடந்து இவ்வூருக்கு வரலாம். ஆழ்வார் திருநாரியிலிருந்தும் 3கி மீ கிழக்கே வந்து தாம்பரபரணி ஆற்றைக் கடந்து இங்கு வரலாம்.

சிறப்புக்கள்: இக்கோவில்கள் காட்டில் உள்ளன. அருகில் வெகு தூரத்துக்கு வீடுகளோ மனித நடமாட்டமோ இராது. அரிச்சகர் இருக்கும் நேரம் தெரிந்து கொண்டோ, அல்லது அவருடனோ போக வேண்டும். அத்திரேய ஸுப்ரபர் என்கிற முனி இத்தலத்தில் யாகசாலை எற்படுத்தி ரித்விக்குகளுடன் யாகசாலையைச் சோதித்தபொழுது, அவ்விடத்தில் மிகவும் பிரகாசித்த தராசையும் வில்லையும் கண்டு ஆச்சரியப்பட்டு எடுத்தபொழுது தராசு ஒரு பெண்ணாகவும் வில் ஒரு புருஷனாகவும் குபேர சாபத்திலிருந்து விடுபட்டதாகவும், இங்கே துலையும் வில்லும் முக்தி அடைந்தபடியால் "துலைவில்லி மங்கலம்" என்று இந்த ஸ்தலத்திற்குப் பெயர் உண்டானதாகப் புராண வரலாறு.

இரண்டு திருப்பதிகள் இருப்பதால், இரட்டைத் திருப்பதி என்று அழைக்கப்படுகிறது. அச்வினி தேவர்களுக்கு பகவான் அருளால் யாகத்தில் பாகம் கொடுத்த ஸ்தலம்.

மணவாள மாமுனிகள் மங்களா சாஸனம் செய்த பெருமாள் இவர்.

மங்களா சாஸனம்

நம்மாழ்வார்: திருவாய்மொழி 6, 5, பதிகம்

XIV திருக்குருகூர்

(ஆழ்வார் திருநகரி-ஆழ்வார் நவதிருப்பதியில் ஒன்று)

மூலவர்: ஆதிநாதன், ஆதிப்பிரான், பொலிந்து நின்ற பிரான், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார்: ஆதிநாதவல்லி, குருகூர் வல்லி, என்று 2 தனிக் கோயில் நாச்சியார்கள்

தீர்த்தம்: பிரம்ம தீர்த்தம், தாம்பரபரணி நதி

ஸ்தல வ்ருக்ஷம்: புளிய மரம்

விமானம்: கோவிந்த விமானம்

ப்ரத்யக்ஷம்: ப்ரஹ்மா, மதுரகவி, நம்மாழ்வார்

வழி: புகைவண்டி நிலையம். ஸ்ரீ வைகுண்டம் (IX) இருந்து 5 கி.மீ. பேருந்து மூலம் வரலாம்.

சிறப்புக்கள்: தாமாகத் தோன்றிய பெரிய திருமேனியுடைய மூலவரின் பாதங்கள் பூமிக்குள் இருப்பதாக வரலாறு. நம்மாழ்வார் அவதார வரலாற்றைத் திருப்பதிசாரம் என்ற ஸ்தலத்திற்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவருடைய ஸந்நிதி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கும் ஸ்ரீரங்கத்தில்போல் அரையர் சேவை நடக்கிறது. திருமஞ்சனத்தின் போது பிரபந்தங்களையும், புருஷஸூக்தத்தையும் தாளம் போட்டுக்கொண்டே சொல்கின்றனர்.

இங்கு ஆழ்வார் பொந்தில் வீற்றிருந்த புளியமரம் (திருப்புளி ஆழ்வார்), காட்சியளிக்கிறது. இதுதவிர ஞானப்பிரான் என்ற திருநாமத்துடன், வராஹப்பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். மணவாள மாமுனிகளால் நிர்வஹிக்கப்பட்ட இக்கோயிலில், ஸ்ரீரங்கம் போல், மாதந்தோறும் ஒவ்வொரு ஆழ்வாரின் திருநக்ஷத்திரமும் கொண்டாடப்படுகிறது. இத்

தலத்தில் தங்கி எல்லா எம்பெருமான்களையும் எளிமையாக வணங்கலாம். வைகாசி மாத கருட சேவையில் (விசாகத் தன்று) நவதிருப்பதி பெருமாள், மதுரகவி ஆழ்வார், நம்மாழ் வார் இவர்கள் மங்களா சாஸனம் மிகவும் விசேஷமாக இருக்கும். நம்மாழ்வார் ஹம்ஸவாகனத்தில் எழுந்தருளுவது விசேஷம். இந்திரன் தன் மாதா பிதாக்களை உபசரிக்காமல் சபிக்கப்பட்டு இத்தலத்திற்கு வந்து ஆதிநாதனை வழிபட்டுச் சாப விமோசனம் அடைந்ததாகப் புராண வரலாறு. இவ் விடத்தில் லக்ஷ்மணன் புளியமரமாக ஆவிர்பவித்ததாகவும், பகவான் அவ்விடம் பிரமச்சரிய யோகத்தில் இருப்பதாகவும் வரலாறு. லக்ஷ்மி பெருமாளை அடைய பிரார்த்திக்க, பகவான் ப்ருஹ்மசர்ய யோகத்தில் இருந்தபடியால் லக்ஷ்மி யை மகிழ மாலையாக மார்பில் தரித்துக் கொண்டதாகவும் ஐதீஹம்.

மணவாள மாமுனிகள் மங்களா சாஸனம் செய்த ஸ்தலம்.

மங்களா சாஸனம்

நம்மாழ்வார்	திருவாய்மொழி 4, 10 பதிகம்
மதுரகவியாழ்வார்	கண்ணி நுண் சிறுத்தாம்பு 1.

XV திருக்கோளூர் (ஆழ்வார் நவ திருப்பதி)

மூலவர் : வைத்தமாநிதி பெருமாள், நிக்ஷேபவித்தன், புஜங்க சயனம். கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : குமுதவல்லி, கோளூர்வல்லி (2 தனிக்கோயில் நாச்சியார்கள்)

தீர்த்தம் : குபேர தீர்த்தம், தாமிரபரணியாறு

விமானம் : ஸ்ரீ கர விமானம்

ப்ரத்யக்ஷம் : குபேரன், மதுரகவி ஆழ்வார்

வழி : தென் திருப்பேரையில்ருந்து (XVI) ஆழ்வார் திருநகரி வரும் வழியில் சுமார் 2 கி மீ. தூரத்தில் ஒரு கிளைப்பாதை யில் திரும்பி ¾ கி.மீ. சென்றால் இதை அடையலாம்.

சிறப்புக்கள் : பார்வதியால் குபேரன் சபிக்கப்பட்டதால், நவநிதிகள் அவளைவிட்டுப் பிரிந்து இத்தலத்தில் பகவானை நாதனாக அடையத் தவம் செய்து, பகவான் ப்ரத்யக்ஷமாகி, நவநிதிகளின் பிரார்த்தனைப்படி "நிக்ஷேபவித்தன்" (வைத்த மாநிதி) என்ற திருநாமம் பூண்டு நிதிகளைக் காத்துவருவதாக ஐதீஹம். இது மதுரகவி ஆழ்வார் அவதார ஸ்தலம் குபேர னுக்கு, சாப விமோசனம் ஆன ஸ்தலம். தர்மம் இந்த ஸ்தலத் திற்கு வந்து நித்யவாஸம் செய்துகொண்டு எம்பெருமானைச் சேவித்துக் கொண்டிருந்த பொழுது அதர்மம் தர்மத்துடன் யுத்தம் செய்து, தோற்று ஓடி விட்டதால், இத்தலத்திற்கு "அதர்ம பிகனம்" என்ற நாமம் உண்டானதாக ஸ்தல வரலாறு.

மங்களா சாஸனம்

நம்மாழ்வார்: திருவாய்மொழி 6,7-ம் பதிகம்

XVI திருப்பேரை
(தென் திருப்பேரை-ஆழ்வார் நவதிருப்பதி)

மூலவர்: மகர நெடுங்குழைக்காதன், நிகரில் முகில் வண்ணன், வீற்றிருந்த திருக் கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார்: குழைக்காது வல்லி நாச்சியார், திருப்பேரை நாச்சி யார் என்று இரண்டு தனிக்கோவில் நாச்சியார்கள் உண்டு

தீர்த்தம்: சுக்ர புஷ்கரிணி, சங்க தீர்த்தம்

விமானம்: பத்ர விமானம்

ப்ரத்யக்ஷம்: சுக்ரன், ஈசாந்யருத்ரர், ப்ரஹ்மா.

வழி: ஆழ்வார் திருநகரி (XV) லிருந்து 5½ கி.மீ. தொலை வில்லி மங்கலம் (XIII) இருந்து ஆற்று வழியே போகலாம்.

சிறப்புக்கள்: இப்பெரிய ஆலயத்தின் கைங்கர்யங்கள் நேரம் தவறாமல் ஒழுங்காகக் கவனிக்கப்படுகின்றன. 'திருப்பேரை' என்பது ஸ்தலப் பெயர் என்று சிலர் கருதுகிறார்கள். லக்ஷ்மியின் வழிப்பாட்டிற்கிணங்க துர்வாசமஹரிஷி பூமிதேவியை லக்ஷ்மியைப்போல் ஆகச் சபித்ததாகவும், பூதேவி துர்வாசர் உபதேசித்த அஷ்டாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டு தவம் இருந்து ''ஸ்ரீ பேரை'' (லக்ஷ்மியின் உடல்) என்னும் நாமத்தைத் தரித்து பங்குனி பூர்ணிமையில் தாம்பரபரணி தீர்த்தத்தில் தர்ப்பணம் செய்ய முயன்ற பொழுது, மகராக் குதியான (மீன்போல் வடிவமுள்ள) இரண்டு குண்டலங்களைக் கண்டு பகவானுக்கு ஸமர்ப்பிக்க 'மகர நெடுங்குழைக் காதலி' என்ற திருநாமம் பூண்டதாகவும், பூதேவி ஸ்ரீ பேரை நாமத்தைத் தரித்ததனால் இத்தலத்திற்கு 'ஸ்ரீதேரை' (திருப்பேரை) என்ற பெயர் ஏற்பட்டதாகவும் ஐதீஹம்.

வருணன் குருவை அவமானம் செய்த பாபம் நீங்க இங்கு பங்குனி பூர்ணிமையில் பகவானுக்குத் திருமஞ்சனம் செய்து பாப விமோசனமடைந்ததாகவும், விதர்ப்ப தேசத்தில் அநாவ்ருஷ்டி உண்டாக அவ்வூர் அரசன் இங்கு பகவானை ஆராதித்து நாட்டில் மழை பெய்து சுபிக்ஷம் உண்டானதாக ஸ்தல வரலாறு.

மங்களா சாஸனம்

நம்மாழ்வார் : திருவாய்மொழி 7, 3 பதிகம்

திருச்செந்தூர்

இறைவன்: சுப்பிரமணியன்

தேவி: வள்ளி, தெய்வானை

வழி: திருநெல்வேலியிலிருந்து 60 கி.மீ. சுப்பிரமணிய ஸ்வாமி சூரஸம்ஹாரம் செய்த ஸ்தலம். அறுபடை வீட்டில் ஒன்று. கடற்கரை ஓரமாக உள்ளது

XVII திருச்சிரீவரமங்கை

(திருச்சிரீவரமங்கல நகர், வானமாமலை, நாங்குனேரி, தோதாத்ரி க்ஷேத்ரம்)

மூலவர்: தோதாத்ரிநாதன் (வானமாமலை) வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர்: தெய்வ நாயகன்

தாயார்: இருபுறமும் உபயநாச்சியார் தவிர சிரீவரமங்கைத் தாயார் (இரண்டு தனிக்கோயில் நாச்சியார்களும் உண்டு)

தீர்த்தம்: இந்த்ர தீர்த்தம், சேற்றுத்தாமரை தீர்த்தம்

விமானம்: நந்தவர்த்தந விமானம்

ப்ரத்யக்ஷம்: ப்ரஹ்மா, இந்த்ரன், ரோமசர், ப்ருகு, மார்க்கண்டேயர்

வழி: திருநெல்வேலியிலிருந்து திருக்குறுங்குடி வரும் வழியில் நாங்குனேரியில் இறங்கியோ அல்லது திருக்குறுங்குடியிலிருந்து திருப்புளையிலோ பெருமாளை ஸேவிக்கலாம். இங்கு ராமாநுஜ கூடங்கள், சத்திரங்கள், ஹோட்டல் அறைகள் வானமாமலை ஜீயர் மடம் முதலிய எல்லா வசதிகளும் உண்டு. திருச்செந்தூரிலிருந்து குறுக்குப் பாதைகள் உண்டு.

விசேஷங்கள்: இது தானாகத் தோன்றிய (ஸ்வயம் வ்யக்த) ஸ்தலம். பெருமாளுக்குத் தினம் தைல அபிஷேகம் உண்டு. அந்த எண்ணெயை எடுத்து சுமார் 25 அடி நீளமும் 15 அடி அகலமுமுள்ள கிணற்றில் ஊற்றி விடுகிறார்கள். இந்த எண்ணையை நம்பிக்கையுடன் சாப்பிட்டால் எல்லா வியாதிகளும் நீங்கும்.

சேற்றுத் தாமரை புஷ்கரிணியில் ஸிந்து தேசத்து அரசன் குசாஸன மஹரிஷியால் சபிக்கப்பட்டு நாயுருவத்துடன்

வந்து ஸ்நானம் செய்து பழைய அரச உருவத்தை அடைந்த ஸ்தலம். இங்கேயுள்ள சடாரியில் ஸ்ரீ சடகோபனின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்தலம் வானமாமலை மடத்துக்குத் தலைமை இடம். வானமாமலை ஜீயர் இங்கே தான் எழுந்தருளியிருக்கிறார். இவருடையதே இந்த ஸந்நிதி.

பகவான் மதுகைடபர்களை ஸம்ஹரித்தபோது பூமிதேவி தன் இயல்பான தூய்மையை இழந்ததாகவும், இவ்விடத்தில் தவமிருந்து பகவான் ப்ரத்யக்ஷமாகி, பூமியும் "மேதினி ஆனேனே" என்று புலம்ப, பகவான் அருள்புரிந்து மாசுகழுவப் பெற்றாய், "மேதினி" என்ற பெயரும் வாய்க்கும் என்று சொல்லி வைகுண்டத்தில் வீற்றிருப்பது போல் இத்தலத்தில் ஸ்ரீ வைகுண்ட விமானத்தில் தேவி, பூதேவி ஸமேதனாக ஆனந்தமயமாகக் காட்சி கொடுப்பதாக ஸ்தல வரலாறு. ஊர்வசியும் திலோத்தமையும் இத்தலத்தில் தவமிருந்து பகவான் அருளால் அவர்கள் அருகில் இன்றளவும் இரு பக்கங்களிலும் நின்று வெண்சாமரம் வீசிக்கொண்டிருப்பதாகவும் ஐதீஹம்.

ஸ்ரீ மணவாள மாமுனிகளால் ஸ்தாபிக்கப்பட்ட அஷ்டதிக் கஜங்களில் ஒருவர் ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமி ஸ்ரீ மணவாள மாமுனிகளின் தங்க மோதிரம் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி ஐப்பசி மூலத்தன்று சாத்திக்கொண்டு ஸ்ரீ பாததீர்த்தம் ஸாதிக்கிறார்.

நம்மாழ்வாரால் மங்களா சாஸனம் செய்யப்பட்டது.

XVIII திருக்குறுங்குடி (வாமன க்ஷேத்ரம்)

மூலவர்: நின்றநம்பி (குறுங்குடி நம்பி, இருந்த நம்பி, வீற்றிருந்த நம்பி, வைஷ்ணவ நம்பி, திருப்பாற்கடல் நம்பி, மலைமேல் நம்பி என்ற பெயர்களுண்டு) நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : குறுங்குடிவல்லி நாச்சியார் (இரு தனிக்கோவில் நாச்சியார்கள் உண்டு).

தீர்த்தம் : திருப்பாற்கடல், பஞ்சதுறை, சிந்துநதி.

விமானம் : பஞ்சகேதக விமானம்

ப்ரத்யக்ஷம் : சிவன்

வழி: திருநெல்வேலியிலிருந்து 28½ கி.மீ. நாங்குனேரிக்குப் பேருந்தில் வந்து அங்கிருந்து வேறு பேருந்தில் 12½ கி.மீ. கடந்து இங்கு வரலாம். அல்லது நாங்குனேரியிலிருந்து களக்காடு போய் மறுபடி பேருந்து மாறித் திருக்குறுங்குடி வந்தால் விரைவில் வரலாம்.

சிறப்புக்கள்: இது திருமங்கையாழ்வார் பரமபதித்த ஸ்தலம் தனிக்கோவில் நாச்சியார்களின் உத்ஸவர்கள் பெருமாளுடன் ஏகாஸனத்தில் இருப்பதால் தாயார் ஸந்நிதிகளில் அர்ச்சனை கிடையாது. நின்ற நம்பி, கிடந்த நம்பி இவர்களுடைய ஸந்நிதிகளுக்கு நடுவில் சிவன் ஸந்நிதியும் பைரவர் ஸந்நிதியும் உள்ளன. பெருமாள் மடைப்பள்ளி பிரஸாதங்களே சிவனுக்கும் நிவேதனம் செய்யப்படுகின்றன. "இருந்த நம்பி ஸந்நிதியிலுள்ள பெருமாளை வைகுந்த நாதன் என்கிறார்கள். ஸ்ரீமணவாள மாமுனிக்கு ஸந்நிதி இருக்கிறது. இக்கோயிலிலிருந்து சுமார் ½ கி.மீ. தூரத்தில் திருப்பாற்கடல் என்ற ஓடையின் கரையில், திருப்பாற்கடல் நம்பி ஸந்நிதி உள்ளது. இவ்வூரிலிருந்து சுமார் 10 கி.மீ தூரத்தில் உள்ள குன்றின் மேல் மலைமேல் நம்பி ஸந்நிதி உள்ளது. ஊருக்குச் கிழக்கே ஆற்றின் அருகில் வயல் வெளிகளில் "திருமங்கையாழ்வார் திருவரசு" என்ற சிறிய கோவில் இருக்கிறது. ஊரிலிருந்து சுமார் 1 கி.மீ. தூரத்தில் திருப்பார்கடல் ஆற்றின் நடுவில் திருப்பரிவிட்டப்பாறை என்ற பாறைமேல் உடையவர் ஸந்நிதியிருக்கிறது. விரோதிகள் உடையவரைக் கொன்றுவிட ஏற்பாடு செய்தபோது

வடுக நம்பி என்ற பெயருடன் பெருமாள் இவரை இந்தப் பாறை மீது கிடத்திக் காப்பாற்றினாராம். பெருமாள் உடையவருக்கு ஸிம்ஹாஸனமிட்டு, தான் அருகில் சீடனாக நின்று திருமந்திரார்த்த உபதேசம் பெற்றதால் 'வைஷ்ணவ நம்பி' என்று அழைக்கப்படுகிறார். கைசிக த்வாதசியன்று நம்பாடுவான் என்ற பக்தர் இத்தலத்தில் தன் புண்ணியத்தில் ஒரு பாகத்தை தன்னை பக்ஷிக்க வந்த ப்ரம்மராக்ஷனுக்குக் கொடுத்து இத்தலத்தை ரக்ஷித்தான் என்று வராஹபுராண வரலாறு இன்றும், இந்த ஐதிஹம் நாளைக்கும் நாடக ரூப மாக இங்கே கைசிக ஏகாதசியன்று ராத்திரி நடக்கிறது. பரமபதம் இந்த தலத்திலிருந்து கூப்பிட்ட தூரத்தில் இருப் பதாக ஐதீஹம்.

இந்த ஸந்நிதி திருக்குறுங்குடி ஜீயர் ஆதிக்கத்தில் உள்ளது.

பகவான் வாமன திருவிக்ர அவதாரம் எடுத்து ஆகாயத்தை அரிந்தபோது திருவடி சதங்கையிலிருந்து சிலம்பாறு உண்டானதாக ஸ்தல வரலாறு.

ஒரு ராக்ஷசன் பிரம்மணனைக் கொல்ல வர, கொல்வது பாவம் என்று பிராம்மணன் சொல்ல, விவாதம் முற்றியதால், பகவான் வேடன் போல் வேஷம் பூண்டு வந்து, அவர்களுக்கு உபதேசித்தபடி திருப்பாற்கடல் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ரிஷிகள் உபதேசம் பெற்று அகஸ்தியரை வணங்கி இருவரும் துவேஷத்தை விட்டு, முக்தியடைந்ததாக ஸ்தல புராணம்.

சிவபெருமான் பிரம்மாவின் தலையைக் கிள்ளிக் கபாலம் கையில் ஒட்டிக்கொள்ள, பகவான் சொல்லியபடி, திருக்குறுங் குடிவல்லி அம்ருதக்ஷயிட்டுச் சாபம் நீங்கி பகவான் உப தேசித்த ஸுதர்சன மந்திரத்தை ஜபித்து சுத்தனானான்.

திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார் திருமழிசையாழ்வாரால் மங்களா சாஸனம் செய்யப் பெற்றது.

வள்ளியூர்

இறைவன்: சுப்பிரமணியன்

தேவி: வள்ளி

புகைவண்டி நிலையத்தில் இருந்து 1 கி. மீ. திருக்குறுங்குடியில் இருந்து 13 கி. மீ. அருணகிரி சுவாமிகள் பாடிய திருப்புகழ் ஆலயங்களில் ஒன்று. பக்தர்கள் பெருவாரியாகக் கடைசி சுக்கிரவரத்தன்று வந்து தரிசனம் செய்து வருகிறார்கள்.

கன்னியாகுமாரி

வள்ளியூரில் இருந்து சுமார் 30 கி. மீ. கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்டு மேல்படி மலைநாடு, கொங்கநரடு, தொழுநாடு, வடநாடு, தொண்டநாடு, நடுநாடு, சோழநாடு, ஈழநாடு, பாண்டியநாடு, முதலிய இடங்களில் உள்ள வைஷ்ணவ சைவ ஆலயங்களைத் தரிசனஞ் செய்து மறுபடியும் கன்னியாகுமரிக்கு வந்து குமரிதேவியைத் தரிசநம் செய்ய வேண்டும்.

X நில உலகில் பார்க்கமுடியாத ஸ்தலங்கள்

1 திருப்பாற்கடல் (வ்யூஹம்)

மூலவர்: க்ஷீராப்தி நாதன், வ்யூஹ நிலை, ஆதிசேஷ சயனம்

தாயார்: கடல் மகள் நாச்சியார், ஸ்ரீபூதேவி

தீர்த்தம்: அம்ருத தீர்த்தம், திருப்பாற்கடல்

விமானம்: அஷ்டாங்க விமானம்

ப்ரத்யக்ஷம்: பிரம்மா, ருத்ராதிகள் முதலிய தேவர்கள்

வழி: இங்கு இந்த ப்ராக்ருத சரீரத்துடன் போக முடியாது. ஸூக்ஷ்ம சரீரம் பெற்ற பிறகே செல்லலாம். வேண்டுமானால் வணங்கிவிட்டு வடகடலுக்குச் சென்று அதன் கரையில் நின்று வரலாம். நில உலகில் கண்ணால் பார்க்க முடியாது.

குறிப்பு: மற்ற 106 திவ்ய தேசங்களையும் சைவத் தலங்கள் 274 தலங்களையும் ஸேவித்தவர்களை அவர்கள் பரமபதித்த பின், பகவான் இந்த திவ்ய தேசத்துக்கு அழைத்துச் சென்று ஸேவை ஸாதிக்கின்றார் என்பது பெரியோர்கள் நம்பிக்கை.

2. திருப்பரமபதம் (ஸ்ரீ வைகுண்டம், திருநாடு, பரம்)

பெருமாள் : பரமபத நாதன், வீற்றிருந்த திருக்கோலம். தெற்கே திருமுக மண்டலம்.

தாயார் : பெரிய பிராட்டியார்

தீர்த்தம் : விரஜா நதி, அயிரமத புஷ்கரிணி

விமானம் : அநந்தாங்க விமானம்

ப்ரத்யக்ஷம் : அநந்த கருடவிஷ்வஸேக்நாதி, நித்யஸூரிகள், முக்தர்கள்

இது பூலோகத்தில் இல்லை. இது வைஷ்ணவர்களின் லக்ஷ்யமான மோக்ஷ நிலையாகும். எம்பெருமானின் பரத்வம் விளங்குமிடம். இங்கு ஜீவாத்மாக்கள் பகவானைப் போலவே ஸ்வரூபம் பெற்று ஆனால் அவனுடன் இரண்டறக் கலவாமல் அவனுக்குக் கைங்கர்யம் செய்வார்கள்.

குறிப்பு: இங்கே சென்றவர் யாரும் திரும்புவதில்லையாகையால், "தெளிவிசும்பு திருநாடு" "நலமந்தமில்லதோர் நாடு, சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதி" என்றெல்லாம்

ஆழ்வார்கள் வர்ணித்திருப்பதே நமக்குச் சான்று. ஸ்ரீமத் ராமாநுஜர் நமது "வேதார்த்த ஸங்க்ரஹம்" என்ற க்ரந்தத்தில் இதனை வெகு விரிவாகவும், நேரில் பார்ப்பது போலவும் வர்ணித்துள்ளார். 106 திவ்ய தேசங்களையும் 274 சிவத் தலங்களையும் ஸேவித்த பக்தர்களை அவர்கள் பரமபதித்தபின், பகவானே இந்தத் திவ்ய தேசத்தை அவர்களுடைய நிரந்தர வாஸஸ்தலமாக்கி மகிழ்விப்பான் என்பது பெரியோர் வாக்கு

மக்களுக்குக் கடைசி வேண்டுகோள்

இந்த விழுமிய நூலில் குறித்துள்ள புனித தலங்களுக்குச் சென்று அங்குள்ள ஆலயங்களை வழிபட்டு வரும் பக்த கோடிகள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் என்பது சரதம்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6	3	தொடுமின்கள்	தொழுமின்கள்
8	9	வெஞ்சமாக்கடல்	வெஞ்சமாக்கூடல்
13	11	திருஹீந்திரபுரம்	திருவஹீந்திரபுரம்
16	22	திருக்காட்டுப்பள்வி	திருக்காட்டுப்பள்ளி
26	4	காசி	காரி
26	27	ஆதிசந்நிதி	ஆதிநாதன்சந்நிதி
27	3	அகத்தியாரீ	அகத்தியர்
28	1	கேசியிடம்	கேசியுடன்
29	20	தரித்ததண்டத்	த்ரிதண்டத்
33	18	5 திருக்கோயில்கள்	6 க்ஷேத்திரங்களைத்தரிசிக்கலாம்
33	25	வந்ததாகயும்	வந்ததாகவும்
33	25	தாலகாசுரன்	தோலகாசுரன்
34	20	வேதவ்யஸரஸ்	வேதவ்யாஸஸரஸ்
38	19	வாசிகன்	வாசிகள்
42	8	போத்தவிருக்கும்	போத்தனூருக்கும்
43	29	சம். 1	சங்குதீர்த்தம்
44	6	தேவகிரி	வேதகிரி
44	14	4. திருப்பாண்டிக் கொடி	4. திருப்பாண்டிக் கொடுமுடி
45	23	நாயனாருடைய	நாயனாருடைய ஸ்தலம்
47	20	உகந்	உகந்த

50	25	உருப்பியிலிருந்து	உடுப்பியிலிருந்து
50	5	தர்மசாலை	நர்மஸ்தலம்
52	6	அல்லாதாகும்.	அல்லா தாரும்
57	27	திருவாய்ப்பாடி	III திருவாய்ப்பாடி
59	7	கட்டடம்	ஸ்னான கட்டம்
60	22	மானஸரரஸ்	மானஸஸரஸ்
65	23	தேவேந்திரன்	தேவாரத்தின்
66	4	ஞானர்த்தம்	ஞானதீர்த்தம்
75	29	ஸாங்கலர்த்தம்	ஸாங்கல தீர்த்தம்
77	22	துராஹநரஸிம்ஹ	வராஹநரஸிம்ஹ
81	15	திருப்பதம்	திருப்ப ூப்பதம்
90	11	இடத்தில்	குடத்தில்
92	6	ன்எறு	என்று
96	5	முதுலாம்" திருவினை —அருச்சனைகள்	மிதுவாம்"—திருவிளை—அருச்சனை — க.
96	11	பன்னார்	பள்ளூர்
96	12	பன்னாருக்குத்	பள்ளூருக்குத்
96	19	கப்பா நதி	கம்பா நதி
97	16	கந்தபுரா நகர்	கந்தபுரா-நகர-கா
99	10	வபால்	வடபால்
99	11	வேனோராலயத்திலும்	வேறோராலயத்திலும்
104	19	திருவெஃகா	7. திருவெஃகா
105	27	திருநீரகம்	8. திருநீரகம்
110	5	சேசவன்மீது	சேஷன்மீது
112	24	ஸத்யபாபா	ஸத்யபாமா

(101-லிருந்து 113 வரையும் தலைப்பு எண்கள் ரோமன் எண்களில் வர வேண்டியவை ஆங்கில எண்களாகத் தவறாகப் போடப்பட்டிருக்கிறது.)

115	19	விடுசட்டம்	விசேடம்
125	7	திற்குத்தெற்கு	திற்குக்கிழக்கு
130	22	விடுத்த	விருந்த
152	10	தெற்கயிருந்து	தெற்கேயிருந்து
203	4	செய்தருனார்.	செய்தருளினார்.
204	23	செம்போற் சோதீஸ்வரர்	செம்பொற்சோதீஸ்வரர்
207	4,8	பிரம்மணர்கள்	பிராம்மணர்கள்
215	1	பைஞுஞலி-நீலிவார்னம்	பைஞ்ஞீலி-நீலிவனம்
225	9	திருவனைக்கா	திருவானைக்கா
233	5	ஸீரய்புஷ்கரணி	சூர்யபுஷ்கரணி
239	14	ஒன்றிருக்குன்றது	ஒன்றிருக்கின்றது.
239	18	முல்லன.	முள்ளன.
248	4	தெகுக்தக	தொகுக்க
248	4	ஆரம்பிதார்	ஆரம்பித்தார்
250	3	குறைமுலை	குன்றமுலை
263	14	பள்டிம்	பள்ளம்
264	25	பெருமாளுக்குச்மாக	பெருமாளுக்குச் சாய்மான
272	17	ப்டாடப்பெற்ற	பாடல்பெற்ற
273	5	கந்திரன்	சந்திரன்
279	8	திருநறைபூர்ச்	திருநறையூர்ச்
279	11	கிறிய	சிறிய
283	25	கசலந்தராசுர	சலந்தராசுர
287	12	பேருந	பேருந்

287	13	போந்	போக
291	20	கிழந்கே	கிழக்கே
295	9	வ்ருஷம்	வ்ரு க்ஷம்
295	26	ஹங்காப்புளி,	உறங்காப்புளி
296	15	கமலாயம்	கமலாலயம்
306	18	ளானாம்பிகை	ஞானாம்பிகை
313	8	10. திருக்கோட்டூர்	107. திருக் கோட்டூர்
349	10	ஸீதையால்	ஸூதையால்
351	3	ொருமாள்	பெருமாள்
352	6	கிவலிங்க	சிவலிங்க
352	11	அருவிவு	அருவியு
352	21	பந்யேசுரர்	பரமேசுரர்
352	24	விருஷம்	விருக்ஷம்
354	3	தேவசருமா	வேதசருமா
354	8	இரண்டி	இரண்டு
354	20	VIV. விஷ்ணுஸ் தலம்	விஷ்ணுஸ்தலம்
354	21	திருவைகுண்டம்	IX திருவைகுண்டம்
355	9	சமம்ய	சமயம்
355	21	சஸானம்	சாஸனம்
355	29	உபயநாச்சிமார்	உபயநாச்சியார்
359	8	திருநாரியிலிருந் தும்	திருநகரியிலிருந் தும்
363	14	காதலி'	காதன்'
363	15	'ஸ்ரீ தேரை'	'ஸ்ரீ பேரை'
367	16	அரிந்த போது	அளந்த போது
368	10	சுக்கிரவரத்தன்று	சுக்கிரவாரத்தன்று

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
I	14	600 108	600 018
II	26	அழைப்பெண்	அமைப் பெண்
IV	24	"Aio	"Aid
IV	25	Sutita	Saints
IV	27	vathira	yethira
V	2	Sankar	Sankara
XIV	9	கிருபானந்தவாரி	கிருபானந்தவாரி 16-8-86
XVIII	28	அமற்றின்	அவற்றின்
XIX	9	கிறோன்.	கிறேன்.
XX	21	யுள்னார்ாள்.	யுள்ளார்கள்.
XXVI	9	நிர்வாக அதிகாரி	ஆலய நிர்வாக அதிகாரி

)—(



திருப்பரமபதம்

கிடைக்குமிடம் :

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,

தலைமை நிலையம் :

154, டி. டி. கே. சாலை,
ஆள்வார்பேட்டை, சென்னை-18.

கிளை நிலையங்கள் :

79, பிரகாசம் சாலை, சென்னை-108.
திருநெல்வேலி-6. மதுரை-1. கோயமுத்தூர்-1.
கும்பகோணம் 1. திருச்சிராப்பள்ளி-2. சேலம்-1.

அப்பர் அச்சகம், சென்னை-108.